உ

கணபதிதுணை.

சேரர் குலத்துதித்த இளங்கோவடிகள்

இயற்றிய

பஞ்சகாவியங்களுள் ஒன்றுகிய

# சிலப்பதிகாரம்

## புகார் காண்டம்.

இஃது

அடியார்க்குநல்லார் உரையோடும்

திரிசிரபுரம்

ஸ்ரீமஹாவித்துவான்

மீனுட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

மாணுக்கராகிய

சென்னைக்கவனர்மெண்டு நார்மல்பாடசாலைத்

தமிழ்ப்புலவர்

**தி. க. சுப்பராயசெட்டியாரால்**

பலபிரதிகளைக்கொண்டு

பரிசோதித்து,

தாம் இயற்றிய கானல்வரி யுரையோடும்

—:0:—

சென்னை

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

விக்கிரமஹு சித்திரைமீ

(Registered Copy Right)

4762

உ

# அறிவிக்கை.

—————:o:—————

பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய சிலப்பதிகாரம் புகார்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் எனமூன்று பிரிவு உள்ளது. இந்நூல்செய்தவர்சேரர்குலத்துதித்த இளங்கோவடிகள். பஞ்சகாவியங்களாவன சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி. அடிகளெனப் பெயர் வழங்குதலால் இவரைச் சமணர் என்றுசிலர் சொல்லுகின்றனர், சமணராயின் மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்த சமயத்திற்குச் சாத்திரங்களாகவும் சிந்தாமணி அருக சமயத்திற்குச் சாத்திரமாகவும் வழங்குதல்போலத் தவவேடந்தாங்கின இவர் இயற்றிய இந்நூலும் அச்சமயத்திற்குச் சாத்திரமாதல்வேண்டும் அவ்வாறில்லாமையால் இவரைச் சமணர் என்றுசொல்லுதல் பொருந்தாது, ஆயின்; அருகசமயத்தைப் பெரும்பாலுஞ் சொல்லியிருக்கின்றனரெனின்;—சைவவைணவ சமயங்களைச் சிறப்பித்துக் கூறியதுபோல அதனையுஞ் சிறப்பித்துக் கூறினாரெனவும், அவர்காலத்தில் சைவவைணவ சமயங்களைப்போல் அருகசமயமும் பௌத்தசமயமும் வழங்கினஎன அக்காலவழக்கைப்பலவிடங்களினுங் கூறியதுபோலஇவற்றையுங்கூறினார் எனவும், அடிகளெனப்பெயர் வந்தது உயர்வுபற்றி எனவுங் கொள்ளல்வேண்டும்; உரைப்பாயிரத்துள் "உள்ளோன்றலைவனாக வுள்ளதோர்பொருண்மேற் சித்திரிக்கப்படாது பட்டாங்குகிளந்து" எனக் கூறியிருத்தல்காண்க.

இக்காப்பியத்தலைவன் அருகசமயத்தன் என்று சிலர் சொல்லுகின்றனர் "இலகொளிச்சிலாதலந் தொழுதுவலங்கொண்டு" எனவும் "காவுந்தியையைகண் டடிதொழலும் எனவும், கொலைக்களக்காதையுள், கோவலனை "சாவகநோன்பிக ளடிகளாதலின்" எனவுங்கூறியது, பதிகத்துள் "ஆரஞருற்றவீர பத்தினிமுன் - மதுரைமாதெய்வம் வந்துதோன்றி" எனவும், கனாத்திறம் உரைத்தகாதையுள் "யாமொருநாள் ஆடுதுமென்றவணிழைக்கு" எனவும், "கோவலனாவிற்கூறியமந்திரம் பாய்கலைப்பாவை மந்திரமாகலின்" எனவும் உரைபெறு கட்டுரையுள் பாண்டியனும் இளங்கோசரும் கயவாகுவும் சோழன் பெருங்கிள்ளியும் தங்கணாட்டுள் கண்ணகியாரைத் தெய்வமாகக்கொண்டு விழவுமுதலியநடத்தினர் எனவும் கூறியதனோடு மாறுபடுதலான் அவ்வாறு சொல்லுதலும் பொருந்தாது, இவர்கள் சைவசமயத்தர் எனத்தோன்றுகின்றது. இக்காலத்தும் சமயவைராக்கியம் சிலர்க்கன்றிப் பலர்க்கும் இன்மையுணர்க.

இந்நூலுக்கு உரைபல வுளவேனும் அவற்றுள் அடியார்க்கு நல்லாருரையே பெரும்பாலும் வழங்குகின்றது, அவ்வுரை பரந்தவுரையாய்க் கடின

மான நடையாயிருத்தலுமன்றி உரையின்றொடக்கமிஃது, இறுதி யிஃது என வுணர்தல் அரிதாதலால் யாவரும் எளிதினுணரத் தொடக்கம் இறுதிகளைப் புலப்படுத்தியும், கடிநடையா யுள்ளனவற்றை யெளியநடைகளாகச் செய்தும், வேண்டிய இடங்களில் விரித்துஞ் சுருக்கியும், கரலிகிதங்களால் வந்து பொருந்தாதனவற்றை விலக்கியும், கானல்வரிக்கு உரையின்மையால் உரையெழுதியும், அரங்கேற்றுக் காதையுள் வரம்பின்றிப் பரந்தஇசைநாடக விலக்கணங்கள் பலவிடங்களினும் வருதலால் ஆங்காங்குணர இங்குச் சுருக்கியும் இவ்வாறு புகார்காண்டமும் மதுரைக்காண்டமும் தனித்தனியாய் அச்சிற் பதிப்பிக்கத் தொடங்கிப் புகார்காண்டம் உரையோடச்சிட்டிருக்கின்றேன். எனக்குக் கிடைத்த பிரதிகளுள் வஞ்சிக்காண்ட மொழிய மற்றை யிரண்டுகாண்டங்களு மிருத்தலால் வஞ்சிக்காண்டம் உரையோடு வைத்திருப்பவர்கள் எனக்குக்கொடுத்து உதவிசெய்யின் இந்நூல்நிலைபெறும் அளவும் அவர் பெயரும் நிலைபெறும்படி அச்சிற்பதிப்பிப்பேன்.

எனக்குக்கிடைத்த பிரதிகளோடுதிருமயிலை அண்ணுசாமிஉபாத்தியாயரும் ஒருபிரதியுதவினர்.

பண்டைக்காலத்தில் அச்சிற் பதிப்பிக்கும் வழக்கமின்மையால் தமிழிலுள்ள பெருநூல்கள் உரைகளோடு பலஇறந்தன, எஞ்சியிருக்கின்ற சில நூல்கள் சிலரிடத்து அருகிவழங்குதலால் அவற்றுளொன்றை யவரிடத்து அலைந்து திரிந்து பெறுதலரிது, பெறினும் எழுதுவோர் கிடைப்பதரிது, கிடைப்பினும் கூலிபெரிதாகலிற் கொடுத்து எழுதுவித்தலரிது, எழுதுவித்துக்கற்கப்புகின் கரலிகிதங்களால் போதிந்த வழுக்களை நீக்கிப்பொருள் கொள்கையரிது என்பது தெரிந்த தமிழ்நூலில் விருப்ப முடையோர் பலரும் பொருளுதவிசெய்வராயின் மதுரைக்காண்டமும் உரையோடு விரைவில்அச்சிட்டுமுடியும், இதுபோல இன்னும் சிலநூல்கள் அச்சிடக்கருதி யிருக்கின்றேன்.

தமிழில் இந்நூல் இயல் இசை நாடகமூன்றும் ஒருங்குணர இருத்தலான் யாவர்க்கும் பெரும்பயன் தருவதெனவுணர்க.

புகார்காண்டம் விலை ரூபா-க - அணு-கஉ புறத்தேசத்தவர்கள் தபால் செலவு அணு உ - ஒடு கூட்டி மணியார்டர் அனுப்பவேண்டும். பதிப்பிக்கும் மதுரைக்காண்டம் ரூபா - க - அணு கஉ - மதுரைக்காண்டத்துக்கும் முன்னதாகப் பணங்கொடுக்கும் உள்நாட்டினர்க்கு உ - காண்டங்களும் ரூபா-ந அணு - ச - வீ - ஆகக் கொடுக்கப்படும். புறத்தேசத்தவர்க்குத் தபாற்செலவில்லாமல் ரூபா - ந - அணு - அ - வீ ஆக அனுப்பப்படும்.

இங்ஙனம்

தி. க. சுப்பராயசெட்டி.

கணபதிதுணை.

# உரைப்பாயிரம்.

தன்னேருணன்கினொன்றுகைம்மிகூஉங் - களிறுவளர்பெருங்காடாயினும்
ஒளிபெரிதுசிறந்தன்றளியவென்னெஞ்சே.

சந்தனப்பொதிபத்தடவரைச்செந்தமிழ்ப்-பரமாசிரியன்பதங்கள்
சிரமேற்கொள்ளுதுந்திகழ்தரற்பொருட்டே.

குணவாயில் - வாழ்வீர் ஈங்கென - இவ்வியலிசை நாடகப் பொருட்டொடர் நிலைச்செய்யுளை, அடிகள் செய்கின்றகாலத்து இயற்றமிழ் நூல் தொல்காப்பியம் ஆதலானும், பிறர்கூறிய நூல்கள் நிரம்பா இலக்கணம் ஆதலானும், அந்நூலின் முடிபே இதற்கு முடிபென்றுணர்க. அந்நூலிற்செய்யுளியலின் கண்ணே ஆசிரியப்பாவும் இனமும் எனநான்கி னீக்கியப் பாவினைத் தொகைவகையாயறையானிரண்டென வடக்கியும் விரிவகையறையான் ஆறெனவிரித்தும், அவற்றை யறம்பொரு ளின்பத்தாற் கூறுகவென்றும் பின்பு அம்மைமுதலிய வெட்டுந்தொடர்நிலைச் செய்யுட் கிலக்கணமென்றுங்கூறி "இழுமெனுமொழியான் விழுமியது நுவலினும்-பரந்தமொழியானடிநிமிர்ந்தொழுகினும்" என்பதனால், குவிந்து மெல்லென்ற சொல்லானும் பரந்துவல்லென்ற சொல்லானும் அறம்பொருளின்பம்பயப்ப, வீடென்னும் விழுமிய பொருள் பயப்பவோர் கதைமேற் கொச்சகத்தானும் ஆசிரியத்தானும் வெண்பா வெண்கலிப்பாவானுமற்றும் இன்னோரன்ன செய்யுட்களானுங் கூறினமையான் இத்தொடர் நிலைச் செய்யுள் அங்ஙனங்கூறியதொடர்நிலை யெனவுணர்க. முந்துநூல்களிற் காப்பியமென்னும்வடமொழிப்பெயர் இன்றேனும் ஆசிரியர் "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ - எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே" என்ற இலேசினால் உய்த்துணரற்பாலதனைமாணுக்கன் ஐயந்தீர்தற்கன்றே பின்னும் "சிதைந்தனவரினும் இயைந்தன வரையார்" என்பாராயினர் எனக்கொள்க. அன்றியும் பெரியதனைப்பெருங் காப்பியமென்றே கூறவேண்டுதலானும் சான்றோர் செய்யுள்களினுங் "கூத்தியரிருக்கையுஞ்சாற்றியதாகக் - காப்பியவரசனைக்கலந்தவைசொல்லி" என விரண்டாம்ஊழியாகியகபாடபுரத்தின்இடைச்சங்கத்துத்தொல்காப்பியம் புலப்படுத்தியமாகீர்த்தியாகியநிலந்தருதிருவிற்பாண்டியன் அவைக்களத்துஅகத்தியனுருந்தொல்காப்பியனும் இருந்தையூர்க்கருங்கோழிமோசியாரும்வேளூர்க்காப்பியனும்சிறுபாண்டரங்கனும்மதுரைப்பனம்பாரனும் துவரைக்கோமானுங் கீரந்தையாருமென்றித் தொடக்கத்தாரான பதின்மருள்ளிட்ட மூவாயிரத்தெழுநூற்றுவர் தம்மாற் பாடப்பட்ட கலியுங் குருகும் வெண்டாழிசையு முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்த உதையானன் கதையுள்ளும், காப்பியக்கவிகள் காமவெறி வேள்வி கற்

பித்திட்டாரெனச் சிந்தாமணியுள்ளும் நாடகக்காப்பிய நன்னூலுண் மணி
மேகலையுள்ளும் பிறவற்றுள்ளுங் கூறினமையானும், சொற்றொடர் பொ
ருட்டொடர் நிலையென்னுஞ் செய்யுள்கட்குக் காப்பியமென்று பெயர்
கூறுதலும் ஆசிரியர் கருத்தென்றுணர்க. இதனுண் முற்கூறிய வனப்
பென்பது பெரும் பான்மையாய்ப் பலவுறுப்புத்திரண்ட வழிப்பெறுவ
தோர் வழக்காதலினுற் பலசெய்யுளுறுப்பாய்த்திரண்டு பெருகியதொ
டர் நிலைச்செய்யுட் கிவ்வெட்டும் அலங்காரமாயின; ஆகவே இக்காப்பி
யத்திற்குந் தோல் என்பது சொல்லலங்காரமாகவே யுணர்க. இனி இத
ன் செய்யுள் காதையென வழங்குதலிற் கதையையுடையது காதையாமாத
லின், ஆசிரியம் வெண்பாவெண்கலிப்பா வென்னுமிவற்றொடு சிறுபான்மை
யான் ஒருசார் கொச்சகக்கலி மயங்கிவருதலானும், காண்டம் எனக் குறி
பெறுதலானும் இதனைக் கதையென்றல் வலியுடைத்தென்பார்க்கு; அற்றன்
று கதையென்பது பொய்ப்பொருள் புணர்த்துக் கூறுவது, என்னை;-"கதை
யெனக்கருதல் செய்யான் மெய்யெனத் தானுங் கொண்டான்" என்றமை
யானும் வழக்கினுள்ளும் இஃது ஒருகதை யென்பவாகலானும் நாடகக்காப்
பியம் என்றலானும் கதையென்பது அல்லது, இனி அதுநல்லபுலவராற்பொ
ருளொடுபுணராப் பொய்மொழியானுட்டப்பட்டு வருவதாகலின். இஃது
அவ்வாறன்றி யொளியென்னு நாடகவுறுப்பும் நாடகமுந் தழீஇ உள்ளோன்
தலைவனாக வுள்ளதோர் பொருண்மேற் சித்திரிக்கப்படாது பட்டாங்கு கிள
ந்து பலவினப்பாட்டான் வருதலின், ஈதன்ன தன்றென்பார்க்குக் காப்பி
யம் என்றலுமாம். இனி இசைத்தமிழ்நூல் பெருநாரை பெருங்குருகும் பிற
வுந்தேவ விருடிநாரதன் செய்த பஞ்சபாரதிய முதலாயுள்ள தொன்னூல்க
ளுமிறந்தன, பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம்என்பனவற்
றுள்ளும் ஒருசாரார் சூத்திரங்கள் நடக்கின்ற அத்துணையல்லது முதனடு
விறுதி காணாமையின் அவையும் இறந்தனபோலும், இறக்கவேவரும் பெரு
ங்கலமுதலிய பிறவுமாம். இவற்றுட் பெருங்கலமாவது பேரியாழ்; அது
கோட்டினதளவு பன்னிருசாணும் வணரளவுசாணும் பத்தரளவு பன்னிரு
சாணும் இப்பெற்றிக்கேற்ற ஆணியும் திவவும் உந்தியும் பெற்று ஆயிரங்
கோல் தொடுத்தியல்வது என்னை; -"ஆயிரநரம்பிற்றுதியாழாகும் - ஏனைய
றுப்பு மொப்பனகொளலே - பத்தரளவுங் கோட்டினதளவும் - ஒத்ததெ
ன்ப விருமூன்றிரட்டி - வணர்சாணொழித்தனர் வைத்தனர்புலவர்" எனநூ
லுள்ளும் "கலமுதலூழியிற் றுனவர்தருக்கறப் - புலமக்களாளர் புரிநரப்
பாயிரம் - வலிபெறத்தொடுத்தவாக் கமைபேரியாழ் - சொன்முறை யெல்
லாஞ் செய்கையினறிந்து - மற்றையாழுங் கற்றுத்துறைபோகிய" எனக்
கதையினுள்ளுங்கூறினர் ஆகலானும் பேரியாழ்முதலியவேனவும் இறந்தன
வெனக்கொள்க. இனித்தேவவிருடியாகிய குறுமுனிபாற்கேட்ட மாணாக்கர்
பன்னிருவருட்சிகண்டி யென்னும் அருந்தவமுனி இடைச்சங்கத்து அநாகு
லனென்னுந் தெய்வப்பாண்டியன் தேரொடுவிசும்பு செல்வோன்றிலோத்த

மையென்னுந் தெய்வமகளைக்கண்டு தெரிந்கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரு முனிவருஞ் சரியநிற்கத் தோன்றினமையிற் சயந்தகுமாரனெனப் பெயர்பெற்ற குமரன் இசையறிதற்குச்செய்த இசைநுணுக்கமும், பாரசைவமுனிவரில் யாமளேந்திரர்செய்த இந்திரகாளியமும் அறிவனார்செய்தபஞ்சமரபும், ஆதிவாயிலார்செய்த பரதசேனாபதியமும், கடைச்சங்கமேறிய பாண்டியருட் கவியரங்கேறிய பாண்டியர் மதிவாணனார்செய்த முதனூல்களில் அளவு இசைகூத்திற்கு மறுதலையாகிய புகழ்க்கூத்தியன்ற பதிவாழ்நாடகத்தமிழ்நூலு மென இவ்வைந்தும் நாடகக்காப்பியக் கருத்தறிந்தநூல்களன்றேனும் ஒருபுடையொப்புமைகொண்டு முடித்தலைக் கருதிற்றிவ்வுரையெனக் கொள்க.

உலகத்துக்காப்பியஞ் செய்வோன் அறனும் பொருளும் இன்பமும்வீடுங்கூறல்வேண்டு மன்றே, இந்நாடகக்காப்பியத்தினுள் இன்பஞ்சிறிதாயினுங் கூறி வீடுகூறிற்றிலர் என்னையெனின்; "யானறிகுவனது பட்டதென்று" உரைத்த சாத்தனாற் பொருளும் புயப்பப் பெருங்காப்பியமாகச் செய்யக்கருதி யிருக்கின்றார்க்கு, "அடிகள் நாட்டுதும் யாமோர் பாட்டுடைச்செய்யுளென,, உளப்பாட்டுத் தன்மையாற்கூற, சாத்தனார் இவர் ஏனை யிருவேந்தரையும் புகழ்ந்துரையார் என்பது கருதி "மூவேந்தர்க்கு முரியதாகலின் நீரேயருளும்,, என்ற ஏகாரவினாப்பொருண்மையான், அவர்கருத்து நிகழ்ச்சி விளங்குவான்கூற, அவரதனையே துணிந்து தமது முத்தமிழ்க் கல்வியுங் காட்டுதற்குத் தாம் வகுத்துக்கொண்ட மூவகையுள்ளுரையின் விளைவதோன்ற மங்கல வாழ்த்துப்பாடல் முதல்வரந் தருகாதை யீறுதி முப்பதுவகைத்தாக வரையறுத்து, அதனை யதிகாரமாகப் பொதிந்து முன்வைத்துப்பின்னர் அறனும் பொருளும் இன்பமுங்கூறி அடைக்கலக்காதை யிறுதிக்கண் "போதியறவோன்றன்முன் மணிமேகலையை மாதவியளிப்பவும்" எனக் கோவலன் முன்கண்டகனவின்கண் எதிர்கால நிமித்தமாக மாடலற்குக் கூறுதலானும், நீர்ப்படையுள் "மாதவி மணிமேகலையைவான்றுயருறுக்குங் கணிகையர் கோலங்காணாய் தோழி" "கோதைத் தாமங் குழலொடுகளைந்து - போதித்தானம் புரிந்தறங்கொள்ளவும்" என்றலானும், வாழ்த்தின்கண் "மாதவிதன் றுறவுங் கேட்டாயோ தோழி மணிமேகலைதுறவுங் கேட்டாயோதோழி" எனத் தேவந்தி கூறுதலானும், வரந்தரு காதையில் "மணிமேகலையாவதவடுறத்தற் கேது - ஈங்குனாயென்றமையீரோதிமுதல்- போதித்தானம் புரிந்தறம்படுத்தனள்" எனப்பக்குவஞ்சொல்லி "பருவமன்றியும் பைந்தொடிநங்கை-திருவின்கோலம் நீங்கினள்" என்றமையானும், மணிமேகலை துறந்தாள் என்பதுணர்ந்து அத்துறவினைப் பின்வைத்ததனோடு நாற்பொருளும் பூரித்துப் பெருங்காப்பியமாக முடித்தலைக் கருதி, அடிகள் சாத்தனார்க்கிவ்வுரையை யுரைத்தழி, அவர்மணிமேகலைப் பெயரான் அவள் துறவே துறவாக அறனும் வீடும்பயப்பவோர் காப்பியஞ்செய் தமை

த்தனனெனக்கேட்டு, அவ்வடிகள் விரும்பியிவ்விரண்டினையும் ஒருகாப்பிய மாக்கியுலகியனடாத்துவான் வேண்டியிருவர் செய்தலினிரண்டாகி நடந்த னவென்க.

“குணவாயிற்கோட்டத்தரசுதுறந்திருந்த-குடக்கோச்சேரலிளங்கோ வடிகட்கு” அடிகளெனப்பெயர் வந்தகாரணமியாதோ வெனின்? “குமரி யொடுவட விமையத்தொருமொழி - வைத்துலகாண்ட சேரலற்குத் - திக ழொளி ஞாயிற்றேழ்பரிநெடுந்தேர்ச் - சோழன்றன்மகள் - நற்சோணையீன்ற மக்களிருவருள்-முன்னோன்றன்னைப்பின்னரியற்றிப் -பின்னோன்றன்னையும் பெருநரம்பாகென-அன்னவர்தம்மொடு தென்னர்செம்பியர்-தன்னடி போற் றச்-சிங்கஞ்சுமந்த பொங்கணை மீமிசை-உவரிந்திஙாயிற்கவரியிரட்ட-வேந் தனிருந்துழிச்சார்ந்த நிமித்திகன் - அடிமுதல் முடிவரை நெடிது நோக்கி- யின்றோள்கழியப் பொன்றிகழுலகஞ் - சேர்திநீயெனச் சேரலற் குரைத்த வன் - மைந்தரை நோக்கி நந்தாச்செங்கோல் - அந்தமிலின்பத் தரசாளுரி மை - இளையோற்குண்டென வுழையுளோன் வெகுண் - டழுக்கா றெழூக் கத்திழுக்கு நெஞ்சினன் - கண்ணீர்தவழ வண்ணலை நோக்கும் - தொங் கவிழ்நறுந்தார்க்கொடித்தேர்த்தானைச் - செங்குட்டுவன்றன்செல்லனீங்கப் பகல்செய்வாயிற்படியோர் தம்முன் - அகலிடப்பாரமகல நீக்கிச் - சிந்தை செல்லாச்சேணெடுந்தூரத் - தந்தமிலின்பத்தரசாள் வேந்தற்கு” குணவா யிற் கோட்டத்தரசு துறந்திருத்தலால். இக்கதை பதிற்றுப் பத்தினுள்ளுஞ் சாம்பத்தின் முடிவின்கண் “வடவருட்கும்” என்னுங்கவியுள்ளும், வாழ்த் தின்கண்ணும் வரந்தருகாதைக்கண்ணுங்காண்க.

———:o:———

குணக்குவாயில் குணவாயில், அதுவஞ்சியின் கீழ்த்திசைக்கண்ணது அதுஆகுபெயராற் குணவாயிலாயிற்று. அதுகுணக்கண்வாயில் குணக்கின் கண்வாயில் எனச்சாரியைபெற்றும் பெறாதும் வரினும் அமையும். என்னை “ஏழனுருபிற்குத்திசைப்பெயர் முன்னர்ச் - சாரியைக்கிளவி யியற்கையு மா கும் - ஆவயினிறுதி மெய்யொடுங்கெடுமே” என்றாகலின். வாயிற்கோட் டம் “லகாரவிறுதினகாரவியற்றே” என்பதனால் ஏழனுருபின் கண்வந்தல காரவீறு வருமொழிமுதல் வல்லெழுத்துவரவேற்றுமைக்கண் றகாரமாகத் திரிந்தது-கோட்டத்து “மஃகான்புள்ளிமுனத்தேசாரியை” என்பதனாலேழ னுருபின்கண்வந்தசாரியை “அத்தேவற்றேயாயிருமொழிமேல் - ஒற்றுமெய் கெடுதறெற்றென்றற்றே” என்பதனான்மகரங்கெட்டு “அத்தினகரமகரமுனை யில்லை” என்பதனால்அகரங்கெட்டுமுடிந்தது. கோட்டத்தரசு “மெய்யீறெல் லாம் புள்ளியொடு நிலையல்” குற்றியலுகரமு மற்றெனமொழிப” என்பத னாலும் “புள்ளியீற்றுமுன்னுயிர்தனித்தியலாது - மெய்யொடு சிவணுமவ்வியல் கெடுத்தே” என்பதனாலும் நிலைமொழியீற்றுக் குற்றுகரங்கெட வருமொழி அகாரவுயிரேறிற்று. துறந்திருந்த என்பதும் முற்கூறியவாறே முடிந்தது. குடக்கோ என்பது “அகரவிறுதிப்பெயர் நிலைமுன்னர் - வேற்றுமையல்

வழிக்கசதபதோன்றிற் - றத்தமொத்தவொற்றிடை மிகுமே" என்பதனாற் பெயரொடுபெயர்புணர்ந்தவழிவல்லொற்றுமிக்கது. சோச்சேரல்என்பது "ஓகாரவிறுதி யேகாரவியற்றே" என்பதனால் ஓகாரவீற்றுப் பெயர்ச்சொல்அல்வழிக்கண், ஏகாரவீற்றல்வழியேபோலவல்லெழுத்துப்பெற்று முடிகவென்றலின் வல்லொற்று மிக்கது. சேரல் என்றதுலகாரவீற்றுப் பெயர்ச்சொல் அண்ணல் தோன்றல் திரையல் இளவல் என்றாற்போல்வதோர் லவ்வீற்றுப்பெயர்ச்சொல்-அன்றியும் சேரன் என்னும் பெயர்த்திரி சொல்லெனினும் அமையும். சேரலிளங்கோஎன்பது "புள்ளியீற்றுமுன்" என்றதனால் லகரவொற்றீற்றுநிலைமொழிமேல்வருமொழிமுதல் இகரவுயிரேறிமுடிந்தது. கோவடிகட்கு என்பது "எல்லாமொழிக்கு முயிர்வருவழியே - யுடம்படுமெய்யினுருபுகொளல்வரையார்" என்பதனால் வகரவுடம்படு மெய்யாயிற்று எனவும், "ளகாரவிறுதி ணகாரவியற்றே" என்பதனால் ணகாரம் வேற்றுமைக்கட்டிரிந்து டகாரமாயிற்று என்பதுபோல இதுவும் வேற்றுமைக்கட்டிரிந்து டகாரம் ஆயிற்று எனவுங்கொள்க. அரசு என்பதற்கு இரண்டனுருபுவிரித்துத் துறந்து என்னும் வினையெச்சத்தோடும்அவ்வெச்சத்தை இருந்த என்னும் பெயரெச்சத்தோடு முடித்து, அதனை அடிகள் என்னும் பெயரோடுமுடிக்க. அரசாட்சியைத் துறந்து திருக்குணவாயிற் கோயிற்கண்ணேயிருந்த குடதிசைக்கோவாகிய செங்குட்டுவச்சேரற்கு இளங்கோவாகிய அடிகட்கு எனப்பண் பொட்டுவிரித்துரைக்க.

இளமைப்பருவத்தேயிராசபோகத்தைத் துறத்தல் அருமையாற் றுறந்தென்றும், அங்ஙனம்போகநுகராவிடத்தே இளங்கோவாகியஅடிகள்தவமீட்டுந் தவவுருத்தாங்கியிருத்தலருமையானிருந்தென்றுங் கூறினார். இம்முதலிரண்டடிக்கும் இத்துணையும் கூறியது எழுத்துச்சந்திமுடிவுஞ்சொன்முடிவும் எனக்கொள்க.

இனிப்பொருளாராய்ச்சி யெண்வகைய அவை திணைபால் செய்யுள் நிலம் காலம் வழு வழக்கு இடம் என்பன, அவற்றுள் திணை யிரண்டாவன அகத்திணை புறத்திணை யென்பன. பால் பதினான்காவன கைக்கிளை முதல் பெருந்திணை யிறுவாயேழும், வெட்சி முதல்பாடாண்டிணையிறுவாயேழும். செய்யுளாவன வெண்பா ஆசிரியப்பா வெண்கலிப்பா வஞ்சிப்பா பரிபாடற்பாமருட்பா என்பன. நால்வகை நிலனாவன முல்லை குறிஞ்சிமருதம் நெய்தல்என்பன. காலம் பன்னிரண்டாவன சிறுபொழுதாறும் பெரும்பொழுதாறும். வழுபதினான்காவன அகத்திணை வழுவேழும் புறத்திணைவழுவேழும். இருவகை வழக்கென்பன நாடக வழக்கும் உலகியல் வழக்குமாம் என்க. இவற்றுணிறுத்த முறையானே அகத்திணைப் பொருட்பகுதிமுதலியனவிப்பதிகச் செய்யுளுண் முடியாமையின் அவைமுடியுமிடங் கூறுதற்கு; ஆசிரியர் அகப்பொருட் பகுதி கூறுவார் வைத்தமுறையானே மாயோன்மேயகாடுறையுலகமும்—சேயோன்மேய மைவரையுலகமும்—

வேந்தன்மேய தீம்புனலுலகமும்—வருணன்மேய பெருமணலுலகமும்—முல்லைகுறிஞ்சி மருதநெய்தலெனச்—சொல்லியமுறையாற் சொல்லவும்படுமே" என முல்லைத்திணையைமுதலாக நாட்டுதலின் "முதலெனப்படுவது நிலம்பொழுதிரண்டின்—இயல்பெனமொழிய வியல்புணர்ந்தோரே" என்பதனுல் முதற்பொருள்முதற்றிணையும் "காருமாலையும்முல்லை" என்பதனுல் பெரும்பொழுது "காரொடுவந்தது" என்பதனுல் காரும், சிறுபொழுது "மாலைநீயாயின்" என்பதனுல்மாலையும், கருப்பொருள் "தெய்வமுணாவேமா மரம்புட்பறை—செய்தியாழின் பகுதியொடுதொகைஇ—எவ்வகைப்பிறவுங் கருவெனமொழிப" என்பதனுல் இந்நிலத்திற்கருப்பொருள்தெய்வம் "கன்றுகுணிலாக்கனியுதிர்த்தமாயவன்" எனவும், உணு "அளைவிலையுணவின்" எனவும், மா "நீர்நசைவேட்கையான் மானின்றுவிளிக்கும்" எனவும், மரம் "கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தான்" எனவும், புள் "கானவாரணங் கதிர்வர வியம்ப" எனவும், பறை "ஏறங்கோட்பறை" எனவும், செய்தி "கோகுலமேய்த்து" எனவும், யாழ் "குரன்முதல்" என்பதனுல் முல்லையாழும், பண் "முல்லைத்தீம்பாணி" என்பதனுற் சாதாரியும், உரிப்பொருள் "புணர்தல் பிரிதலிருத்த லிரங்கல் - ஊடலிவற்றி னிமித்தமென்றிவை - தேருங்காலைத் திணைக்குரிப்பொருளே" இருத்தல் "இருந்தேங்கிவாழ்வாருயிர்ப்புறத்தாய்" எனவும்; நிமித்தம் "பேரருளினிழல்" எனவும் "பிறவும்" என்றதனுல் நிலமக்கள் நீர்நிலை வார்கொடிபூவுங்கொள்க. இவற்றுள் நிலமக்கள் "இளைசூழ்கோவலர்" எனவும், நீர்நிலை "புடைநெறிப்போயோர் பொய்கையிற் பொருந்தி" எனவும், வார்கொடி "ஆய்கொடிக்கவலை" எனவும், பூ "சாயாமலர்மேனி" எனவும் "முல்லைநிகர்மலர்" எனவும்பிறவுமாம்.

குறிஞ்சி திணைமுதற் பொருள். பெரும்பொழுது "அருவியொடுவைகியும்" என்பதனுற் கூதிர்ப்பொழுது. சிறுபொழுது "குன்றத்துச் சென்று வைகியும்" என்பதனுல் நள்ளியாமமும், கருப்பொருள் தெய்வம் "நீலப்பறவை மேற்புதல்வன் வரும்" எனவும், உணு "ஐவனவெண்ணெலுங் கொய்பூந்தினையும்" எனவும், மா "புலியொடுபொரூஉம் புகர்முகம்" எனவும், மரம் "சோங்கும் வேங்கையும்" எனவும், புள் "கானக்கோழியும் நீ னிறமஞ்ஞையும்" எனவும், பறை "தொண்டகந்தொடு மின்சிறுபறைதொடுமின்" எனவும், செய்தி "கொய்பூந்தினையும்" எனவும், யாழ் "அந்தீங்குறிஞ்சி" எனவும், பண் "குறிஞ்சிபாடுமின்" எனவும், உரிப்பொருள் புணர்தல் "அஞ்சலோம்பென்றே எனவும் "நல்காதார்" எனப்புணர்தனிமித்தமும், நிலமக்கள் "குறவருங் கண்டுநிற்க" எனவும், குறத்திபாடி" எனவும், நீர்நிலை "அருவியாடியஞ்சுனைகுடைந்து" எனவும், வார்கொடி "ஏலவல்லியுமிருங்கறிவல்லியும்" எனவும், பூ "இலவமலர்தூய்" எனவும் பிறவுமாம்.

மருதம்திணைமுதற்பொருள். பெரும்பொழுது "இன்னிளவேனில் வந்திவணென" எனவும், சிறுபொழுது "வாள்கண்விழியாவை கறையாமத்து,

எனவும், கருப்பொருள் தெய்வம் "மலைச்சிறகரிந்தவச்சிரவேந்தற்கு" என
வும், உணு "குமரிக்கூட்டிற் கொழும்பல்லுணவு" எனவும், மா "சுழாஅமயிர்
யாக்கைச் செங்கட்காரான்" எனவும், மரம் "மருதோங்குமுன்றுறை" என
வும்,புள் "கம்புட்கோழியுங்கனைகுரனாரையும்"எனவும்,பறை "தெண்கிணைப்
பொருநர் செருக்குடனெடுத்த" எனவும், செய்தி "ஏரொடுநின்றோர்" "அரிந்
துகால் குவித்தோர்" எனவும், யாழ் 'அதிராமரபின் யாழ்கைவாங்கி" என
வும், பண் "வைகறைப்பாணியும்" எனவும், உரிப்பொருள் "சிலம்புகொண்
மென" என்பதனால் ஊடலும் "விடுதலறியாவிருப்பின" எனவும் "போற்றா
வொழுக்கம் புரிந்தோகலின்" என்பதனால் நிமித்தமும், நிலமக்கள் "கரு
ங்கைவினைஞருங் களமரும்" எனவும் 'சின்மொழிக்கடைசியர்" என
வும், உழவர் உழத்தியர் எனவும், நீர்நிலை "பூநாறிலஞ்சிப்பெருகயலோ
ட்டி" எனவும், வார்கொடி "கோதைமாதவி" எனவும், பூ "வெண்பூமல்லி
கை தண்செங்கழுநீர்" எனவும் பிறவுமாம். நெய்தல்-திணை முதற்பொருள்
பெரும்பொழுது ஆசிரியர் எடுத்தோதாமையின் அடிகள் கூறிற்றிலர்போ
லும். சிறுபொழுது "வையமோகண் புதைப்பவந்தாய்மருண்மாலை" என்பத
னால் மாலையும், கருப்பொருள் தெய்வம் "கடற்றெய்வங்காட்டி" என்பத
னால் வருணனும், உணு "விலைமீனுணங்கல்பொருட்டாக" என்பதனால் மீன்
உணங்கலும், மா உமணர் பகடன்றி இந்நிலத்திற்கு விலங்கு இன்மையான்
ஆசிரியர் கூறிற்றிலர்போலும். இனி முதலையுஞ் சுறவும்மாவென்பர் "கெ
ண்டையஞ்சிறை மேய்ந்து கிளர்ந்துபோய் - முண்டகத்துறை சேர்ந்து
முதலைமா - வண்டல்வூர் கரை மாமகரக்குழாங் - கண்டுநின்று கனலுங்
குழியெலாம்" எனக் காட்டுவாரும் உளராயினும் அவை மீனெனப் படுவதல்
லது மாவெனப்படாது. மரம் "பொறைமலிபூம்புன்னை" எனவும், புள்
"அன்னந்துணையோடாட" எனவும், பறைகூறிற்றிலர் மீன்கோட்பறை யெ
னவும், செய்தி "கடல்புக்குயிர் கொன்று" எனவும், யாழ் "சித்திரப்படத்
துக் குற்றநீங்கியயாழ்" எனவும், பண் "நுளையர்விளரி" என்பதனால் விள
ரிப் பண்ணும், உரிப்பொருள் "கொளைவல்லா யென்றுவிகொள்" என்பத
னால் இரங்கலும் "பேரருளினிழ லிருந்தேங்கிவாழ்வார்" என்பதனால் நிமி
த்தமும், நிலமக்கள் "சேரிப்பரதர் வலைமுன்றில்" எனவும், பவளவுலக்கை
எனவும், நீர்நிலை "ஈர்ந்தண்டுறை" எனவும், வார்கொடி ':அம்மெனிணர வ
டம்புகாள்" எனவும், பூ "நறுஞாழல் கையிலேந்தி" எனவும் பிறவுமாம்.
சொல்லப்படும் என்றது "சொல்லியமுறையாற் சொல்லவும்படுமே" என்
பதனாற் சொல்லாத முறையாற்சொல்லவும் படும் என அருத்தாபத்தி கோ
டலானும் "நடுவுநிலைத்திணையே நண்பகல் வேனிலொடு - முடிவுநிலை மருங்
கின் முன்னியநெறித்தே" என்பதனானும் "முல்லையுங் குறிஞ்சியு முறை
மையிற்றிரிந்து- நல்லியல்பிழந்து நடுங்குதுயருறுத்துப்-பாலையென்பதோர்
படிவங்கொள்ளுங் - காலையெய்தினர்" என்பதனானும், இப்பெற்றித்தாகிய
பாலை திணைமுதற் பொருள். பெரும் பொழுது "வேனிற் கிழவனொடு

வெங்கதிர்வேந்தன்-றானிலந்திருகத்தன்மையிற்குறுகி" என்பதனால் இருவகைவேனிலும், சிறுபொழுது "படுசுதிரமையம் பார்த்திருந்தோர்க்கு" என்பதனால் எற்படுபொழுதும், கருப்பொருள் தெய்வம் ஆசிரியர்புலப்படவெடுத்தோதிற்றிலரேனும் "கடுங்கதிர்திருகலின் எனவும், வெங்கதிர் வேந்தன் றானிலந்திருக எனவும், ஐயைகோட்டத்தெய்யாவொருசிறை" என்பதனாற்கொற்றவையுங்கோடும் "பரிதியஞ்செல்வனுந்திகிரியஞ்செல்வியும்" என்பதுங்கொள்க. உணா "ஆரிடையத்தத்தியங்குநர் பொருளதுமாரிவளம்பெறுவில்லேருழவர்" "ஆறெறிந்துகூறைகொண்டும்" எனவும்; மா "மானின்றுவிளிக்கும்" என்பதனால் உழைமான்முதலியனவுமாம். மரம் "அலர்தலை மராவுமுலறுதலையோமையும்" எனவும், புள் "கானவாரணங்கதிர்வரவிடம்ப" எனவும் "பறைதுண்ணென்றுடியோடு" எனவும், செய்தி "பொருள்கொண்டுபுண்செய்யின்" எனவும், யாழ் "செந்திறம்புரிந்தசெங்கோட்டியாழ்" எனவும், பண் "ஆசான்திறத்தின் என்பதனால் காந்தாரபஞ்சமமும், உரிப்பொருள் "தொடிவளைச்செங்கைதோளிற்கோட்டி" எனவும் "ஆறிடையுழக்கு மாதரைநோக்கி" எனவுங்கூறினமையால் போக்கும், வாளாதுபோக்கு எல்லாம்பாலையென்றலின்உடன் போக்குங் கொள்ளப்பட்டது. நிலமக்கள் "சண்ணிலெயினர்" எனவும், இளமாவெயிற்றியர், எனவுங்கூறலின் எயினர் எயிற்றியர் எனவும், ஈண்டுநீரின்மைநிலை "நீர்நசைவேட்கையின் மானின்றுவிளிக்கும்" என்பதனானும் "நீரின்றிவேனிறெறுநிலம்பாலை" எனவும், நீரின்மையே இந்நிலத்திற்குச்சிறப்பென்றுணர்க. "அறுநீர்ப்பைஞ்சுனை யாமறப்புலர்தலின்-உகுநெற்பொரியின்வெம்மைய" என அகப்பாட்டினும் "மறையாமாமாலகவா" எனக்கலியுள்ளுங்கூறினார் "வார்கொடி ஆய்கொடிக்கவலையும்" எனவும், பூ "கொம்பர்நல்லிலவங்கள் குவிந்தன" எனவும்பிறவுமென்று சொல்லப்பட்டவைந்திணை முதல் கருவுரிப்பொருளும் பிறவுமாகியவகத்திணைப்பொருட்பயன்களும் * உடம்பொடு புணர்த்திப் புறத்திணைப் பொருட்பயனும் பிறவுமிவ்வாறுடம்பொடு புணர்த்துணர்த்துங்கால் புனைந்துரைக்கப்பட்டுக் கேட்போர்க்கின்பம் பயவாதுணர்வு சலிக்குமாதலின் வந்தன வந்துழிக்காட்டுதலைக்கருதிற்றிவ் வுரையென்க. இனி இசை நாடகத்தமிழ் நூலது பகுதியுமிவ்வாறிவ்விடத்துப் பாரித்துரையாமையும், அவை இவைபோலப் பெருவழக்கின்றாதலானும் நிலத்தொடுங் கலத்தொடுங் கண்டத்தொடுங் கருவியொடும் நிலையொடும் இயக்கத்தொடும் இருவகைப்பலவகை விலக்குறுப்புக்கைகால் வட்டணைபொருள் விகுதி யோனிசந்தி சாதிசுவை குறிப்புசத்துவம்அவிநயம் சொல்சொல்வகை வண்ணம் பரிச்சேதம் என்பனவற்றோடுங் காதையோடும் பகுத்துக் கூறுங்கால் உய்த்துணர் வில்லோர்க்குச் செவிச்சுவைபயக்கும் ஆதலானும் ஈண்டுவிரியாது விரித்தலைக்கருதிற்று இவ்வுரையெனக்கொள்க. இனிப்பதிகச்செய்யுளுள் முதலீரடியும் போலயாண்டும் விரியாதது உரைபெருந்தமென்பதனைக் கருதியெனக் கொள்க.

* உடம்பொடு புணர்த்தல் ஒருத்தி.

கடவுள் துணை.

# சிலப்பதிகாரம்.

சிலம்பினது அதிகரித்தலையுடையது என வினைமுதற் பொருண்மையின் கண்வந்த ஆறும்வேற்றுமைத் தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித் தொகையாய் நூற்குக் காரணக்குறியாயிற்று. சிலம்பு என்றது "கண்ணகி யென்பாண் மனைவியவள்காற்—பண்ணமைசிலம்பு பகர்தல்வேண்டி" என்பதனாலும், அதிகரித்தல் என்றது "'வினைவிளைகால மாதலின்யாவதுஞ்—சினையலர்வேம்பன் றேரானாகிக்—கொன்றச்சிலம்பு கொணர்கவீங்கெனக்—கொலைக்களம்பட்ட கோவலன்" என்பதனாலும், அதனால் "அரசியல்பிழைத்தோர்க் கறங்கூற்றாவதூஉம்—உரைசால்பத்தினிக் குயர்ந்தோரேத்தலும்—ஊழ்வினையுருத்துவந் தூட்டுமென்பதூஉம்" என்பதனாலும் அறிக. இது எதிரது போற்றல். சிலப்பதிகாரம் வேற்றுமைத்தொகை யாதலால் "வன்றொடர்மொழியும் மென்றொடர்மொழியும்" என்னும் தொல்காப்பியம் எ-கு-கூ-சூத்திரத்துள் "ஒற்றென்றமிகையால்" மெல்லொற்றுத் திரிதல்கொள்க.

—*—

## பதிகம்.

### இணைக்குறளாசிரியப்பா.

குணவாயிற்கோட்டத் தரசுதுறந்திருந்த—குடக்கோச்சேர லிளங்கோ வடிகட்குக்—குன்றக்குறவ ரொருங்குடன்கூடிப்—பொலம்பூவேங்கை நலங் கிளர்கொழுநிழல்—ஒருமுலையிழந்தா ளோர்திருமாபத்தினிக்—கமரர்க்கரசன் றமர்வந்தீண்டியவள்—காதற்கொழுநனைக் காட்டியவளோடெங்—கட்புலங் காண விட்புலம்போய—திறம்பூதுபோலு மறிந்தருணீயென—அவனுழை யிருந்த தண்டமிழ்ச்சாத்தன்—யானறிகுவனது பட்டதென்றுரைப்போன்—ஆரணங்கண்ணிச் சோழன் மூதூர்ப்—பேராச்சிறப்பிற் புகார்நகரத்துக்—கோவலனென்பானோர் வாணிகனவ்வூர்—நாடகமேத்துநாடகக்கணிகையோ—டாடியகொள்கையி னரும்பொருள்கேடுறக்—கண்ணகியென்பாண் மனைவியவள்காற்—பண்ணமைசிலம்பு பகர்தல்வேண்டிப்—பாடல்சால் சிறப்பிற் பாண்டியன்பெருஞ்சீர்—மாடமதுரை புகுந்தனனதுகொண்டு—மன்பெரும் பீடிகைமறுகிற்செல்வோன்—பொன்செய்கொல்லன் றன்கைகாட்டக்—கோப்பெருந்தேவிக் கல்லதையிச்சிலம்—பியாப்புறவில்லையீங்கிருக்கென்றேகிப்—பண்டுதான்கொண்ட சில்லரிச்சிலம்பினைக் — கண்டனன்பிறனோர் கள்வன் கையென—வினைவிளைகால மாதலின்யாவதும்—சினையலர்வேம்பன் றேரானாகிக்—கன்றியகாவலர்க் கூஉய்க்கள்வனைக்—கொன்றச்சிலம்பு கொணர்கவீங்கெனக்—கொலைக்களம்பட்ட கோவலன்மனைவி—நிலைக்களங்காணா ணெடுங்கணீருகுத்துப்—பத்தினியாகலிற் பாண்டியன்கேடுற—முத்தாரமார்பின் மு

லைமுகந்திருகி—நிலைகெழுகூட னீளெரியூட்டிய—பலர்புகழ்பத்தினி யாகுமிவளென—வினைவிளைகாலமென் றீரியாதவர்—வினைவிளைவென்ன விறலோய்கேட்டி—அதிராச்சிறப்பின் மதுரைமூதூர்க்—கொன்றையஞ்சடைமுடி மன்றப்பொதியில்—வெள்ளியம்பலத்து நள்ளிருள்கிடந்தேன்—ஆரஞருற்ற வீரபத்தினிமுன்—மதுரைமாதெய்வம் வந்துதோன்றிக்—கொதியழற்சீற்றங் கொங்கையின்விளைத்தோய்—முதிர்வினைநுங்கட்கு முடிந்ததாதலின்—முந்தைப்பிறப்பிற் பைந்தொடிகணவனொடு—சிங்காவண்புகழ்ச் சிங்கபுரத்துச்—சங்கமனென்னும் வாணிகன்மனைவி—இட்டசாபங் கட்டியதாதலின்—வாரொலிகூந்தனின் மணமகன்றன்னை—ஈரேழ்நாளகத் தெல்லைநீங்கி—வானோர்தங்கள் வடிவினல்ல—தீனோர்வடிவிற் காண்டலில்லெனக்—கோட்டமில்கட்டுரைகேட்டனன்யானென—அரசியல்பிழைத்தோர்க் கறங்கூற்றாவதூஉம்—உரைசால்பத்தினிக் குயர்ந்தோரேத்தலும்—ஊழ்வினையுருத்துவந் தூட்டுமென்பதூஉம்—சூழ்வினைச்சிலம்பு காரணமாகச்—சிலப்பதிகார மென்னும்பெயரால்—நாட்டுதும்யாமோர் பாட்டுடைச்செய்யுளென—முடிகெழுவேந்தர் மூவர்க்குமுரிய—தடிகணீரே யருளுகென்றாற்கவர்—மங்கலவாழ்த்துப் பாடலுங்குரவர்—மனையறம்படுத்த காதையுநடநவில்—மங்கைமாதவியரங்கேற்றுக்காதையும்—அந்திமாலை சிறப்புச்செய் காதையும்—இந்திரன்விழவூ ரெடுத்தகாதையும்—கடலாட்டுக்காதையு மடலவிழ்கானல்—வரியும்வேனில்வந்திறுத்தென—மாதவியிரங்கிய காதையுந்தீதுடைக்—கனாத்திறமுரைத்த காதையும் வினாத்திறத்து—நாடுகாண்காதையுங் காடுகாண்காதையும்—வேட்டுவவரியுந் தோட்டலர்கோதையொடு—புறஞ்சேரியிறுத்த காதையுங்கறங்கிசை—ஊர்காண்காதையுஞ் சீர்சால்நங்கை—அடைக்கலக்காதையுங் கொலைக்களக் காதையும்—ஆய்ச்சியர்குரவையுந்தீத்திறங்கேட்ட—துன்பமாலையுநண்பகனடுங்கிய—ஊர்சூழ்வரியுஞ் சீர்சால்வேந்தனொடு—வழக்குரைகாதையும் வஞ்சினமாலையும்—அழற்படுகாதையு மருந்தெய்வந்தோன்றிய—கட்டுரைகாதையு மட்டலர்—கோதையர்குன்றக் குரவையுமென்றிவை—அனைத்துடன்காட்சிகால் கோணீர்ப்படைநடுகல்—வாழ்த்துவரந்தரு காதையோ—டிவ்வாறைந்தும்—உரையிடையிட்ட பாட்டுடைச்செய்யுள்—உரைசாலடிகளருளமதுரைக்—கூலவாணிகன்சாத்தன்கேட்டனனிது—பால்வகைதெரிந்த பதிகத்தின்மரபென.

(இதன்பொருள்.) குணவாயில் கோட்டத்து அரசு துறந்து இருந்த குடக்கோ சேரல் இளங்கோ அடிகட்கு - திருக்குணவாயில் என்னும் ஒரூரின்கண்ணுள்ள அருகன்கோயிலின்கண் அரசியலைத் துறந்திருந்த குடதிசைக்கு அரசனாகிய செங்குட்டுவன் என்னுஞ் சேரனுக்கு இளவரசராகிய அடிகள் என்னும் பெயரையுடையார்க்கு. கோட்டம் கோயில். அடிகள் எனப்பெயர்வந்தது செங்குட்டுவனுக்கு இளையராகிய அரசர் தமக்குரிய அரசியலைத் துறத்தலால். சேரல் சேரன். குணவாயில் குணக்கின்கண்வாயில்என விரியும். துறந்து என்னும் வினையெச்சம் இருந்தஎன்னும் பெயரெச்சத்தோடும் அது இளங்

கோவடிகள் என்னும் பெயரோடுமுடிந்தன. குன்றம் குறவர் ஒருங்கு உடன் கூடி - செங்குன்று என்னு மலையின் கண்ணுள்ள குறவரெல்லாரும் ஒரு சேரத்திரண்டுபோய், போய் சொல்லெச்சம். பொலம் பூ வேங்கை நலம் இளர் கொழுநிழல் ஒருமுலை இழந்தாள் ஓர் திருமாபத்தினிக்கு - (எமது கொடுங்கோளூர் மலைப்பக்கத்து) பொன்போலும் பூக்களையுடைய வேங்கை மரத்தின் குளிர்ச்சிமிகுந்த கொழுவிய நிழலின்கண் ஒரு முலையையிழந்தவளாகிய ஒரு அழகிய வீரபத்தினியின்பொருட்டு, குவ்வுருபு நிமித்தப்பொருட்டு. அமரர்க்கு அரசன் தமர்வந்து ஈண்டி - தேவேந்திரனது உறவினர்வந்து நெருங்கி, தமர் தேவர். அவள்காதல் கொழுநனைகாட்டி - அவளுக்கு விருப்பத்தைத்தரும் கணவனைக்காண்பித்து, எம் கண் புலம் காண விண்புலம் போயது இறும் பூதுபோலும் அறிந்தருள் நீ என - எமது கண்ணறிவாற்காண விண்ணுலகிற்சென்றது அதிசயமாயிருந் ததனை நீ யறிந்தருளாயென்றுகூற; கூடி என்னும் வினையெச்சம்போய் என்னும் வினையெச்சத்தோடும் அவ்வெச்சம் என என்னும் எச்சத்தோடு முடிந்தன. போலும் ஒப்பில்போலி. அவன் உழை இருந்ததண் தமிழ்சாத்தன் அதுபட்டது யான் அறிகுவன் என்று உரைப்போன் - (குறவர் இளங்கோவடிகளைநோக்கி யறிந்தருளாயென்றவளவில் செங்குட்டுவ னதிசயித்து முகநோக்கப் பரிசில் காரணமாகவந்து) அவனிடத்திருந்த இனியதமிழில்வல்ல சாத்தன் (குறிப்பால் அறிந்து) அது விளைந்ததை யானறிவேனென்று சொல்லுகின்றவன், அது முலையிழந்தது. சொல்லெச்சமாய் நின்ற அறிந்து என்னும் வினையெச்சம் உரைப்போன் என்னும்வினைமுற்றுப் பெயரின்முதனிலைகொண்டது. ஆர் அம் கண்ணி சோழன் மூதுஊர் பேராசிறப்பின் புகார் நகரத்து கோவலன் என்பான் ஓர் வாணிகன் - ஆத்திமலராலாகிய அழகிய மாலையையணிந்த சோழனது பழையநகர்களுள், நீங்குதலில்லாதவிழவுச் சிறப்பினையுடைய காவிரிப்பூம் பட்டினமாகிய நகரத்தில் கோவலனென்று சொல்லப்படுவான் ஓர் வணிகன், என்பான் படுவிகுதி தொக்குநின்ற செயப்பாட்டுவினையா லணையும்பெயர். அவ்வூர் நாடகம் ஏத்தும் நாடகக்கணிகையோடு ஆடிய கொள்கையின் அரும் பொருள் கேடு உற - தன்னூரில் நாடகம் துதிக்கும் நாட்டியப் பொதுமகளாகிய மாதவியென்பாளோடு கூடிய கொள்கையால் பெறுதற்கரியபொருள் தொலைய, குவ்வுருபு விரித்து நாடகத்துக்கு உருப்பசி முதலியோர் ஏத்தும் எனினும் அமையும். இவளால் நாடகம் சிறப்படைதலால் நாடகம் ஏத்தும் என்முர். மனைவி கண்ணகி என்பாள் அவள் கால் பண் அமை சிலம்பு பகர்தல் வேண்டி - (அவன்) மனைவி கண்ணகியென்று பெயர்கூறப்படுவாள் அவள் காலிலுள்ள ஓசை நிரம்பிய சிலம்பினை விற்றல்வேண்டி, பாடல் சால் சிறப்பின் பாண்டியன் பெருஞ்சீர் மாடம் மதுரை புகுந்தனன் - பாடலில் நிறைந்த சிறப்பினையுடைய பாண்டியனது மிக்க புகழையுடைய மாடங்கள் நிறைந்த மதுரைக்கண்ணே சென்று புகுந்து, முற்றெச்சம். அதுகொண்டு மன் பெரும்பீடிகை மறுகில் செல்வோன்

பொன்செய் கொல்லன் தன்கைகாட்ட - (முன்னாளில் மதுரையிற்புகுந்த கோவலன்வழி நாளில்) அதனைக்கொண்டுபோய் விற்றற்குப் பெரிய கடைவீதியிற் செல்லுகின்றவன் (கூற்றுவனைக் கண்டாற்போல) ஒரு பொற்கொல்லனைக்கண்டு அவன் கையிற்காட்ட, வாணிகன் புகுந்துகாட்ட எனமுடிக்க, மன்கழிவின்கண்வந்தது. இ சிலம்பு கோபெருந்தேவிக்கு அல்லது ஐ யாப்புறவு இல்லை ஈங்கு இருக்க என்று ஏகி - (அங்ஙனங்காட்டக்கண்ட பொற்கொல்லன்) இப்பெருவிலைச்சிலம்பு அரசனுடைய பெருந்தேவிக்கல்லாமல் பிறர்க்குப்பொருத்தமுடையதல்ல (ஆதலால்)இக்கோட்டத்தில் (அரசனுக்கு அறிவித்துவரும் அளவும்) இருக்கக்கடவாய் என்று சொல்லிப்போய் "கோப்பெருந்தேவிக்கல்லதையிச்சிலம் - பியாப்புறவில்லையெனமுன்போந்து - விறன்மிகுவேந்தர்க்கு விளம்பியான்வரவென் - சிறுகுடிலங்கணிருமினீரெனக் - கோவலன்சென்றக் குறுமகனிருக்கையோர் - தேவர்கோட்டச்சிறையகம்புக்கபின்" எனக் கொலைக்களக்காதையிற் கூறினமையால் ஈங்கு என்றதற்குக் கோட்டம் என்றும், யாப்புறவுபொருத்தம். ஐசாரியை இடைச்சொல். பண்டுதான்கொண்ட-முன்புதான் (களவிற்) கொள்ளுதலால் (அதை மறைத்தல்வேண்டி) "காந்தியான்கொண்ட காலணியீங்குப் - பரந்துவெளிப்படா முன்னமன்னர்க்குப் - புலம்பெயர்புதுவனிற் போக்குவன்யானென" என அக்காதையிற் கூறினமை காண்க. சில் அரிசிலம்பினைபிறன் ஓர்கள்வன் கைகண்டனன்என - சிலவாகிய பருக்கைக்கல்லுகளையுடைய சிலம்பினைப் பிறநாட்டிலுள்ளவனாகிய ஒரு கள்வன்கையிற் கண்டேனென்று (அரசனுக்குக்) கூற, கொல்லன் ஏகி கண்டனன் என எழுவாய்முடிபுசெய்க. வினை விளைகாலம் ஆதலின் (முற்பவத்திற் செய்த) தீவினைவந்து தனக்குப் பயக்குங்காலம் ஆதலால், சினை அலர் வேம்பன்யாவது உம் தேரானாகி - கொம்பின்கண் அலர்ந்த வேப்பமலராலாகிய மாலையையணிந்த பாண்டியன் சிறிதும் ஆராயானாகி;

கைகுறைத்தல் முதலியசெய்தோ னிதனைத் தேராதொழிந்தான் என்னும் இரக்கம்தோன்ற யாவதும் தேரானாகி என்றார். யா என்னும் வினா சிறுமைமேல் நின்றது. கன்றியகாவலர்கூய் - கோபமுதிர்ந்த காவலில்டிப்பட்டோரை யழைத்து, தீது செய்யார் என்பது தோன்றக் காவலர் என்றார். கள்வனைகொன்று அசிலம்பினை ஈங்குகொணர்க என (இவன்சொன்ன) அக்கள்வனைக்கொல்ல அச்சிலம்பினையும் அவனையும் இப்பொழுதே கொண்டுவருக என்று அரசன் கூற, அச்சிலம்பு கோப்பெருந்தேவி சிலம்பைச் சுட்டிக் கூறிற்றாயின், அவனைக்கொன்று சிலம்பைக் கொணர்க என்றான் எனினும் அமையும், கொணர்கொணு பகுதி. கொன்று வினையெச்சத்திரிபு. வேம்பன் தோரானாகி கூய்கொணர்க என முடிபுசெய்க. கொலைக்களம் பட்ட கோவலன்மனைவி (கொல்ல) கொலையிடத்தேபட்ட கோவலன் மனைவியானவள், என என்னும் எச்சம்பட்டஎன்னும் பெயரெச்சத்தையும் அது கோவலன்என்னும் பெயரையுங்கொண்டன. நிலைகளம் காணாள் (தனக்கு) ஒரு பற்றுக்கோ

டுகாணுமல், காணுள் முற்றெச்சம். பத்தினி ஆகலின் - அவள் பத்தினி ஆதலால், பாண்டியன் கேடு உற - பாண்டியன் (முன்புசென்று அவன்) உயிர்கெட, நெடுங்கண் நீர்உகுத்து - நீண்ட கண்களினின்றும் நீரைச்சிந்தி, நிலைகெழுகூடல் - அழியாத (அவனது) மதுரையை, முலைமுகம்திருகி எரிஊட்டிய - முலைமுகத்தினின்று மாறுபட்டு (எழுந்த) நெருப்புண்ணச்செய்த, பலர் புகழ் பத்தினி ஆகும் இவள் என - பலராற் புகழப்படும் பத்தினியாம் இக்குறவராற் சொல்லப்பட்டவள் என்று சொல்ல; கோவலன் மனைவி காணுது உகுத்து திருகி ஊட்டியஎன எழுவாய் முடிபுசெய்து இறுதியிலுள்ள பெயரெச்சத்தோடு பத்தினியென்னும் பெயரையும், சாத்தன் என்னும் வினைமுதலோடு என என்னும் எச்சத்தையுங் கொண்டு முடிக்க. வினை விளைகாலம் என்றீர் - முன்னை வினை விளைந்தகாலமென்று சொன்னீர், அவர் வினை விளைவு யாது என்ன - அவர்க்கு வினை விளைந்தகாலம் யாதென்று செங்குட்டுவன் வினவ, விறலோய் கேட்டி - வெற்றியையுடையாய் கேட்பாய், கேட்டி இகரவீற்று முன்னிலை யொருமை யெதிர்கால வினைமுற்று. அதிரா சிறப்பின் - (பகைவரால்) நடுக்கமில்லாத சிறப்பினையுடைய, மதுரை மூதூர் - மதுரையாகிய பழைய நகரின்கண், கொன்றை அம் சடைமுடி - கொன்றை மாலையையணிந்த அழகிய சடா மகுடத்தையுடைய சிவபிரானது, இது அன்மொழித்தொகை. மன்றம் பொதியில் வெள்ளி அம்பலத்து - மன்றம் ஆகிய வெள்ளியம்பலத்தில், மன்றம் பொதியில் ஒருபொருட் பன்மொழி. பொது இல் பொதியில் மருஉ- "இளந்தவல்ல" தொல்காப்பியம் எ - கு - புணரியல் - ளஎ - ஆம் - சூ - ஆல் காண்க. நள் இருள் கிடந்தேன் - செறிந்த இருளிற்றுயின்றேன், மதுரை மா தெய்வம் - மதுரைக்காவல் தெய்வமானது, ஆர் அஞர் உற்ற - நிறைந்த துன்பம் அடைந்த, * வீரபத்தினி முன் வந்து தோன்றி - மறக்கற் புடையாள் முன்பு வெளிப்பட்டு, சீற்றம் கொதி அழல் - மிக்க கோபத்தால் வெவ்விய அழலை, கொங்கை இன் விளைத்தோய் - (நினது) கொங்கையின் கண் விளைத்தோய், பைந்தொடி நுங்கட்கு முதிர்வினை முடிந்தது ஆதலின் - பசிய வளையலையுடையாய் உங்கட்கு முற்பட்ட நல்வினை முடிந்ததாகலால், முதிர்தல் முற்படல். கணவன் ஒடு முந்தை பிறப்பில் - உன் கணவனோடு முற்பிறப்பில், சிங்கா வண்புகழ் சிங்கபுரத்து - குறையாத வளவிய புகழையுடைய (கலிங்க நாட்டிலுள்ள) சிங்கபுரத்தில், சங்கமன் என்னும் வாணிகன் மனைவி - சங்கமனென்னும் வணிகன் மனைவியானவள், இட்டசாபம் கட்டியது ஆதலின் - கொடுத்தசாபம் (இப்பிறப்பில்) மூண்டதாதலால், வார் ஒலி கூந்தல் - நீண்ட செறிந்த கூந்தலையுடையாய், ஒலித்தல் தழைத்தல். நின்மண மகன் தன்னை - உனது கணவனை, ஈரேழ் நாள் அகத்து எல்லை நீங்கி - பதினாலாநாளில் பகல் நீங்கி, (இரவில் என்றபடி) (காண்பை காணுங்கால்) எல் பகற்பொழுது. ஐ - பகுதிப்பொருள் விகுதி. வானோர் தங்கள் வடிவின் அல்லது - வானிலுள்ள

---

* மறக்கற்பு அறக்கற்பு என இரண்டு, அறக்கற்புடையாள் கோப்பெருந்தேவி.

தேவர் வடிவால் காண்பதல்லது, ஏனோர் வடிவில் காண்டல் இல் என - இவ்வுலகிலுள்ள மக்கள் வடிவாற் காண்பதில்லையென்ற, கோட்டம் இல் கட்டுரை யான் கேட்டனன் என - வஞ்சமில்லாத வுறுதிச்சொல்லையான் கேட்டேனென்று சாத்தன் சொல்ல, கட்டுரை பொருள் பொதிந்தசொல். மதுரைமா தெய்வம் வந்து தோன்றி காண்டலில்லென எனவும், யான் கேட்டனன் எனவு முடிக்க. அரசு இயல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவது உம் (அதுகேட்ட அடிகள்) அரசியலுள் சிறிது பிழைசெய்யின் அவ்வரசரை யறக்கடவுளே இயமனாய் வந்து கொல்லும் என்பதும், கு-உருபு மயக்கம். உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தல் உம் - புகழ் நிறைந்த கற்புடை மகளிரை மக்களேயன்றித் தேவர் முதலியோர் துதித்தலும், குவ்வுருபு இதுவும் அது. ஊழ்வினை வந்து உருத்து ஊட்டும் என்பது உம் - (முன்செய்த) இருவகை வினையும் (செய்த முறையேசெய்தவனை) நாடிவந்து உருக்கொண்டு நுகர்விக்கும் என்பதும், (ஆகிய இம்மூன்று பகுதியும்) சூழ்வினை சிலம்பு காரணம் ஆக-ஆராயுந் தொழில் (நிறைந்த) இச்சிலம்பு காரணமாக, (முறையாற் பகுத்தலால்) சிலப்பதிகாரம் என்னும் பெயர் ஆல் யாம் ஓர் பாட்டு உடை செய்யுள் நாட்டுதும் என - சிலப்பதிகாரம் என்னும் பெயரினால் நாம் பலபாக்களோ டுரைப்பாட்டையும் இசைப்பாட்டையுமுடைய ஒரு பொருட்டொடர் நிலைச்செய்யுளை நிறுத்துதும் என்று அடிகள்சொல்ல, சாத்தனும் இதுசெய்யக் கருதினமையால் நிறுத்துதும் என உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்றாகக் கூறினார். நாட்டுதும் என என்றவினைக்கு அடிகளை வினைமுதலாகக்கொள்க.

முடிகெழுவேந்தர் மூவர்க்கும்உரியது அடிகள் நீர் ஏ அருளும் என்றற்கு-(இச்சரிதம் புகாரினும் மதுரையினும் வஞ்சியினும் நிகழ்ந்தது ஆதலால்) முடியணிந்த அரசர் மூவர்க்கும் உரியது (ஆதலால்) அடிகள் நீரே யருளும்என்ற சாத்தற்கு, அடிகள் அண்மைவிளி. அவர் மங்கலவாழ்த்துப்பாடல்உம்-(தாம் வகுத்துக்கொண்டதனை) அவ்வடிகள் மணத்தின்மகளிர் வாழ்த்துதலையுடைய பாடலும், மங்கலம் கல்யாணம். குரவர் மனைஅறம்படுத்த காதை உம்-தாய்தந்தைமார் இல்லறத்தில் அடிப்படவேண்டி வேறுபடுத்தியகாதையும், கதையையுடையது காதை எனநின்றது. நடம் நவில் மாதவி மங்கை அரங்கேற்றுக்காதைஉம்-நடனம்பயின்ற மாதவி மங்கைப்பருவத்தே யரங்கேறுதலையுடையகாதையும், அந்திமாலைசிறப்புச்செய்காதைஉம்-அந்திக்காலத்துமாலையைச்சிறப்புச்செய்தகாதையும், ஊர் இந்திரன்விழவு எடுத்தகாதைஉம்-நகரின்கண் இந்திரனுக்குவிழவெடுத்தகாதையும், கடலாட்டுக்காதைஉம்-(அவ்விழவின்முடிவில்)கடலாடுதலையுடையகாதையும்,மடல்அவிழ்கானல்வரிஉம்(கடலாடியகோவலனும்மாதவியும்)இதழவிழ்ந்தகானலிடத்துயாழ்ப்பாட்டுநிகழ்தலிற்கானல்வரியும், வேனில்வந்துஇறுத்தென மாதவிஇரங்கியகாதைஉம்-இளவேனில்வந்து தலைப்பட்டதென்று பிரிந்தமாதவி வருந்தியகாதையும், தீது உடைகனாத் திறம் உரைத்த காதைஉம் - (கண்ணகிதான்கண்ட) தீங்கினையுடைய கனவின் திறத்

தைத் (தேவந்திக்குச்) சொன்னகாதையும், வினாதிறத்து நாடுகாண் காதைஉம்-(மதுரையாதென) வினவிய திறத்தையுடைய கண்ணகி சோழநாட்டின் வளத்தைக்கண்ட காதையும், பிறர்வினவும் திறத்தையுடைய சோழநாட்டின் வளம் எனினும் அமையும் காடுகாண் காதைஉம் - பாலைநிலமாகியகாட்டை யவர்கண்டகாதையும், வேட்டுவ வரிஉம் - வேடர்மகளாகிய சாலினி கொற்றவையுருக்கொண்டாடுங் கோலச்சாரியும், தோடு அலர்கோதை ஒடு புறஞ்சேரி இறுத்த காதைஉம் - பூவிதழ்விரிந்த கூந்தலையுடைய கண்ணகியோடு மதுரைப்புறஞ் சேரியிற்சென்றிருந்த காதையும், கறங்கு இசை ஊர்காண்காதைஉம் - (கோவலன்) முழங்காநின்ற முரசொலியையுடைய மதுரையைக்கண்டகாதையும், சீர்சால் நங்கை அடைக்கலக் காதைஉம் - அழகமைந்த கண்ணகியை மாதரியிடத்துக் கவுந்தியடிகளடைக்கலங்கொடுத்தகாதையும், கொலைக்களக் காதைஉம்-கோவலன் கொலைக்களத்திலகப்பட்ட காதையும், ஆய்ச்சியர் குரவைவும்-(உற்பாதசாந்தியாக)மாதரிமுதலாயுள்ள ஆய்ச்சியர் *குரவைக்கூத்தாடினமுறையும், தீத்திறம்கேட்டதுன்பமாலைஉம்-கோவலன் கொலையுண்ட கொடுந்திறத்தினைக் கண்ணகிகேட்டுத் துன்பமடைந்த இயல்பும், நண்பகல் நடுங்கிய ஊர்சூழ் வரியும்-நடுப்பகலிற் கற்புடைமகளிர் நடுங்க (கண்ணகி நாணிறந்து வெளிப்பட்ட வுருவத்தோடு) ஊர்சூழவரும் வரியும், சீர்சால் வேந்தனொடு வழக்கு உரைகாதைஉம் - புகழமைந்த பாண்டியனோடு கண்ணகி வழக்குரைத்த காதையும், வஞ்சினம் மாலைஉம் - (இருந்தோற்ற நெடுஞ்செழியன் மனைவியைக் கண்ணகிநோக்கி) வஞ்சினங்கூறிய இயல்பும், வஞ்சினம் மேற்கோள், அழற்படு காதைஉம்-(வஞ்சினங்கூறிய கண்ணகி முலைமுகத்தெழுந்த) தீயால் ஊரையெரித்த காதையும், தோன்றிய அருந்தெய்வம் கட்டுரை காதைஉம்-(அவ்வழல் தணித்தற்கு) வந்து தோன்றிய மதுரைமா தெய்வம் (அவளது பவத்தொடர்பைக்) கட்டுரைத்த காதையும், மட்டுஅலர் கோதையர் இனம்குரவைஉம் - தேனலர்ந்த கூந்தலையுடைய குறத்தியர் (கண்ணகியை வேங்கைமரத்தி னிழலின்கட்கண்டு) மலையின்கண் (முருகவேளைநோக்கி பாடிய குரவைக்கூத்தும்) என்ற இவை அனைத்துஉடன் - என்றுசொல்லப்பட்ட விவ்விருபத்து காவுடனே, காட்சி - கற்காட்சிக் காதையும், கால்கோள்-கற்கொண்ட காதையும், கற் கோள் கால் கோள்விகாரம். நீர்ப்படை-(கொண்டகல்லை) கங்கையாற்றுநீரிற் படுத்தகாதையும், நடுகல்-(அக்கல்லினை) நட்டகாதையும், வாழ்த்து-(நட்டகல்லால் பிரதிட்டையும் விழவும்பெற்ற பத்தினிக் கடவுள் செங்குட்டுவனையும் நெடுஞ்செழியனையும் பெருங்கிள்ளியையும்) வாழ்த்தினகாதையும், வரம் தரு காதைஒடு-(அவரொடு கனகவிசையர்முதலிய ஆரியமன்னர் உள்ளிட்டார்க்கு) வரந்தந்த காதையும் ஆகிய இவைகளோடு, ஒடு எண்ணிடைச்சொல். இஆறைந்தும் - இம்முப்பது

---

* "குரவையென்ப தெழுவர்மங்கையர்—செந்நிலைமண்டிலக் கடகக்கைகோத்துத்—தந்நிலைகொட்பநின் றுடலாகும்" என்பதனாற்காண்க.

ம், உம்மை முற்று. உரை இடை இட்ட - உரையிடை யிட்டனவும், பாட்டு உடை - பாட்டுடையனவுமாகிய, செய்யுள் - காப்பியமாக, செய்யுள் கருவியாகுபெயர். உரைசால் அடிகள் அருள - புகழமைந்த இளங்கோவடிகள் அருளிச்செய்ய, மதுரை * கூலம் வாணிகன் சாத்தன் கேட்டனன் - மதுரையின்கணுள்ள கூலவாணிகனாகிய சாத்தன்கேட்டான், இது பால்வகைதெரிந்த பதிகத்தின்மரபு—இவ்வுரையறை (அறப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும்) முப்பால்களின் வகையைத்தெரிந்த மரபுஆம்—என்றவாறு.

ஓர் நிமித்திகன் அடிமுதல் முடிகாறும் இருவரையும் நோக்கி அரசுரிமை இளையவற் குண்டென்ற அளவில் செங்குட்டுவன் வெகுண்டு நோக்க அடிகள் துறவுபூண்டார் என்பது வரலாறு.

எனவென்றது அசைச்சொல். ஆசிரியப்பாவி னிறுதியினிற்றல் சிறப்புடைத்து. தொ-பொ-செய்யுளியல்-கக௦. "அகவலிசையன வகவன்மற்றவை ஏ ஓ ஈ ஆ எனவென் றிறுமே" என்பதனாற்காண்க. எண்பத்தெட்டாம் அடியுள் கட்டுரைகாதையுமட்டலர், வாழ்த்துவரந்தருகாதையோடு எனச்சிந்தடிகளும் இவ்வாறைந்தும் எனக் குறளடியும் வருதலால் இவ்வாசிரியப்பா குட்டத்துக்காயிற்று. தொ-பொ-செய்யுளியல் - க௦கூ-ரு. "குட்டம் எருத்தடியுடைத்துமாகும்" உடைத்தும் என்ற உம்மையால் ஈற்றயலடியுமன்றி ஏனையடிகளும் சீர்குறைந்து நடக்கும் என அமைதலால் இணைக்குறளாசிரியப்பா எனினும் அமையும்.

ஒருந்தமிழொருமூன்றுமுலகின்புறவகுத்துச்
சேரன்றெருகுத்தசிலப்பதிகாரத்திற்சேர்ந்தபொருள்
ஆருந்தெரியவுரைவிரித்தானடியார்க்குநல்லான்
காருந்தருவுமனையானிரம்பையர் காவலனே.

பதிக முற்றிற்று.

---

## உரைபெறுகட்டுரை.

அன்றுதொட்டுப் பாண்டியனாடு—மழைவறங்கூர்ந்து வறுமையெய்தி—வெப்புநோயுங் குருவுந்தொடரக்—கொற்கையிலிருந்த வெற்றிவேற்செழியன்—நங்கைக்குப்பொற்கொல்ல ராயிரவரைக்கொன்று—களவேள்வியால்விழவொடுசாந்திசெய்ய—நாடுமலியமழைபெய்து நோயுந்துன்பமுநீங்கியது.

(இ-ள்.) பாண்டியன்நாடு அன்றுதொட்டு - பாண்டியனுடையநாடுஅன்றுதொடங்கி, மழைவறங்கூர்ந்து வறுமை எய்தி - மழைவறத்தல் மிகுதலால்.

---

* கூலம்எண்வகைத்து—நெல், புல், வரகு, தினை, சாமை, இறுங்கு, மலைநெல், மூங்கில்நெல்.

வறுமையடைந்து, வெப்புநோயும் குருவும் தொடர-சுரநோயுங் குருநோயும் இடைவிடாதுநலிய, கொற்கையில் இருந்தவெற்றிவேல் செழியன்-கொற்கைக்கண் இருந்தவெற்றியைத்தரும் வேலேந்திய இளஞ்செழியன், நங்கைக்கு பொற்கொல்லர் ஆயிரவரை கொன்று - வீரபத்தினிக்கு ஆயிரம்பொற்கொல்லரைப் பலியிட்டு, களம் வேள்வியால் சாந்தி விழவுசெய்ய-கொலைக்களவேள்வியால் சாந்திசெய்து விழவெடுத்தலால், நாடுமலிய மழைபெய்து நோய்உம் துன்பம்உம்நீங்கியது-அவன்நாடுமிகவுமழைபெய்து (முற்கூறிய) வறுமையினின்றும் நோயினின்றும் நீங்கியது. ஒடு எண்ணிடைச்சொல்,

கூர்ந்துஎன்னுங் காரணப்பொருளில்வந்த வினையெச்சம் எய்தியென்னும்எச்சத்தையும், அவ்வெச்சம் நலிய என்னும் வினையெச்சத்தின் முதனிலையையும், கொன்று என்னும் எச்சம் செய்யஎன்னும் காரணப்பொருளில்வந்த வினையெச்சத்தின் முதனிலையையும் கொண்டன.

அதுகேட்டு

கொங்கிளங்கோவரசர் தங்கணாட்டகத்து—நங்கைக்குவிழவொடு சாந்திசெய்ய—மழைத்தொழிலென்று மறவாதாயிற்று.

(இ-ள்.) அதுகேட்டு கொங்கு இளங்கோ அரசர்-அதனைக்கேட்டுக் கொங்குமண்டிலத்திலுள்ள இளங்கோவாகிய கோசர், தங்கள் நாட்டகத்து நங்கைக்கு சாந்திவிழவுசெய்ய - தங்கள்நாட்டில் வீரபத்தினிக்கு (பாண்டியன் செய்தவாறு)சாந்திசெய்துவிழவெடுத்தலால், மழைத்தொழில்என்றுஉம்மறவாது ஆயிற்று - (அவைநீங்கி) மழைபெய்தற்றொழில் (பெய்யுநாளில்) எப்பொழுதும் வழுவாதுநின்றது. இளங்கோசர் எனவும்பாடம்.

அதுகேட்டு

கடல்சூழிலங்கைக் கயவாகுவென்பான்-நங்கைக்கு—நாட்பலிபீடிகை கோட்டமுந்துறுத்தாங்—கரந்தைகெடுத்து வரந்தருமிவளென—ஆடித் திங்களகவயினாங்கோர்—பாடிவிழாக்கோள்பன்முறையெடுப்ப —மழைவீற்றிருந்து வளம்பலபெருகிப்—பிழையாவிளையு ணாடாயிற்று.

(இ-ள்.) அதுகேட்டுகடல்சூழ் இலங்கைகயவாகுஎன்பான்-அதனைக்கேட்டுக் கடலே அகழாகச்சூழ்ந்த இலங்கைக்குஅரசனாகிய கயவாகுஎன்பவன், நங்கைக்குநாள் பலிபீடிகைஉம் முந்துஉறுத்துகோட்டமும்உறுத்து-வீரபத்தினிக்கு நாள்தோறும் பலிகொள்ளுதலையுடைய பீடத்தையுமுந்தச்செய்து (பின்பு) கோயிலும் அமைத்து, அரந்தைகெடுத்து வரம் இவள்தரும் என - (முற்கூறிய) துன்பங்களைக்கெடுத்து (நமக்குவேண்டும்) வரங்களை இவள் தருவாள்என்றுதுணிந்து, ஆடித்திங்கள் அகவயின்-ஆடிமாதத்திடத்து, பாடி ஆங்கு ஓர்விழாக் கோள் பல்முறை எடுப்ப-தன்னகரத்தில்அங்குஓர்ஆட்டை விழாக் கொள்கையாகப்பலமுறையும்செய்விக்க,மழைவீற்றிருந்துபலவளம் பெருகி பிழையாவிளையுள் நாடு ஆயிற்று-மழைகுறைவின்றி நிலைபெறுதலால் பலவளங்களுநு மிக்குப்பொய்யாத விளைவினையுடையநாடாயிற்று.பாடி-நகர். உம்மையைப் பீடிகைக்கும் உறுத்து என்புழிக் கோட்டத்துக்குங் கொள்க.

பிடிகை முந்து என்றமையால் கோட்டம் பின்புஎன்றல் உபலக்கணம். அகம் வயின் ஒருபொருளிருசொல். ஆட்டைவிழா வருடந்தோறுஞ் செய்யும்விழா.

அதுகேட்டு

சோழன்பெருங்கிள்ளி கோழியகத்தே—எத்திறத்தானும் வரந்தருமிவ ளோர்—பத்தினிக்கடவுளாகுமென நங்கைக்குப்—பத்தினிக்கோட்டமுஞ்ச மைத்து—நித்தல்விழாவணிநிகழ்வித்தோனே-

(இ-ள்.) அதுகேட்டு கோழிஅகத்து பெருங்கிள்ளி சோழன் - அதனைக் கேட்டுச் சோழநாட்டில் உறையூரிடத்தில் பெருநற்கிள்ளி யரசனாகிய சோழன், இவள் ஓர்பத்தினிக்கடவுள் ஆகும் - இவள் ஒரு பத்தினிக்கடவுளாதலால், எதிறத்தான் உம்வரம்தரும் என-எவ்வகையாலும் (நமக்குத் துன்பத்தைக்கெடுத்து) வரந்தருவாளென (கருதி) நங்கைக்கு பத்தினிகோட்டமும் சமைத்து-வீரபத்தினிக்குப் பத்தினிக்கோட்டம் என ஓர் கோயிலுமமைத்து, நித்தல்விழா அணிநிகழ்வித்தோன்—நாள்தோறும்விழாவலங்காரமும்நடத்தினன்.

ஒருகோழி நிலமுக்கியத்தால் யானையோடு போர்செய்து அதனைப் போரிற் றொலைத்தலைக்கண்டு அந்நிலத்திற்செய்த நகர்க்குக் கோழியெனப் பெயராயிற்று. இவள் பிறந்த நிலவுரிமைபற்றி எத்திறத்தானும் என்றான். உரையிடையிட்டபாட்டைச் செய்யுள்என்றமையால் காப்பியஞ்சட்குச் சிறுபான்மை இவ்வுரையிடையிட்டனவும் வரும் எனக்கொள்க. "உரையும்பாட்டையும் விரவிவருமே" என்பது ஒத்து ஆதலால்.

உரைபெறுகட்டுரைமுற்றிற்று.

# புகார்காண்டம்.

புகார் காவிரிப்பூம்பட்டினம், காண்டம் பிரிவு. புகாரின் கண்ணடந்த(செய்தியின்) பிரிவையுடையதுஎன ஏழாம்வேற்றுமைத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகை நிலைத்தொடராய்அதிகாரத்திற்குக்காரணக்குறியாயிற்று, இயல்பாதல் தொ-எ-புள்ளி-கக0-புறனடை-சூ-ஆல்-கொள்க. புகார்கழிமுகம் அது அங்குள்ளநகரிற்கு ஆதலால் இடவாகுபெயர் "கயவாய்மருங்கின்" என்பதனால் உணர்க.

## முதல் ஆவது மங்கலவாழ்த்து.

கல்யாணத்திற் பெண்கள் வாழ்த்துதலையுடைய பாடல்எனவிரிதலில் ஏழாம் வேற்றுமைத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகையாய்ப்படலத்திற்குக்காரணக்குறியாயிற்று. இதனுட்கதை நிகழ்ச்சியின்மையால் மங்கலவாழ்த்துக்காதையென்னாது மங்கலவாழ்த்து என்றார்.

சிந்தியல்வெண்பா.

திங்களைப்போற்றுதும் திங்களைப்போற்றுதும்
கொங்கலர்தார்ச்சென்னி குளிர்வெண்குடைபோன் றிவ்
வங்கணுலகளித்தலான்.

(இ-ள்.) கொங்கு அலர் தார் சென்னி - தாதுபரந்த மாலையையணிந்த சோழனுடைய, குளிர்வெண்குடைபோன்று - குளிர்ந்த வெள்ளிய் குடையையொத்து, இ அம் கண்உலகு அளித்தலான் - இந்த அழகிய வுலகிற்குப் பொதுவற அளிசெய்தலால், திங்களைபோற்றுதும் திங்களைபோற்றுதும்-நாம் சந்திரனைத் துதிப்போம் சந்திரனைத்துதிப்போம்—எ-று.

மங்கலமொழியாதலால் திங்களைமுற்கூறினர். இவ்வடுக்கு இசைநிறை. இது பண்பும் பயனும்பற்றிவந்த வுவமம். “நடைமிகுத்தேத்திய குடைநிழன்மரபு” இது பாடாண்டிணையுள் ஒருதுறை. இதன்பொருள் உலகவொழுக்கத்தை மிகவும் உயர்த்திப் புகழ்ந்து கூறுங் குடையினதிலக்கணம்.

ஞாயிறுபோற்று து ஞாயிறுபோற்றுதும்
காவிரிநாடன் றிகிரிபோற்பொற்கோட்டு
மேருவலந்திரிதலான்.

(இ-ள்.) காவிரிநாடன்திகிரிபோல் - காவிரிநாட்டையுடைய சோழனது ஆக்கிணு சக்கரம்போல, பொன்கோடு - பொன்னுகிய சிகரத்தினை யுடைய, மேரு வலம் திரிதலான் - மேருவை வலஞ்செய்தலால், ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதும் - நாம் சூரியனை வணங்குவோம் சூரியனை வணங்குவோம்—எ-று.

இது தொழில்பற்றிய வுவமம்.

மாமழைபோற்றுதும் மாமழைபோற்றுதும்
நாமநீர்வேலி யுலகிற்கவனளிபோல்
மேனின்றுதான் சுரத்தலான்.

(இ-ள்.) நாமம் நீர் வேலி உலகிற்கு - அச்சத்தைத்தருங் கடல்சூழ்ந்த உலகிற்கு, அவன் அளிபோல் - அச்சோழன் அளிசெய்யும் வகைபோல, மேல் நின்று தான்சுரத்தலான் - (மாருது) மேலேநின்று தன் (மழையால்வளத்தை) சுரத்தலால், மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் - பெரிய மேகத்தைப் போற்றுவோம் பெரியமேகத்தைப் போற்றுவோம்—எ-று.

வேலி சூழ்தல். அளி கொடை. சுரத்தல் இடைவிடாதுசொரிதல். நாம உரிச்சொல் இது பெயர்த்தன்மைப்பட்டு அம் சாரியைபெற்றுநின்றது. இது பயன்பற்றிவந்த வுவமம்.

பூம்புகார்போற்றுதும் பூம்புகார்போற்றுதும்
வீங்குநீர் வேலியுலகிற்கவன்குலத்தோ
டோங்கிப்பரந் தொழுகலான்.

(இ-ள். வீங்கு நீர் வேலி உலகிற்கு - மிக்க கடல்சூழ்ந்த வுலகின்கண், அவன் குலத்துஓடு - அச் சோழன் குலத்தோடு, ஓங்கி (தானும்) புகழப்பட்டு, பரந்து ஒழுகலான் - சிறந்து நடத்தலான், பூ புகார் போற்றுதும் பூ புகார் போற்றுதும் - பொலிவையுடைய புகாரைவணங்குவோம் பொலிவையுடைய புகாரை வணங்குவோம்—எ-று.

உலகிற்கு உருபுமயக்கம். "நடைமிகுத்தேத்திய குடைநிழன்மரபு" என்றதில் மரபு என மிகுத்துச்சொல்லிய அதனல் குடையோடுசார்த்திக்கூறிய ஆக்கினையும் கொடையும் ஊரும் மிகவும் புகழ்ந்து கூறினராயிற்று. தொல்காப்பியம் பொருளதிகாரம் புறத்திணையியலில் "தாவினல்லிசை கருதியகிடந்தோர்க்கு" என்னும் ௩௬-ம் சூ·உள் "நடைமிகுத்தேத்திய குடைநிழன்மரபு" என்பதற்கு நச்சினர்க்கினியார் எழுதிய வுரையான் உணர்க. இவையு மிவனுற் சிறந்தன என்பதுகருத்து.

உரைப்பா.

ஆங்கு—பொதியிலாயினு மிமையமாயினும்—பதியெழுவறியாப் பழங்குடிதழீஇப்—பொதுவறுசிறப்பிற் புகாரேயாயினும் — நடுக்கின்றிநிலைஇய வென்பதல்லதை—ஒடுக்கங்கூறா ருயர்ந்தோருண்மையின் — முடித்தகேள்வி முழுதுணர்ந்தோரே.

(இ-ள்.) முடித்த கேள்வி - கரைகண்ட நூற்கேள்வியால், முழுதுஉணர்ந்தோர் - எல்லா நூற்பொருளையும் உணர்ந்தபெரியோர், ஆங்கு - அப்படிப் போற்றினல்லது, பொதியில் உம் இமையம் உம் - பொதியமலையும் இமையமலையும், பதி எழு அறியா-தன்னிடத்தினின்றும் பெயர் தலையறியாத, பழம் குடி தழீஇ - ஆதிக்காலத்தேறின குடிகளைத்தழுவி, பொது அறு சிறப்பின் புகார்உம் - தனக்கேயுரிய சிறப்பினையுடைய புகாரும் (ஒருதன்மைய ஆதலால்) நடுக்கு இன்றி நிலைஇய என்பது அல்லது - சலிப்பில்லாமல் நிலைபெற்றனவென்று கூறுதலல்லாமல், உயர்ந்தோர் உண்மையின் - (முற்கூறிய இவ்விடங்களில்) உயர்ந்தோர் உளர் ஆதலால், ஒடுக்கம் கூறார் (அவற்றிற்கு) அந்தங் கூறார்—எ-று.

தம்மிற் பகையின்மையால் பதியெழுவறியா எனவும், பொதியமலையிலுள்ள அகத்தியனையும் இமையமலையிலுள்ள இருடிகளையும் புகாரிலுள்ள வணிகரையும் ஒப்ப எண்ணுவார் உயர்ந்தோருண்மையின் எனவுங்கூறினர். இதனற் சோழன் சிறப்பையும் புகாரின் சிறப்பையும் புகழ்ந்தவாறாயிற்று. ஆயின் இடைச்சொல். விகாரப்பட்டு நின்றதழீஇ என்னும் எச்சம் அறு என்னுங் காலங்கரந்த பெயரெச்சங்கொண்டது.

## மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

அதனால்—நாகநீணகரொடு நாகநாடதனொடும்
போகநீள் புகழ்மன்னும் புகார் நகரதுதன்னில்
மாகவானிகர் வண்கை மா நாயகன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னா ளீராறாண்டகவையாள்—இது தரவு.
அவளுந்தான்—தனிச்சொல்.

போதிலார்திருவினாள் புகழுடைவடிவென்றும்
தீதிலாவடமீனின் றிறமிவடிறமென்றும்
மாதரார்தொழுதேத்த வயங்கியபெருங்குணத்துக்
காதலாள்பெயர்மன்னுங் கண்ணகியென்பாண்மன்னோ
பெருநிலமுழுதாளும் பெருமகன்றலைவைத்த
ஒருதனிக்குடிகளோ டுயர்ந்தோங்குஞ்செல்வத்தான்
வருநிதிபிறர்க்கார்த்து மாசாத்துவானென்பான்
இருநிதிக்கிழவன்மகனீ ரெட்டாண்டகவையான்
அவனுந்—தான்.
மண்டேய்த்த புகழினான் மதிமுகமடவார் தம்
பண்டேய்த்த மொழியினா லாயத்துப்பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக்காதலாற்
கொண்டேத்துங்கிழமையான் கோவலனென்பான் மன்னோ
இவைமூன்றும் நான்கடித்தாழிசை.
அவரை—தனிச்சொல்.

இருபெருங்குரவரும் ஒருபெருநாளான்
மணவணிகாண மகிழ்ந்துழி. இது அகவற்பா.
யானையெருத்தத்தணி யிழையார்மேலிரீஇ
மாநகர்க்கீந்தார் மணம். இது வெண்பா.
அவ்வழி—தனிச்சொல்.

முரசதிர்ந்தன - முருடியம்பின - முறையெழுந்தன - பணிலம்வெண்குடை
அரசெழுந்ததொர் - படியெழுந்தன - அகலுண்மங்கல - அணியெழுந்தது.
இவை இருசீரோரடி எட்டம்போதரங்கம்

மாலைதாழ்சென்னி வயிரமணித்தூணத்து
நீலவிதானத்து நித்திலப்பூம்பந்தர்க்கீழ்
வானூர்மதியஞ்சகடணைய வானத்துச்
சாலியொருமீன்றகை யாளைக்கோவலன்
மாமுதுப்பார்ப்பான் மறைவழிகாட்டிடத்
தீவலஞ்செய்வதுகாண் பார்கணோன்பென்னை. இவைமூன்றுந்தாழிசை

விரையினர் மலரினர் விளங்குமேனியர்
உரையினர் பாட்டின ரொசிந்தநோக்கினர்
சாந்தினர் புகையினர் தயங்குகோதையர்
ஏந்திள முலையின ரிடித்தசுண்ணத்தர்
விளக்கினர் கலத்தினர் விரிந்தபாலிகை
முளைக்குட நிரையினர் முகிழ்த்தமூரலர்
போதொடு விரைகூந்தற் பொலநறுங்கொடியன்னாள்
காதலற்பிரியாமற் கவவுக்கை நெகிழாமற்
றீதறுகெனவேத்திச் சின்மலர்கொடு தூவி.

அங்கணுலகி னருந்ததியன்னாளை
மங்கலநல்லமளி யேற்றினர்தங்கிய

இப்பாலிமையத் திருத்தியவாள்வேங்கை
உப்பாலைப்போற்கோட்டுழையதாவெப்பாலும். இவைஆறும்அராகம்

செருமிகுசினவேற் செம்பியன்
ஒருதனியாழி யுருட்டுவோனெனவே—இது சுரிதகம்.

(இ - ள்.) அதனால் - அப்புகார் நிலைபெறுதலையுடையதாதலால் (போகமும் பொருளும் நிலைபெறுதலையுடையன என்றபடி) நாகம்நீள் நகர்உம் நாகம் நாடுஉம் - சுவர்க்கமாகிய எல்லையில்லாத (சிறப்பையுடைய) நகரத்தினும்,பவனமாகிய நாட்டினும் உண்டாகிய, நீள் புகழ்போகம் மன்னும் புகார் நகரது தன் இல் - பரந்தபுகழும் போகமும் நிலைபெற்ற புகார் நகரத்தில், ஒடு இடைச்சொல். இரண்டிடத்திலும் வந்த அது பகுதிப்பொருள் விகுதி. போகநீள் புகழ் எதிர் நிரனிறை.மாகம் வான் நிகர் வண்கை மாநாயகன் குலம் கொம்பர் ஈகைவான் கொடி அன்னாள் ஈராறு ஆண்டு அகவையாள் - விசும்பிலுள்ள மேகம்போல உபகரிக்குங் கையையுடைய மாநாயகனுடைய குலத்திற்றோன்றிய பூங் கொம்பையும் பொன்னாகிய வான வல்லியையும் ஒத்தவள் பன்னிரண்டுக் குட்பட்ட பிராயமுடையாள், மாநாயகன் சிறப்புப்பெயர். ஈகை வான்கொடி காமர் வல்லி. கொம்பர் இறுதி நிலைப்போலி. அவள் - உம்மை இசைநிறை. போதில் ஆர் திருவினாள் - தாமரையில் வசிக்கும் இலக்குமி தேவியினுடைய, புகழ் உடை வடிவு என்று உம் - புகழ்தலையுடைய வடிவு இவள் வடிவை யொக்கும் என்றும், தீது இலா வடமீனின் திறம் இவள் திறம் என்று உம் - குற்றமில்லாத அருந்ததியினுடைய கற்பு இவள் கற்பை யொக்குமென்றும், மாதரார் தொழுது ஏத்த (உலகிலுள்ள) பெண்கள் (செல்வமுங்கற்பும் நிலைபெறத்தன்னை) கைகூப்பி வணங்க, வயங்கிய பெருங்குணத்து காதலாள்-விளங்கிய பெருங்குணங்களைக் காதலிப்பவள், பெயர் கண்ணகி என்பாள் - பெயர் கண்ணகியென்று கூறப்படுவாள், திறம்-கற்பு. காதலாள் செயப்படுபொருள் குன்றாத குறிப்பு வினையாலணையும்பெயர்.

மன்னும் இடைச்சொல். பெருநிலம் முழுது ஆளும் பெருமகன்-பெரிய பூமி முழுதையும் ஆளாநின்ற கரிகால் வளவன், தலைவைத்த ஒரு தனி குடிகள் ஓடு - முதற் குடியாகவைத்து எண்ணுதலையுடைய ஒப்பில்லாத குடிகளில், உயர்ந்து ஓங்கும் செல்வத்தான் - மேற்பட்டோங்கிய செல்வத்தையுடையவன் (அவன்யார் என்னில்) வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மா சாத்துவான் என்பான்-தன்னுடைய பொருளை யில்லாதார்க்கு நுகர் விக்கும் மா சாத்துவானென்று சொல்லப்பட்டவனாகிய, இருநிதிக்கிழவன் மகன் - இருநிதிக்கிழவனுடைய மகன், ஈரெட்டு ஆண்டு அகவையான் - (அவன்) பதினாறு வயதுக்குட்பட்ட பிராயத்தையுடையவன், மா சாத்துவான் இயற்பெயர். இருநிதிக்கிழவன் பெரிய செல்வத்திற்குரியவன் என நிற்றலால் சிறப்புப்பெயர். வருநிதி மரக்கலத்தாலுங் கரை வழியாலும் வரும் பொருள். பிறர் பொருளில்லார். ஓடு உருபுமயக்கம். ஆர்த்தும் பிறவினைப்பெயரொச்சம்.

அவன் - உம்மை இசைநிறை. மண் தேய்த்த புகழினான் - (மண்ணுலகைத்தன் உட்படுத்துவதால்) மண்ணுலகைச் சிறுகச்செய்த புகழையுடையவன், மதி முகம் மடவார் - சந்திரன்போலு முகத்தையுடைய பெண்கள், காதலால் கண்டு-விருப்பத்தால் (உலகில் தன்னை) பார்த்து, தம்பண் தேய்த்த மொழியின் ஆல் - தமது இசையைக் கெடுத்த சொற்களால், எத்தும் செவ்வேள் என்று (யாவராலும்) துதிக்கப்படு முருகக்கடவுள் என்று, ஆயத்து இசைபோக்கி பாராட்டி - (தமது) தோழிமார் கூட்டத்துள் (தனது) புகழ் போகச்செய்து சீராட்டி, எத்தும் கிழமையான் (காமக்குறிப்பால் உட்கொண்டு) துதித்தற்குரிமையையுடையான் (அவன்யார் என்னில்) கோவலன்என்பான் -கோவலனென்று சொல்லப்படுவோன். புகழினான் கோவலன் என முடிக்க. வேள் இருவர் ஆதலால் செவ்வேள் என்றார். கண்ணகியாளை முற்கூறினர் பத்தினியாளை யேத்துதல் உட்கோள் ஆதலால். அவளை - அத்தன்மையளை, இரு பெருங்குரவர் உம் ஒரு பெருநாள் ஆல் - பெரிய இரு குரவரும் ஒரு நல்லநாளில், மண அணிகாண மகிழ்ந்தனர் - மணக்கோலங் காண வேண்டி மகிழ்ந்தார், மகிழ்ந்த உழி - மகிழ்ந்தவிடத்து, அகரவீறு தொகுத்தல். யானை எருத்தத்துமேல் அணி யிழையார் இரீஇ - யானையினது புறக்கழுத்தின்மேற் சில பெண்களை (அலங்கரித்து) இருத்தி, மாநகர்க்கு மணம் ஈந்தார் - பெரிய நகரிலுள்ளவர்க்கு இவர் மணமென்று அறிவித்தார், ஆல் உருபு மயக்கம். அவ்வழி - அறிவிக்கும் அவ்விடத்து, முரசு அதிர்ந்தன - முரசம் ஒலித்தன, முருடு இயம்பின - மத்தளம் ஒலித்தன, பணிலம் முறை எழுந்தன - சங்குகள் முறையா யொலித்தன. வெண்குடை அரசு எழுந்தது ஓர்படி எழுந்தன - தவளக்குடை அரசன் எழுந்ததோர் படித்தாக எழுந்தன, அகலுள் மங்கல அணி எழுந்தது - (ஆதலால்) தெருவில் மங்கல அணி எங்கும் எழுந்தது, மாலைதாழ் சென்னி வயிரமணி தூணத்து - மாலைதங்கிய சிகரத்தையுடைய வயிரத்தாலாகிய தூணிரைகளையுடைய(மண்டபத்தில்)நீலம் விதானத்

து கீழ்பூ நித்திலம் பந்தர் - நீலப்பட்டுமேற் கட்டியின் கீழ் (நிறுத்தின) பொலிவையுடையமுத்துப்பந்தலிடத்து, வான் ஊர் மதியம் சகடு அணைய - ஆகாயத்தில் தவழுஞ் சந்திரன் உரோகணியைக்கூடியநாளில், மா முதுபார்ப்பான் மறை வழிகாட்டிட - பெரிய பிதாமகன் வழியாயுள்ள புரோகிதன் வேதத்தில் (வணிகர்க்குக்கூறிய) வழியே சடங்குகாட்ட, வானத்துசாலி ஒருமீன் தகையாளை - வானத்திலுள்ள அருந்ததிபோலுங் கற்பினையுடைய கண்ணகியாரோடு, கோவலன் தீவலம்செய்வது - கோவலன் ஓமத்தீயை வலஞ்செய்தலை, காண்பார்கள் நோன்பு என்னை - காண்பவர்கள் (முற்பவத்திற்செய்த) தவம்யாது (நாம் அறியோம்) சாலி யொருமீன் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. ஐ உருபுமயக்கம். விளங்குமேனியர் விரையினர் மலரினர் உரையினர் பாட்டினர் ஒசிந்த நோக்கினர் - விளங்கிய மேனியையுடைய பெண்கள் கலவைச்சாந்தினராய் மலரை யேந்தினராய் புகழ்பவராய் வாழ்த்துப்பாட்டினராய் ஒதுங்கிய பார்வையை யுடையவராயும், எந்து இளமுலையினர் சாந்தினர் புகையர் தயங்குகோதையர் இடித்த சுண்ணத்தர் - எந்திய இளமைதங்கிய முலையையுடைய பெண்கள் சந்தனக் குழம்பினராய் நறும்புகையராய் விளங்கு மாலையராய் இடித்த சுண்ணத்தினராயும், முகிழ்த்த மூரலர் விளக்கினர் கலத்தினர் விரிந்த முளைபாலிகை குடநிரையினர் - அரும்பிய புன்னகையையுடைய பெண்கள் விளக்கினராய் ஆபரணங்களை யேந்தினராய் அலர்ந்த முளைப்பாலிகையையும் பூரண கலசங்களையும் நிரைநிரையா யேந்தினவராயும், போது ஒடு விரைகூந்தல் பொலம் நறும் கொடி அன்னாள் - மலரொடு பரிமளிக்குங் கூந்தலையுடைய நல்ல பொற்கொடியையொத்த கண்ணகியார், காதலன் பிரியாமல் (தமது) கணவனை மனத்திலும் கண்ணிலும் பிரியாமல் (புணர்வாராய்) கவவுக்கை நெகிழாமல் (இவர்) அகத்திட்டகை நெகிழாமல் (கோவலன் புணர்வானாய்) தீது அறுக என (இவ்விருவரும்) தீதற்று ஒருவராகவென்று, சில் மலர்கொடு தூவி எத்தி - சில மலரைக்கொண்டு தூவி (தாம் வழிபடு கடவுளை) வணங்கி, அம் கண் உலகில் அருந்ததி அன்னாளை - அழகிய இடத்தையுடைய உலகத்தில் அருந்ததியையொத்த கண்ணகியாரை, இப்பால் தங்கிய இமயத்து இருத்திய வாள் வேங்கை - அணித்தாய் நிலைபெற்ற இமயமலையில் நாட்டிய ஒளியையுடைய புலிக்கொடி, உப்பால் பொன்கோடு உழையது ஆ - சேய்த்தாயுள்ள மேருவின்பொன்னாகிய சிகரத்தினிடத்ததாக, செருமிகுசினம் வேல் செம்பியன் - போரின்மிக்க கோபத்தையுடைய வேலையேந்திய கரிகாற்சோழன், எப்பால் உம் ஒருதனி ஆழி உருட்டுவோன் என - எவ்விடத்தும் ஒப்பில்லாத ஆக்கினாசக்கிரத்தை நடத்துவானாகவெனச் சொல்லி, மங்கலம் நல் அமளி எற்றினார் - கல்யாணத்திற்குரிய நல்ல படுக்கையில் எற்றினார்-எ-று.

தோழியர் எத்தி எற்றினர் சொல்லியேற்றினர் என முடிக்க. அறுக ஈறுதொகுத்தல் - உகரச்சுட்டும் இகரச்சுட்டும் சேய்மைமேலும் அணிமைமேலும் நின்றன. எகரவினா எல்லாம் என்னும் பொருள்மேல் நின்றது. வேங்

கை தானியாகுபெயர். "கவவகத்திடுமே" தொ-உரி-சூக-கூ-இது தரவொன்றும் தனிச்சொல்லும் தாழிசை மூன்றும் அகவற்பாவும் வெண்பாவும் இருசீர் ஓரடி எட்டம்போதரங்கமும் பெயர்த்தும் தாழிசைமூன்றும் அராகம் ஆறும் சுரிதகமும்பெற்று மிக்குங்குறைந்தும் பிறழ்ந்தும் வந்தமையால் மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

---

## உ-ஆவது மனையறம்படுத்தகாதை.

இல்வாழ்க்கையாகிய அறத்திற்படுத்த கதையையுடையது என நான்குசொல் மூன்றுசந்தியாக்கி மனையறம் இருபெயரொட்டுப் பண்புத்தொகையாகவும், அறம்படுத்த ஏழாம்வேற்றுமைத் தொகையாகவும், படுத்தகாதை பெயரெச்சத்தொடராகவுங் கொள்க.

நிலைமண்டில ஆசிரியப்பா.

உரைசால்சிறப்பி னரசுவிழைதிருவிற்—பரதர்மலிந்த பயங்கெழுமாநகர்—முழங்குகடன்ஞால முழுவதும்வரினும்—வழங்கத்தவா அ வளத்ததாகி—அரும்பொருடரூஉம் விருந்திற்றேயம்—ஒருங்குதொக்கன்ன வுடைப்பெரும் பண்டங்—கலத்தினுங்காலினுந் தருவனரீட்டக்—குலத்திற்குன்றாக் கொழுங்குடிச்செல்வர்—அத்தகுதிருவின ரருந்தவமுடித்தோர்—உத்தரகுருவி னொப்பத்தோன்றிய—கயமலர்க்கண்ணியுங் காதற்கொழுநனும்—மயன்விதித்தன்ன மணிக்காலமளிமிசை—நெடுநிலைமாடத் திடைநிலத்திருந்துழி—கழுநீராம்பல் முழுநெறிக்குவளை—அரும்புபொதியவிழ்ந்த சுரும்பிமிர்தாமரை—வயற்பூவாச மளைஇயயற்பூ—மேதகுதாழை விரியல்வெண்டோட்டுக்—கோதைமாதவி சண்பகப்பொதும்பர்த்—தாதுதெரிந்துண்டு மாதர்வாண்முகத்துப்—புரிகுழலளகத்துப் புகலேக்கற்றுத்—திரிதருஞ்சுரும்பொடு செவ்விபார்த்து—மாலைத்தாமத்து மணிநிரைத்துவகுத்த—கோலச்சாளரக் குறுங்கணுழைந்து—வண்டொடுபுக்க மணவாய்த்தென்றல்—கண்டுமகிழ்வெய்திக் காதலிற்சிறந்து—விரைமலர்வாளியொடு வேனில்வீற்றிருக்கும்—நிரைநிலைமாடத் தரமியமேறிச்—சுரும்புணக்கிடந்த நறும்பூஞ்சேக்கை—கரும்பும்வல்லியும் பெருந்தோளெழுதி—முதிர்கடன்ஞால முழுவதும்விளக்கும்—கதிரொருங்கிருந்த காட்சிபோல—வண்டுவாய்திறப்ப நெடுநிலாவிரிந்த—வெண்டோட்டுமல்லிகை விரியன்மாலையொடு—கழுநீர்ப்பிணையன் முழுநெறிபிறழத்—தாருமாலையு மயங்கிக்கையற்றுத்—தீராக்காதலிற் றிருமுகநோக்கிக்—கோவலன்கூறுமோர் குறியாக்கட்டுரை—குழவித்திங்க ளிமையவரேத்த—அழகொடுமுடித்த வருமைத்தாயினும்—உரிதுநின்னோ டுடன்பிறப் புண்மையின்—பெரியோன்றருக திருநுதலாகென—அடையார்முனையகத் தமர்மேம்படுநர்க்குப்—படைவழங்குவதோர் பண்புண்டாகலின்—உருவிலாள னொருபெருங் கருப்புவில்—இரு

கரும்புருவ மாகவீக்க—லூவாமருந்தின் முன்னர்த்தோன்றலின்— தேவர்கோமான் றெய்வக்காவற்—படைநினக்களிக்க வதனிடைநினக்கிடையென—அறுமுகனொருவனோர் பெறுமுறையன்றியும்—இறுமுறைகாணு மியல்பினனன்றே—அஞ்சுடர்நெடுவே லொன்றுநின்முகத்துச்—செங்கடைமழைக்க ணிரண்டாயீத்தனன்—மாயிரும்பீலி மணிநிறமஞ்ஞைநின்—சாயற்கிடைந்து தண்கானடையவும்—அன்னநன்னுதான் மென்னடைக்கழிந்து — நன்னீர்ப்பண்ணை நளிமலர்செறியவும் — அளியதாமே சிறுபசுங்கிளியே—குழலும் யாழுமமிர்தமுங்குழைத்தநின்—மழலைக்கிளவிக்கு வருந்தினவாகி— மடநடைமாதுநின் மலர்க்கைநீங்கா—துடனுறைமரீஇ யொருவாவாயின—நறுமலர்க்கோதைநின் னலம்பாராட்டுநர்—மறுவின்மங்கல வணியேயன்றியும்—பிறிதணியணியப் பெற்றதையெவன்கொல்—பன்மலர்க்கூந்தற் சின்மலரன்றியும்—எல்லவிழ்மாலையோ டென்னுற்றனர்கொல்— நாணநல்லகி னறும்புகையன்றியும்—மான்மதச்சாந்தொடு வந்ததையெவன்கொல் — திருமுலைத்தடத்திடைத் தொய்யிலன்றியும்—ஒருகாழ்முத்துட னுற்றதொன்றுண்டுகொல்—திங்கண்முத்தரும்பவுஞ் சிறுகிடைவருந்தவும்—இங்கிவையணிந்தன ரென்னுற்றனர்கொல்—மாசறுபொன்னே வலம்புரிமுத்தே—காசறுவிரையே கரும்பேதேனே—அரும்பெறற்பாவா யாருயிர்மருந்தே—பெருங்குடிவணிகன் பெருமடமகளே—மலையிடைப்பிறவா மணியேயென்கோ—அலையிடைப்பிறவா வமுதேயென்கோ—யாழிடைப்பிறவா விசையேயென்கோ — தாழிருங்கூந்தற் றையானின்னையென்—றுலவாக்கட்டுரை பலபாராட்டித்—தயங்கிணர்க்கோதை தன்னொடுதருக்கி—வயங்கிணர்த்தாரோன் மகிழ்ந்துசெல்வுழிநாள்—வாரொலிகூந்தற் பேரியற்கிழத்தியை—மறப்பருங்கேண்மையோ டறப்பரிசாரமும்—விருந்துபுறந்தரூஉம் பெருந்தண்வாழ்க்கையும்—வேறுபடுதிருவின் வீறுபெறக்காண—உரிமைச்சுற்றமோ டொருதனிப்புணர்க்க— யாண்டுசிலகழிந்த விப்பெருங்கிழமையிற்—காண்டகுசிறப்பிற் கண்ணகிதனக்கென.

(இ-ள்.) உரைசால் சிறப்பின் அரசு விழை திருவின்-புகழமைந்த சிறப்பினையுடைய வரசரும்விரும்புஞ் செல்வத்தையுடைய, தொ-கிளவியாக்கம்-௫௭-சூ "குடிமையாண்மை" என்பதில் "அன்னபிறவும்" என்றதனால் வந்த அரசு என்பதனிறுதியில் உயர்வுசிறப்பும்மை தொகுத்தல். பரதர் மலிந்தபயங்கெழு மாநகர் - வணிகரால் நிறைந்த பயன் மிக்க பெரிய நகரமானது, கலத்தின்உம் காலின்உம் தருவனர் ஈட்ட - மாக்கலத்தாலும் கரைவழியாலும் கொண்டு வருவோர் குவித்தலால், அரும் பொருள் தரும் விருந்து இன் தேயம் - பெறுதற்கரிய பொருளைத்தரும் புதுமையையுடைய தீவுமுதலிய தேயங்கள், ஒருங்கு தொக்கால் அன்ன - (வந்துகூடி) ஒரு சேர நெருங்கினாலொத்த, தொக்கன்ன தொகுத்தல். உடையபெரும் பண்டம் - உளதாகிய அளவிறந்த பொருள்கள், ஈட்ட என்னும் காரணப்பொருளில் வந்த பிறவினை வினையெச்சம் தொக்கால் என்னும் எச்சத்தின் முதனிலையோடும், அவ்வெச்சம் அன்ன

என்னுங் குறிப்புவினைப்பெயரெச்சத்தோடும் அப்பெயரெச்சம் பண்டம்என்னும் பெயரோடு முடிந்தது. முழங்கு கடல் ஞாலம் முழுவது உம் வரின் உம்- ஒலிக்குங் கடல்சூழ்ந்த உலகமுழுதும் (ஒருசேரத்தன்மேல்) வந்தாலும், வழங்கதவா வளத்தது ஆகி-கொடுக்கத்தொலையாத வளத்தையுடைய தாதலால், ஆகி காரணப்பொருளில்வந்த வினையெச்சம், இது நகரின் பயனிலையாய்நின்றது. தவ்வாளன்னும்பெயரெச்சத்தின் முதனிலைதா. அத்தகு திருவின் அருந்தவம்முடித்தோர்- அவ்வளத்திற்குத்தக்க பொருளால் தலைப்படுதானத்தைச்செய்தோர் (அடையும்) + உத்தரகுருவின் ஒப்ப-போகபூமியையொக்கும்படி, குலத்தில் குன்றுத கொழுங்குடி செல்வர்தோன்றிய-குலத்திற்குன்றுதலில்லாத வழுவில்லாத குடிப்பிறப்பிற்பிறந்தசெல்வர்க்குத்தோன்றிய, குன்றுதல் பூப்பிற்பிரிதல்; நடுவின்றிநன்பொருள் வெஃகல் முதலியன. கயம்மலர்கண்ணிஉம்காதல்கொழுநன் உம்-குளத்திற்பூத்த தாமரைபோன்ற கண்களையுடைய கண்ணகியாரும் (அவரால்)விரும்பப்பட்ட கணவனாகிய கோவலனும், நெடு நிலை மாடத்து இடைநிலத்து-நெடுநிலைமாடத்தி னிடைநிலத்தில்; மயன் விதித்தால் அன்ன மணி கால் அமளி மிசை இருந்த உழி - தெய்வத்தச்சன் நிருமித்து வைத்தாலொத்த இரத்தினங்களிழைத்த கால்களையுடைய அமளியின்மேல் இருந்த இடத்து, நெடுநிலை மாடம் எழு நிலையையுடைய மாடம். இடைநிலம் நாலாநிலம். சுரும்பு இமிர் அரும்பு பொதி அவிழ்ந்த - வண்டுகளொலிக்க அரும்புகளின் கட்டவிழ்ந்த, முழு நெறி கழுநீர் ஆம்பல் குவளை தாமரை - முழு நெறியாகிய கழுநீரும் ஆம்பலும் குவளையும் தாமரையுமாகிய, வயல் பூ வாசம் அளை இ - நீர்ப்பூக்களின் வாசத்தைக்கலந்து, முழுநெறி முழுவது மலர்தல். அயல் பூ மேதகு தாழை விரியல் வெள் தோடு - கோட்டுப்பூக்களில் மேதகவினையுடைய தாழையினது விரிந்த வெள்ளிய இதழ்களிலும், சண்பகப் பொதும்பர் கோதை மாதவி - சண்பகச்சோலையில் வரிசையாயுள்ள குருக்கத்தியின் மலர்களிலும், தாது தெரிந்து உண்டு - (உள்ள) தாதுகளை யாராய்ந்துண்டு, அயல் பூ நீர்ப்பூவுக்கு அயலாகிய பூ. அளை இ சொல்லிசை நிறைத்தலின் கண் வந்த அளபு. வரள் முகத்துமாதர் புரி குழல் அளகத்து - ஒள்ளிய முகத்தையுடைய பெண்களது புரிந்த குழற்சியையுடைய கூந்தலில் (உளதாகியமணத்தைப் பெறுதற்கு) புரி முறுக்கு. எக்கற்று புகல் - எக்கற்றுப் புகுதற்கு (வழிகாணமல்) திரிதரும் சுரும்பு ஒடு வண்டு ஓடு - சுழலாநின்ற ஆண் வண்டுகளோடும் பெண் வண்டுகளோடும், மணி தாமத்து மாலை நிரைத்து வகுத்த - முத்துமாலைகளையொழுங்குபட நிரைத்து முறைப்படுத்திய, கோலம் சாளரம் குறுங்கண் - அழகிய சாளரங்களின் குறிய புழைவழியில், செவ்விபார்த்து நுழைந்து புக்க - சமையம் பார்த்து நுழைந்து புகுந்த, மணம் வாய் தென்றல்-மணத்தைத் தன

---

× "ஆதியரிவஞ்சம் நல்லரிவஞ்சம் எம தவஞ்சம் எம வஞ்சம்-தேவகுரு வஞ்ச முத்தரகுருவஞ்சமெனப் - போக பூமி யறுவகைப்படுமே" என்பதனால் உத்தரகுருபோக பூமியாதல் காண்க.

திட்த்துடைய தென்றலை, ஒடு வினையுடனிகழ்ச்சி. அளைஇ உண்டு நுழைந்து
என்னும் எச்சங்கள் புக்க என்னும் பெயரொச்சத்தோடு தனித்தனி முடிந்தன.
கண்டு மகிழ்வு எய்தி காதலில் சிறந்து - (அவர்கள்) கண்டு மகிழ் கூர்ந்து (பு
ணர்ச்சியைவிரும்பி) காதல் மிகுதலால், விரைமலர் வாளி ஒடு - வாசனையை
யுடைய புஷ்ப பாணத்தோடு, வேனில் வீற்றிருக்கும் - காமன் வீற்றிருக்கா
நின்ற, வேனில் கால ஆகுபெயர். வீற்றிருத்தல் என்னும் குறிப்பால் பகை
யின்மை விளங்கி நிற்றலால் உதார அணி "உதாரமென்ப தோதியசெய்யுளிற்-
குறிப்பினொருபொரு ணெறிப்படத் தோன்றும்". நிரை நிலை மாடத்து அர
மியம் ஏறி - நிரையாக நின்ற மாடத்தின் (மேனிலமாகிய) நிலா முற்றத்தின்
மேலேறி, சுரும்பு உணகிடந்த நறும் பூ சேக்கை - வண்டுகளுண்ண (ஒரு
சேரத் தொகுத்துவைத்ததுபோல) இருக்கின்ற நல்ல மலர்களாலாகிய படுக்
கையின்மேல், சேக்கை செயப்படு பொருளில்வந்த தொழிற்பெயர், சே பகு
தி. கடல் முதிர் ஞாலம் முழுவது உம் - கடல் சூழ்ந்த உலகமுழுதையும், விள
க்கும் கதிர் ஒருங்கு இருந்த காட்சிபோல - விளங்கச்செய்யும் சந்திர சூரியர்க
ள் ஒரு சேர இருந்த காட்சியைப்போல (இருந்து) இது பொருளுவமம். கரு
ம்பு உம் வல்லி உம் பெருந்தோள் எழுதி - கரும்பையும் காம வல்லியையும்
(கண்ணகியார்) பெரிய தோளிலெழுதி, வண்டு வாய்திறப்ப - வ்ண்டுகள் மு
றுக்கை நெகிழ்க்க, நெடு நிலா விரிந்த - மிக்க சந்திரனைப்போல வாயவிழ்ந்த,
வெள் தோடு மல்லிகை விரியல் மாலை ஒடு - வெள்ளிய மல்லிகையினது மலர்
ச்சியையுடைய மாலையினோடு, விரியல் என்றது இதழ் முறியாமைமேல் நின்
றது. கழுநீர் பிணையல் - கழுநீர் மாலையும், முழுநெறி பிறழ - நிலை குலைந்த
லைய, தார் உம் மாலை உம் மயங்கி - (மார்பிலணிந்த) அவ்விருவகைமாலையு ம
யங்கப்பட்டு, கையற்று (அவ்விருவரும் புணர்ச்சியில்) செயலற, தீரா காத
லின் - நீங்காத விருப்பத்தோடு, திருமுகம் நோக்கி - திருமகள் போல்வாள்
முகத்தைநோக்கி, கோவலன் குறியா ஓர் கட்டுரைகூறும் - கோவலன் முன்
கருதாத (நலம் பாராட்டலென்னும்) ஒரு கட்டுரையைக் கூறுகிற்பன், கட்டு
ரை பொருள் பொதிந்த சொல். மயங்கி இடக்கரடக்கல். இதுபடு விகுதி தொ
க்குநின்றது. கண்டு எழுதி சிறந்து இருந்து எழுதி மயங்கி கையற்று என்னும்
எச்சங்கள் ஒன்றனையொன்று கொண்டு இறுதியில் நின்ற கூறும் என்னுமுற்
றின் முதனிலையோடுமுடிந்தன. பெரியோன் - இறைவன், இமையவர் ஏத்த-
தேவர்கள் வணங்காநிற்க, குழவி திங்கள் அழகு முடித்த - இளம்பிறை அழகு
செய்தல் காரணமாகச்சூடுதலால், அருமைத்து ஆயின் உம் (நீஅடைதற்கு) அ
மையதானாலும், திருநுதல் ஆக என தருக - (உனக்கு) அழகிய நெற்றியாகக்
கட்வதெனத் தரக்கடவன். (ஏனெனில்) நின் ஒடு உடன் பிறப்பு உண்மையின்
உரிது - (அப்பிறை) நின்னுடன் உடன்பிறந்த வுண்மையி னுரியதாகலான்,
பிறைதிருமகளொடு பாற்கடலிற் பிறத்தலால் இவளைத் திருமகளாக மதித்தும்,
இறைவன் சூடியது இரண்டு கலையையுடைய தாதலால் நுதலுக்கு ஒப்பாக

எட்டாநாட் டிங்களாக்கித் தரக்கடவனென்பது குறிப்பித்தற்கும் தருகவென்றுங்கூறினன். ஒடு இடைச்சொல். முடித்த காரணப்பொருளில்வந்த பெயரெச்சம். உரிது அருமைத்து குறிப்பு வினைமுற்றுகள். உருவிலாளன் ஒரு பெருங் கருப்புவில் - மன்மதன் (போர்செய்தற்கு எடுத்த) பெரிய ஒரு கரும்புவில்லை, கருமை இரு புருவம் ஆக ஈக்க - (உனக்கு) கரிய இரண்டு புருவமாகத் தரக்கடவன் (எனெனில்) அடையார் முனை அகத்து - பகைவர்கள் முனையினிடத்து, அமர் மேம்படுநர்க்கு - போரில் (தம் மன்னரை) மேம்படுத்துவோர் சிலர்க்கு, படை வழங்குவது ஓர் பண்பு உண்டாகலின் - ஆயுத முதலியவற்றைக் கொடுத்தலாகிய ஓரியல்பு (அரசர்க்கு) உளதாதலால். மன்மதன் தன்னால் ஒறுக்கப்படாத பகைவரை யொறுத்தல் இவர் உறுப்பாகிய படைக்கொண் டென்பான் இவ்வாறு கூறினன். ஈக்க விரித்தல் விகாரம். தேவர் கோமான் தெய்வக்காவல் - இந்திரன் (அசுரர்களையழித்து) தேவர்களைக் காத்தற்குரிய, படை அதன் இடை - வச்சிராயுதத்தினடுவை, நினக்கு இடை என - நினக்கு இடையாகக்கடவதென, நினக்கு அளிக்க - உனக்குத் தரக்கடவன் (எனெனில்) மூவா மருந்தின் முன்னர் தோன்றலின் - மரண மின்மையைத்தரும் அமுதத்துக்கு நீ முன்பு தோன்றுதலால். நீ அமுதாகலால் உனக்கு முன்பு தோன்றுதலின் எனினும் அமையும். அமுதங்கடைகின்ற காலத்து வச்சிரம் பிறந்ததென்பது புராணவரலாறு. வச்சிரம் இருதலைச்சூலமாய் நடுவே பிடியுளதாதலால் அதனை உவமை கூறினர். இன் உருபு மயக்கம். பெறும் ஓர் முறை இன்றி உம் - உனக்குப் பெறுதற்குரியதோர் முறையில்லை யாயினும், அறுமுகன் ஒருவன் அம் சுடர் நெடுவேல் ஒன்று - முருகக்கடவுள் தன்னுடைய அழகிய ஒளியையுடைய வெற்றியின் மிக்க வேலொன்றினை, மழை செங் கடைக்கண் இரண்டு ஆய் ஈத்தனன் - மேகம் போன்ற செவந்த கடைக்கண் க ளிரண்டாக நிருமித்துத் தந்தனன் (எனெனில்) இறும் முறை காணும் இயபினன் - (வேறுகாரணம் இல்லையாயினும்) நானிறந்து படு முறைமையைத் (தன்கண்ணால்) கண்டுவக்கும் காரணத்தினன் (ஆதலால்) இவை புகழுவமைகள். மாயிரும் பீலி மணிநிறம் மஞ்ஞை - கரிய பெரிய தோகையையும் நீல மணி போலும் விளக்கத்தையுமுடைய மயில்கள், நின் சாயற்கு இடைந்து தண் கான் அடையவும் - உன்னுடைய மென்மைத்தன்மைக்குத் தோற்றுத்தண்ணிய காட்டி லொடுங்கவும், தண்மை இழிவுமேல் நின்றது. நன்னுதால் அன்னம் மெல் நடைக்கு அழிந்து நல் நீர் பண்ணை நளி மலர் செறியவும் - நல்ல நெற்றியையுடையாய் அன்னமானது உனது தளர்ந்த நடைக்குத்தோற்று நல்ல நீரையுடைய வயலிலுள்ள செறிந்த தாமரைமலரிற் புகுந்து மறையவும், சிறு பசுங்கிளி - சிறிய பசுங்கிளிகள், குழலஉம் யாழ்உம் அமிர்தம்உம் குழைத்த குழவிசையையும் வீணையினிசையையும் அமுதத்தின் சுவையையும் கலந்து குழைத்தாலொத்த, நின்மழலைக் கிளவிக்கு வருந்தின ஆகி - உன்னுடைய மழலைச்சொற்கு (எதிர்ந்துவந்து) தோற்றனவாகியும், மலர்கை நீங்காது.

(உனது மழலையைக் கற்பக்கருதி) மலர் போன்ற உனது கையினின்றும் நீங்காமல், உடன் உறைமரீஇ ஒருவாஆயின - உன்னுடன் பிரியாதிருத்தலைப் பொருந்தி நீங்காவாயின (ஆதலால்) மடம்நடைமாது - கற்றறியாத நடையையுடைய பெண்ணே, அளியதாம் - அவை நின்னாலன்பு செய்யத்தக்கன. ஏ இரண்டும் அசைகள். நறுமலர்கோதை நின் நலம் பாராட்டுநர் - நல்ல வாசனையுடைய மலரையணிந்த கூந்தலையுடையாய், உன்னைப் புனைந் தழகுசெய்யும் வண்ணப்பெண்கள், மறு இல் மங்கல அணியே அன்றியும் - குற்றமற்ற மங்கல நாணணியே யல்லாமலும், பிறிது அணி அணிய பெற்றது எவன்கொல் - வேறுசில அணிகளை அணிவதனாற் பெற்ற வுதவி யாதோ, பல் இருங் கூந்தல் - இடையின்றி நெருங்கிய பெரிய கூந்தலில், சில்மலர் அன்றியும் - சிலமலரைப் புனைந்ததல்லாமலும், எல் அவிழ்மாலையோடு என் உற்றனர்கொல் - ஒளிபொருந்தி யவிழ்ந்த மலர்மாலையை (அதன்மேலும் புனைதற்கு) என்ன வுறவினையுடையவரோ, சின்மலர் முல்லைமலர் முதலிய கற்புக்குரிய மலர்கள். நானம் நல் அகில் நறும்புகை அன்றியும்- செய்ப்பசையையுடைய நல்ல அகிலினது வாசனையையுடைய புகையைக் (கூந்தலுக்கு) ஊட்டுவதல்லாமலும், மான்மதம்சாந்து ஒடுவந்தது எவன்கொல் - (அதன்மேலும்) மிருகமதச்சாந்தினை (அப்புவதற்கு) அதனோடுவந்த கண்ணோட்டம் யாதோ, திருமுலைதடத்து இடைதொய்யில் அன்றியும் - அழகிய தனமாகிய பரப்பினிடத்துத் தொய்யிலெழுதுவதல்லாமலும், ஒரு முத்துகாழ் உடன் உற்றது ஒன்று உண்டுகொல் (அதன்மேலும்) ஒப்பில்லாத முத்துவடத்தைப் பூட்டுவதாக (அதனோடு) உண்டாகிய வுரிமையுளதோ, தொய்யில் பத்திக்கீற்று. காழ்-வடம். திங்கள்முத்து அரும்ப உம் சிறுகு இடைவருந்த உம்- (மங்கலவணியும் சின்மலரும் அகிற்புகையும் பாரமாயிருத்தலால்) முகத்தில் வேர்வை தோன்றுநிற்கவும் சிறுகிய இடை வருந்தாநிற்கவும், இங்கு இவை அணிந்தனர் என் உற்றனர்கொல் - இவ்விடத்தில் இவற்றை (கண்டுவைத்தும்) பிறிதணியும் மாலையும் சாந்தும் முத்தும்) அணிந்தார்கள் (ஆதலால் இவர்கள்) யாது பேய்கொண்டாரோ, திங்கள், முத்து உருவகம். மாசு அறு பொன் ஏ (கண்களுக்கு இனிமையைத்தருதலால்) குற்றமற்ற ஓடு பொன்னையொப்பாய், வலம்புரிமுத்தே (பரிசவின்பத்தைத் தருதலால்) வலம்புரிச்சங்கிற்றோன்றிய முத்தையொப்பாய், மரபின் மேன்மைகூறுவான் வலம்புரிமுத்தே என்றான். காசு அறுவிரையே (உயிர்ப்புக்கு இன்பம்தருதலால்) குற்றமற்ற வாசனையே, கரும்பே (சுவையினினிமையால்) கரும்பை யொப்பாய், தேனே (இனிய மொழியையுடைமையால்) தேனையொப்பாய் (இவற்றாற் சொல்லப்பட்டன ஒளியும் உருவமும் நாற்றமுஞ் சுவையும் ஓசையும் ஆதலால் ஐம்புலவின்பமும் இவரிடத்துண்டென நலம் பாராட்டினான்) அரும்பெறல் பாவாய் - பெறுதற்கரிய கொல்லியம்பாவைபோல்வாய், காட்சியில் உயிர் மயக்குதலிற் பாவாய் என்றான். ஆர் உயிர் மருந்தே - அரிய உயிரைத் தருத

லால் மிருதசஞ்சீவினியையொப்பாய், அவ்வாறழியும் உயிரைத் தருதலால் உயிர்மருந்தே என்றான். பெருங் குடி வணிகன் பெருமடமகளே - பெருங்குடியிற்பிறந்த வணிகனுக்குச் சிறந்த மடமைக் குணத்தையுடைய புதல்வி, தெளிந்தான் ஆதலால் வணிகன் பெருமடமகளே என்றான். தாழ் இருங் கூந்தல் தையால் நின்னை - தாழ்ந்த பெரிய கூந்தலையுடைய பெண்ணே நின்னை, மலை இடை பிறவாமணியே என்கு ஓ - மலையினிடத்துத் தோன்றாத மணியே என்பேனோ, மலையிற்றோன்றிய மணி குழையாமையால் மலையிடைப் பிறவாமணியே என்றான். அலை இடை பிறவா அமுதே என்கு ஓ - கடலினிடத்துத் தோன்றாத அமுதமே என்று சொல்வேனோ, அமுதத்திற்கு இவ்வடிவு இல்லாமையால் அலையிடைப்பிறவா அமுதே யென்கோ என்றான். யாழ் இடை பிறவா இசையே என்கு ஓ - வீணையினிடத்துப் பிறவாத இசையே என்று சொல்வேனோ, வீணை கண்களுக்கு இன்பந்தராமையால் யாழிடைப் பிறவா இசையேயென்கோ என்றான். இவை தெரிதருதேற்ற வுவமை என்னும் அலங்காரங்கள். கடல்மலையென்றமையால் விரோதஅணி. என்கு தன்மையொருமை வினைமுற்று. உலவாகட்டுரை பலபாராட்டி (இவ்வாறு) இன்பம் சிதையாத நலம் பாராட்டல் என்னுங் கட்டுரைகள் பலவற்றை யெடுத்துச் சொல்லி, தயங்கு இணர் கோதை தன் ஒடு - விளங்கிய பூங்கொத்துகளையணிந்த கூந்தலையுடைய கண்ணகியாரோடு, வயங்கு இணர்தாரோன் - விளங்கிய பூங்கொத்துகளாலாகிய மாலையையணிந்த கோவலன், இது தலையாகெதுகை. தருக்கிமகிழ்ந்து செல்வுழிநாள் - மகிழ்கூர்ந்து செல்லாநின்ற காலத்தொருநாள், செல்வுழி உடம்படு மெய்யல்லாத வகரந்தோன்றல், தொ-எ-சூ- "கிளந்தவல்ல" என்னும் அதிகாரப் புறநடையாற் கொள்க. வார் ஒலி கூந்தல் பேர் இயல் கிழத்தியை - நீண்டு செறிந்த கூந்தலையுடைய பெரிய கற்பிலக்கணத்தையுடைய வீரபத்தினியை (கோவலனை) மறப்பு அரும் கேண்மையோடு - மறத்தலில்லாத சுற்றந்தழாலோடு, அறம் பரிசாரம் உம் - துறவினர்க்குச்செய்யும் பரிசாரத்தையும், விருந்து புறம் தரும் பெரும் தண் வாழ்க்கை உம் - விருந்தினரைப் புறங்கண்டு இன் சொற் கூறும் பெரிய தண்ணிய செயலையும், வேறுபடு திரு இன் - பலவகைப்பட்ட செல்வத்தோடு, வீறு பெற காண - (இல்வாழ்க்கையை நடத்தி) உயர்ச்சி பெறுதலைக்காண (வேண்டி) உரிமை சுற்றம் ஒடு ஒருதனி புணர்க்க - அடிமைத்திரளோடு வேறே கூட்ட, இ பெருங்கிழமை இன் - இந்தப் பேருரிமையால், காண் தகு சிறப்பு இன் - காணத்தக்க சிறப்பினையுடைய, கண்ணகி தனக்கு - கண்ணகியாருக்கு, சில யாண்டு கழிந்தன - சில வருடங்கள் கழிந்தன—எ-று.

கற்பிலக்கணத்துக்கு இவரிலக்கிலம் என்பார் பேரியற் கிழத்தி என்றார். கேண்மையோடு எனவே சுற்றந்தழாலும், அறப்பரிசாரம் எனவே "அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும் துறவோர்க்கெதிர்தலும்" ஆயின. இவற்றைப்பொருந்தி எனவே அருளுடைமை அன்புடைமை இனியவைகூறல்

முதலிய இல்லறப்பகுதி அடங்கும். பரிசாரம் வேலை. சிலயாண்டு கண்ணகியார்க்குக் கழிந்தன எனவே பலயாண்டு மாதவிக்குக்கழிந்தன என்பது உபலக்கணத்தாற் கொள்க. காணப்புணர்க்க என்னும் எச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு கழிந்தன என்னும் வினைமுற்றின் முதனிலையோடு முடிந்தன.

---

## ௩-ஆவது அரங்கேற்றுக்காதை.

---

“மாதவிதான்கற்ற நடனத்தைப்பன்னீராண்டில் கரிகாற்பெருவளவன்” அரங்கில் ஏற்றுதலையுடைய காதை என விரிதலால் மூன்று சொல் இரண்டு சந்தியாக்கி, முன்னது ஏழாம் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர் எனவும், பின்னது உருபும் பயனுந்தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர் எனவுங் கொள்க. அரங்கேற்று காதை எனவரின் பின்னது வினைத்தொகை நிலைத்தொடர் என்க.

நிலைமண்டில ஆசிரியப்பா.

தெய்வமால்வரைத் திருமுனியருள—எய்திய சாபத் திந்திரன்சிறுவனொ
டு—தலைக்கோற்றானத்துச் சாபநீங்கிய—மலைப்பருஞ் சிறப்பின் வானவர்மக
ளிர்—சிறப்பிற்குன்றாச் செய்கையொடு பொருந்திய—பிறப்பிற்குன்றாப் பெ
ருந்தோண்மடந்தை—தாதவிழ்புரிகுழன் மாதவிதன்னை—ஆடலும்பாடலு ம
ழகுமென்றிக்—கூறியமூன்றிலொன்று குறைபடாமல் — ஏழாண்டியற்றி
யோரீராண்டில்—சூழ்கழன்மன்னற்குக் காட்டல்வேண்டி — இருவகைக்கூத்
தி னிலக்கணமறிந்து—பலவகைக்கூத்தும் விலக்கினிற்புணர்த்துப்—பதினொ
ராடலும் பாட்டுங்கொட்டும்—விதிமாண்கொள்கையின் விளங்கவறிந்தாங்—
காடலும்பாடலும் பாணியுந்தூக்கும் — கூறியநெறியிற் கொளுத்துங்காலை
—பிண்டியும்பிணையலு மெழிற்கையுந் தொழிற்கையும் — கொண்டவகைய
றிந்து கூத்துவருங்காலை — கூடைசெய்தகை வாரத்துக்களைதலும் — வாரஞ்
செய்தகை கூடையிற்களைதலும்—பிண்டிசெய்தகை யாடலிற்களைதலும் —ஆ
டல்செய்தகை பிண்டியிற்களைதலும்—குரவையும்வரியும் விரவிலசெலுத்தி —
ஆடற்கமைந்த வாசான்றன்னொடு—யாழுங்குழலுஞ் சீருமிடறும்—தாழ்குரற்
றண்ணுமை பாடலோடிவற்றின்—இசைந்தபாட லிசையுடன்படுத்து—வரிக்
குமாடற்கு முரிப்பொருளியக்கித்—தேசிகத்திருவி னோசைகடைப்பிடித்துத்—
தேசிகத்திருவி னோசையெல்லாம்—ஆசின்றுணர்ந்த வறிவினனாகிக்—கவியது
குறிப்பு மாடற்றொகுதியும்—பகுதிப்பாடலுங் கொளுத்துங்காலை—வசையறு
கேள்வி வகுத்தனன்விரிக்கும்—அசையாமரபி னிசையோன்றானும் — இமிழ்க
டல்வரைப்பிற் றமிழகமறியத்—தமிழ்முழுதறிந்த தன்மையனாகி — எத்தியல்
பொதுவிய லென்றிவ்விரண்டின் — நாட்டியநன்னூல் நன்குகடைப்பிடித்—
திசையோன்வக்கிரித் திட்டதையுணர்ந்தாங்—கசையாமரபினதுபடவைத்து—

மாற்றோர்செய்த வசைமொழியறிந்து—நாத்தொலைவில்லா நன்னூற்புலவனு
ம்—ஆடல்பாட லிசையேதமிழே—பண்ணேபாணி தூக்கேமுடமே—தேசிக
மென்றிவை யாசின்றுணர்ந்து—கூடைநிலத்தைக் குறியின்மிகுத்து—வாரநில
த்தை வாங்குபுவாங்கி—வாங்கியவாரத் தியாழுங்குழலும் — ஏங்கியமிடறு மி
சைவனகேட்பக்—கூரியல்காரணங் குறியறிந்துசேர்த்தி — ஆக்கலுமடக்கலு
மீத்திறம்படாமை — சித்திரக்கரணஞ் சிதைவின்றுசெலுத்தும்—அத்தகுதண்
ணுமை யருந்தொழின்முதல்வனும்—சொல்லியவியல்பிற் சித்திரவஞ்சனை—பு
ல்லியவறிந்து புணர்ப்போன்பண்பின் — வர்த்தனைநான்கு மயலறப்பெய்தா
ங்—கேற்றியகுரலிளி யென்றிருநரம்பின் — ஒப்பக்கேட்கு முணர்வினனாகி
ப்—பண்ணமைமுழவின் கண்ணெறியறிந்து — தண்ணுமைமுதல்வன் றன்
னொடுபொருந்தி — வண்ணப்பட்டடை யாழ்மேல்வைத்தாங்—கிசையோன்
பாடிய விசையினியற்கை—வந்ததுவளர்த்து வருவதொற்றி—இன்புறவியக்கி
யிசைபடவைத்து—வாரநிலத்தைக் கேடின்றுபார்த்தாங் — கீரநிலத்தி னெழுத்
தெழுத்தாக—வழுவின்றிசைக்குங் குழலோன்றானும் — ஈரேழ்தொடுத்த செ
ம்முறைக்கேள்வியின் — ஓரேழ்பாலை நிறுத்தல்வேண்டி — வன்மையிற்கிடந்த
தாரபாகமும் — மென்மையிற்கிடந்த குரலின்பாகமும் — மெய்க்கிளைநரம்பிற்
கைக்கிளைகொள்ளக் – கைக்கிளையொழிந்த பாகமும்பொற்புடைத் — தளராத்
தாரம் விளரிக்கீத்துக்—கிளைவழிப்பட்டன ளாங்கேகிளையும் — தன்கிளையழிவு
கண் டவள்வயிற்சேர—ஏனைமகளிருங் கிளைவழிச்சேர—மேலதுழையிளி கீ
ழதுகைக்கிளை — வம்புறுமரபிற் செம்பாலையாய — திறுதியாதி யாகவாங்க
வை—பெறுமுறைவந்த பெற்றியினீங்காது—படுமலைசெவ்வழி யரும்பாலை
யெனக்—குரல்குரலாகத் தற்கிழமைதிரிந்தபின்—முன்னதன்வகையே முறை
மையிற்றிரிந்தாங்—கிளிமுதலாகிய வெதிர்படுகிழமையுங்—கொடிவிளரிமேற்
செம்பாலையென—நீடிக்கிடந்தகேள்விக்கிடக்கையின்—இணைநரம்புடையன
வணையுறக்கொண்டாங்—கியாழ்மேற்பாலை யிடமுறைமெலியக் — குழலின்
மேற் கொடிவலமுறைவலிய—வலிவுமெலிவுஞ் சமனுமெல்லாம் —பொலிய
க்கோத்த புலமையோனுடன்—எண்ணியநூலோ ரியல்பின்வழாது—மண்ண
கமொருவழி வகுத்தனர்கொண்டு—புண்ணியநெடுவேரைப் போகுயர்நெடுங்க
ழைக்—கண்ணிடையொருசாண் வளர்ந்ததுகொண்டு—நூனெறிமரபி னரங்
கமளக்குங்—கோலளவிருபத்து நால்விரலாக—எழுகோலகலத் தெண்கோனீ
ளத்—தொருகோலுயரத் துறுப்பினதாகி — உத்தரப்பலகையோ டோங்கினப
லகை—வைத்தவிடைநில நாற்கோலாக — ஏற்றவாயி லிரண்டுடன்பொலிய
த்—தோற்றியவரங்கிற் றொழுதனரேத்தப் — பூதரையெழுதி மேனிலைவைத்
துத்—தூணிழற்புறப்பட மாண்விளக்கெடுத்தாங் — கொருமுகவெழினியும்
பொருமுகவெழினியும்—கரந்துவரலெழினியும் புரிந்துடன்வகுத்தாங்—கோ
வியவிதானத் துரைபெறுநித்திலத்து—மாலைத்தாமம் வளையுடனாற்றி — விருந்
துபடக்கிடந்தவருந் தொழிலரங்கத்துப்—பேரிசைமன்னர் பெயர்புறங்கொடு

த்த—சீரியல்வெண்குடைக் காம்புநனிகொண்டு—கண்ணிடைநவமணி யொ
ழுக்கிமண்ணிய—நாவலம்பொலந்தகட் டிடைநிலம்போக்கிக்—காவல்வெண்
குடை மன்னவன்கோயில்—இந்திரன்சிறுவன் சயந்தனுகென —வந்தனைசெய்
து வழிபடுதலைக்கோல்—புண்ணியநன்னீர் பொற்குடத்தேந்தி—மண்ணியபி
ன்னர் மாலையணிந்து—நலந்தருநாளாற் பொலம்பூணோடை— அரசுவாத்தட
க்கையிற் பரசினர்கொண்டு—முரசெழுந்தியம்பப் பல்லியமார்ப்ப—அரசொ
டுபட்ட வைம்பெருங்குழுவுந்—தேர்வலஞ்செய்து கவிகைக்கொடுப்ப— ஊர்
வலஞ்செய்து புகுந்துமுன்வைப்ப — இயல்பின்வழாஅ விருக்கைமுறைமையி
ன் —குயிலுவமாக்க ணெறிப்படநிற்ப — வலக்கான்முன்மிதித் தேறியரங்கத்
து—வலத்தூண்சேர்தல் வழக்கெனச்சேர்ந் —திந்நெறிவகையா லிடத்தூண்
சேர்ந்த—தொன்னெறியியற்கைத் தோரியமகளிரும்—சீரியல்பொலிய நீரனி
ங்க—வாரமிரண்டும் வரிசையிற்பாடப்—பாடியவாரத்தி னீற்றினின்றிசைக்
கும்—கூடியகுயிலுவக் கருவிகளெல்லாம்—குழல்வழிநின்ற தியாழேயாழ்வழி
த்—தண்ணுமைநின்றது தகவேதண்ணுமைப் —பின்வழிநின்றது முழவேமுழ
வொடு—கூடிநின்றிசைத்த தாமந்திரிகை — ஆமந்திரிகையோ டந்தரமின்றி
க்—கொட்டிரண்டுடையதோர் மண்டிலமாகக் — கட்டியமண்டிலம் பதினொ
ன்றுபோக்கி—வந்தமுறையின் வழிமுறைவழாமல்—அந்தரக்கொட்டுட னட
ங்கியபின்னர்—மீத்திறம்படாமைவக்காணம்வகுத்துப்—பாற்படநின்ற பாலை
ப்பண்மேல்—நான்குடனொரீஇ நன்கனமறிந்து — மூன்றளந்தொன்று கோ
ட்டியதனை—ஐந்துமண்டிலத் தாற்கூடைபோக்கி—வந்தவாரம்வழிமயங்கியபி
ன்றை—ஆறுநாலு மம்முறைபோக்கிக்—கூறியவைந்தின் கொள்கைபோல
ப்—பின்னையுமம்முறை பெயரியபின்றைப்—பொன்னியல்பூங்கொடி புரிந்து
டன்வகுத்து—நாட்டியநன்னூ னன்குகடைப்பிடித்துக் — காட்டினளாதலிற்
காவல்வேந்தன்—இலைப்பூங்கோதை யியல்பின்வழாமல் — தலைக்கோலெய்
தித் தலையரங்கேறி—விதிமுறையாக வாயிரத்தெண்கழஞ்—சொருமுறையா
கப் பெற்றனளதுவே—நூற்றுப்பத்தடுக்கியெட் டுக்கடைநிறுத்த—வீறுயர்ப
சும்பொன் பெறுவதிம்மாலை—மாலைவாங்குநர் சாலுநங்கொடிக்கென—மா
ணமர்நோக்கினோர் கூனிகைக்கொடுத்த—நகரநம்பியர் திரிதருமறுகில்—பகர்
வனபோல்வதோர் பான்மையினிறுத்த—மாமலர்நெடுங்கண் மாதவிமாலை—
கோவலன்வாங்கிக் கூனிதன்னொடு—மணமனைபுக்கு மாதவிதன்னோ—டணை
வுறவைகலி னயர்ந்தனன்மயங்கி—விடுதலறியா விருப்பினனாயினன்—வடுநீங்
குசிறப்பிற்றன் மனையகமறந்தென.

## கூத்தியமைதி.

தெய்வமால்வரைத் திருமுனியருள — எய்தியசாபத் திந்திரன்சிறுவனொ
டு—தலைக்கோற்றானத்துச் சாபநீங்கிய—மலைப்பருஞ்சிறப்பின் வானவர்மக
ளிர்—சிறப்பிற்குன்றாச் செய்கையொடுபொருந்திய—பிறப்பிற்குன்றாப் பெ
ருந்தோண்மடந்தை தாதவிழ்புரிகுழன் மாதவிதன்னை.— ஆடலும்பாட்டு

மழகுமென்றிக்—கூறியமூன்றி லொன்றுகுறைபடாமல்—ஏழாண்டியற்றி யோரீராறாண்டில்—சூழ்கழன்மன்னற்குக் காட்டல்வேண்டி.

(இ-ள்.) தெய்வம் மால்வரைத் திருமுனி-தெய்வத்தன்மையுடைய பெரிய பொதியமலையின் கண் எழுந்தருளிய ஞானச் செல்வத்தையுடைய அகத்தியனார், சாபத்து எய்திய - (முன்பிட்ட) சாபத்தையடைந்த, இந்திரன் சிறுவன் ஒடு அருள - இந்திரன் குமாரனாகிய சயந்தனோடு (அம்முனிவர்) அருள் கூர்தலால், தலைக்கோல் தானத்து சாபம் நீங்கிய - தலைக்கோல் தானத்தில் அச்சாபம் நீங்கிய, மறப்பு அரும் சிறப்பின் - மாறுபடுதலில்லாத சிறப்பினையுடைய, வானவர் மகளிர் - தெய்வமகளிராகிய அரம்பையரில், சிறப்பில் குன்றா - வரிசையிற் குறைவுபடாத, செய்கை ஒடு பொருந்திய - நாடகத்தொழிலோடு பொருந்திய, பிறப்பில் குன்றா - (உருப்பசியாகியமாதவி மரபில்வந்த) குடிப்பிறப்பில் குறைதலில்லாத, பெருந்தோள் - பெரிய தோளையும், தாது அவிழ் புரி குழல் மாதவி மடந்தை தன்னை - மகரந்தம் அவிழ்ந்த சுருண்ட கூந்தலையுமுடைய மாதவியை, ஆடலும் பாடலும் அழகும்என்று இ கூறிய மூன்றில்- ஆடலும் பாடலும் அழகுமென்று இங்ஙனம் கூறப்பட்ட மூன்றினுள், ஒன்று குறைபடாமல் - ஒன்றுங் குறைவுபடாமல், எழ் ஆண்டு இயற்றி- ஏழாம் வருடத்தில் கூத்துக்கற்பித்து, ஓர் ஈராறு ஆண்டில் - பன்னிரண்டாம் வருடத்தில், கழல் சூழ் மன்னற்கு காட்டல் வேண்டி - வீரகண்டையையணிந்த கரிகாற் பெருவளவனுக்கு (அரங்கேறி) காட்டலை விரும்பி.

இந்திரன் களிகூர அவன் சபையில் ஆடலும் பாடலு மியற்றத்தொடங்கிய உருப்பசி தன்மேற் காமங்கொண்டு நோக்கிய இந்திரன் குமாரனுக்கு எதிர்நோக்கி யவ்வாடலும் பாடலும் பிறழாநிற்க, அவற்றை அகத்தியனார்கண்டு கோபித்து உருப்பசியை மண்ணுலகின் கணிகையாகெனவும், சயந்தனை மூங்கிலாகெனவும் சபித்தனர் அச்சாபம் ஏற்ற சயந்தன் வணங்கி அருள்வாயென வேண்ட அம்முனிவர், கூத்தியர் தலைக்கோற்றானத்தில் நீங்கும் என்று அருளினர் என்பது வரலாறு "திருந்தியபொதியி லருந்திறலகத்தியன் - சிந்தாமணி முடி யிந்திரன் மகன் - மாணுவிறலோய் வேணுவாகென - இட்டசாபம் பட்ட சயந்தன் - சாபவிடையெமக் கருடவத்தோயென்று - மேவினன் றொழுது மேதகவுரைப்ப-அருந்தவமாமுனி தமிழ்க்கூத்தியர்க்குத்-திருந்திய தலைக்கோற் றானந்தீருமென் - றவனினி துரைப்ப வாகிவந்தனனே" என்பதனால் அறிக.

அருள என்னும் வினையெச்சம் நீங்கிய என்னும் பெயரெச்சத்தின் முதனிலையோடு முடிந்தது.

## ஆடலாசிரியனமைதி.

இருவகைக்கூத்தி னிலக்கணமறிந்து—பலவகைக்கூத்தும் விலக்கினிற்புணர்த்துப்—பதினோராடலும் பாட்டுங்கொட்டும் —விதிமாண்கொள்கையின் விளங்கவறிந்தாங்—காடலும்பாடலும் பாணியுந்தூக்கும் — கூடியநெறியிற்

கொளுத்துங்காலை — பிண்டியும்பிணையலு மெழிற்கையுந்தொழிற்கையுங் — கொண்டவகையறிந்து கூத்துவருங்காலை -- கூடைசெய்தகை வாரத்துக்களைதலும்—வாரஞ்செய்தகை கூடையிற்களைதலும்— பிண்டிசெய்தகை யாடலிற்களைதலும்—ஆடல்செய்தகை பிண்டியிற்களைதலும்—குரவையும்வரியும் விரவிலசெலுத்தி—ஆடற்கமைந்த வாசான்றன்னொடு.

(இ-ள்.) இருவகைக்கூத்தின் இலக்கணம் அறிந்து - சாந்தி விநோதம் என்னும் இரண்டுவகைக் கூத்துக்களுடைய இலக்கணங்களையறிந்து, இலக்கணங்கள் ஆவன—அறுவகைநிலைமுதல் நிருத்தக்கையீறாயுள்ளன. பலவகைக்கூத்தும் விலக்கினில்புணர்த்து-பலவகைப்பட்ட கூத்துக்களையும் * விலக்குறுப்புகளோடு பொருந்துவித்து, பலவகைப்பட்ட கூத்துக்களாவன வென்றிக்கூத்து வசைக்கூத்து விநோதக்கூத்து முதலியன. 0 பதினோர் ஆடலும் பாட்டும் † கொட்டும் - அல்லியமுதல்கொடு கொட்டியீறாயுள்ள பதினொரு கூத்துக்களையும் அவற்றிற்குரிய பாடல்களையும் அவற்றிற்கிசைந்த வாச்சியங்களையும், மாண்விதி கொள்கையின் விளங்க அறிந்து - மாட்சிமைப்பட்ட நூல்களில்விதித்த முறையாலே ஐயந்திரிபற அறிந்து, ஆங்கு அசைநிலை. ஆடல்உம் பாடல்உம் பாணிஉம் ‡ தூக்குஉம்-(முற்கூறிய) அகக்கூத்துகளுக்கும் புறக்கூத்துகளுக்கும் உரிய ஆடல்களும் § இன்பம் முதல் உச்சமீறாக எட்டுவகைப்பட்ட பயனுள்ள பாடலும் ¶ கொட்டுமுதல் அளவீறாகிய தாளங்களும், இத்தாளங்களின் வழிவந்த செந்தூக்குமுதல் நெடுந்தூக்கீறாயுள்ள தூக்கும், கூடிய நெறியின் கொளுத்தும் காலை - (கூத்துமுதலிய இவைதம்மிற்) கூடிய நெறியினையுடைய அகக்கூத்து புறக்கூத்து முதலியவற்றை யாட்டுவிக்குமிடத்து, அறிந்து புணர்த்து அறிந்து என்னும் வினையெச்சங்கள் கொளுத்தும் என்னும் பெயரெச்சத்தின் முதனிலையைத் தனித்தனிகொண்டன. + பிண்டிஉம்

---

* விலக்குறுப்புகளாவன—பொருள் யோனி விருத்தி சந்தி சுவை சாதி குறிப்பு சத்துவம் அவிநயம் சொல் சொல்வகை வண்ணம் வரி, சேதம். இல் உருபுமயக்கம்.

0 பதினொருகூத்துக்கள்—அல்லியம் கடையம் ஐராணி மரக்கால் குடை குடம் துடி பேடு பாவை பாண்டரங்கம் கொடுகொட்டி. இவை அகக்கூத்தெனவும் புறக்கூத்து எனவும் இருவகைப்படும். இவற்றைக் கடலாட்டுக்காதையிற்காண்க. பாடல்கள் கந்தமுதல் செந்துறை விகற்பங்களீறாயுள்ளன.

† கொட்டு—கீதாங்கம் நிருத்தாங்கம் உபயாங்கம்.

‡ தூக்கு—செந்தூக்கு மதலைத்தூக்கு துணிபுதூக்கு கோயிற்றூக்கு நிவப்புத்தூக்கு கழாற்றூக்கு நெடுந்தூக்கு.

§ பயன் இன்பம் தெளிவு நிறைவு ஒளி, வன்சொல் இறுதி மந்தம் உச்சம்.

¶ தாளம் கொட்டு, அசை, தூக்கு அளவு.

+ பதாகை திரிபதாகை கத்திரிகை தூபம் அராளம் இளம்பிறை சுகதுண்டம் முஷ்டி கடகம் பத்மகோசம் சூசி காங்கூலம் கபித்தம் விற்பிடி குடங்

* பிணையல்உம் எழில் கைஉம் தொழில் கைஉம்-ஒற்றைக்கையும் இரட்டைக் கையும் அழகுபெறக் காட்டுங்கையும் தொழில்பெறக் காட்டுங்கையும், எண்ணின் கண்வந்த எதிரது தழீஇயஎச்ச உம்மையால் பொருட்கையுங் கொள்க. பொருட்கையாவது கவியிலுள்ள பொருளைக் காட்டுங்கை. பிண்டிக்கை பதாகைமுதல் வலம்புரி ஈறுகவுள்ள முப்பத்துமூன்று அவிநயத்தோடு கூடியகை பிணையற்கை அஞ்சலிமுதல் வருத்தமானம் ஈறுயுள்ள பதினைந்தவிநயத்தோடு கூடியகை. கொண்டவகை அறிந்து - பிண்டியும் பிணையலும் புறக்கூத்தையும் எழிற்கையும் தொழிற்கையும் அகக்கூத்தையுங் கொண்ட வகையைத்தெரிந்து, கூத்துவரும் காலை - கூத்து நிகழுமிடத்து, கூடைசெய்தகை வாரத்து களைதல்உம் - (அகக்கூத்தில்) ஒற்றையிற்செய்தகை இரட்டையிற் புகாமலும், வாரம் செய்தகை கூடையில் களைதல் உம் - இரட்டையிற் செய்தகை ஒற்றையிற் புகாமலும், பிண்டி செய்தகை ஆடலில் களைதல்உம் - ஆடல் நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும், ஆடல் செய்தகை பிண்டியில் களைதல் உம் - அவிநயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாமலும், (களைந்து) புறக்கூத்தில் பிண்டியைப் பொருட்கையென்றும் பிணையலைத் தொழிற்கையென்றுங் கூறுவர். குரவைஉம் வரிஉம் விரவு இல செலுத்தி - குரவைக்கூத்திற் குரியகால்களும் வரிக்கூத்திற் குரியகால்களும் (தம்முள்) கலவாமல் நடத்தி, ஆடற்கு அமைந்த ஆசான் தன்ஒடு - (இவ்வாறு) ஆடுதற்கும் ஆட்டுதற்கும் வல்ல ஆசிரியனோடு; "குரவையென்பது கூறுங்காலை - செய்தோர்செய்த காமமும்விறலும் - எய்தவுரைக்கு மியல்பிற்றென்ப" வரியெனப்படுவது வகுக்குங்காலை-பிறந்தநலனுஞ் சிறந்ததொழிலும் அறியக்கூறியாற்றுழிவழங்கல். அறிந்து செலுத்தி என்னும் வினையெச்சங்கள் அமைந்த என்னும் பெயரெச்சத்தின் முதனிலையோடும், அது ஆசான் என்னும் வினைமுதற் பொருளோடு முடிந்தன.

## இசையாசிரியனமைதி.

யாழுங்குழலுஞ் சீருமிடறும்— தாழ்குரற்றண்ணுமை யாடலோடிவற்றின்—இசைந்தபாட லிசையுடன்படுத்து—வரிக்குமாடற்கு முரிப்பொருளியக்கித்—தேசிகத்திருவி னோசைகடைப்பிடித்துத்—தேசிகத்திருவி னோசையெல்லாம்— ஆசின்றுணர்ந்த வறிவினனாகிக் — கவியதுகுறிப்பு மாடற்றொகுதியும்—பகுதிப்பாடலுங் கொளுத்துங்காலை — வசையறுகேள்வி வகுத்தனன்விரிக்கும்—அசையாமரபி னிசையோன்றானும்.

---

கை அலாபத்திரம் பிரமரம் தாம்பிரசூடம் பசாசம் முகுளம் பிண்டி தெரிநிலை மெய்ந்நிலை முன்னதம் மண்டிலம் சதுரம் மான்றலை சங்கு வண்டு கபோதம் இலத்தை மகரமுகம் வலம்புரி.

* அஞ்சலி புட்பாஞ்சலி பரமாஞ்சலி கபோதகம் கற்கடகம் சுவபத்திகம் கடகாவர்த்தம் நிடதம் தோரம் உற்சங்கம் புட்புடம் மகரம் சயந்தம் அபயாத்தம் வருத்தமானம்.

(இ-ள்.) யாழும் - * பேரியாழ்முதலிய நால்வகையாழும், குழலும் - 0 மூங்கில் முதலியவற்றாற்செய்த வங்கியமும், சீரும் - தாளவொத்தும், மிடறும் - சாரீரவீணையும், தாழ்குரல் தண்ணுமை - தாழ்ந்த ஓசையையுடைய மத்தளமும், ஆடல் ஓடு - அகக்கூத்து புறக்கூத்துகளுக்குரிய பதினோராடல்களுமாகிய, இவற்றின் ஓடு, இசைந்த - இவ்வாறுருக்களோடு பொருந்திய, பாடல் இசைஉடன் படுத்து - பாடல்களை யிசைகொளுவச்செய்து, வரிக்குஉம் ஆடற்குஉம் உரிப்பொருள் இயக்கி - வரிக்கூத்திற்கும் எனைக்கூத்திற்கும் உரிமைப் பொருளாயமைந்த விலக்கானின்னையு மமைத்து, வரிக்கும் என்பதற்கு செந்துறை வெண்டுறை என்னும் பாடல்களுக்கும் எனப்பொருள் கூறினும் அமையும், தேசிகத்திருவின் ஓசை கடைப்பிடித்து - இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்று சொல்லப்பட்ட சொற்களிசைகொள்ள வழுவாதுபற்றி, தேசிகத்திருவின் ஓசை எல்லாம் - அவ்விசைச் சொற்களாற் புணர்க்கப்பட்ட இசைவேறுபாடுக ளெல்லாவற்றையும், ஆசு இன்று உணர்ந்த அறிவினன் ஆகி - குற்றந்தீர அறிந்து (புணர்க்கவல்ல) அறிவையுடையவனாகி, கவி அது குறிப்புஉம் - இயற்புலவனது கோட்பாடும், ஆடல் தொகுதிஉம் - ஆடலாசிரியன் வரவுகளின் தொகுப்பும், பகுதி பாடல்உம் கொளுத்தும் காலை - (இவற்றின்) பகுதிக்கமைந்த பாடலும் (ஆகிய இவற்றோடு) பொருந்தச்செய்யு மிடத்து, வசை அறு கேள்வி வகுத்தனன் விரிக்கும் - (சொல்லப்பட்ட விவற்றை) குற்றம் அற்ற நூல் வழக்கால் வகுத்து விரிக்கும், அசையா மரபின் இசையோன் தான்உம் - வல்ல மரபினையுடைய இசை யாசிரியனும். வகுத்தனன் முற்றெச்சம். உடன்படுத்து, இயக்கி, கடைப்பிடித்து, அறிவினனாகி, என அடுக்கி நின்ற வேறு பலவினை யெச்சங்கள் விரிக்கும் என்னும் பெயரெச்சத்தோடும் அப்பெயரெச்சம் இசையோன் என்னும் வினை முதற்பொருளோடு முடிந்தன.

கவிஞனமைதி.

இமிழ்கடல்வரைப்பிற் றமிழகமறியத் — தமிழ்முழுதறிந்த தன்மையனாகி—எத்தியல்பொதுவிய லென்றிவ்விரண்டின்—நாட்டியநன்னூ னன்குகடைப்பிடித்—திசையோன்வக்கிரித் திட்டதையுணர்ந்தாங்—கசையாமரபி னதுபடவைத்து—மாற்றோர்செய்த வசைமொழியறிந்து — நாத்தொலைவில்லா நன்னூற்புலவனும்.

(இ-ள்.) இமிழ்கடல்வரைப்புஇல் - ஒலிக்குங்கடல்சூழ்ந்த வுலகில், தமிழ் அகம் - கிழக்கே கடலும் தெற்கே குமரியாறும் மேற்கே குடகாடும் வடக்

---

* பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ். இவற்றிற்கு நரம்புகள் பேரியாழ்க்கு இருபத்தொன்று. மகரயாழ்க்குப் பதினேழு. சகோடயாழ்க்குப் பதினாறு. செங்கோட்டியாழ்க்கு எழ்.

0 அவை மூங்கில், சந்தனம், வெண்கலம், செங்காலி, கருங்காலி.

கே திருவேங்கடமுமாகிய தமிழ்நாட்டெல்லையில், அறிய - ஆராய்ந்தறிய (போந்த) தமிழ் முழுது அறிந்த தன்மையன்ஆகி - மூன்று தமிழையு முற்று மறிந்த தன்மையையுடையவனாகி, போந்தசொல்லெச்சம். முழுது என்பத னிறுதியில் முற்றும்மைதொகுத்தல். எத்தியல் பொதுவியல் என்ற இ இரண் டின் - எத்தியல் பொதுவியலென்று கூறப்பட்ட இவ்விரண்டு கூறுபாட்டை யுமுடைய, எத்தியல் பொதுவியல் அகம்புறம் என்பாருமுளர். நாட்டியம் நல் நூல் நன்கு கடைப் பிடித்து - நல்ல நாடகநூலை நன்றாகக் கைக்கொண்டு, இசையோன் வக்கிரித்து இட்டதை உணர்ந்து - இசைப்புலவன் 0 ஆளத்தி வைத்த பண்ணீடினானும் அறிந்த * வண்ணம் ஏகதாள நிலையிலேவைத்த நிறத்தையறிந்து, கந்தம் ஏகதாளத்தா லுணரப் புணர்ப்பது. ஆங்கு அசைவி லே. அசையாமரபின் அதுபடவைத்து - குன்றாத மரபினையுடையவதனை (தன் கவியில்) பொருந்தவைத்து, மாற்றோர்செய்த வசைமொழி அறிந்து - பகை வராற் செய்யப்பட்ட வசைச்சொற்களையுணர்ந்து, நா தொலைவு இல்லாத - (வசையில் மொழிகளால் அவை தோன்றாதபடி) தன்னாவினாற் புணர்க்கவல் ல, நல் நூல் புலவன்உம் - நல்ல நூல்களையுணர்ந்த புலவனும், தன்மையனாகி கடைப்பிடித்து உணர்ந்து வைத்து அறிந்து தொலைவில்லாத என்னும் எச்சங் கள் ஒன்றனையொன்றுகொள்ள நிற்றலால் இவை அடுக்கன்று. இறுதியிலு ள்ள பெயரெச்சம் புலவன் என்னும் வினைமுதல்கொண்டது.

### தண்ணுமையோனமைதி.

ஆடல்பாடலிசையேதமிழே—பண்ணேபாணிதூக்கேமுடமே—தேசிக மென்றிவை யாசின்றுணர்ந்து—கூடைநிலத்தைக் குறியின்மிகுத்து—வாரநி லத்தை வாங்குபுவாங்கி—வாங்கியவாரத் தியாழுங்குழலும் — ஏங்கியமிடறு மிசைவனகேட்பக்—கூரியல்காரணங் குறியறிந்துசேர்த்தி — ஆக்கலுமடக்க லு மீத்திறம்படாமை—சித்திரக்கரணஞ் சிதைவின்றுசெலுத்தும் — அத்தகுத ண்ணுமை யருந்தொழின்முதல்வனும்.

(இ-ள்.) ஆடல் - எல்லாக் கூத்துகளும், பாடல் - பண்ணல் முதலிய எல்லாப்பாடல்களும், இசை - பதினோராயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொ ண்ணூறாகிய இசைகளும், தமிழ் - வடவெழுத்துநீங்கிய எழுத்துகளாற் கட்ட ப்பட்ட வாசிரியக் கட்டளைகளும், பண் - பண்களும், பாணி - இருவகைத் தாளவிகற்பங்களும், தூக்கு - செந்தூக்கு முதலிய எழுவகைத் தூக்குகளும்,

---

0 ஆளத்தி—வெ. "மகரத்தினொற்றாற் சுருதிவிரவும் - பகருங்குறினெடில் பாரித்து - நிகரிலாத் - தென்னாதெனாவென்று பாடுவரோலாளத்தி - மன்னா விச்சொல்லின் வகை." இது காட்டாளத்தி, நிறவாளத்தி, பண்ணாளத்தி என மூன்றுவகைப்படும்.

* வண்ணம்—பெருவண்ணம், இடைவண்ணம், வனப்புவண்ணம் என மூன்றுவகைப்படும்.

முடம் - (இவற்றின்) குற்றங்களும், தேசிகம் - இயற்சொன் முதலிய நால்வகைச்சொற்களும், என்ற இவை - என்று சொல்லப்பட்ட இவைகளை, ஆசு இன்று உணர்ந்து - குற்றம் அற அறிந்து, ஏ எண்ணிடைச்சொல். கூடை நிலத்தை குறியில் மிகுத்து - ஓ ருருவை யிரட்டிக்கிரட்டித் தொக்கவிடத்துத் தொகாதுமிகுத்து, வாரநிலத்தை வாங்குபுவாங்கி (அவ்விடத்து வேறுபடும்) பாக வுருவானவழியை நிற்குமான நிறுத்திக் கழியுமானங்கழித்து, வாங்கிய வாரத்து (இவ்வாறு) நிகழ்ந்த வுருக்களில், யாழும் குழலும் எங்கிய மிடறும்- யாழ்ப்பாடலும் வங்கியப்பாடலும் ஒலிக்குங் கண்டப்பாடலும், இசைவன பொருந்துவனவற்றை, கேட்ப (கேட்போர்) செவிகொள்ள, கூர் இயல் காரணம் குறி அறிந்து சேர்த்தி -மிக அமைந்த காரணத்தால் குறியறிந்து சேர வாசித்து - ஆக்கலும் - மற்றைக் கருவிகளின் குறைநிரப்புதலும், அடக்கலும்- மற்றைக்கருவிகளின் மிகுதியடக்குதலும், மீதிறம்படாமை உம் - ஆக்குமிடத்தும் அடக்குமிடத்தும் தெரியாமலும் (செய்து) சித்திரம் கரணம் சிதைவு இன்று செலுத்தும் (இந்த) அழகிய கைத்தொழில்கள் சிதையாமல் நடத்தும், அதகு தண்ணுமை அருந்தொழில் முதல்வன் உம் - அக் கூறுகளில் (ஒன்றுங் குறையாமல்) நிறைந்த மத்தளக்கருவியின் அரிய தொழிலையுடைய ஆசிரியனும், உணர்ந்து மிகுத்து வாங்கி சேர்த்து என்னும் வினையெச்சங்கள் ஒன்றனையொன்றுகொள்ள நின்று செலுத்தும் என்னும் பெயரெச்சத்தோடும் அவ்வெச்சம் தண்ணுமை முதல்வன் என்னும் வினைமுதற்பொருளோடு முடிந்தன.

## குழலோனமைதி.

சொல்லியவியல்பிற் சித்திரவஞ்சனை—புல்லியவறிந்து புணர்ப்போன்பண்பின்—வர்த்தனைநான்கு மயலறப்பெய்தாங்—கேற்றியகுரலிளி யென்றிரு நரம்பி — னொப்பக்கேட்கு முணர்வினனாகிப்—பண்ணமை முழவின் கண்ணெறியறிந்து—தண்ணுமைமுதல்வன் றன்னொடுபொருந்தி—வண்ணப்பட்டடை யாழ்மேல்வைத்தாங்—கிசையோன்பாடிய விசையினியற்கை—வந்தது வளர்த்து வருவதொற்றி—இன்புறவியக்கி யிசைபடவைத்து—வாரநிலத்தைக் கேடின்றுபார்த்தாங்—கீரநிலத்தி னெழுத்தெழுத்தாக—வழுவின்றிசைக்குங் குழலோன்றானும்.

(இ-ள்.) சொல்லிய இயல்பின்—(நூல்களில்) சொல்லிய முறைமையால், சித்திரம் வஞ்சனை புல்லிய அறிந்து—* சித்திரப்புணர்ப்பும் o வஞ்சனைப்புணர்ப்புமாகப் பொருந்திய இரண்டு கூறுபாடுகளையும் அறிந்து, புணர்ப்போன்

---

* சித்திரப்புணர்ப்பு—இசைகொள்ளும் எழுத்துகள்மேலே வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுப்போலப் பண்ணீர்மை நிறுத்தல்.

o வஞ்சனைப்புணர்ப்பு—இசைகொள்ளாத எழுத்துகளின்மேலே வல்லொற்றுவந்தவழி மெல்லொற்றுப்போல நெகிழ்ந்து புணர்த்தல்,

பண்பு இன் - பாடும் ஆசிரியனையொத்த பண்பினையுடையனாகி, பண்பினன் ஈறுதொக்கு நின்றது ○ வர்த்தனைநான்குஉம்-விரல்திறந்தூதுதல் நான்கையும், மயல் அறபெய்து - நிலைகுலையாமற்காட்டி, ஆங்கு - அவ்விடத்து, எற்றிய * குரல்இளி என்ற இரு நரம்பின் (பதினாற்கோவையில்) இரட்டிக்கவரும் குரல் இளி என்று சொல்லப்பட்ட இணைநரம்புகளால் வரும் பாலைகளை, ஒப்ப கேட்கும் உணர்வினன் ஆகி-(இசைநூல்வழக்கால்) பொருந்தக் கேட்டுப்பாடும் அறிவினையுடையனாகி, பண் அமைமுழவின் கண்ணெறி அறிந்து - ஒப்பனையமைந்த மத்தளத்தின் கண்ணிகழு முறைமையையறிந்து, தண்ணுமைமுதல்வன் தன் ஒடு உம் பொருந்தி-அம்மத்தள ஆசிரியனோடும் பொருந்தி, வண்ணம் பட்டடையாழ்மேல் வைத்து-வண்ணத்தையுடைய பட்டடை (எல்லாப்பண்களுக்கும் அடிமனை ஆதலால்)யாழின்மேல் வைத்து, வண்ணம் நிறம். பட்டடை நரம்புகளில் இளிக்குப்பெயர், வண்ணம், கிரமமாக எனப்பொருள் கொண்டு பண்களையாழின் மேல்வைத்து எனப்பொருள்கொள்ளினு மமையும். ஆங்கு அசை. இசையோன்பாடிய இசையின் இயற்கை-(அவ்வாறு வைத்தவழியே)இசைப்புலவன்பாடிய பாட்டினியல்பை, வந்தது வளர்த்து-வந்த இதம்(குறைவுபடாமல்)நிறுத்தி, வருவது ஒற்றி-வரும் பண்ணிற்கு(அயல் கலவாமல்)நோக்கி, இன்புஉற இயக்கி-(வண்ணமுதலாகிய பாட்டினழகெல்லாம்)இன்ப நிரம்பக்காட்டி, இசைபடவைத்து-பண்ணிலக்கணம் பதினொன்றையும் நிரம்பவைத்து, வாரம் நிலத்தை - † (முதனடை, வாரம், கூடை, திரள் என்று சொல்லப்பட்ட இயக்க நான்கினுள்) வாரப்பாடலாகிய இடத்தை, கேடுஇன்றுபார்த்து - அளவுநிரம்ப நிறுத்தி (எனவே கூடைப்பாடலும் அமையும்) ஆங்கு ஈர்அ நிலத்து இன் - முற்கூறிய வாரம் கூடை என்னும் அவ்விரண்டிடத்தின் (சொற்றன்மைகளின் எழுத்துக்கள்) எழுத்து எழுத்துஆக - (சிதையாமல்) எழுத்தெழுத்தாக, வழுவு இன்று இசைக்கும் குழலோன் தான்உம் - (கூறிய இலக்கணத்தினின்று) வழுவாமல் பாடும் குழலையுடையவனும்,

பெய்து உணர்வினனாகி பொருந்தி வளர்த்து ஒற்றி இயக்கி வைத்து பார்த்து என்னும் எச்சங்கள் இசைக்கும் என்னும் பெயரெச்சத்தோடு தனித்தனியாகவும் அப்பெயரெச்சம் குழலோன் என்னும் வினைமுதற்பொருளோடு முடிந்தன.

---

○ வர்த்தனை துளைகள், தற்சனி முதலாகவிட்டுப் பிடிப்பது ஆரோகணம். கனிட்டமுதலாக விட்டுப்பிடிப்பது அவரோகணம். இவ்விரண்டு கூறும் இப்படிச்செய்தல். இவற்றாலெழும் பண் நூற்றுமூன்று. தற்சனி சுட்டுவிரல். கனிட்டம் சிறுவிரல்.

* குரல்நரம் பிரட்டிக்கவருவது அரும்பாலை. இளி நரம் பிரட்டிக்கவருவது மேற் செம்பாலை. இவைபோல அல்லாத மற்றைப்பாலைகள்.

† முதனடைமிகவும் தாழ்ந்த செலவினையுடையது. திரள்மிகமுடுகிய நடையினையுடையது. இவ்விரண்டி னிடைப்பட்டவாரம் சொல்லொழுக்க முடையது. கூடைசொற் செறிவும் இசைச்செறிவு முடையது.

யாழாசிரியனமைதி.

ஈரேழ்தொடுத்த செம்முறைக்கேள்வியின் — ஓரேழ்பாலை நிறுத்தல்வேண்டி—வன்மையிற்கிடந்த தாரபாகமும்—மென்மையிற்கிடந்த குரலின்பாகமும்—மெய்க்கிளைநரம்பிற் கைக்கிளைகொள்ளக்—கைக்கிளையொழிந்த பாகமும்பொற்புடைத்—தளராத்தாரம் விளரிக்கீத்துக் — கிளைவழிப்பட்டன ளாங்கேகிளையும்—தன்கிளையழிவுகண் டவள்வயிற்சேர—ஏனமகளிருங் கிளைவழிச்சேர—மேலதுழைவிளி கீழதுகைக்கிளை—வம்புறுமரபிற் செம்பாலையாய—திறுதியா தியாகவாங்கவை—பெறுமுறைவந்த பெற்றியினீங்காது—படுமலை செவ்வழி யரும்பாலையெனக்—குரல்குரலாகத்தற் கிழமைதிரிந்தபின்—முன்னதன்வகையே முறைமையிற்றிரிந்தாங் — கிளிமுதலாகிய வெதிர்படுகிழமையும்—கொடிவிளரிமேற் செம்பாலைய்யென — நீடிக்கிடந்த கேள்விக்கிடக்கையின்—இணைநரம்புடையன வணையுறக்கொண்டாங்—கியாழ்மேற்பாலையிடமுறைமெலியக்—குழலின்மேற்கொடி வலமுறைவலிய — வலிவுமெலிவுஞ் சமனுமெல்லாம்—பொலியக்கோத்த புலமையோனுடன்.

(இ-ள்.) ஈரேழ் தொடுத்த - பதினான்குகோவை தொடுத்தகோல், தொடுத்த வினைமுற்றுப்பெயர். செம்முறை கேள்வியின் - (பெண்டிர்க்குரிய தானமுடைய பாடலின்) செவ்விய இயல்பமைந்த சிறப்பினையுடைய தாதலால் (அதின்கண்) ஓர் எழ்பாலை நிறுத்தல் வேண்டி - செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை, அரும்பாலை, கொடிப்பாலை, விளரிப்பாலை, மேற்செம்பாலை என்னும் எழுபாலையையும் (இணைநரம்பு தொடுத்து) நிறுத்திக்காட்டல் விரும்பி, வன்மையில் கிடந்த தாரபாகம்உம் - (வட்டப்பாலையின் முடிவுதானமாய்) வலிந்த நிலையினின்ற தாரத்தின் இரண்டு மாத்திரையுள் ஒரு மாத்திரையையும், மென்மையில் கிடந்த குரலின் பாகம்உம் - (அப்பாலைஇளி முதற்றானமாய்) மெலிந்த நிலையில் நின்ற குரல் நரம்பின் நான்கு மாத்திரையுள் இரண்டு மாத்திரையையும், மெய்கிளை நரம்பில் கைக்கிளைகொள்ள கைக்கிளை - மெய்மையாகிய தாரநரம்பினற் தரக்கோலில் கைக்கிளையாக நிறுத்த அத்தாரம் கைக்கிளையாகவும், பொற்பு உடை தளரா தாரம் ஒழிந்த பாகம்உம் - அழகினையுடைய நிலைகுலையாத தாரத்தின் ஒழிந்த ஒரு மாத்திரையையும், விளரிக்கு ஈத்து - விளரியிற் கூட்டுதலால், கிளைவழிப்பட்டனள் - (அவ்விளரி) துத்தமாகவும், ஆங்கு கிளையும் தன்கிளை அழிவுகண்டு அவள் வயின் சேர - அவ்வாறு பன்னிருகாற்றிரிக்கப் பன்னிரண்டு பாலையும் ஆக, ஏனை மகளிர்உம் கிளைவழிசேர - ஒழிந்த பெண்களும் நரம்பின்வழியேகூட்ட (பதினாற்கோவை பெண்டிர்க்குரிய தானம் ஆதலால் மகளிர் என்றார்) மேலது உழைஇளி கீழதுகைக்கிளை - உழை இளிமுதல் கைக்கிளையிறுதியாக, அது பகுதிப்பொருள் விகுதி. வம்பு உறு மரபின் - புதுமைமிக்க (மெலிவுநான்கும் சமம் எழும் வலிவு மூன்றுமாகிய மரபின்வழியாய், செம்பாலைஆயது (உழைமுதலாக) செம்

பாலையாயது, இறுதி ஆதி ஆக - (அது) தாரமுதலாக, அவை பெறும் முறை வந்த பெற்றியின் நீங்காது-அவைகள் பெற்ற முறையின் வழிவந்ததன்மையி னின்று நீங்காமல், படுமலை செவ்வழி குரல் குரல்ஆக அரும்பாலை என-கைக் கிளைகுரலாகப் படுமலைப்பாலையும், துத்தங்குரலாகச் செவ்வழிப்பாலையும், கு ரல்குரலாக அரும் பாலையும், தற்கிழமை திரிந்தபின்-தற்கிழமை திரிந்தபின்பு, முன் அதன் வகையே முறைமையின் திரிந்து - இளிமுதல் ஆகிய எதிர்படுகிழ மைஉம் கொடி விளரிமேற் செம்பாலை என—முன்பு கூறியபடியே தாரம் குரலாகக் கொடிப்பாலையும் விளரி குரலாக விளரிப்பாலையும் இளி குரலாக மேற் செம்பாலையும் என, ஆங்கு அசை. நீடிகிடந்த கேள்வி கிடக்கையின்-அளவின்றி நிலைபெற்ற நூற்கேள்வியின்வகையால், இணைநரம்புஉடையன அணைஉற கொண்டு - இப்பதினாற்கோவை நிலையினும் பண்ணின்ற நிலையினும் இயட்டித்த குரல் குரலாக அரும்பாலையும், இளி குரலாகமேற் செம்பாலையும் போலாதன ஐந்து பாலையும், உழை குரலாகச் செம்பாலைக்கு உழைபெய்தும் விளரி குரலாக விளரிப்பாலைக்கு விளரி பெய்தும், யாழ்மேல் பாலை - வீணை யினிடத்து அரும்பாலை முதலியன, இடம் முறைமெலிய - இடமுறை மெலி யவும், குழல் மேல் கொடிவலம் முறைவலிய - குழலிடத்துக் கொடிப்பாலை முதலியன வலமுறை வலியவும், வலிவும் மெலிவும் சமனும் எல்லாம் - வலிவு ம் மெலிவும் சமனும் என்று கூறப்பட்டதான நிலையினையுடைய இசைக்கூறு பாடுகளை யெல்லாம், பொலிய கோத்த புலமையோன் உடன் - விளங்கப்பு ணர்த்து எழுத் தெழுத்தாக இசைசெய்ய வல்ல யாழாசிரியனும்.

வேண்டி என்னும் வினையெச்சம் கோத்த என்னும் பெயரெச்சத்தோடும் அப்பெயரெச்சம் புலமையோன் என்னும் வினைமுதற்பொருளோடு முடிந் தன.

## அரங்கினமைதி.

எண்ணியநூலோ ரியல்பின்வழாது — மண்ணகமொருவழி வகுத்தனர் கொண்டு — புண்ணியநெடுவரைப் போகுயர்நெடுங்கழைக் — கண்ணிடை யொருசாண் வளர்ந்ததுகொண்டு—நூனெறிமரபி னரங்கமளக்கும் —கோல னிருபத்து நால்விரலாக—எழுகோல்கலத் தெண்கோனீளத்—தொருகோலு யரத் துறுப்பினதாகி—உத்தரப்பலகையோ டோங்கினபலகை—வைத்தவிடை நில நாற்கோலாக—ஏற்றவாயி லிரண்டுடன்பொலியத் —தோற்றியவரங்கிற் றொழுதனரேத்தப்—பூதரையெழுதி மேனிலைவைத்துத்—தூணிழற்புறப்பட மாண்விளக்கெடுத்தாங் — கொருமுகவெழினியும் பொருமுகவெழினியுங்— கரந்துவரலெழினியும் புரிந்துடன்வகுத்தாங்—கோவியவிதானத் துரைபெறுநி த்திலத்து—மாலைத்தாமம் வளையுடனாற்றி—விருந்துபடக்கிடந்த வருந்தொழி லரங்கத்து.

(இ-ள்.) எண்ணிய நூலோர் இயல்பின் வழாது - (பிறரால்) எண்ணப் பட்ட சிற்பநூலோர் (வகுத்த) இயல்பினின்றும் வழுவாமல், மண்ணகம்

* ஒருவழி வகுத்தனர்கொண்டு - நிலத்தைபோரிட்டுத்து வகுத்துக்கொண்டு, வகுத்தனர் முற்றெச்சம். புண்ணியம் நெடுவரை - (பொதியமலைமுதலிய) நீண்ட புண்ணியமலைகளில், போகுஉயர் நெடுங்கழை - உயர்ந்த மூங்கிலுள், போகுயர் ஒருபொருளிருசொல். கண் இடை ஒரு சாண் வளர்ந்தது கொண்டு - கண்ணுடு கண் இடையே யொருசாணுக வளர்ந்த மூங்கிலைக் கொண்டு, நூல் நெறி மரபின் - நூலிற் கூறியபடியே, அரங்கம் அளக்கும் கோல் அளவு - அரங்கம் (செய்ய) அளக்குங் கோலினளவு, விரல் இருபத்து நால் ஆக-(உத்தமபுருடனது) கைப் 0 பெருவிரல் இருபத்து நாலாக நறுக்கி, எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து ஒருகோல் உயரத்து உறுப்பினது ஆகி - (அக்கோலால்) எழுகோலகலமும் எண்கோல் நீளமும் ஒருகோற் குறட்டுயரமுமாகிய அவையவத்தை யுடையதாகி, உத்தரம் பலகை ஒடு ஓங்கினபலகை இடைவைத்த நிலம் நால் கோல் ஆக - (தூணின் மேல்வைத்த) உத்தரப்பலகைக்கும் (அரங்கினிடத்து) அகலத்துக்கு (இட்ட) பலகைக்கும் நடுநின்ற நிலம் நான்கு கோலளவினதாக, ஒடு உருபுமயக்கம். † ஏற்ற வாயில் இரண்டுடன் பொலிய தோற்றிய அரங்கில் - (மூன்றுகோலளவுக்கு) பொருந்த வகுத்த இரண்டு வாயில்களோடு விளங்கத் தோன்றிய அரங்கினிடத்து, பூதரை மேல் நிலை தொழுதனர் ஏத்த எழுதிவைத்து - அந்தணர் முதலிய நால்வகை வருண பூதரையும் மேனிலத்தே (யாவரும்) வணங்கிப்புகழ எழுதிவைத்து, தூண் நிழல் புறப்பட மாண் விளக்கு எடுத்து - தூணில் நிழலாய்ப் புலப்படாமல் புறம்பாக மாட்சிமைப்பட்ட நிலைவிளக்கை நிறுத்தி, ‡ ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியும் கரந்துவர லெழினியும் புரிந்து உடன் வகுத்து - இம்மூன்று திரைகளையும் செயற்பாட்டுடனே பகுத்து, ஓவியம் விதானத்து -

---

* ஒருவழி ஆவது தெய்வத்தானமும் அந்தணரிருக்கையும் காவும் உடையதாய்ச் சுரபுன்னையும் சண்பகமும் போல் நறுநாற்றமுடைய மண்ணுடைத்தாய்த் திண்ணிதாய் மதுரமுடைத்தாய் உவர்த்தரை, ஈரத்தரை, சாம்பற்றரை, ஓடத்தரை என்பன வொழிந்து, ஊரின் நடுவுள்ளதாய்த் தேரோடும் வீதியின் எதிர் முகமாகவுள்ளது.

0 பெருவிரல் அணுவெட்டுக் கொண்டது தேர்த்துகள், தேர்த்துகள் எட்டுக்கொண்டது எள், எள் எட்டுக்கொண்டது நெல், நெல் எட்டுக்கொண்டது பெருவிரல்.

† அக்கோலேழ கன்றெட்டு நீண்டு - மெய்ப்பாலுயர்வு மொருகோலாகும் - நற்கோல்வேந்த ளயக்குறும்வாயின் - முக்கோருனு முயர்வுமுரித்தே. என்றார் செயிற்றியனர்.

‡ ஒருமுக எழினியாவது இராசதானியி லிடுவது. பொருமுக எழினியாவது அரங்கிலிடுவது. கரந்துவர லெழினியாவது கோலமறைத்து வருமிடத்திடுவது. "வழுவில் கேள்வி நன்னூலுணர்ந்தோர் - எழினிதானே மூன்றென மொழிப." "அவைதாம் - ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியும் - கரந்துவர லெழினியுமென மூவகையே"

4762. V.1(1)



சித்திரத்தையுடைய மேற் கட்டியினிடத்து, உரைபெறு நித்திலத்து மாலைதாமம் வளையுடன் நாற்றி - புகழமைந்த முத்துமாலைகளால் சரியும் தூக்கும்விரவத் தொங்கவிட்டு, விருந்துபட கிடந்த அருந்தொழில் அரங்கத்து- புதிதுபட நிலைபெற்ற பெறுதற்கரிய தொழிலையுடைய அரங்கத்தில்.

வகுத்து கொண்டு என்னும் வினையெச்சங்கள் தோற்றிய என்னும் பெயரெச்சத்தையும், வைத்து எடுத்து வகுத்து நாற்றி என்னும் வினையெச்சங்கள் தனித்தனி கிடந்த என்னும் பெயரெச்சத்தையுங் கொண்டன.

## தலைக்கோல்மைதி.

பேரிசைமன்னர் பெயர்புறங்கொடுத்த—சீரியல்வெண்குடைக் காம்புநனிகொண்டு—கண்ணிடைநவமணி யொழுக்கிமண்ணிய—நாவலம்பொலந்தகட் டிடைநிலம்போக்கிக்—காவல்வெண்குடை மன்னவன்கோயில்—இந்திரன்சிறுவன் சயந்தனுகென—வந்தனைசெய்து வழிபடுதலைக்கோல்—புண்ணியநன்னீர் பொற்குடத்தேந்தி—மண்ணியபின்னர் மாலையணிந்து—நலந்தருநாளாற் பொலம்பூணோடை—அரசுவாத்தடக்கையிற் பரசினர்கொண்டு—முரசெழுந்தியம்பப் பல்லியமார்ப்ப—அரசொடுபட்ட வைம்பெருங்குழுவுந்—தேர்வலஞ்செய்து கவிகைகொடுப்ப — ஊர்வலஞ்செய்து புகுந்துமுன்வைப்ப.

(இ-ள்.) பேர் இசை மன்னர்பெயர் புறங்கொடுத்த - பெரிய புகழையுடைய அரசர்கள் (போரில்) பெயர்ந்து புறங்கொடுத்த, சீர் இயல்வெண்குடைக்காம்பு நனிகொண்டு - அழகுபொருந்திய வெண்கொற்றக்குடையின் காம்பினைத் தலைக்கோலாக மிகவுங்கொண்டு, கண் இடை மண்ணிய நவமணி ஒழுக்கி - கணுக்களிடத்துச் சாணைபிடித்த ஒன்பதுவகை யிரத்தினங்களையும் ஒழுங்குபெறச்செய்து, இடைநிலம் நாவலம் பொலம் தகடு போக்கி- (அவற்றின்) இடைநிலங்களைச் சாம்புநதமென்னும் பொற்றகட்டாற்கட்டிச்செய்த, தலைக்கொல் இந்திரன் சிறுவன் சயந்தன் ஆகஎன - இத்தலைக்கோலை இந்திரன்மகன் சயந்தனாக நினைந்து, வந்தனைசெய்து வழிபடு (மந்திரவிதியாலே) பூசித்து வழிபட்டு, வெண்குடைமன்னவன் கோயில் காவல் - வெண்கொற்றக் குடையினையுடைய அரசன் கோயிலில் காப்பமைய (இருத்தி) புண்ணியம் நல் நீர் பொன் குடத்து ஏந்தி - புண்ணிய நதிகளினல்ல நீரைப் பொற்குடத்திலே முகந்துவந்து, மண்ணியபின்னர் மாலை அணிந்து-(ஆடலாசிரியன் முதலியோர் இத்தலைக்கோலை) நீராட்டியபின்பு மாலைசூட்டி, நலம்தரும் நாள்ஆல் - நல்லநாளில், ஆல் உருபுமயக்கம். பொலம் பூண் ஓடை அரசு உவா தடம் கை - பொன்னாற்செய்த பூணையும் பட்டத்தையுமுடைய பட்டவர்த்தன யானையின் நீண்டகையில், பரசினர்கொண்டு - வாழ்த்திக்கொடுத்து, முரசு எழுந்து இயம் ப பல் இயம் ஆர்ப்ப - வீரமுரசு முதலாகிய முரசுகளெழுந்து

ஒலிக்கவும் பல வாத்தியங்க ளொலிக்கவும், அரசு ஒடுபட்ட * ஐம்பெருங்குழூஉம் - அரசனும் அமைச்சரோடு கூட்டி யெண்ணப்பட்ட ஐவகைப் பெரிய கூட்டத்தாரும், செய்து (அந்த யானையுடன்) கூடச்சென்று, தேர்வலம் - தேரினிடத்துள்ள, கவிகைகொடுப்ப - கவிஞன்கையில் கொடுத்து, கொடுப்ப வினையெச்சத்திரிபு. ஊர்வலம் செய்து புகுந்து முன்வைப்ப - ஊரை வலஞ்செய்து (அரங்கில்) புகுந்து (அத்தலைக்கோலை) எதிர்முகமாக வைத்தபின்.

கொண்டு, ஒழுக்கி, போக்கி என்னும் வினையெச்சங்கள் செய்த என்னும் பெயரெச்சத்தைத் தனித்தனிகொண்டன. செய்து, வழிபடு, அணிந்து, கொண்டு, கொடுத்து, செய்து, புகுந்து என்னும் வினையெச்சங்கள் தனித்தனி வைப்ப என்னும் வினையெச்சத்தைக் கொண்டன. வழிபடு வினைப்பகுதி வினையெச்சப் பொருளில்வந்தது.

## அரங்கிற்புகுந்தாடுகின்றமுறை.

இயல்பின்வழாஅ விருக்கைமுறைமையின்—குயிலுவமாக்க ணெறிப்பட நிற்ப—வலக்கான்முன்மிதித் தேறியரங்கத்து—வலத்தூண்சேர்தல் வழக்கெனச்சேர்ந்—திந்நெறிவகையி லிடத்தூண்சேர்ந்த — தொன்னெறியியற்கைத் தோரியமகளிரும்—சீரியல்பொலிய நீரனீங்க—வாரமிரண்டும் வரிசையிற்பாடப்—பாடியவாரத்தி னீற்றினின்றிசைக்கும்—கூடியகுயிலுவக் கருவிகளெல்லாம்—குழல்வழிநின்றதியாழேயாழ்வழித் — தண்ணுமைநின்றது தகவேதண்ணுமைப்—பின்வழிநின்றது முழவேமுழவொடு—கூடிநின்றிசைத்த தாமந்திரிகை—ஆமந்திரிகையோ டந்தரமின்றிக்—கொட்டிரண்டுடையதோர் மண்டிலமாகக்—கட்டியமண்டிலம் பதினொன்றுபோக்கி — வந்தமுறையின் வழிமுறைவழாஅமல்—அந்தரக்கொட்டுட னடங்கியபின்னர் — மீத்திறம்படாமைவக் காணம்வகுத்துப்—பாற்படநின்ற பாலைப்பண்மேல் — நான்குடனொரீஇய நன்கனமறிந்து—மூன்றளந்தொன்று கோட்டியதனை—ஐந்துமண்டலத் தாற்கூடைபோக்கி—வந்தவாரம்வழிமயங்கியபின்றை—ஆறுநாலு மம்முறைபோக்கிக்—கூறியவைந்தின் கொள்கைபோலப்—பின்னையுமம்முறை பெயரியபின்றைப்—பொன்னியல்பூங்கொடி புரிந்துடன்வகுத்து—நாட்டியநன்னூ னன்குகடைப்பிடித்துக்—காட்டினளாதலிற் காவல்வேந்தன்—இலைப்பூங்கோதை யியல்பின்வழாமல்—தலைக்கோலெய்தித் தலையரங்கேறி—விதிமுறையாக வாயிரத்தெண்கழஞ்—சொருமுறையாகப் பெற்றனளதுவே —நூற்றுப்பத்தடுக்கி யெட்டுக்கடைநிறுத்த—வீறுயர்பசும்பொன் பெறுவதிம்மாலை — மாலைவாங்குநர் சாலுநங்கொடிக்கென — மானமர்நோக்கினோர் கூனிகைகொடுத்து—நகரநம்பியர் திரிதருமறுகில்—பகர்வனர்போல்வதோர் பான்மையினிறுத்

---

* "அமைச்சர்புரோகிதர் சேனாபதியர் - தவத்தொழிற்றூதுவர் சாரணரென்றிவர் - பார்த்திபர்க்கைம்பெருங் குழுவெனப்பட்டவர்."

த—மாமலர்நெடுங்கண் மாதவிமாலை—கோவலன்வாங்கிக் கூனிதன்னொடு—மணமனைபுக்கு மாதவிதன்னோ—டணைவுறவைகலி னயர்ந்தனன்மயங்கி—விடுதலறியா விருப்பினனாயினன்—வடுநீங்குசிறப்பிற் றன்மனையகமறந்தென.

(இ-ள்.) இயலபின் வழாஅ இருக்கை முறைமையின் - (அரசர்முதலாயினோர்தத் தமக்குரிய) வரிசையினின்று தவறாத ஆசனங்களில் முறையாக (இருந்தபின்) குயிலுவமாக்கள் நெறிப்பட நிற்ப - இடக்கைமுதலிய் கருவியாளர்கள் (தாம்நிற்கும் இடத்தில்) முறைமைப்பட நிற்க, அரங்கத்து வலக்கால் முன் மிதித்து ஏறி - நாடகசாலையில் (மாதவி) வலக்காலை முன்வைத்து ஏறி வலத்தூண் சேர்தல் வழக்கு என சேர்ந்து - வலப்பக்கத் தூணிடத்தே சேர்தல் வழக்காதலின் அவ்விடத்தே சேர்ந்து, இந்நெறி வகையால் இடத்தூண் சேர்ந்த - மாதவி ஏறி நின்றபடியே இடத்தூணிடத்தைச் சேர்ந்த, தொல்நெறி இயற்கை * தோரிய மகளிர்உம் - பழையநெறி யியற்கையையுடைய தோரியமடந்தை முதலாயினோரும், சீர் இயல் பொலிய நீர் அல் நீங்க - நன்மை யுண்டாகவும் தீமை நீங்கவும் (வேண்டி) வாரம் இரண்டுஉம் வரிசையில் பாட - தெய்வப்பாட லிரண்டினையும் பாட, பாடிய வாரத்தின் ஈற்றின் நின்று குயிலுவக்கருவிகள் எல்லாம் கூடிய இசைக்கும் - பாடிய தெய்வப்பாடலினிறுதியினின்று கருவிகளெல்லாம் கூட விசைக்காநிற்கும், கூடிய செய்திய என்னும் வினையெச்சம். செய்யும் என்னும் வாய்பாட்டு முற்று நிகழ் காலத்தின்மேல் நின்றது. குழல்வழி நின்றது யாழ் - வங்கியத்தின்வழி நின்றது வீணைப்பாடல், யாழ்வழி - (கண்டத்தின் வழியதுயாழ் ஆகலால் மிடற்றுவழிப்பாடலும் யாழ்வழித்து) யாழின் பாடல் வழியாக, தகவு ஏ தண்ணுமை நின்றது-தகுதியாக மத்தளநின்றது, தண்ணுமை பின்வழி முழவு ஏ நின்றது - மத்தளக்கருவியின் பின்வழியே குடமுழா நின்றது, முழவொடு கூடி நின்று ο ஆமந்திரிகை இசைத்தது - குடமுழாவோடு கூடி நின்று ஆமந்திரிகை யமைந்தது, இவை ஒலிகளாதலால் கருவியாகு பெயரென்க. ஆமந்திரிகை ஒடு அந்தரம் இன்றி - இவ்வாமந் திரிகையோடே முன்சொன்ன கருவிகள்பருந்து நிழலும்போல வொன்றாய் நிற்ப, கொட்டு இரண்டு உடையது ஓர்மண்டிலம் ஆக-ஒரு தாளத்திறகு இரண்டு பற்றாக, கட்டிய மண்டிலம் பதினொன்று போக்கி-

---

* தோரியமகளிர் ஆடிமுதிர்ந்த பெண்கள். "தலைக்கொளரிவை குணத்தொடுபொருந்தி - வலத்தகு பாடலுமாடலுமிக்கோள் - இயற்படு கோதைத் தோரியமகளே."

ο சீவகசிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம்-௧௮௬. பாட்டு "தோற்பொலிமுழவும்யாழுந் துளைபயில்குழலுமேங்கக், காற்கொசிகொம்புபோலப் பேர்ந்துகைத் தலங்கள்காட்டி, மேற்படவெருவிநோக்கித் தானையைவிட்டிட்டொல்கித், தோற்றினாண்முகஞ்செய்கோலந் துளக்கினாண்மனத்தையெல்லாம்." வங்கியத்தின் வழியாழும் யாழின்வழி முழவமுங் கூடி யிசைத்தல் ஆமந்திரிகை என்றார் நச்சினார்க்கினியர்.

பஞ்சதாளப் பிரபந்தமாகக் கட்டப்பட்ட தேசியொத்தைப் பதினொருபற்று
லே தேசிகக்கூத்தையாடி முடித்து, வந்த முறையின் வழிமுறை வழாமல் -
(இப்படிச்செய்தல்) நாடகநூலிலமைந்த முறையாதலால் அம் முறையின் வ
ழிதவறுமல், அந்தரக்கொட்டு உடன் அடங்கியபின்னர்-இவ்வொத்தையாடி
முடித்தபின்பு,

"சூழ்கழன்மன்னற்குக் காட்டல்வேண்டி" என்பதினின்ற வேண்டி
என்னும் எச்சமும் சேர்ந்து போக்கி என்னும் எச்சங்களும் ஒன்றனையொ
ன்றுகொண்டு அடங்கிய என்னும் பெயரெச்சத்தின் முதனிலையோடு மு
டிந்தன.

பால்பட நின்ற பாலைப்பண்-பகுதிபட நின்ற மங்கலப்பண்ணுகிய பாலை
ப்பண்ணை, மீத்திறம் படாமை வக்காணம்வகுத்து-அளவு கெடாதபடியாளத்
தியிலேவைத்து,மேல்-அதன்மேலே, நான்கின் ஒருவியநன்கனம்அறிந்து † மங்
கலச்சொல்லையுடைய நான் குறுப்புகளினின்றும் நீங்குதலில்லாத உருவுக்
குச் சொற்படுத்தியும் இசைப்படுத்தியும் உரு அறிந்து, அதனை மூன்று' அளந்
து ஒன்று கோட்டி-அதனை மூன்றொத்துடைய மட்டத்திலெடுத்து ஒரொத்து
டைய வேகதாளத்தில் முடித்து, ஐந்துமண்டிலத்தால்-தேசிகப்பகுதிகளெல்லா
ம் வங்கிய மண்டிலநிலையால், கூடைபோக்கி-அத்தேசிகக்கூத்தைச் செலுத்தி,
வந்த வாரம் வழி மயங்கியபின்றை - முக நடையிலும் வாரத்திலும் அக்கூத்
தை முடித்து, மயங்கியபின்றை வினையெச்சம். ஆறும்நாலும் அ முறைபோக்
கி - (பஞ்சதாளப்பிரமாணமாகக் கட்டப்பட்ட) வடுகிய லொத்தையும் தேசி
யிய லொத்தையும் இரட்டிக்கிரட்டியுமாக வாடி, கூறிய ஐந்தின் கொள்கை
போல - சொல்லிவந்த தேசியைப்போல, பின்னைஉம் அ முறை பெயரிய பி
ன்றை - வடுகு மட்டத்து அடதாள முதலாக எகதாளமீருக வைசாக நிலையி
லேயாடி முடித்தபின், பொன் இயல் பூங்கொடி புரிந்து உடன் வகுத்து -
பொன்னாற்செய்த ஒரு பூவினையுடைய கொடி நடித்தாற்போல ஆடல் பாட
ல் முதலிய தொழில்களைச் செய்து, நல்நூல் நாட்டியம் நன்கு கடைப்பிடித்து
காட்டினள்-நல்ல நூல்களிற் கூறிய (தாண்டவம், நிருத்தம், நாட்டியம் என்
னு மூன்றனுள்) புற நடனமாகிய நாட்டியத்தை யவிநயத்துப் பாவகந்தோன்
ற விலக்குறுப்புப் பதினொன்கினெறிவழுவாம லாடிக்காட்டினள்.

வகுத்து, அறிந்து, அளந்து, கோட்டி, போக்கி, மயங்கியபின்றை, போ
க்கி, என்னும் வினையெச்சங்கள் பெயரிய என்னும் பெயரெச்சத்தைத் தனி
த்தனிகொண்டன. வகுத்து என்னும் வினையெச்சம் காட்டினள் என்னும் வி
னைமுற்றின் முதனிலை கொண்டது.

ஆதலின் இலை பூங்கோதை - ஆதலால் இலை செறிந்த பூவாற்றொடுத்த
மாலையையணிந்த மாதவியானவள், இயல்பு இன் வழாமை - (தன்பாட்

† நாலுறுப்பு உக்கிரமம், துடைமை, ஆயோகம், பிற்கலை.

க்கும் அழகுக்கும் ஏற்ற) முறைமையினின்று வழுவாமல், தலைக்கோல் எய்தி - (தன் வரிசைக்குத்தக்கபடி) தலைக்கோற் பெயர்பெற்று, தலைஅரங்கு ஏறி - எல்லா முதன்மையும் பெறுவதற்குக் காரணமாகிய அரங்கத்திலேறி, காவல் வேந்தன் - உயிர்களைக்காக்கும் அரசனால், விதிமுறை ஆக - (தன் குலத்தலை வரிசையாயிரத் தெண்கழஞ்சு பொன் பரிசம் பெறுகை) நூலில்விதித்த முறையாதலால், ஆக காரணப்பொருளில்வந்த வினையெச்சம். ஒருமுறை ஆயிரத்து எண் கழஞ்சு ஆக பெற்றனள்-தானும் அம்முறையாய் ஒருநாளைக்குப் பரிசமாக ஆயிரத்தெண்கழஞ்சு பொன் பரிசம் பெற்றாள், அதுவே (அன்று தொடங்கி) அதுவேபரிசம் ஆயினது; நூற்றுப்பத்து அடுக்கி எட்டு கடை நிறுத்த - நூற்றைப்பதின் மடங்காக அடக்கி யதனிறுதியில் எட்டென்னும் எண்ணை நிறுத்திய, வீறு உயர் பசும்பொன் இம்மாலை பெறுவது - மாற்றுயர்ந்த பசும்பொன்னை இம்மாலை பெறுவது, மாலைவாங்கு நர்நம் கொடிக்கு சாலும் என - இம் மாலையைவாங்கிச் சூடுகின்றவர் நமது பூங்கொடி போன்ற மாதவிக்குக் கணவனாதற்கு அமையும் என்று சொல்லி, மான் அமர் நோக்கின் ஓர் கூனிகை கொடுத்து - மான்விரும்பும் பார்வையையுடையாளாகிய ஓர் கூனிகையிற்கொடுத்து, நோக்கின்தொகுத்தல். நம்பியர் திரிதரும் நகரம் மறுகுஇல் - நம்பியர் உலாவும் நகரியின் பெருந்தெருவில், நம்பியர் ஆணிற்சிறந்தோர். பகர்வநர்போல்வது ஓர்பான்மையின் நிறுத்த-விலைக்கு விற்பாரைப்போல்வதாகிய பண்பினுனிறுத்த, மாமலர் நெடுங்கண் மாதவிமாலை குவளைமலர்போன்ற நீண்ட கண்களையுடைய மாதவியுடைய பரிசமாலையை, மாகருமை. கோவலன்வாங்கி கூனி தன்ஒடு மணம் மனைபுக்கு - கோவலனென்னும் ஒரு வாணிகன் வாங்கிக் கூனியோடு மணமிக்க அவள் மனையிற் சென்று புகுந்து, மாதவி தன்ஒடு அணைவு உறவைகலின் - மாதவியோடு கலந்து இருத்தலால், வடுநீங்கு சிறப்பின் மனைஅகம்மறந்து - குற்றத்தினின்று நீங்கிய கற்புச் சிறப்பினையுடைய மனைவியையும் மனையுமறந்து, அயர்ந்தனன் மயங்கி - தன்வசம் அற்று மயங்கி, அயர்ந்தனன் முற்றெச்சம். விடுதல் அறியாவிருப்பினன் ஆயினன் - அவளினின்று நீங்குதல் கூடாத விருப்பினையுடையவனாயினன்—எ-று.

எய்தி ஏறி என்னும் வினையெச்சங்கள் பெற்றனள் என்னும் வினைமுற்றின் முதனிலையைத் தனித்தனிகொண்டன, கொடுத்து என்னும் வினையெச்சம் நிறுத்த என்னும் பிறவினைப் பெயரொச்சத்தின் முதனிலையோடுமுடிந்தது. வாங்கிபுக்கு உற்றுமறந்து அயர்ந்து மயங்கி என்னும் வினையெச்சங்கள் ஒன்றனையொன்று கொண்டுமுடிந்தன, ஏற்றினின்ற எச்சம் ஆயினன் என்னும் வினைமுற்றின் முதனிலையோடு முடிந்தது. அகலம் விருத்தியுரையிற் காண்க.

நேரிசைவெண்பா.

எண்ணுமெழுத்து மியலைந்தும்பண்ணான்கும்
பண்ணின்றகூத்துப் பதினொன்றும்—மண்ணின்மேல்
போக்கினாள்பூம்புகார்ப் பொற்றொடிமாதவிதன்
வாக்கினாலாடரங்கின் வந்து.

(இ-ள்.) மண்ணின்மேல் - மண்ணுலகின்மேல், பூ புகார் - பொலிவினையுடைய புகார் நகரத்தில், பொற்றொடிமாதவி - பொன்னாலாகிய வளையலையணிந்த மாதவியானவள், ஆடு அரங்குஇன்வந்து - ஆடுதற்குரிய நாடகசாலையிலேறி, எண் உம் - கணிதத்தையும், எழுத்துஉம் - எழுத்துக்களையும், இயல் ஐந்துஉம் - ஐந்திலக்கணத்தையும், பண் நான்குஉம் - பண்கள் நான்கையும், பண்நின்ற - பண்களொடு கூடிநின்ற, கூத்து பதினொன்றும் - பதினொரு கூத்துக்களையும், தன் வாக்கினால் போக்கினாள் - தன் வாக்கினாலும் செயலாலும் நடத்தினாள்—எ-று.

கணிதம் சுரங்களின் சனன நட்சத்திரங்கள். எழுத்துக்கள் குற்றெழுத்தைந்து, நெட்டெழுத்தேழு. மெய்யெழுத்துகளுள் ம, ந, த. ஐந்தியல் சுரம், சுரதம், மதுரம், அலங்காரம், ஆலாபனம். எழுத்தை வேறுபிரித்தமையால் ஐந்தியல் என்றார். பண்கள் நான்கு பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி. பதினொரு கூத்துக்கள் அல்லியம் முதலியன. அவற்றை முன்னர்க்காண்க. வாக்கினால் என்றமையால் செயலினால் என இனந்தழுவி நின்றது உபலக்கணம்.

முற்றிற்று.

## ௪-ஆவது அந்திமாலை சிறப்புச்செய்காதை.

அந்திக்காலத்து மாலையைச் சிறப்புச்செய்த கதையையுடையது. எனவே;- அந்திமாலை (மாலை சிறிதுபொழுது நிகழ்வது) அந்திக்காலத்தின் கண்வந்த மாலை என விரிதலால் உருபும் பயனுந் தொக்க எழாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர், மாலை சிறப்புச்செய் மாலைப்போதைச் சிறப்புச்செய் என விரிதலால் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர், சிறப்புச்செய்காதை சிறப்புச்செய்த கதையையுடையது என் விரிதலால் வினைத்தொகை நிலைத்தொடர், ஆகவே நான்கு சொல் மூன்று சந்தியாகக்கொள்க. சிறப்பு என்னுந் தொழிற்பெயர் தன்னை வினைப்படுத்தவரும் வினைப்பகுதியொடு கூடி ஒரு சொன்னீர் மைத்தாய்க் காதை என்னும் பயனிலையோடு முடிதலால் சிறப்பித்த எனப் பிறவினைப் பொருள்மேல்நின்றது. இரண்டாம் வேற்றுமைத்தொகையாதலால் இயல் பாயிற்று.

இதுவும் அது.

விரிகதிர்பரப்பி யுலகமுழுதாண்ட — ஒருதனித்திகிரி யுரவோற்காணேன் — அங்கண்வானத் தணிநிலாவிரிக்கும் — திங்களஞ்செல்வன்யாண்டுளன்கொல்லெனத் — திசைமுகம்பசந்து செம்மலர்க்கண்கள் — முழுநீர்வார முழுமெயும் பனித்துத் — திரைநீராடை யிருநிலமடந்தை — அரசுகெடுத்தல மருமல்லற்காலை — கறைகெழுகுடிகள் கைதலைவைப்ப — அறைபோகுகுடிக ளொருதிறம்பற்றி — வலம்படுதானை மன்னரில்வழி — புலங்கெடவிறுத்த விருந்தின்மன்னரில் — தாழ்துணை துறந்தோர் தனித்துயரெய்தக் — காதலர்ப்புணர்ந்தோர் களிமகிழ்வெய்தக் — குழல்வளர்முல்லையிற் கோவலர்தம்மொடு — மழலைத்தும்பி வாய்வைத்தூத — அறுகாற்குறும்பெறிந் தரும்புபொதிவாசம் — சிறுகாற்செல்வன் மறுகிற்றூற்ற — எல்வளைமகளிர் மணிவிளக்கெடுப்ப — மல்லன்மூதூர் மாலைவந்திறுத்தென — இளையராயினும் பகையரசுகடியும் — செருமாண்டென்னர் குலமுதலாதலின் — அந்திவானத்து வெண்பிறைதோன்றிப் — புன்கண்மாலைக் குறும்பெறிந்தோட்டிப் — பான்மையிற்றிரியாது பாற்கதிர்பரப்பி — மீனரசாண்டவெள்ளிவிளக்கத் — தில்வளர்முல்லையொடுமல்லிகையவிழ்ந்த — பல்பூஞ்சேக்கைப்பள்ளியிற்பொலிந்து — செந்துகிர்க்கோவைசென்றேந்தல்குல் — அந்துகின்மேகலை யசைந்தனவருந்த — நிலவுப்பயன்கொள்ளு நெடுவெண்முற்றத்துக் — கலவியும்புலவியுங் காதலற்களித்தாங் — கார்வநெஞ்சமொடு கோவலற்கெதிரிய — கோலங்கொண்ட மாதவியன்றியுங் — குடதிசைமருங்கின் வெள்யிர்தன்னொடு — குணதிசைமருங்கிற் காரகிறுறந்து — வடமலைபிறந்த வான்கேழ்வட்டத்துத் — தென்மலைபிறந்த சந்தனமறுகத் — தாமரைக்கொழுமுறி தாதுபடுசெழுமலர் — காமருகுவளை கழுநீர்மாமலர் — பைந்தளிர்ப்படலை பருஉக்காழாரம் — சுந்தரச்சுண்ணத் துகளொடுமளைஇச் — சிந்துபுதெரிந்த செழும்பூஞ்சேக்கை — மந்தமாருதத்துமயங்கினர்மலிந்தாங் — காவியங்கொழுநரகலத்தொடுங்கிக் — காவியங்கண்ணார் களிதுயிலெய்தவும் — அஞ்செஞ்சீறடி யணிசிலம்பொழிய — மென்றுகிலல்குன் மேகலைநீங்கக் — கொங்கைமுன்றிற் குங்குமமெழுதாள் — மங்கலவணியிற் பிறிதணியணியாள் — கொடுங்குழைதுறந்து வடிந்துவீழ்காதினள் — திங்கள்வாண்முகஞ் சிறுவெயர்பிரியச் — செங்கயனெடுங்கணஞ் சனமறப்பப் — பவளவாணுதற் றிலதமிழப்பத் — தவளவாணகை கோவலனிழப்ப — மையிருங்கூந்த னெய்யணிமறப்பக் — கையறுநெஞ்சத்துக் கண்ணகியன்றியுங் — காதலர்ப்பிரிந்த மாதர்நோதக — ஊதுலைக்குருகி னுயிர்த்தனரொடுங்கி — வேனிற்பள்ளி மேவாதுகழிந்து — கூதிர்ப்பள்ளிக் குறுங்கணடைத்து — மலயத்தாரமு மணிமுத்தாரமும் — அலர்முலையாகத் தடையாது வருந்தத் — தாழிகுவளையொடு தண்செங்கழுநீர் — வீழ்பூஞ்சேக்கை மேவாது கழியத் — துணைபுணரன்னத் தூவியிற்செறித்த — இணையணைமேம்படத் திருந்துதுயில்பெறுஅ — துடைப்பெருங்கொழுந ரோடேற்காலத் — திடைக்குமிழெறிந்து கடைக்குழையோட்டிக் — கலங்காவுள்ளங்கலங்கக்கடைசெவந்து —

விலங்குநிமிர்நெடுங்கண் புலம்புமுத்துறைப்பவும் — அன்னமென்னடை நன்னீர்ப்பொய்கை—ஆம்பனாறுந் தேம்பொதிநறுவிரைத்—தாமரைச்செவ்வாய்த் தண்ணறற்கூந்தற்—பாண்வாய்வண்டு நோதிறம்பாடக்—காமருகுவளைக் கண்மலர்விழிப்பப்—புள்வாய்முரசமொடு,பொறிமயிர்வாரணத்து—முள்வாய்ச்சங்க முறையெழுந்தார்ப்ப—உரவுநீர்ப்பரப்பி னூர்துயிலெடுப்பி—இரவுத்தலைப்பெயரும் வைகறைகாறும்—அரையிருள்யாமத் தும்பகலுந்துஞ்சான்—விரைமலர்வாளி யொடுகருப்புவில்லேந்தி — மகரவெல்கொடிமைந்தன் றிரிதரு—நகரங்காவ னனிசிறந்ததுவென.

(இ-ள்.) விரிகதிர்பரப்பி - விரிந்த கிரணங்களைப்பரப்பி, தனி ஒருதிகிரி- ஒப்பில்லாத ஒரு திகிரியால்(திகிரி தேருருளை, சக்கரம்)உலகம்முழுது ஆண்ட- உலகமுழுதையும் ஆண்ட, உரவோன்காணேன் - பெரியோனை (இங்கு) காண்கிலேன், ஒருதிகிரி சிலேடை. முழுது என்பத னிறுதியில் முற்றும் மை தொகுத்தல். அம் கண் வானத்து - அழகிய இடத்தையுடைய வானின்கண், அணிநிலா விரிக்கும் திங்கள் அம் செல்வன் - அழகிய நிலவை விரிக்கும் சந்திரனாகிய செல்வன், யாண்டு உளன் கொல் என - எவ்விடத்துள்ளானோ வென்று;

எழா முருபின்கண் வந்த அத்து, சாரியை யிடைச்சொல். பண்புத்தொகையாய் நின்ற திங்களஞ் செல்வன் என்னுந்தொடருள் தொ-சொ-கி. "க்காலமுலகம்" என்னும் ௫௭-சூ-ஆல். உயர்திணைக்கட்பால் பிரிந்திசையாத திங்கள் "நின்றுங் கிசைத்தல்" என்னும் ௫௮-சூ-ஆல். "இவணியல் பின்றே" என்றமையால் திங்களஞ் செல்வன் என நின்றுங்கு நின்று உயர்திணையா யிசைத்ததெனக் கொள்க. இடையில் வந்த அம்சாரியை ஷ-எ-பு-ககூ-சூ. "உணரக்கூறின்" என்னும் புறநடையால் வந்தது. கொல் ஐயப்பொருட்டு.

திரைநீர் ஆடை இருநிலம் மடந்தை - கடலை யாடையாகவுடைய பெரிய நிலமகள், அரசு கெடுத்து - தன்கணவனைக் காணாமல், கணவன் சூரியன். திசை முகம் பசந்து - நான்கு திசையாகிய தன் முகங்கள் பசப்பூர - பசந்து என்றது மாலைக்காலத்துப் பச்சை வெயிலை "செல்சுடர்ப் பசுவெயிறோன்றியன்ன" என மதுரைக் காஞ்சியினுங் காண்க. இது வினையெச்சத் திரிபு. செம்மலர் கண்கள் முழுநீர் வார - செவந்த மலர்போன்ற கண்களூ மிக்க நீர் சிந்த (செவந்த மலர்களிடத்துக் கள்ளாகிய நீர்முழுதும் சிந்த) இது சிலேடை. முழு மெய்உம் பனித்து-தேகமுழுது நடுங்கி, பனி, நோய் அது குடநாட்டு வழக்கு - பனித்து பனி பெய்யப்பட்டு எனினும் அமையும், அல மரும் அல்லல் காலை - மனம் சுழலுகின்ற இடர்க்காலத்தில்;

கெடுத்து என்னும் எச்சத்தின் முடியாகிய பனித்து என்னும் எச்சத்தின் முதனிலையை இடையில் நின்ற பசப்ப, வார என்னும் எச்சங்கள் தனித்தனி கொண்டன.

வலம் படுதானை மன்னர் இல் வழி - வெற்றி பொருந்திய சேனையையு டைய அரசரில்லாத காலத்து - வழி இடம் அது காலத்தின் மேல் நின்றது. கறை கெழு குடிகள் கைதலைவைப்ப - கடமைப் பணத்தை (அரசன் கீழ்ப் பட்டு) இறுக்குங் குடிகள் துன்பமடைய, கறை இறைப்பணம்;

துயருறல் என்னும் பொருணிகழ்ச்சிதோன்றத் தலைமேற்கைவைத்தலெ ன்னுந் தொழினிகழ்ச்சியால் உபசரித்தார்.

அறைபோகு குடிகள் ஒருதிறம் பற்றி - கீழறுத்துச்செல்லும் (தம்மரச ரோடு உட்பகையையுடைய என்றபடி) குடிகளைத் (தமக்கு) ஒருதலையாகத் துணைபற்றி, புலம் கெட (அவ்வரசர்) நிலங்கெடும்படி, விருந்தின் இறுத்த ம ன்னர் இல் - புதிதாக வந்துவிட்ட குறுநில மன்னரைப்போல, தாழ் துணை பிரிந்தோர் தனிதுயர் எய்த - (தம்மனத்தில்) தங்கிய துணைவரைப்பிரிந்த பெ ண்கள் (கறைகெழு குடிகளைப்போல) ஒடுங்கித் துன்பமடையாநிற்கவும், காத லர் புணர்ந்தோர் களி மகிழ்வு எய்த - தங்கண வரைப்புணர்ந்திருக்கின்ற பெ ண்கள் (அறைபோகு குடிகளைப்போல) களித்து மகிழ் கூராநிற்கவும், குழல் வளர் முல்லை இல் கோவலர் தம் ஒடு மழலைதும்பி வாய்வைத்து ஊத - வேய் ங்குழலில் வளரு முல்லைப் பண்ணில் (கூந்தலில்வளரு முல்லைமலரில்) ஆயர்க ளோடு, இளமையையுடைய வண்டுகள் வாய்வைத் தூதாநிற்கவும், இது சி லேடை. அரும்பு பொதி வாசம் அறுகால் குறும்பு எறிந்து-அரும்புகளிற்பொ திந்த வாசனையை (இடையிற் புகுந்துண்ணுதபடி) வண்டுகளாகிய குறுநில மன்னரை யோட்டி, அறுகால் சினையாகுபெயர். சிறுகால் செல்வன் மறுகு இல்தூற்ற - தென்றலாகிய செல்வன் (அவ்வாசனையை) வீதியில் தூற்றுநிற் கவும், எல்வளை மகளிர் மணிவிளக்கு எடுப்ப - விளங்கும் வளையையுடைய பெண்கள் அழகிய விளக்கை எடுக்காநிற்கவும், மல்லல் மூதூர் மாலை வந்து இறுத்தென - (வளவர் குலத்துக்கு முதலாயுள்ள சூரியன் ஆண்ட) வளமிக்க பழைய ஊரின்கண் (விருந்தின் மன்னரைப்போல) மாலையென்னுங்குறுநில மன்னன் வந்திறுக்க;

இறுத்தென வினையெச்சத் திரிபு. எய்த ஊத தூற்ற எடுப்ப என்னும் நிகழ்கால வினையெச்சங்கள் தனித்தனியாய் வந்து என்னும் எச்சத்தின் முதனி லையையும், அவ்வெச்சம் இறுத்தென என்னும் எச்சத்தின் முதனிலையையுங் கொண்டன.

இளையர் ஆயின்உம் பகை அரசு கடியும் - தாம் பிராயத்தால் இளையரா யிருப்பினும் பகை யரசரை (வேரோடு) களையும், செருமாண்தென்னர்குலம் முதல் ஆதலின்-போரின்மேம் பட்டதென்னர் குலத்துக்குமுதலாதலால், சோ மகுலத் தென்னன் என்னாது தென்னர் குலச்சோமன் என்றார். பிறைஅளியோ டு ஒத்து வலியினுந் தெறுதலினும் ஒவ்வாமையாலும் குறைவு மறுவு முடை மையாலும் இவர்க்குஅவை யில்லாமையாலும் உயர்ச்சி நோக்கி, அந்தி வான

த்து - அந்திப்பொழுதிற் செவ்வானிடத்தே, வெண்பிறை தோன்றி - வெள்ளிய சந்திரன் தோன்றி, பிறை என்னாது வெண்பிறை என்றமையால் வானம் என்றதைச் செவ்வான் என்றது. தொ - சொ - கி - சு0 - சூ. “எடுத்த மொழியினஞ் செப்பலுமுரித்தே” என்றாராகலின். புன் கண் மாலை குறும்பு எறிந்து ஓட்டி - வருத்தஞ்செய்யும் அம்மாலைக் காலமென்னுங் குறுநிலமன்னனை யறுத்தோட்டி, மாலைசிறிது பொழுது இடையில் நிகழ்வதாகலின். பான்மையில் திரியாது - அரசியலினின்று வேறுபடாது, பால் கதிர் பரப்பி - வெள்ளிய கிரணத்தைவிரித்து, புகழை விரித்து எனினும் அமையும். மீன் அரசு - அச்சந்திரன், உடுபதிஎன வருதல் காண்க. ஆண்ட வெள்ளி விளக்கத்து - (நாட்டை)ஆண்ட வெள்ளிய விளக்கத்தில்;

தோன்றி ஓட்டி திரியாது பரப்பி என்னும் எச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு ஆண்ட என்னும் பெயரெச்சத்தின் முதனிலையையும், அப்பெயரெச்சம் விளக்கம் என்னும் பிற பெயரையுங் கொண்டன.

இல் வளர் முல்லை ஓடு மல்லிகை - மனையின் கண்வளர்ந்த முல்லை மலரொடு மல்லிகை மலரும், கற்புடை மகளிர்கள்வீட்டின்கண்முல்லையை வளர்த்தலால் மனைவளர் முல்லை என்றார். பல் பூ அவிழ்ந்த சேக்கை பள்ளி உள் - (அவையொழிந்த) தாழி குவளை முதலிய பலபூக்களும் பரந்த படுக்கையாகிய சயனத்துள், பொலிந்துசென்று ஏந்து அகல் அல் குல் - பொலிவுபெற்று பரந்து அழகேந்திய அகன்ற அல் குலில், அம் துகில் செம் துகிர் கோவை - அழகிய ஆடையின்மேல்(சூழ்ந்த) செவந்த பவளக்கோவையாகிய, மேகலை அசைந்தன வருந்த - மேகலை அசைந்து இரங்காநிற்க, “எண்கோவைமேகலை காஞ்சி யெழுகோவை, பண்கொள் கலாபம் பதினெட்டுக் - கண்கொள், பருவம் பதினன்கு முப்பத்திரண்டு, விரிசிகையென் றுணரற்பாற்று.” “தழுவும் புதல்வனை யொருகையிற் றழீஇப் பவளஞ்சேர்ந்த பல்காழல் குல்” என்றார்கதையினும். நிலவு பயன் கொள்ளு நெடுவெள் முற்றத்து - நிலவாலாகியபயனைக் கொள்ளுதற்குக் காரணமாகிய வுயர்ந்த வெள்ளிய நிலாமுற்றத்தின்கண், கொள்ளும் என்னும் பெயரெச்சங் கருவிப்பொருள் கொண்டது. நிலவுப்பயன் கொள்ளும் என்றல் இடக்கரடக்கல். கலவிஉம் புலவிஉம் காதலற்குஅளித்து - ஒருகாற் கலவியையும் ஒருகாற் புலவியையும் தன் கணவனுக்கு மாறித்தந்து, ஆங்கு ஆர் வம் நெஞ்சம் ஓடு - அவ்விடத்து அன்புமிக்க மனத்தோடு, கோவலற்கு எதிரிய - அக்கோவலனை யெதிரேற்று முயங்கிய கோலம் கொண்ட மாதவி அன்றிஉம் - (முயக்கத்தாற் குலைந்த) கோலத்தை (பின்னும்) புனைந்த மாதவியல்லாமலும்;

அளித்து என்னும் வினையெச்சத்தின் முடிபாகிய காரணப்பொருளில் வந்த எதிரிய கொண்ட என்னும் பெயரெச்சங்கள் மாதவி என்னும் வினைமுதற்பொருளைத் தனித்தனிகொண்டன.

* குடதிசை மருங்கின் வெள் அயிர் தன் ஒடு குணதிசை மருங்கில் கார் அகில் துறந்து - மேற்றிசையின் கண்ணுள்ள வெள்ளியகண்ட சர்க்கரையோடு கீழ்த்திசையின் கண்ணுள்ள கரிய அகிற் புகையைப் புகைத்து, குடதிசை யவனதேசம். கமழ் புகை யுறப்பாறனுள் தலைமை பற்றிய பொருள்கள் இவ்விரண்டும் ஆதலால் வெள்ளயிர் காரகில் என்றார். "இருங்காழகிலொடு வெள்ளயிர் புகைப்ப" என்றார் நெடுநல் வாடையினும் - குடதிசை குணதிசை வெள்ளயிர் காரகில் இவை சொன் முரண். இவை விரோத அணியு ளடங்கும். வடமலை பிறந்தவான் கேழ் வட்டது - இமைய மலையிற் பிறந்த மிக்க வொளியையுடைய சிலாவட்டத்தில், தென்மலை பிறந்த சந்தனம் மறுக - பொதியமலையிற் பிறந்த சந்தனம் சுழலாநிற்க (அரைக்க என்றபடி) "வடவரைதந்தவான் கேழ்வட்டம்" என்றார் பெருங்குறிஞ்சியினும். இதுவும் முற்கூறிய அணி - தாமரை கொழுமுறி தாதுபடு செழுமலர் - தாமரையினது இளந்தளிரையும் (அதனது.) மகரந்தம் நிறைந்த வளவிய மலர்களையும், காமரு குவளை கழுநீர் மாமலர் - (கண்டோர்க்கு) விருப்பந் தராநின்ற குவளையாகிய கரிய மலரையும், காமம்வரு காமரு தொகுத்தல். குவளைக் கழுநீர் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. பைந்தளிர் படலை - பசிய தளிரையிடையிட்டுத் தொடுத்த மாலையையும், பரு காழ் ஆரம் - பருத்த முத்து வடத்தையும், சுந்தரம் சுண்ணம் துகள் ஒடுஉம் சிந்து அளைஇ தெரிந்த - நிறத்தையுடைய சுண்ணப் பொடியோடுஞ் சிந்திக்கலந்து கிடந்த, செழும்பூ சேக்கை மயங்கினர் - வளவிய பொலிவையுடைய படுக்கையிற் புணர்ச்சிக்கண் மயங்கிய பெண்கள், மந்த மாருதத்து மலிந்து - தென்றற் காற்றால் காதல் மிகுந்து, ஆங்கு ஆவி அம் கொழுநர் அகலத்து ஒடுங்கி - அவ்விடத்துத் தமது பிராணன்போலும் அழகிய கணவர் மார்பிடத்தொடுங்கி, காவி அம் கண்ணார் களிதுயில் எய்த உம்-நீலோற்பலம் போலும் அழகிய கண்ணையுடைய அப்பெண்கள் இன்பத்துயில் கூராநிற்கவும்;

துறந்து மறுக என்னும் எச்சங்கள் மயங்கினர் என்னும் வினைமுற்றின் முதனிலையைத் தனித்தனி கொண்டன. மலிந்து ஒடுங்கி என்னும் எச்சங்கள் ஒன்றனையொன்று கொண்டு எய்த என்னும் வினையெச்சத்தின் முதனிலைகொண்டன.

அம் செம் சீறு அடி அணி சிலம்பு ஒழிய - அழகிய செவந்த சிற்றடிகள் தன்னை யணியுஞ் சிறப்பைச் சிலம்பு பெறாது நீங்க, மெல் துகில் அல்குல் மேகலை நீங்க - மெல்லிய ஆடையையணிந்த அல்குல் தன்னை யணியுஞ் சிறப்பை மேகலை பெறாது நீங்க, திங்கள் வாள் முகம் சிறு வெயர்பிரிய - சந்திரனையொத்த வொளியையுடைய முகம் தன்னை யணியுஞ் சிறப்பைச் சிறுவெயர்ப்புப் பெறாது பிரியாநிற்க, வியர்எனப்பாடமாயின்விகாரம் எனக்கொள்க.

---

* நேர்கட்டி செந்தேனெரிய ரசம் பச்சிலை - ஆரமகி லுறுப்போடாறு.

வெயர்ப்பிரிய எனப் பாடமோதி வெயர்ப்பு இரிய எனினும் அமையும். செம் கயல் நெடுங் கண் அஞ்சனம் மறப்ப - செவந்த கயல்போன்ற நெடிய கண்கள் தன்னை யணியுஞ் சிறப்பமை பெறுது மறப்ப, வாள் நுதல் பவளம் திலதம் இழப்ப - ஒள்ளிய நெற்றி தன்னையணியுஞ் சிறப்பைப் பவளம் போலுஞ் செவந்த திலதம் பெறுதுமறப்ப, தவளம் வாள்நகை கோவலன் இழப்ப - வெள்ளிய ஒள்ளியநகையைக் கோவலன் பெறுதுமறப்ப, மை இருங் கூந்தல் நெய் அணி மறப்ப - கரிய பெரிய கூந்தலின் மணத்தை அழகிய புழுகுநெய் பெறுதுமறப்ப, கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள் - கொங்கையாகிய முற்றத்தில் குங்குமத்தை எழுதாளாய், மங்கல அணி இல் பிறிது அணிமகிழாள் - மங்கலவணியினின்று வேறணியை யணியாளாய், கொடுங்குழை துறந்து வடிந்து வீழ்காதினள் - வளைந்த குண்டலத்தைப் பிரிந்தும் இயற்கை யழகு நீங்காது தாழ்ந்த காதினளாய், கைஅறு நெஞ்சத்து கண்ணகி அன்றிஉம்-செயலற்ற மனத்தையுடைய கண்ணகியாரல்லாமலும்,

ஒழிய, நீங்க, பிரிய, மறப்ப, இழப்ப என்னும் எச்சங்கள் எழுதாள் மகிழாள் காதினள் என்னும் வினைமுற்றுகளைத் தனித்தனியாகவும், அம்முற்றுக்கள் எச்சங்களாய்க் கையற்ற என்னும் பெயரொச்சத்தைத் தனித்தனியாகவும் அப்பெயரொச்சம் கண்ணகி என்னும் வினைமுதற்பொருளையுங் கொண்டன.

காதலர் பிரிந்தமாதர் - தங்கொழுநரைப் பிரிந்த பெண்கள், நோதக (பிரிவால்) துன்பம் அடைதலால், ஊது உலைகுருகின்-ஊதுந் துருத்தியின் உலைமூக்குப்போல, குருகுஉலைமூக்கு. உயிர்த்தனர் ஒடுங்கி (அழலெழ) பெருமூச்செறிந்து செருக்கடங்கி, உயிர்த்தனர் முற்றெச்சம். வேனில்பள்ளி மேவாது கழிந்து-இளவேனிற்காலத்துக் கமைந்த நிலாமுற்றத்தில் செல்லாதொழிந்து, கூதிர்பள்ளி குறுங்கண் அடைத்து - கூதிர்காலத்திற் கமைந்த இடைநிலத்தில் (ஒடுங்கித் தென்றலும் நிலவும் புகாமல்) சாளரக் கண்களையடைத்து, மலையத்து ஆரம் உம் மணிமுத்து ஆரம் உம் - பொதியமலையிற் றோன்றிய சந்தனக் குழம்பு முத்துமாலையும், ஆகத்து அலர்முலை அடையாது வருந்த-மார்பிற் பரந்த முலைகளி லடையப் பெறுதுவருந்தவும், தாழிகுவளைதண் செங்கழுநீர்வீழ் தாழியுங் குவளையுங் குளிர்ந்த செங்கழுநீரும் விரும்பிய, பூசேக்கைமேவாது கழிய - பொலிவையுடைய படுக்கையில் (பள்ளித்தாமம்போல) அடையாமல் வருந்தவும், துணைபுணர் அன்னம் தூவியில் செறித்த-தன் சேவலோடு புணர்ந்த அன்னப்பெடை (அப்புணர்ச்சியாலுருகி உதிர்த்த) வயிற்றின் மயிரைப் பெய்த, இல் உருபுமயக்கம். இணை அணை - பலவகையாகிய அணையின் (மேல்)பலவகையாவது ஐந்து மூன்றுக அடுத்தல். மேம்பட திருந்து துயில் பெருது - மேன்மைபெற (தம்கொழுநர்மார்பில்) செய்யும் இன்பத் துயிலைப்பெருமல், உடைபெருங் கொழுநர் ஊடல்காலத்து - தம்மையுடைய சிறப்பின் மிக்க கணவரோடு (புணர்ந்து முன்) ஊடியகாலத்தில், இடைகுமிழ் எறிந்து

கடைகுழைஓட்டி - இடைநின்ற குமிழையெறிந்து கடைநின்ற குண்டலத்தை முதுகுபார்த்து, கலங்காஉள்ளம் கலங்க - நிலைகெடாத (கணவர்) மனம் நிலைகெட, கடைசெவந்து - கட் கடை செவந்து, விலங்கு நிமிர் நெடுங்கண்-குறுக்கிட்டுப் பிறழு நெடியகண்கள், புலம்புமுத்து உறைப்பஉம் (முன்போல உவகை நீர்முத்தம் சிந்தாமல்) அவல நீர்முத்தம் சிந்தவும்.

உயிர்த்து ஒடுங்கி கழிந்து அடைத்து மேவாது என்னும் வினைஎச்சங்கள் ஒன்றனையொன்று கொண்டு பெறாது என்னும் எதிர்மறை வினைஎச்சத்தின் முதனிலையையும் வருந்தகழியஎன்னும் வினையெச்சங்கள் அவ்வெதிர்மறையெச்சத்தின் முதனிலையையும், எறிந்து ஒட்டி செவந்து விலங்குஎன்னும் சினைவினை யெச்சங்கள் நிமிர் என்னும் காலங்கரந்த பெயரெச்சத்தையும், அவ்வெச்சம்கண் என்னும் சினைப்பெயரையுங் கொண்டன. விலங்குஎன்னும் வினைப்பகுதி வினையெச்சப்பொருளில் வந்தது. குறுங்கண் பண்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகை.

அன்னம் மெல் நடை - அன்னமாகிய மெல்லிய நடையினையும், நாறும் ஆம்பல் - கமழும் ஆம்பலும், நாறும் தோன்றிய எனப்பொருள் கொள்ளினும் அமையும் "மரகதமணிக் கயத்தங்கணுறிய-அழனிறப் பொன்னிதழாயிரம் விரித்தென" எனக் கதையிற் கூறுதலால். தேம் பொதி நறு விரை தாமரை-தேனிறைந்த நல்ல வாசத்தையுடைய தாமரையு மாகிய, செவ்வாய் - செவந்தவாயினையும், தண் அறல் கூந்தல் - குளிர்ந்த கருமணலாகிய கூந்தலினையுமுடைய, நல் நீர் பொய்கை - நல்ல நீர் மயமாகிய பொய்கை யென்பவள், பாண்வாய் வண்டு - பாணராக வாய்ந்த வண்டுகள் * நேர் திறம் பாட - புற நீர்மையென்னும் திறத்தாற் பள்ளி யெழுச்சிபாட, புற நீர்மை பாலைப் பண்ணின் திறம் ஐந்தனுள் ஒன்று. காண் வருகுவளை கண் மலர்விழிப்ப - காட்சிக்கினிய குவளையாகிய கண் மலரை விழியா நிற்கவும், பொய்கை கண் மலர்விழிப்பஎனமுடிக்க. புள் வாய் முரசம் ஒடு - புள்ளொலியாகிய முரசுடனே, வாய் இடவாகு பெயர். பொறி மயிர் வாரணம் - புள்ளியையுடைய மயிர்களையுடைய கோழியும், அத்து வேண்டா வழிச்சாரியை. முள் வாய் சங்கம் - முள்போலுங் கூர்த்த வாயையுடைய சங்கமும், முறை முறை ஆர்ப்ப - தத் தமக்குரிய முறையினின் றொலிக்க, உரவு நீர் பரப்பின் ஊர் - கடல் போலும் பரப்பினையும் ஒலியினையு முடைய ஊரை, துயில் எடுப்பி - நித்திரையினின்றும் நீக்கி, பிரிந்தார்க்கும் புணர்ந்தார்க்குந் துயிலின்மை காமனால் வருதலால் துயிலெடுப்பி என்றார். இரவுதலை பெயரும் வைகறைகாறும் - இருள் இவ்விடத்தினின்று நீங்கும் வைகறை யாமமளவும், அரை இருள் யாமத்துஉம் - அரை யிருளினும் ஓர் யாமத்தினும், பகல்உம்-மற்றையரையாமத்தினும், பகல்

* நேர் திறம் "தக்கார் கணேர்திறங் காந்தாரம் பஞ்சமமே - துக்கங்கழி சேர் பராகமே-மிக்கதிறற்-காந்தார மென்றைந்தும் பாலைத்திற மென்றார் - பூந்தா ரகத்தியனார் போந்து"

பகுத்தல். துஞ்சான் - நித்திரை செய்யானாய், வினைமுற்றெச்சம். விரை மலர் வாளி ஒடு கரும்புவில் ஏந்தி - மணத்தையுடைய மலரம்பையும் கரும்பு வில்லையும் ஏந்தி, வெல் மகரம் கொடி மைந்தன் - வெல்லுதற்குரிய மீனக் கொடியையுடைய காமன், திரி தரும் - திரிதலால், நகரம்நனி காவல் சிறந்தது - இந்நகரம் மிகவுங் காவலாற் சிறந்திருந்தது—எ-று.

இரவுத்தலை "இளந்தவல்ல" என்னும் அதிகாரப் புறநடையால் வல்லெழுத்து மிக்கது. "தடவுத்தரை" என வருதலுங் காண்க. ஆர்ப்ப என்னும் வினையெச்சம் பெயரும் என்னும் பெயரெச்சத்தின் முதனிலையையும், எடுப்பி ஏந்தி என்னும் வினையெச்சங்கள் தனித்தனியாய் திரிதரும்என்னும் பெயரெச்சத்தின் முதனிலையையும், அப்பெயரெச்சம் காவல்என்னும் பெயரையுங் கொண்டன.

## நேரிசைவெண்பா.

கூடினார்பானிழலாய்க் கூடார்பால்வெய்யதாய்க்
காவலன்வெண்குடைபோற் காட்டிற்றே—பூவலரின்
மாதவிக்குங்கண்ணகிக்கும் வானூர்மதிவிரிந்து
போதவிழ்க்குங்கங்குற் பொழுது.

(இ-ள்.) கூடினார் பால் - தன்னை யடைந்தாரிடத்து, நிழல் ஆய் - தண்ணிதாகியும், கூடார் பால் - தன்னை யடையாரிடத்து, வெய்யது ஆய் - வெய்ய தாகியும் (நின்ற) காவலன் - கரிகாற் பெரு வளவனது, வெண்குடைபோல் - வெண்கொற்றக்குடைபோல, பூஅலர்இல் (புணர்தலால்) உலகின்கண் (அயலார் பழிக்கும்பழிச்சொல் இல்லாத) மாதவிகுஉம் - மாதவியிடத்தும், பூ அலர்இன் (பிரிதலால்) உலகின்கண் (அயலவர்பழிக்கும் பழிச்சொல்லையுடைய) கண்ணகிகுஉம் - கண்ணகியாரிடத்தும், வான் ஊர்மதிவிரிந்து - ஆகாயத்தில் தவழுஞ் சந்திரனது நிலவுவிரிந்து, போது அவிழ்க்கும் - போதுகளலரச்செய்யும், கங்குல்பொழுது-இராப்போதானது, காட்டிற்று (தண்மையையும் வெம்மையையும் அவ்விருவர்பாலும்) காட்டியது—எ-று.

போதுகிண்கிணிவாய்க்கொள்ளுமலர் - உவமைக்கும் பொருளுக்கும் ஒற்றுமை யுண்மையால் உவமையின் றொழிலைப்பொருட்குங்கொள்க. இடத்தினிகழ்பொருளின் றொழிலை இடத்தின்மேலேற்றி மதிவிரிந்து என்றார். அவிழ்க்கும் என்னும் பிறவினைப் பெயரெச்சம் கங்குற்பொழுது என்னும் காலப்பெயரோடு முடிந்தது. உம்மை தொக்குநின்ற ஆய் என்னும் வினையெச்சங்கள் தனித்தனியாய், சொல்லெச்சமாய்நின்ற நின்றஎன்னும் பெயரெச்சத்தையும், அவ்வெச்சம் வெண்குடை என்னும் வினைமுதற்பொருளையுங் கொண்டன.

---

# ௫-ஆவது இந்திரன்விழவூரெடுத்தகாதை.

இந்திரனுக்கு விழவை நகரின்கண் ணெடுத்த கதையையுடையது. எனவே;—
இந்திரன் எடுத்த நான்காம் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர், விழவு
எடுத்த இரண்டாம் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர், ஊர் எடுத்த
ஏழாம்வேற்றுமைத்தொகை நிலைத்தொடர், எடுத்தகாதை பெயரெச்சத்
தொடர்; ஆகவே ஐந்துசொல் நான்கு சந்தியாகக்கொள்க. இந்திரவி
ழவு எனவரின் உயர்திணை யீறுகெட்டு நின்றதெனக்கொள்க.

## இதுவும் அது.

அலைநீராடை மலைமுலையாகத்—தாரப்பேரியாற்று மாரிக்கூந்தல்—கண்
ணகன்பரப்பின் மண்ணகமடந்தை—புதையிருட்படாம் போகநீக்கி—உதை
யமால்வரை யுச்சிதோன்றி—உலகுவிளங்கவிரொளி மலர்கதிர்பரப்பி—வே
யாமாடமும் வியன்கலனிருக்கையும் — மான்கட்காலதர் மாளிகையிடங்களு
—கயவாய்மருங்கிற் காண்போர்த்தடுக்கும்—பயனறவறியா யவனரிருக்கை
ம்—கலந்தருதிருவிற் புலம்பெயர்மாக்கள்—கலந்திருந்துறையு மிலங்குநீர்வ
ரப்பும்— வண்ணமுஞ்சுண்ணமுந் தண்ணறுஞ்சாந்தமும் — பூவும்புகையு
மவியவிரையும்—பகர்வநர்திரிதரு நகரவீதியும்—பட்டினுமயிரினும் பருத்தி
நூலினும்—கட்டுநுண்வினைக்கா ருகரிருக்கையும்—ஆரமுமகிலுந் தூசுந்துகி
ரும்—மாசறுமுத்து மணியும்பொன்னும்—அருங்கலவெறுக்கையோ டளந்து
கடையறியா—வளந்தலைமயங்கிய நனந்தலைமறுகும்—பால்வேறுதெரிந்த ப
குதிப்பண்டமொடு—கூலங்குவித்த கூலவீதியும்—காழியர்கூவியர் கண்ணொ
டையாட்டியர்—மீன்விலைப்பரதவர் வெள்ளுப்புப்பகருநர்—பாசவர்வாசவர்
மைந்நிணவிலைஞரோ—டோசுநர்செறிந்த வூன்மலியிருக்கையும்—கஞ்சகார
ருஞ் செம்பின்செய்ஞ்ஞரும்—மரங்கொறச்சருங்கருங் கைக்கொல்லரும்—க
ண்ணுள்வினைஞரு மண்ணீட்டாளரும்—பொன்செய்புலவரு நன்கலந்தருநரு
ம்—துன்னகாரருந் தோலின்றுன்னரும்—கிழியினுங்கிடையினுந் தொழில்ப
லபெருக்கிப்—பழுதில்செய்வினைப் பால்கெழுமாக்களும்— குழலினும்யாழி
னுங் குரன்முதலேழும்—வழுவின்றிசைத்து வழித்திறங்காட்டும்—அரும்பெ
றன்மரபிற் பெரும்பாண்[illegible]கையும்—சிறுகுறுங்கைவினைப் பிறவினையாள
ரொடு—மறுவின்றிவிளங்கிய மருவூ[illegible]க்கமும்—கோவியன்வீதியுங் கொடி
த்தேர்வீதியும்—பீடிகைத்தெருவும் பெருங்குடி[illegible] — மாடமறுகுமறை
யோரிருக்கையும்—வீழ்குடியுழவரொடு விளங்கியகொ[illegible]வேதருங்
காலக்கணிதரும்—பால்வகைதெரிந்த பன்முறையிருக்கையும்—[illegible]
ற்றுநர் சிறந்தகொள்கையோ—டணிவளைபோழுநர் தம்பெருவீதியும்—சூத
மாகதர் வேதாளிகரொடு—நாழிகைக்கணக்கர் நலம்பெறுகண்ணுளர்—காவ
ற்கணிகைய ராடற்கூத்தியர்—பூவிலைமடந்தைய ரேவற்சிலதியர்—பயிறொழி
ற்குயிலுவர் பன்முறைக்கருவியர்—நகைவேழம்பரொடு வகைதெரியிருக்கை

யும்—கடும்பரிகடவுநர் களிற்றின்பாகர்—நெடுந்தேரூருநர் கடுங்கண்மறவர்—
இருந்துபுறஞ்சுற்றிய பெரும்பாயிருக்கையும்—பீடுகெழுசிறப்பிற் பெரியோ
ர்பல்கிய—பாடல்சால்சிறப்பிற் பட்டினப்பாக்கமும்—இருபெருவேந்தர் மு
னையிடம்போல—இருபாற்பகுதியி னிடைநிலமாகக்—கடைகால்யாத்தமிடை
மரச்சோலை—கொடுப்போரோதையுங் கொள்வோரோதையும்—நடுக்கின் றி
நிலை இயநாளங்காடியிற்—சித்திரைசித்திரைத் திங்கள்சேர்ந்தென—வெற்றி
வேன்மன்னற் குற்றதையொழிக்கெனத் — தேவர்கோமா னேவலிற்போந்
த—காவற்பூதத்துக் கடைகெழுபீடிகை—புழுக்கலுநோலையும் விழுக்குடை
மடையும்—பூவும்புகையும் பொங்கலுஞ்சொரிந்து — துணங்கையர்குரவைய
ரணங்கெழுந்தாடிப்—பெருநிலமன்னற் கிருநிலமடங்கலும்—பசியும்பிணியும்
பகையுநீங்கி—வசியும்வளனுஞ் சுரக்கெனவாழ்த்தி—மாதர்க்கோலத்துவலவை
யினுரைக்கு—முதிரப்பெண்டி ரோதையிற்பெயர—மருவூர்மருங்கின் மறங்
கொள்வீரரும்—பட்டினமருங்கிற் படைகெழுமாக்களும் — முந்தச்சென்று
முழுப்பலிபீடிகை—வெந்திறன்மன்னற்குற்றதையொழிக்கெனப்—பலிக்கொ
டைபுரிந்தோர் வலிக்குவரம்பாகெனக்—கல்லுமிழ்கவணினர் கழிப்பிணிக்
கறைத்தோற்—பல்வேற்பரப்பினர் மெய்யுறத்தீண்டி—ஆர்த்துக்களங்கொ
டோராரமரழுவத்துச்—சூர்த்துக்கடைசிவந்த சுடுநோக்குக்கருந்தலை—வெ
ற்றிவேந்தன் கொற்றங்கொள்கென—நற்பலிபீடிகை நலங்கொளவைத்தாங்—
குயிர்ப்பலியுண்ணு முருமுக்குரன்முழக்கத்து—மயிர்க்கண்முரசொடுவான்பலி
யூட்டி—இருநிலமருங்கிற்பொருநரைப்பெறூஉச்—செருவெங்காதலிற்றிருமா
ல்வளவன்—வாளுங்குடையு மயிர்க்கண்முரசும் — நாளொடுபெயர்த்து நண்
ணார்ப்பெறுகவிம்—மண்ணகமருங்கினென்வலிகெழுதோளெனப்—புண்ணி
யதிசைமுகம் போகியவந்நாள்—அசைவிலூக்கத்து நசைபிறக்கொழியப்—ப
கைவிலக்கியதிப் பயங்கெழுமலையென—இமையோருறையுஞ் சிமையப்பிடர்
த்தலைக்—கொடுவரியேற்றிக் கொள்கையிற்பெயர்வோற்கு—மாநீர்வேலிவச்
சிரநன்னாட்டுக்—கோனிறைகொடுத்த கொற்றப்பந்தரும் — மகதநன்னாட்டு
வாள்வயவேந்தன் — பகைப்புறத்துக்கொடுத்த பட்டிமண்டபமும்—அவந்தி
வேந்தனும் வந்தனன்கொடுத்த — நிவந்தோங்குமரபிற் றோரணவாயிலும்—
பொன்னினுமணியினும் புனைந்தனவாயினும்—[illegible]வினைக்கம்மியர் காணும
ரபின—துயர்நீங்குசிறப்பிற் றொல்லே[illegible]விக்கு—மயன்விதித்துக்கொடுத்தம
ரபினவாயினும்—ஒருங்[illegible]புணர்ந்தாங் குயர்ந்தோரேத்தும்—அரும்பெற
ன்மரபின் ம[illegible]றியும்—வம்பமாக்கடம் பெயர்பொறித்துக் — கண்
[illegible]தவெண்ணுப்பலபொதி—கடைமுகவாயிலுங் கருந்தாழ்க்கா
[illegible]ம்—உடையோர்காவலுமொரீஇயதாகிக்—கட்போருளரெனிற் கடுப்பத்த
லையேற்றிக்—கொட்பினல்லது கொடுத்தலினீயா—துள்ளுநர்பனிக்கும் வெ
ள்ளிடைமன்றமும்—கூனுங்குறளு மூமுஞ்செவிடும்—அழுகுமெய்யாளரு மு
ழுகினராடிப்—பழுதில்காட்சி நன்னிறம்பெற்று—வலஞ்செயாக்கழியு மிலஞ்

யும்—கடும்பரிகடவுநர் களிற்றின்பாகர்—நெடுந்தேரூருநர் கடுங்கண்மறவர்—
இருந்துபுறஞ்சுற்றிய பெரும்பாயிருக்கையும்—பீடுகெழுசிறப்பிற் பெரியோ
ர்பல்கிய—பாடல்சால்சிறப்பிற் பட்டினப்பாக்கமும்—இருபெருவேந்தர் மு
னையிடம்போல—இருபாற்பகுதியி னிடைநிலமாகக்—கடைகால்யாத்தமிடை
மரச்சோலை—கொடுப்போரோதையுங் கொள்வோரோதையும்—நடுக்கின்றி
நிலை இயநாளங்காடியிற்—சித்திரைசித்திரைத் திங்கள்சேர்ந்தென—வெற்றி
வேன்மன்னற் குற்றதையொழிக்கெனத் — தேவர்கோமா னேவலிற்போந்
த—காவற்பூதத்துக் கடைகெழுபீடிகை—புழுக்கலுநோலையலும் விழுக்குடை
மடையும்—பூவும்புகையும் பொங்கலுஞ்சொரிந்து — துணங்கையர்குரவைய
ரணங்கெழுந்தாடிப்—பெருநிலமன்னற் கிருநிலமடங்கலும்—பசியும்பிணியும்
பகையுநீங்கி—வசியும்வளனுஞ் சுரக்கெனவாழ்த்தி—மாதர்க்கோலத்துவலவை
யினுணைக்கு—முதிரப்பெண்டி ரோதையிற்பெயர—மருவூர்மருங்கின் மறங்
கொள்வீரரும்—பட்டினமருங்கிற் படைகெழுமாக்களும் — முந்தச்சென்று
முழுப்பலிபீடிகை—வெந்திறன்மன்னற்குற்றதையொழிக்கெனப்—பலிக்கொ
டைபுரிந்தோர் வலிக்குவரம்பாகெனக்—கல்லுமிழ்கவணினர் கழிப்பிணிக்
றைத்தோற்—பல்வேற்பரப்பினர் மெய்யுறத்தீண்டி—ஆர்த்துக்களங்கொ
டோராரமராழுவத்துச்—சூர்த்துக்கடைசெவந்த சுடுநோக்குக்கருந்தலை—வெ
றிவேந்தன் கொற்றங்கொள்கென—நற்பலிபீடிகை நலங்கொளவைத்தாங்—
குயிர்ப்பலியுண்ணு முருமுக்குரன்முழக்கத்து—மயிர்க்கண்முரசொடுவான்பலி
யூட்டி—இருநிலமருங்கிற்பொருநரைப்பெறுஉச்—செருவெங்காதலிற்றிருமா
ல்வளவன்—வாளுங்குடையு மயிர்க்கண்முரசும் — நாளொடுபெயர்த்து நண்
ணார்ப்பெறுகவிம்—மண்ணகமருங்கினென்வலிகெழுதோளெனப்—புண்ணி
யதிசைமுகம் போகியவந்நாள்—அசைவிலூக்கத்து நசைபிறக்கொழியப்—ப
கைவிளக்கியதிப் பயங்கெழுமலையென—இமையோருறையுஞ் சிமையப்பிடர்
த்தலைக்—கொடுவரியேற்றிக் கொள்கையிற்பெயர்வோற்கு—மாநீர்வேலிவச்
சிரநன்னாட்டுக்—கோனிறைகொடுத்த கொற்றப்பந்தரும் — மகதநன்னாட்டு
வாள்வயவேந்தன் — பகைப்புறத்துக்கொடுத்த பட்டிமண்டபமும்—அவந்தி
வேந்தனும் வந்தனன்கொடுத்த — நிவந்தோங்குமரபிற் றோரணவாயிலும்—
பொன்னினுமணியினும் புனைந்தனவாயினும்—[illegible]வினைக்கம்மியர் காணும
ரபின—துயர்நீங்குசிறப்பிற் றொல்லே[illegible]விக்கு—மயன்விதித்துக்கொடுத்தம
ரபினவாயினும்—ஒருங்[illegible]புணர்ந்தாங் குயர்ந்தோரேத்தும்—அரும்பெற
ன்மரபின் ம[illegible]றியும்—வம்பமாக்கடம் பெயர்பொறித்துக் — கண்
[illegible]ததவெண்ணுப்பலபொதி—கடைமுகவாயிலுங் கருந்தாழ்க்கா
[illegible]ம—உடையோர்காவலுமொரீஇயதாகிக்—கட்பொருளொனிற் கடுப்பத்த
லையேற்றிக்—கொட்பினல்லது கொடுத்தலினீயா—துள்ளுநர்பனிக்கும் வெ
ள்ளிடைமன்றமும்—கூனுங்குறளு மூமுஞ்செவிடும்—அழுகுமெய்யாளரு மு
ழுகினராடிப்—பழுதில்காட்சி நன்னிறம்பெற்று—வலஞ்செயாக்கழியு மிலஞ்

சிமன்றமும்—வஞ்சமுண்டு மயற்பகையுற்றோர்—நஞ்சமுண்டு நடுங்குதுய
ருற்றோர்—அழல்வாய்நாகத் தாரெயிறழுந்தினர்—கழல்கட்கூளிகடுநவைப்
பட்டோர்—சுழலவந்து தொழத்துயர்நீங்கும்—நிழல்காலெடுங்க னின்றம
ன்றமும்—தவமறைந்தொழுகுந் தன்மையிலாளர் — அவமறைந்தொழுகும
லவைப்பெண்டிர்—அறைபோகமைச்சர் பிறர்மனைநயப்போர்—பொய்க்கரி
யாளர்புறங்கூற்றாளரென்—கைக்கொள்பாசத்துக் கைப்படுவோரெனக்—கா
தநான்குங் கடுங்குரலெடுப்பிப்—பூதம்புடைத்துணும் பூதசதுக்கமும்—அர
சுகோல்கோடினு மறங்கூறவையத்—துலைநூல்கோடி யொருதிறம்பற்றினு
ம்—நாவொடுநவிலாது நவைநீருகுத்துப்—பாவைநின்றழூஉம் பாவைமன்ற
மும்—மெய்வகையுணர்ந்த விழுமியோரேத்தும்—ஐவகைமன்றத் தரும்பலி
யுறீஇ—வச்சிரக்கோட்டத்து மணங்கெழுமுரசம் — கச்சையானைப் பிடர்த்த
லையேற்றி—வால்வெண்களிற்றரசு வழங்கியகோட்டத்துக்—கால்கோள்வி
ழவின் கடைநிலைசாற்றித்-தங்கிய கொள்கைத்தருநிலைக் கோட்டத்து—மங்
கலநெடுங்கொடி வானுறவெடுத்து—மரகதமணியொடுவயிரங்குயிற்றிய—
பவளத்திரள்காற் பசும்பொன்வேதிகை—நெடுநிலைமாடக் கடைமுகத்தியா
ங்கணுங்—கிம்புரிப்பகுவாய்க்கிளர்முத்தொழுக்கத்து—மங்கலம்பொறித்த
மகரவாசிகைத்—தோரணநிலைஇய தோமறுபசும்பொற்—பூரண கும்பத்து
ப்பொலிந்தபாலிகை—பாவைவிளக்கிற்பசும்பொற்படாத்தைத்—தூமயிர்க்
கவரிசுந்தரச்சுண்ணத்து—மேவியகொள்கை வீதியிற்செறித்தாங்— கைம்
பெருங்குழுவுமெண்பெயராயமும்—அரசகுமாரரும் பரதகுமாரரும்—கவர்
பரிப்புரவியர்களிற்றின்றொகுதியர்—இவர்பரித்தேரின ரியைந்தொருங்கீண்
டி—அரசுமேம்படீஇயகநிலைமருங்கின்—உரைசான்மன்னன் கொற்றங்கொ
ள்கென—மாயிருஞாலத்து மன்னுயிர்காக்கும்—ஆயிரத்தோரெட்டரசுதலை
க்கொண்ட—தண்ணறுங்காவிரித்தாதுமலிபெருந்துறைப் — புண்ணியநன்
னீர்பொற்குடத்தேந்தி—மண்ணகமருளவானகம்வியப்ப— விண்ணவர்தலை
வனைவிழுநீராட்டிப்—பிறவாயாக்கைப் பெரியோன்கோயிலும்—அறுமுகச்
செவ்வேளணிதிகழ்கோயிலும்—வால்வளைமேனி வாலியோன் கோயிலும்—
நீலமேனிநெடியோன்கோயிலும் - மாலைவெண்குடைமன்னவன்கோயிலும்-
மாமுதுமுதல்வன்வாய்மையின்வழாஅ — நான்மறைமரபிற் றீமுறையொரு
பால்—நால்வகைத்தேவரு மூவாறுகணங்களும்—பால்வகைதெரிந்த பகுதி
த்தோற்றத்து—வேறுவேறுகடவுளர் சாறுசிறந்தொருபால் - அறவோர்பள்
ளியறனோம்படையும்—புறநிலைக்கோட்டத்துப்புண்ணியத்தானமுந்—துற
வோருரைக்குஞ் செயல்சிறந்தொருபால்—கொடித்தேர்வேந்தனொடு கூடா
மன்னர்—அடித்தளைநீக்கு மருள்சிறந்தொருபால்—கண்ணுளாளர் கருவிக்
குயிலுவர்—பண்ணியாழ்ப்புலவர்பாடற்பாணரோ—டெண்ணருஞ் சிறப்பி
னிசைசிறந்தொருபால்—முழவுகண்டுயி லாதுமுடுக்கரும்வீதியும்—விழவுக்
களிசிறந்தவியலுளாங்கட் - காதற்கொழுநனைப் பிரிந்தலரெய்தா — மாதர்க்
கொடுங்குழைமாதவிதன்னோ—டில்வளர்முல்லைமல்லிகைமயிலை—தாழிக்குவ

ளையொடு தண்செங்கழுநீர்—பயில்பூங்கோதை பிணையலிற் பொலிந்து—காமக்களிமகிழ் வெய்திக்காமர்—பூம்பொதிநறுவிரைப்பொழிலாட்டயர்ந்து—நாண்மகிழிருக்கை நாளங்காடிப்—பூமலிகானத்துப் புதுமணம்புக்குப்—புகையுஞ்சாந்தும் புலராதுசிறந்த—நகையாடாயத்து நன்மொழிதிளைத்துக்—குரல்வாய்ப்பாணரொடு நகரப்பரதரொடுந்—திரிதருமரபிற்கோவலன்போல—இளிவாய்வண்டினொ டின்னிளவேனிலொடு—மலையமாருதந்திரி தருமறுகிற்—கருமுகில்சுமந்து குறுமுயலொழித்தாங் — கிருகருங்கயலோ டிடைக்குமிழெழுதி—அங்கண்வானத் தரவுப்பகையஞ்சித் — திங்களீண்டுத் திரிதருங்கொல்லென—நீர்வாய்த்திங்க ணீணிலத்தமிர்தின்—சீர்வாய்த்துவலைத்திருநீர்மாந்தி—மீனேற்றுக்கொடியோன் மெய்பெறவளர்த்த—வானவல்லி வருதலுமுண்டுகொல்—இருநிலமன்னற்குப் பெருவளங்காட்டத்—திருமகள்புகுந்ததிச்செழும்பதியாமென—எரிநிறத்திலவ முல்லையன்றியும்—கருநெடுங்குவளையுங் குமிழும்பூத்தாங்—குள்வரிக்கோலத் துறுதுணைதேடிக்—கள்ளக்கமலந் திரிதலுமுண்டுகொல்—மன்னவன்செங்கோன் மறுத்தலஞ்சிப்—பல்லுயிர்பருகும் பகுவாய்க்கூற்றமும்—ஆண்மையிற்றிரிந்துதன்னருந்தொழிறிரியாது—நாணுடைக்கோலத்து நகைமுகங்கோட்டிப்—பண்மொழிநரம்பிற் றிவவியாழ்மிழற்றிப்—பெண்வயிற்றிரியும் பெற்றியுமுண்டுகொல்—உருவிலாள னொருபெருஞ்சேனை—இகலமராட்டிய ரெதிர்நின்றுவிலங்கியவர்—எழுதுவரிக்கோலமு முழுமெயுமுறீஇ—விருந்தொடுபுக்கபெருந்தோட்கணவருடன்—உறைவுமரீஇ யொழுக்கொடுபுணர்ந்த—வடமீன்கற்பின் மனையுறைமகளிர்—மாதர்வாண்முகத்துமணித்தோட்டுக்குவளைப்—போதுபுறங்கொடுத்துப் போகியசெங்கடை—விருந்திற்றீர்ந்திலதாயின்யாவதும்—மருந்துந்தருங்கொலிம் மாநிலவரைப்பெனக் — கையற்றுநடுங்குநல்வினைநடுநாள்—உள்ளகநறுந்தா தகநிறைநிறைந்து—கள்ளுகநடுங்குங்கழுநீர்போலக்—கண்ணகிகருங்கணு மாதவிசெங்கணும் — உண்ணிறைகரந்தத் தொளித்துநீருகுத்தன — எண்ணுமுறையிடத்தினும் வலத்தினுந்துடித்தன—விண்ணவர்கோமான் விழவுநாளகத்தென.

(இ-ள்.) அலை நீர் ஆடை - கடலாகிய ஆடையினையும், மலை முலை-பொதியம் இமையம் என்னும் முலை களையும், ஆகத்து பேர் யாறு ஆரம் (அம்முலைகளையுடைய) மார்பின் கண் பெரிய ஆறாகிய முத்து வடத்தையும், மாரி கூந்தல் - மேகமாகிய கூந்தலையுமுடைய, கண் அகன் பரப்பின் மண்ணகம் மடந்தை - இடமகன்ற பரப்பினையுடைய (தலைவனையிழந்த) பூதேவி, புதை இருள் படாம் போக நீக்கி - (பசந்துபனித்து) போர்த்த இருளாகியபோர்வை சுழிய (தனதுகதிராகியகரத்தால்) கழித்து, உலகு விளங்கு அவிர் ஒளி-உலகு விளங்குதற்குக் காரணமாகவிளங்குஞ் சூரியன், மால்உதையம் வரை உச்சி தோன்றி - பெரிய உதையகிரியின் முகட்டில் தோன்றி, மலர்கதிர்பாப்பி - விரித்த கிரணத்தைப் பரப்பா நிற்ப.

ஒளி சூரியன். ஒளி என்றது உலகு விளங் கவிரொளி என்றமையால் கரிகாற் பெரு வளவன் மரபுயர்ச்சிகூறிய வாறுமிற்று. மலே சாதி ஒருமை. பரப்பி வினையெச்சத் திரிபு. நீக்கி தோன்றி என்னும் வினையெச்சங்கள் ஒன்றனை யொன்று கொண்டு பரப்ப என்னும் வினையெச்சத்தின் முதனிலையோடு முடிந்தன.

வேயா மாடம்உம் வியன் கலன் இருக்கைஉம் - நிலா முற்றங்களும் வேறு பாடுகளையுடைய ஆபரணங்களை வைத்த அறைகளும், வேயா மாடம் வேய்தலில்லாத மாடம். மான் கண் காலதர் மாளிகை இடங்கள்உம்-மான் கண் போலுங் கண்களையுடைய சாளரங்களையுடைய மாட மாளிகை யிடங்களும், கால் அதர் காற்று வரும் வழி. கயவாய் மருங்கு இல்-காவிரிப்பூம் பட்டினத்தின்பக்கத்தில், புகார்கழிமுகத்துள்ளது ஆதலால் கயவாய்என்றார். காண் போர் தடுக்கும்-காண்பவர்(கண்கள் தம்மேற்செல்லாமல்)தடைசெய்யும், பயன் அறஅறியாயவனர் இருக்கைஉம்-பயன்தொலேதலறியாத மிலேச்சரிருக்கும் இடங்களும், கலம் தரு திருவில் புலம்பெயர்மாக்கள்-மரக்கலங்கள்தரும்செல்வத்தின் பொருட்டால் (தாம் பிறந்த) இடத்தினின்று பெயர்ந்த பிறதேசத்தர் பலரும்-கலந்து இருந்து உறையும் இலங்குநீர் வரைப்புஉம் - (ஒரு நிலத்தாரைப்போல) கலந்து நெருங்கி யிருக்கும் விளங்கிய கடற்கரையிருப்பும், வண்ணம்உம் சுண்ணம்உம் தண் நறு சாந்தம்உம்-தொய்யிற்குழம்பும் பூச்சுண்ணமும் குளிர்ந்த நறிய சந்தனக்கூட்டும், பூவும் புகையுமேவிய † விரையும்-விடுபூ தொடைப்பூ கட்டுப்பூ முதலிய பூவின் வகையும், அறுவகைப்புகை யுறுப்புகளும் பொருந்திய ஐவகைவாசனே யுறுப்புகளும், பகர்வனர் திரிதரும் நகர வீதிஉம்-(ஆகியவிவற்றைமாடங்களும் இருக்கைகளும் இடங்களும்நாடி)விற்பவர்கள் திரிதராநின்றநகரத்தெருவுகளும், பட்டின்உம் மயிரின்உம் பருத்திநூலின்உம்-பட்டுநூலாலும் மெல்லியமயிராலும் பருத்திநூலாலும், நுண் வினைகட்டும் காருகர் இருக்கைஉம் - நுண்ணிய தொழிலே, (ஊசியால்) பொருத்தும் சாலியர் இருக்கைகளும், ஆரம்உம் அகில்உம் துகிர்உம் துகிர்உம்-சந்தனக்கட்டையும் அகிற்கட்டையும் பட்டாடையும் பவளமும், மாசு அறு முத்துஉம் மணிஉம் பொன்உம் - குற்றமற்ற முத்துகளும் அவையொழிந்த இரத்திரங்களும் பொற் கட்டிகளும், வெறுக்கை அருங்கலம் ஒடு அளந்துகடை அறியாவளம் பொற்பணிகளோ டிவற்றை யளவுசெய் தெண்ணிக்கரை காணற்கரிய வளங்கள், தலே மயங்கிய நனந்தலே மறுகுஉம் - இடங்கள் தோறுமயங்கிக் கிடக்கின்ற நனந்தலேயையுடைய வீதிகளும், நனந்தலே நடு. பால் வேறு தெரிந்த பண்டம் பகுதி ஒடு-பகுதி வேறுபடப்பிரித்த முதிரை முதலியபண்டப் பகுதிகளோடு, கூலம் குவித்தகூல வீதிஉம் - நெல் முதலிய எண்வகைக் கூலமுங் குவித்து விற்குங்கூலக் கடைத்தெருக்களும். கூலம் எண் வகைத்து அதனைப் பதிகத்திற் காண்க. பலசரக்கு என்பாரும் உளர். பதினெண்கூலம் என்பார்கூ

† கொட்டந்துருக்கம் தகரமகிலாரம் - ஒட்டியவைந்தும் விரை.

த்த நூலார். அவைஆவன "எள்ளுக்கொள்ளுபயறுழுந்தவரை - கடலைதுவரைமொச்சையென்றுங் - குடனிவை முதிரைக்கூலத்துணவே" அவற்றோடு கூட்டிப் பதினாறுதல்காண்க.

காழியர் கூவியர் கள்நொடை யாட்டியர் - பிட்டு வாணிபரும் அப்பவாணிபரும் கள்விற்கும் வலைச்சியரும், நொடை விற்றல். நொடு பகுதி. காழியர் வண்ணாருமாம், மீன்விலைப்பரதவர் வெள் உப்புப்பகருநர் - மீன்விற்கும் பட்டினவரும் வெள்ளிய உப்புவிற்கும் உமணரும், பாசவர் வாசவர் மைந்நிண விலைஞர் ஒடு - கயிறு விற்போரும் ஐந்து வாசம் விற்போரும் ஆட்டு வாணிபரோடு, "தக்கோலம் தீம்பூ தகைசாலி லவங்கம்-கற்பூரஞ் சாதியோடைந்து." பாசவர் இலையமுதடு வோருமாம், வாசவர் பச்சிறைச்சி விற்போரும் சூட்டிறைச்சி விற்போரும் ஆம். ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கைஉம்-எண்ணெய் வாணிபரும் (ஆகிய இவர்கள்) நெருங்கிய ஊன் மிக்க இருக்கைகளும், ஓசுநர் ஆட்டுவாணிபரும் ஆம். கஞ்சகாரர்உம் செம்பு செய்ஞ்ஞர்உம் - வெண் கலக்கன்னாரும் செப்புக்கொட்டிகளும், மரம் கொல் தச்சர்உம் ‡ கருங்கை கொல்லர்உம் - மரத்தைவெட்டுந் தச்சரும் வன்றொழிலையுடைய கொல்லரும், கண்ணுள் வினைஞர்உம் மண்ணீட்டாளர்உம்-விசித்திரகாரிகளும் சுதையாற் பாவைசெய்வோரும், மண்ணீட்டாளர் குயவரும் ஆம். பொன் செய் புலவர்உம் நன் கலம் தருநர்உம் - உருக்குத்தட்டாரும் இரத்தினப் பணிசெய்வோரும், துன்னகாரர்உம் தோலின் துன்னர்உம் - சிப்பியரும் உறை காரரும், கிழியின்உம் கிடையின்உம் பல தொழில் பெருக்கி - படத்திலும் நெட்டியிலும் பலவகைப்பட்ட தொழில்களைக்காட்டி, பழுது இல் செய்வினை பால் கெழு மாக்கள்உம் - குற்றமற்ற கைத்தொழில்களால் வேறுபட்ட இயல்பினை யுடையவரும், பலவகைப்பட்ட தொழில் படத்தில் இயங்கியற் பொருள் நிலையியற் பொருள்களி னுருவங்களை யெழுதுதல், நெட்டியாற் பூங்கொத்து முதலியன செய்தல். குழலின்உம் யாழின்உம்-மூவகைத் துளைக்கருவி யாலும் நால்வகை நரப்புக் கருவியாலும், குரல் முதல் எழ்உம் வழிதிறம் வழுவு இன்று இசைத்து காட்டும் - குரல் முதலாகிய எழிசையினையும் (அவற்றின்) வழிநின்ற (பண்களுக்கு இன்றி அமையாத) மூவேழு திறத்தையும் குற்ற மில்லாம லிசைத்துக்காட்ட வல்ல, அரும் பெறல் மரபின் பெரும்பாண் இருக்கைஉம் - பெறுதற்கரிய இசை மரபையறிந்த குழலர் பாணராகிய பெரிய இசை காரர் இருக்கும் இடங்களும், சிறுகை குறுவினை பிறவினையாளர் ஒடு - ஒழுக்கத்திற் சிறியராய்ச் சிறுதொழிலைப் பிறர்க்குச் செய்ததனால் வரும் பொருளை (உண்ணும்) கை வினையாளரோடு, கை ஒழுக்கம். மறுவு இன்றி விளங்கிய மருவூர்ப் பாக்கம்உம் - (யவனர் முதல் பெரும்பாணிரு யுள்ளாரோடு குற்ற மில்லாமல் விளங்கிய மருவூர்ப்பாக்கமும்;

‡ கொன்றுவாழ் தொழிலினும் வன் பணித்தொழிலினுங் கன்றிய தொழின்மை கருங்கை யெனப்படும்.

கோ வியன் வீதிஉம் கொடிதேர் வீதிஉம் - அரசர்களுடைய பெரிய தெருக்களும் கொடி கட்டிய தேரோடும் விழா வீதியும், கோவியன் வீதி செண்டுவெளி என்பாரும் உளர். பீடிகை தெருவுஉம்- கடைத்தெருவும், பெருங்குடி வணிகர் மாடம் மறுகுஉம் - பெரிய குடிப்பிறப்பினையுடைய வணிகரது மாடங்கள் (நெருங்கிய) வீதியும், மறையோர் இருக்கைஉம் - அந்தணர்களிருக்கும் இடங்களும், வீழ் குடி - (பலரும்) விரும்புங் குடிகளும், உழவர் ஒடு - உழவர்களோடு, ஆயுள் வேதர்உம் கால கணிதர்உம் - மருத்துவ நூலோரும் சோதிட நூலோரும், பால் வகை தெரிந்த பல் முறை இருக்கைஉம் - வேறு வேறுவகை படத்தெரிந்த பல முறைகளோடிருக்கும் இருப்பிடங்களும், வீழ்குடி காணியாளர். திருமணி குயிற்று நர் - அழகியமுத்துக் கோப்பவரும், சிறந்த கொள்கை ஒடு அணி வளை போழுநர் - தமக்குரிய சிறந்த கொள்கையால் அழகிய சங்கினை யறுப்பவரும், தம் பெரு வீதிஉம் - (ஆகிய) இவர்களது பெரிய தெருவும், சூதர் மாகதர் வே தாளிகர் ஒடு - நின் றேத்துவாரும்இருந் தேத்துவாரும் வைதாளி யாடுவோரும் (ஆகிய) இவர்களோடு, நாழிகைக்கணக்கர் (அரசர்க்கு) சென்ற நாழிகை கவிசொல்லுவோரும், நாழிகை வட்டிலிடுவாரும் ஆம். "சூதரோத்தமாகதர் நுவல - வேதாளிகரொடு நாழிகையிசைப்ப" என்றார்பிறரும. * நலம்பெறுகண்ணுளர் - நன்மைபொருந்திய சாந்திக்கூத்தரும், மதங்கர் என்பாரும் உளர். காவல்கணிகையர் - களக்கூத்திகளும், ஆடல் கூத்தியர் - அகக்கூத்தாடும் பதியிலாரும், பூவிலைமடந்தையர்-அற்றைப் பரிசங்கொள்வாரும், எவல்சிலதியர் - மடைப்பள்ளிவேலைசெய்யும்பெண்களும், அடியாரும் ஆம். பயில் தொழில் குயிலுவர் - தோற்கருவித் தொழில்பயின் றிசைப்போரும், பல்முறைகருவியர்-பலவகைப்பட்ட யாழ்முதலிய நரம்புக் கருவியுடையவர்களும், படைக்கும் உற்சவத்துக்குங் கொட்டுவோர் எனினும் அமையும். நகைவேழம்பர் ஒடு வகைதெரி இருக்கைஉம் - சிரிக்கும் பரியாசகரோடு (சூதர்முதல் வேழம்பரிறுதியாக) பகுதி தெரிந்த இருப்பிடங்களும், கடும்பரி கடவுநர் களிற்றின்பாகர் - கடிய வேகத்தையுடைய குதிரைகளை நடத்துவோராகிய அச்சுவவாதியரும் யானைப்பாகரும், கடு, கடி என்னும் உரிச்சொல்லின் றிரிபு. நெடுந்தேர் ஊருநர் கடுங்கண்மறவர் - நெடியதேரையூரும்பாகரும் கோபம் பொருந்திய கண்களையுடைய காலாட்படைத்தலைவரும், புறம் இருந்து சுற்றிய பெரும்பாய் இருக்கைஉம் (அரசன் கோயிலின்) புறத்திருந்து சூழ்ந்த பெரிய பரவிய இருப்பிடங்களும், பீடுகெழு சிறப்பின் பெரியோர் பல்கிய (கோவியன் வீதிமுதலாக இருக்கை யிறுதியாகிய இருப்பிடங்களையுடைய) பெருமை யமைந்த சிறப்பினையுடைய பெரியோர் திர

---

* "வாசிகைவைத்து மனவோடணியணிந்து, பூசியசுண்ணமுகத்தெழுதித் - தேசுடனே, ஏந்துசுடர்வாள்பிடித்திட் டீசனுக்குங்காளிக்கும், சாந்திக் கூத்தாடத்தகும்"

ண்ட, பாடல்சால் சிறப்பின் பட்டினம் பாக்கம்உம் - பாடலில் நிறைந்த சிறப்பினையுடைய பட்டினப்பாக்கமும்;

பெரு இருவேந்தர் முனையிடம்போல - பெரிய இரண்டு வேந்தர்கள் போர்குறித்துவந்த பாசறையிருப்புக்கு இடைப்பட்ட நிலம் போர்க்களம் ஆனாற்போல,இருபால் பகுதி இன் இடைநிலம் ஆக(முற்கூறிய மருவூர்ப்பாக்கமும் பட்டினப்பாக்கமும் என) இரண்டு கூறுபட்ட ஊர்க்கு நடுநிலம் ஆகி, ஆக வினையெச்சத்திரிபு. கொடுப்போர் ஓதைஉம் கொள்வோர் ஓதைஉம் - கொடுப்பவர் ஆரவாரமும் வாங்குவோர் ஆரவாரமும், நடுக்கு இன்றி நிலை இய - இடையறுதல் நிலைபெற்ற, மிடை சோலை கடைமரம் கால் - (நிரைபட) நெருங்கிய சோலையின்கண்ணுள்ள மரங்களே கால்களாக, கடைகால் யாத்த மிடைமரம் சோலைஎன்பதற்கு தூரால் இடப்பரப்பைத் தம்முட்படுத்திய நெருங்கிய மரங்களேயுடைய சோலை சூழ்ந்தஎனினும் அமையும். யாத்த நாள் அங்காடிஇல்-கட்டப்பட்ட பல அங்காடியுங் கூடிய கடைத்தெருவில் (உள்ள) நாள்என்னும் பண்புப் பெயர்ச்சொல் பன்மைமேல் நின்றது. வெற்றிவேல் மன்னற்கு - வெற்றிபொருந்திய வேலையேந்திய முசுகுந்தச் சக்கரவர்த்திக்கு, உற்றதை ஒழிக்கஎன-வரும் இடையூற்றைத் தவிர்க்கக்கடவாயென்று, தேவர் கோமான் ஏவலில் - தேவேந்திரன் ஏவுதலால், போந்த (தேவருலகினின்றும்) வந்த, காவல் பூதத்து கடைகெழுபீடிகை (அவ்வரசன்) மெய்காக்கும் பூதத்தினது இடமகன்ற பலிபீடிகையின்கண்;

முன்னொருகாலத்தில் தேவேந்திரன் தன்னகரத்துள்ள அமிர்தங் கவர்தற்பொருட்டுத் தன்மேற் போர்குறித்துவந்த அசுரரோடு போர்செய்ய ஆற்றுனாய் மண்ணுலகத்துள்ள முசுகுந்தச்சக்கரவர்த்தியைத் தன்னாட்டிலிருத்தியோர் பூதத்தை யவனுக்குக் காவலாக்கி யுடைந்துபோக, அச்சக்கரவர்த்தியோடும் விடாது அசுரர்கள் போர்செய்து தமது வலிகுன்றி இவனை வஞ்சத்தாலல்லது போரில் வெல்லுதல் அரிதென்று கருதிக்காமாஸ்திரம் தொடுத்தார்கள்; அதனாற் சக்கரவர்த்தி கண்ணு மனமும் இருண்டு வசமற்று நிற்றலைப் பூதங்கண்டு ஓர் மந்திரத்தை யுபதேசிக்க, அதனால் தெளிந்து அசுரர்கள் உடைந்தோடவென்று சக்கரவர்த்தி நிற்றலைத் தேவேந்திரன் வந்துபார்த்து இவ்வசுரரை யெவ்வாறு வென்றாயென வினவ, இப்பூதத்தால் வென்றேனெனச் சக்கரவர்த்தி கூறக் கேட்டுக் களிகூர்ந்து அப்பூதத்தைநோக்கி இவ்வரசனுக்கு நிலவுலகிற்சென்று துணையாகெனவேவ அப்பூதம்வந்தது என்பது வரலாறு. முசுகுந்தன் கரிகாற் பெருவளவன் மரபிலுள்ளோன்.

"முன்னாளிந்திரன் - காவலழித்துச் சேவல்கொண்டெழுந்த - வேட்கையமுத மீட்கவெழுவோர் - இந்நகர்காப்போ ரியாரெனநினைதலும்-தார்கெழு மார்பதாங்கலடனென - உவந்தனன் கேட்டுப் புகழ்ந்த விப்பூதம் - நின்வழியாகென நிறீஇப்பெயர்வுழிக் - கடுவிசை யவுணர் கணங்கொண்டீண்டிப் -

பொருதுபோர் தொலைந்தன ராகிப்பெரிதழிந் - தாழ்ந்தநெஞ்சிற் சூழ்ந்தனர் நினைத்த - வஞ்சமன்றிது வஞ்சத்தல்லது - வேறலரிதெனத் தேறினர்தேறி- வளைத்துத்தொடுத்த வல்வாயம்பின் - அயின்முகங்காண்ட்வாரிருள்வெயிலோன் - இருகணும்புதையப் பாய்தலினொருகணும் - நெஞ்சங்காணநிற்பநின்ற - வஞ்சம்பெயர்த்த மாப்பெரும்பூதம்” என்பதனாலும் உணர்க.

சித்திரைதிங்கள் சித்திரைசேர்ந்தென - சித்திரைமாதத்தில் பௌரணையில் சித்திரைநட்சத்திரம்வர (அந்நாளில்) சேர்ந்தென வினையெச்சத்திரிபு. வலவையின் உரைக்கும் - நாணிலிகளைப்போல (வாய்சோர்ந்து) பேசும், மாதர் கோலத்து (கண்டோர்) விரும்புங் கோலத்தையுடைய, முதிரப்பெண்டிர் - மறக்குடிப்பெண்கள், படுழுக்கல்உம் - அவரைதுவரை முதலியபண்டமும், நொலையல்உம் - அப்பவர்க்கமும், விழுக்கு உடைமடைஉம்-நிணத்தையுடைய சோறும், பூ உம் புகை உம் - மலரும் நறும்புகையும், பொங்கல்உம்- கள்ளும், பொங்கல் எனினும் அமையும். சொரிந்து - பெய்து, * துணங்கையர் குரவையர் - துணங்கையரும் குரவையரும், அணங்கு எழுந்து ஆடி-தேவரோறியாடி, பெருநிலம் மன்னற்கு - இடமகன்ற வுலகினையாளும் கரிகாற்பெருவளவனுக்கு, இருநிலம் அடங்கல்உம் - பெரிய நில வுலகமுழுதும், பசி உம் பிணி உம் பகை உம் நீங்கி - பசியும் நோயும் உட்பகையும் நீங்கி, வசி உம் வளன் உம் சுரக்க என வாழ்த்தி - மழையும் வளங்களும் பெருகுக என வாழ்த்தி, வசி வசியம் எனினும் அமையும். ஓதையின் பெயர - கொக்கரிப்போடே பெயராநிற்க.

ஏழாம்வேற்றுமை யுருபின் பயனிலையாய் நின்ற் சொரிந்து எறி ஆடி என்னும் வினையெச்சங்கள் தனித்தனியாய் பெயர என்னும் வினையெச்சத்தின் முதனிலைகொண்டன. முதிரப் பெண்டிர் அரசன் கோயில் அகப்பரி சாரராகிய பெண்கள்.

முந்தசென்று (முற்காலத்தில் முசுகுந்தன் இருவகைப் பாக்கத்தாரும், தம்முள்) முந்த நெருங்கிப்போய், முழுபலிபீடிகை - தம்மைத்தாமே யிடும்பலியை (உண்ணும்) பீடிகையில், வெம்திறல் மன்னன்கு உற்றதை ஒழிக்கஎன - வெய்ய வலியையுடைய அவ்வரசனுக்கு உற்ற இடையூற்றை யொழிக்கக்கடவாயென (பூதத்திற்குக்) கூறி, பலிகொடை புரிந்தோர் - பலிகொடுத்தோர், வலிக்கு வரம்பு ஆக என (அப்பலிக்கும்) வலிக்கும் வரம்பாகக்கடவாயெனக் கூறி, மருவூர் மருங்கின் மறம் கொள்வீரர் உம் (இக்காலத்தில்) மருவூரின் கண்ணுள்ள வெற்றிகொண்ட வீரரும், பட்டினம் மருங்கின் படைகெழுமாக்கள்உம - பட்டினத்தின் கண்ணுள்ள ஆயுதப்பரப்பையேந்திய மறவரும், கல் உமிழ் கவணினர் - கல்லை வீசுங் கவணினராய், கழி பிணி கறை தோல்-மிக

---

* துணங்கை “முடக்கியிருகை பழுப்புடையொற்றித்-தொடக்கிய நடையது துணங்கையாகும்” குரவை கைகோத்தாடுங்கூத்து.

வும் பிணித்தகரிய கேடகத்தோடு, பல் வேல் பரப்பினர் - பலவகைப்பட்ட வேலேந்திய பரப்பினராய், ஆர் அமர் அழுவத்து - அரிய போர்க்களப் பரப்பில், மெய் உறதீண்டி-தமது உடலை மிகவும் அருவருத்து, ஆர்த்துகளம்கொண்டோர் - ஆரவாரஞ்செய்து அப்போர்க்களத்தைக் கொண்டவீரர், சூர்த்து (உலகினரை) அச்சுறுத்து, கடைசெவந்த சுடு நோக்கு - கடையிற் செவந்த சுடுதேலைப்போலுங் கண்களைஉடைய, கருந்தலை (சிகையால்) கரிய தமது தலை, வெற்றிவேந்தன் கொற்றம் கொள்க என- வெற்றியையுடைய கரிகாற் பெருவளவன் விசயம்பெறக் கடவானென்று பேசும்படி, நல் பலி பீடிகை * நலம்கொளவைத்து - நல்ல பலிபீடத்தில் நன்மைபெற (அரிந்து அத்தலையை) வைத்து, ஆங்கு உயிர்பலிஉண்ணும் (வைத்த) அப்பொழுதே (அறுபட்ட குறையுடல்கள் தமக்கு வாயின்மையால்) உயிர்ப்பலி கொடுத்தோம் உண்மின் (என்று) ¶ உருமுகுரல் முழக்கத்து - இடிக்குரல்போலு முழக்கத்தையுடைய, மயிர்கண் முரசு ஒடு - மயிர் சீவாத உரியாற் போர்த்த முரசத்தாற் கூட, † வான்பலி ஊட்டி - பெரிய அவிப்பலியை ஊட்டி;

"அடிக்கழுத்தின் சிரத்தையவ ரரிவராலோ அரிந்தசிரமணங்குக்குக் கொடுப்பராலோ-கொடுத்த சிரங் கொற்றவையைத் துதிக்குமாலோ-குறையுட்லங் கும்பிட்டு நிற்கு மாலோ"

ஒடு உருபு கருவிப்பொருட்டு. கவணினர் வேற்பரப்பினர் என்னும் குறிப்புவினை முற்றெச்சங்களும் தீண்டி ஆர்த்து என்னுந் தெரிநிலை வினையெச்சங்களும் தனித்தனியாகக் கொண்டோர் என்னும் வினைமுற்றுப்பெயரின் முதனிலையைக் கொண்டன. என வைத்து ஊட்ட என்னும் எச்சங்கள் ஒன்றனை யொன்று கொண்டன. ஊட்டி வினையெச்சத்திரிபு.

இரு நிலம் மருங்கில் பொரு நரை பெறு திருமால் வளவன் - தமிழ்நாட்டெல்லையுள் இரண்டு நிலத்தின் கண்ணும் (தன்னொடு) போர் செய்யும் அரச

---

* நலங்கொளவைத்தல் "மோடிமுன்றலையை வைப்பரே முடிகுலைந்த குஞ்சியை முடிப்பரே - ஆடிநின்று குருதிப் புதுத்திலகமம் முகத்தினிடைவைப்பரே" என்பதனாலும் அறிக.

¶ "புனைமருப்பழுந்தக்குத்திப் புலியொடு பொருதுவென்ற, கனைகுரலுருமுச்சீற்றக் கதழ்விடையுரிவைபோர்த்த, துனைகுரன்முரசத்தானைத் தோன்றலைத்தம்மினென்றான், நனைமலரலங்கற்கண்ணி நந்தனுந்தொழுதுசேர்ந்தான்" சீவக சிந்தாமணி. "கொல்லேற்றுப் பசுந்தோல் சீவாது போர்த்த மயிர்க்கண் முரசமோ வல்லிரங்க" என்றார் பிறரும்.

† ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பா மாலை வாகைப்படலம்-அவிப்பலி "வெள் வாளமருட் செஞ்சோறல்ல - துள்ளாமைந்த ருயிர்ப்பலிகொடுத்தன்று" சிறந்த திதுவெனச் செஞ்சோறு வாய்ப்ப - மறந்தருவாளம றொன்னும் - பிறங்கழலுள். ஆருயிரொன்னு மவிவேட்டா ராங்கஃதால், வீரிய செய்தற்பால வீடு.

லைப் பெறாத திருவிரும்பும் கரிகாற் பெருவளவன், திருமால் போன்ற வளவன் எனினும் அமையும். இரு நிலம் மேற்கும் தெற்கும். பொருநர் சேரபாண்டியர்கள். செருவெம் காதலின் - போரில் மிக்க ஆசையையுடையவன் ஆதலால், (வடதிசை சென்றால் போர்பெறலாம் எனக்கருதி) * வாள்உம் 0 குடைஉம் மயிர்க்கண் முரசுஉம் நாள் ஒடு பெயர்த்து (இவற்றை) நல்ல நாளிற் பெயர்த்து, மண்ணகம் மருங்கின் - இந்நில வெல்லையில், வலிகெழு என்தோள் - வலி மிக்க எனது தோள், நண்ணார் பெறுக என - பகையரசரைப் பெறக்கடவதென்று (தான் வழிபடு கடவுளை மனத்தால்) வணங்கி, புண்ணியதிசை முகம் போகிய அந்நாள் - வடதிசையின்கண் சென்ற வந்நாளில், புண்ணியதிசை வடதிசை. முகம் இடம். அசைவு இல் ஊக்கத்து நசை பிறக்கு ஒழிய - மடிதலில்லாத மனவெழுச்சியால் (செல்லமுயலும்) விருப்பம் வேறாக வொழிய, இ பயம் கெழுமலை - இந்தப்பயன் மிக்க இமயமலை, பகை விளக்கியது என - (குறுக்கிட்டு) பகையை விளக்கியதென்று முனிந்து, இமையவர் உறையும் † சிமையம் பிடர்தலை - தேவர்கள் வசிக்கும் அவ்விமைய மலையின் பிடரியின்கண், கொடுவரி எற்றி கொள்கையின் பெயர்வோன்கு - தன் புலிக்கொடியை நாட்டி (தான் விரும்பியது பெறாத) கொள்கையோடு மீளுங் கரிகாற் பெருவளவனுக்கு;

ஒடு உருபுமயக்கம். பெயர்த்து என என்னும் எச்சங்கள் தனித்தனியாய்ப் போகிய என்னும் பெயரெச்சத்தின் முதனிலையையும், அப்பெயரெச்சம் நாள் என்னும் காலப்பொருளையும் கொண்டன. என என்னும் எச்சம் எற்றி என்னும் எச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் பெயர் வோன்என்னும் வினைமுற்றுப் பெயரின் முதனிலையையுங் கொண்டன.

மா நீர் வேலிகல் வச்சிரம்நாடு கோன் - கடலை யரணாகவுடைய நல்ல வச்

---

* ஐயனாரிதனார் புறப்பொருள் வெண்பாமாலை வஞ்சிப்படலம். வாணிலை "செற்றார் மேற்செல வயர்ந்து, கொற்றவாணாட் கொண்டன்று" அறிந்தவராய்ந்த நாளாழித்தேர் மன்னன் - எறிந்தில கொள்வாளியக்க - மறிந்திகலிப் - பின்பகலே யன்றியும் பேணார்கணாட்டுள்ளே. நன்பகலுங் கூகை நகும்.

0 குடைநிலை "பெய்தா மஞ்சுரும்பிரைப் பப்பெரும்புலவர்புகழ்பாடக், கொய்தார் மன்னவன் குடைநாட்கொண்டன்று" "முனனர்முரசிரங்க மூரிக் கடற்றானை, துன்னருந்துப்பிற்றெழுதெழா, மன்னர், உடைநாளுலந்தன வாலோத நீர்வேலி, குடைநாளிறைவன் கொள" முரசு நாட்கோடல் வந்த விடத்திற் காண்க.

† "கச்சிவளக்கச்சிக் காமக்கோட்டங்காவன்-மெச்சியினிதிருக்கு மெய்ச்சாத்தன்-கைச்செண்டு-கம்பக்களிற்றுக் கரிகாற்பெருவளவன்-செம்பொற்கிரிதிரித்த செண்டு" இமையமலை ஒரு காலத்தில் உன்னைக்கண்டு தாழாது இறுமாக்கும், அப்பொழுது இச்செண்டாற் புடைத்து இறுமாப்பை யொழிப்பாயென்று கச்சிக்காவல் பூண்ட சாத்தனார் ஒரு செண்டாயுதம் கரிகாற்பெருவளவனுக்குக் கொடுத்தார் என்பது வரலாறு. அது இச்செய்யுள் ஆல்உணர்க.

சிர நாட்டரசன், இறை கொடுத்த - திறையாகத் (தனக்குக்) கொடுத்த, கொற்றம் பந்தர்உம்-(அவனுக்கு) வெற்றியால் வந்த முத்தின் பந்தலும், இவன் உதாசினன், பகைநட்பு இரண்டிலுஞ் சேராதிருப்பவன். வாள் வாய் நல் மகதம் நாடு வேந்தன் - வாட்போர் வாய்ந்த நல்ல மகதநாட்டரசன், பகைபுறத்து கொடுத்த பட்டி மண்டபம்உம் - பகையிடத்து (பொருது) கொடுத்தவித்தியா மண்டபமும், ஓலக்க மண்டபம் எனினும் அமையும். அவந்தி வேந்தன்உம் வந்தனன் கொடுத்த - உஞ்சை நாட்டரசன் (நட்பினனாய்) வந்து கொடுத்த, நிவந்து ஓங்கு மரபின் தோரண வாயில்உம் - உயர்ந்து நீண்ட தொழின் மரபையுடைய தோரண வாயில்களும், பொன்னின்உம் மணியின்உம் புனைந்தன ஆயின்உம் - (இவைகள்) பொன்னினாலும் இரத்திநங்களாலுஞ் செய்யப்பட்டன வானாலும், நுண்வினை கம்மியர் காணாமரபின - நுண்ணிய தொழிலில் வல்ல கம்மியராற் செய்யப்படாத மரபின, ஆயின் - ஆனால் (இவை யாராற் செய்யப்பட்டன வென்னில்) துயர் நீங்கு சிறப்பின் - (அக்காலத்துக் கொடுத்த அம் மூவருடைய) பிறர் தடுத்தலில்லாத வெற்றிச் சிறப்பினையுடைய, தொல்லோர்-(அவர்கள்) முதியோர், (ஓர் காலத்து ஓரிடத்துச்செய்த) உதவிக்கு மயன் விதித்து கொடுத்த மரபின - உதவிக்கு (கைம்மாறாக) தெய்வத்தச்சன் நிருமித்துக்கொடுத்த மரபினவாய், ஆங்கு உயர்ந்தோர் ஒருங்கு உடன்புணர்ந்து-அவ்விடத்து உயர்ந்தோர் ஒரு சேரக்கூடி, எத்தும் அரும் பெறல் மரபின் மண்டபம் - துதிக்கும் பெறுதற்கரிய மரபினையுடைய மண்டபமுதலிய மூன்றுக்கும், உம்மை அசை நிலை - அன்றிஉம் (இவை) அல்லாமலும், தம் பெயர் பொறித்து - உடையோர் பெயரெழுதப்பட்டு, எண் எழுத்து கண்படுத்த - அளவும் நிறையும் எண்ணும் ஆகிய இலக்கங்களைத் தம்மிடத்து இட்டப்பட்ட, பல பொதி - பல பொதிகள், (உடையதாகி) முகம் கடைவாயில்உம்-தனதிட்த்துக் கடைவாயிலினின்றும், கருந்தாழ் காவல்உம்-கரிய இருப்புத்தாழாகிய காவலினின்றும், உடையோர் காவல்உம் (அப்பொருள்களை) உடையவர் காத்திருக்குங் காவலினின்றும், ஓரீஇயது ஆகி - நீங்கினதாகி, வம்பமாக்கள் கள் பொருளர் எனின் - (இந்நகர்க்கு) புதியோர் (அதனியல்பு அறியாது) திருடுந்தன்மைய ராயின், தலை கடுப்ப எற்றி-(அவர்கள்) தலைகள் கடுப்ப வைத்து, கொட்பின் அல்லது - ஊரைச்சூழ் விப்பினல்லாமல், கொடுத்தல் ஈயாது-(அவர்கட்கு) கொடாமல், உள்ளுநர் பனிக்கும் - (மனத்தால் களவுசெய்ய) நினைப்பவரையும் நடுக்கு விக்கும், வெள் இடை மன்றம்உம் - வெளியிடத்தையுடைய பண்ட சாலையாகிய அம்பலமும்;

கடுப்ப கடி என்னும் உரிச்சொல் ஈறு திரிந்து நின்ற கடு பகுதி. கொட்பின் பண்படியாகப்பிறந்த வினையெச்சம். கொடுமை என்னும் பண்பு ஈறுகெட்டு நின்ற கொடுபகுதி, ஈறுகெடுதல் சந்தி, ப், விரித்தல் விகாரம், இன் எச்ச விகுதி. கருமை இரும்பினைக் குறிப்பால் உணர்த்திற்று. ஆகி எற்றி ஈயாது என்னும் வினையெச்சங்கள் பனிக்கும் என்னும் பிறவினைப் பெயரொச்சத்தின்

முதனிலையைத் தனித்தனியாயும் அப்பெயரெச்சம் மன்றம் என்னும் வினைமுதற் பொருளையுங்கொண்டு முடிந்தன. இதனால் அவ்வூரில் வாழ்வார் பெருஞ்செல்வ ராதலால் களவு செய்யார் என்பது தோன்ற நிற்றலால் குறிப்பெச்சம். பனிக்கு மன்றம் என இடத்தினிகழ் பொருளின் றொழில் இடத்தின்மேல் நின்றது.

கூன்உம் குறள்உம் ஊம்உம் செவிடுஉம் அழுகு மெய்யாளர்உம் - கூனருங்குறளரும் ஊமரும் செவிடரும் தொழு நோயாலழுகிய உடம் பையுடையவரும், முழுகினர் ஆடி - (புகுந்து) முழுகி நீராடி, பழுதுஇல் காட்சி நல் நிறம் பெற்று - குற்றமற்ற தோற்றத்தையுடைய நல்ல பொலிவைப் பெறுகையால், வலம் செய்யாகழியும் - வலஞ்செய்து தொழுது நீங்கும், இலஞ்சி மன்றம்உம் - பொய்கையையுடைய மன்றமும்.

கூன் ஊம் செவிடு சினையாகு பெயர்கள். குறள் பண்பாகுபெயர். முழுகினர் முற்றெச்சம். முழுகி ஆடி பெற்று வலஞ்செய்யா என்னும் வினையெச்சங்கள் தனித்தனியாய்க்கழியும் என்னும் பெயரெச்சத்தையும் அப்பெயரெச்சம் இலஞ்சி என்னுங் கருவிப்பொருளையுங் கொண்டன. இலஞ்சி பொய்கை.

வஞ்சம் உண்டு மயல் பகை உற்றோர் - வஞ்சனையால் (பிறர் மருந்தூட்ட) உண்டு பித்தேறினோரும், நஞ்சம் உண்டு நடுங்கு துயர் உற்றோர் - நஞ்சினையுண்டு நடுங்கத் துன்பமுற்றவரும், நாகத்து அழல் வாய் ஆர் எயிறு அழுந்தினர் - பாம்பினது அழலும் விடம் பொருந்திய கூரிய பற்கள் மூந்தக்கடி யுண்டவருங், கழல் கண் கூளி கடுநவைப்பட்டோர் - பிதுங்கின கண்களையுடைய பூதஞ் செய்த அச்சத்தைத் தருங்குற்றத்தி லகப்பட்டவரும், (ஆகிய இவர்கள்) சுழல வந்து தொழ துயர் நீங்கும் - (ஒருகால்) சூழவந்து துதிக்கத் துன்பத்தினின்று நீங்குதற்குக் காரணமாகிய, நிழல் கால் நெடுங்கல் நின்ற மன்றம் உம் - ஒளியைக் கக்காநிற்கும் நெடியகல் நிலைபெற்ற மன்றமும்.

மயல்பகை மயலாகியபகை. கழல் கண் கழற் காய் போலுங் கண் எனினும் அமையும். நிகழ் பொருளின் றொழிலை இடத்தின் மேலேற்றிக் கல்நின்ற மன்றம்என்றார். நீங்கும் என்னும் பெயரெச்சம் கல் என்னுங் கருவிப் பொருள் கொண்டது.

தவம் மறைந்து ஒழுகும் தன்மையிலாளர் (தம்மைப்பிறர் நம்புதற்கு) தவவேடத்தில் மறைந்துநின்று (தவவேடத்திற் கிழுக்கானவற்றின் கண்) ஒழுகும் பொய்வேடத்தாரும், அவம்மறைந்து ஒழுகும் அலவைப்பெண்டிர் உம் - (தம்மைத்தங்கணவர் நம்புதற்கு) பொய்யொழுக்கத்தில் மறைந்துநின்று வசிகரிப்பின் ஒழுகும் தீத்தொழிலையுடைய பெண்களும், அறைபோகு அமைச்சர் (தம்மைத்தெளிந்த அரசனை) கீழறுத்துச் செல்லும் மந்திரிகளும், பிறர்மனை நயப்போர் (தமது மனைவியர் தனிப்ப) பிறர்மனைவியரை விரும்புங் கொடியரும், பொய்கரியாளர் - பொய்ச்சாட்சிகூற மன்றத்தேறுவாரும்,

புறங்கூற்றாளர் - முன்னர்ப்புகழ்ந்து பின்னர்ப்பழி தூற்றுவாருமாகிய இவர்கள், என்கைக்கொள் பாசத்துக் கைபடுவோரென - எனது கையிற்கொண்ட பாசத்தினிடத்து அகப்படுவாரென்று, காதம் நான்கும் கடுங்குரல் எடுப்பி (அவ்வூர்) நாற்காதவெல்லையளவும் (கேட்கும்படி) தனது கடிய குரலாலுணர்த்தி பூதம்புடைத்து உண்ணும் பூதசதுக்கம்உம் (அவ்வழியினில்லாரை) பூதம்ஆனது பாசத்தாற் கட்டியடித்து உயிர்ப்பலியுண்ணும் அப்பூதம் நிற்கும் நாற்சந்திகூடுந் தெருவும்;

குரல் எடுப்பி துயிலெடுப்பி என்றாற்போல நின்றது. எடுப்பி புடைத்து என்னும் எச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு உண்ணும் என்னும் பெயரெச்சத்தின் முதனிலையையும் அப்பெயரெச்சம் பூதம் என்னும் வினைமுதற்பொருளையுங் கொண்டன. கை இடம் - காதநான்கும் என்பதன் உம்மை முற்றுப்பொருட்டாதலால் அவ்வூர் நான்குகாத எல்லையையுடையது என்பது பொருள்.

அரசுகோல் கோடின்உம் - அரசனது செங்கோல் சிறிது வழுவினும், உரைநூல் அறம் கூறு அவையத்து - உரைக்கும் (மனுநூல்முறையால்) தருமத்தை யெடுத்துக்கூறு நியாயதலத்தில், கோடி ஒருதிறம் பற்றின்உம் - (பகைவர் அயலினர் நட்பினர் என்னு முத்திறத்தார்க்கும் ஒப்பக் கூறுதலாகிய நடுநிலைமையினின்று) வழுவியொருபாற் கோடினும், நவை நா ஒடு நவிலாது - அக்குற்றங்களை நாவாற் கூறாது, நீர் உகுத்து அழும்பாவை நின்று - நீரைச் சிந்திக்கண்ணாற் கூறும்பாவை நிற்றலால், பாவை மன்றம்உம் - (அப்பெயர்பெற்ற) பாவைமன்றமும்;

உகுத்தழுதல் என்னுந் தொழில் நிகழ்தற்கு இடம் கண்ணாதலால் அத்தொழில் நிகழ்ச்சி கண்ணின்மேலும், நாவொடு கூறாது என்றமையால் உகுத்து அழுதல் என்னும் பிறிது தொழில் கூறுதன் மேலும் நின்றன. கூறாது என்னும் முதல் வினையெச்சம் உகுத்து என்னும் சினை வினையெச்சத்தையும் அவ்வெச்சம் அழும் என்னும் சினைவினைப் பெயரெச்சத்தையும் அப்பெயரெச்சம் பாவை என்னும் முதற்பெயரையுங் கொண்டன. நின்று என்னுங் காரணப் பொருளில் வந்த வினையெச்சம் சொல்லெச்சமாய் நின்ற, பெற்ற என்னும் பெயரொச்சத்தோடு முடிந்தது.

மெய்வகை உணர்ந்த விழுமியோர் ஏத்தும் - உண்மையின் பகுதியையுணர்ந்த பெரியோரால் துதிக்கப்படும், ஐ வகை மன்றத்து உம் அரும்பலி உறீஇ - (வெள்ளிடைமன்ற முதலாதப் பாவைமன்றம் ஈறாயுள்ள ஐவகைப்பட்டமன்றத்துக்கும் பெறுதற்கரிய பலியிட்டு;

அன்றியும் மன்றத்தும் என்பவற்றி னிறுதிகளினின்ற வும்மைகள் இறந்தது தழீஇய எச்சவும்மைகள் ஆதலால் பலிஎன்பது முற்கூறிய பலிஎன வுணர்க, ஒளி உச்சி தோன்றிப்பரப்ப, வைத்து, ஊட்டி, பலியுறீஇ என முடிக்க.

வச்சிரம் கோட்டத்து-இந்திரனது வச்சிராயுதம் நிற்குங் கோயிலினுள்ள, மணம் கெழு முரசம்-மணத்திற்கமைந்த முரசத்தை, முரசு மணமுரசு விழாமுரசு என இருவகைப்படும். மண்கெழுமுரசம் எனப்பாடம் ஓதி மார்ச்சனையமைந்த முரசம் எனப்பொருள் கூறுவாரும் உளர். கச்சம் யானைபிடர் தலை ஏற்றி-கச்சத்தையுடைய யானையினதுபிடரின் கண்ணேற்றி, கச்சம் யானைக்கழுத்திடு கயிறு. வால் வெண் களிறு அரசு வழங்கிய கோட்டத்து-வெள்ளிய அயிராவதநிற்கும் கோயிலின்கட்சென்று, விழவின்கால்கோள் கடைநிலைசாற்றி-விழவின் றொடக்கத்தையும் முடிவையும் (இந்திரனைக்கொண்டுவருகவென அவ்வயிராவதத்திற்கு) அறிவித்து, தங்கியகொள்கை தரு நிலை கோட்டத்து-இந்திரன் றங்கிய கொள்கையையுடைய கற்பகத்தருநின்ற கோயிலின்கண், * மங்கலம் நெடுங்கொடி வான் உற எடுத்து - அட்டமங்கலத்தோடு அயிராவதம் எழுதிய கொடியை விண்ணுலகிற் செல்ல வெடுத்து, மரகதமணி ஒடு வயிரம் குயிற்றிய பவளம் திரள் கால் - மரகத இரத்தினத்தோடு வயிரமுமிழைத்த பவளத்தாலாகிய திரண்ட கால்கள் நிரைத்த, பசும்பொன் வேதிகை - பசிய பொன்னாலாகிய திண்ணைகளையுடைய, நெடு நிலை மாடம் கடைமுகத்து யாங்கண்உம்-உயர்ந்த நிலைகளையுடைய மாளிகைகளின் வாயில் களினிடங்கள் தோறும், கிம்புரி - பூண் செறிந்த (கொம்பினையும்,) பகுவாய் - பிளந்த வாயால் (கக்கிய) கிளர் முத்து ஒழுக்கத்து - பருத்த முத்தொழுக்கினையும், மங்கலம் பொறித்த - அட்ட மங்கலங்களையும் நிலைபெறச் செய்த, வாசிகை - வாசிகை வடிவு போல வளைய (செய்த) மகரம் தோரணம் நிலை இய - மகர தோரணங்கணிலைபெற்ற, மேவிய கொள்கை வீதியில்-பொருந்திய கொள்கையையுடைய வீதியின் கண், தோம் அறு-குற்ற மற்ற, பசும் பொன் பூரண கும்பத்து - பசிய பொன்னாலாகிய பூரண கலசத்தையும், பொலிந்த பாலிகை - விளங்கிய முளைப்பாலிகையையும், பாவை - பெண் வடிவமாகச் செய்த ஶ்ரீவற்சத்தையும், விளக்கின்-விளக்கினையும், பசும் பொன் படாம் ஐ - பசிய பொன்னாலாகிய கொடியையும், தூ மயிர் கவரி - கடையொத்த மயிரையுடைய கவரியையும், சுந்தரம் சுண்ணம் - நிறத்தையுடைய சுண்ணப்பொடியையும், செறித்து - நெருங்கச்செய்து, ஆங்கு (பலியிட்ட) அப்பொழுது, ஐம்பெருங்குழூஉம் - அமைச்சர் முதலிய பெரிய ஐந்து கூட்டத்தாரும், ◯ எண்பெயர் ஆயம்உம்- கரணத்தியல்வோர் முதல் இவுளி மறவீரறுகிய எண் வகை

---

* மங்கலம் சாமரம், நிறை குடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, கொடி, இணைக்கயல். கண்ணாடி, இடபம், விளக்கு, ஶ்ரீவற்சம், கவரி, சங்கு, சுவத்திகம், நிறைகுடம் எனக் கூறுதலும் உண்டு. ஶ்ரீவற்சம் குழந்தையை இடையில் வைத்திருக்கும் ஒரு பெண்வடிவம். சுவத்திகம் மண்டபவடிவம்.

◯ "கரணத்தியல்வோர் கருமவிதிகள் - கனகச்சுற்றங் கடைகாப்பாளர் - நகரமாந்தர் நனிபடைத்தலைவர் - யானைவீர ரிவுளிமறவர் - எனையரெண் பெய ராயமென்ப"

யரான கூட்டத்தாரும், கவர் பரி புரவியர் - பகுத்து விரையுஞ் செலவினையுடைய குதிரையை யுடையவரும், பரிவிரைவு. களிற்றின் தொகுதியர்-யானைக் கூட்டத்தை யுடையவரும், இவர் பரி தேரினர்-எறுதலையுடைய குதிரை பூட்டியதேரையுடையவரும்ஆகிய, அரசகுமாரர்உம் பரதகுமாரர்உம்-அரசரும் வணிகரும், ஒருங்கு இயைந்து ஈண்டி-ஒரு சேரத்தம்மிற் பொருந்தித்திரண்டு;

அரச குமாரர் பரத குமாரர் பிளவு படாது நிற்றலால் ஒரு சொன்னீர்மையன. எற்றி, சாற்றி, எடுத்து, செறித்து என்னும் வினையெச்சங்கள் ஒன்றனை யொன்று கொண்டு சொல் லெச்சமாய் நின்ற இட்ட என்னும் பெயரெச்சத்தின் முதனிலையோடு முடிந்தன.

அரசு மேம்படீஇ - தமது அரசியல் மேம்பட விரும்பி, அகன் நிலை மருங்கு இன் - நகரின் கண்ணுள்ள, உரைசால் மன்னன் கொற்றம் கொள்க என - புகழமைந்த கரிகாற் பெருவளவன் வெற்றி கொள்ளக் கடவனெனக் கூறி, மாயிரு ஞாலத்து மன் உயிர் காக்கும் - பெரிய வுலகின்கண் ஆக்கத்தையுடைய வுயிர்களைக் காக்காநிற்கும், ஓர் ஆயிரத்து எட்டு அரசு தலை கொண்ட-ஓராயிரத்தெட்டரசர் தலையிற் சுமப்பித்து வந்த, தண் நறு தாது மலி காவிரி பெருந்துறை - குளிர்ந்த நறிய மணமுள்ள மலர்த்தாதுக ணிறைந்த காவிரியினது பெரிய சங்கமுக நீர்த்துறையின் கண், நல் புண்ணியம் நீர் பொன் குடத்து ஏந்தி - நல்ல புண்ணிய தீர்த்தநீரைப் பொன்னாலாகிய குடத்திலேந்தி, மண்ணகம் மருள - மண்ணுலகம் விண்ணுலகமாய் மயங்கா நிற்ப, தேவர்களெல்லாம் இங்கிருத்தலால் மருளவென்றார். வானகம் வியப்ப - விண்ணுலகத்திலுள்ளோர் (தமதுலகத்திலு மிக்க சிறப்புடையதென) அதிசயிக்கா நிற்ப, விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டி - தேவர்கள் தலைவனாகிய தேவேந்திரனை மேம்பட்ட திருமஞ்சனமாட்டி, விண்ணவர் தலைவன் என்றது அவன் வச்சிரத்தை. பிறவாயாக்கை பெரியோன் கோயில்உம் - (மற்றைத் தேவரைப் போல) பிறவாத திருமேனியையுடைய இறைவனது கோயிலுள்ளும், யாக்கையிற் பிறவாத பெரியோன் எனப்பொருள் கூறி நிட்களன் எனினும் அமையும். அறுமுகம் செவேள் அணிதிகழ் கோயில்உம் - ஆறு முகத்தையும் செய்ய நிறத்தையுமுடைய முருகவேளினது அழகு விளங்கும் கோயிலுள்ளும், வால் வளை மேனி வாலியோன் கோயில்உம் - வெள்ளிய சங்குபோலும் வெண்மை நிறம் பொருந்திய திரு மேனியையுடைய பலதேவனது கோயிலுள்ளும், நீலம் மேனி நெடியோன் கோயில்உம் - நீல மணிபோலும் நிறத்தையுடைய திருமேனியையுடைய திருமாலது கோயிலுள்ளும், மாலை வெண் குடை மன்னவன் கோயில்உம் - முத்த மாலையையுடைய வெண்கொற்றக் குடையினையுடைய கரிகாற் பெரு வளவனது கோயிலுள்ளும், செவ்வேள் வாலியோன் நீலமேனி இவை தொடர்நிலை முரண். மாமுது முதல்வன் - மிக்க முதுமையையுடைய முதல்வனாகிய பிரமன் (அருளிய) வாய்மையின் வழாஅ - உண்மையினின்றுந் தப்பாத, நால்மறை மரபின் - நான்கு வேதங்களின் நெறிப்படி,

ஒருபால் தீ முறை - ஒரு பக்கத்தில் ஓமங்கள் முறையாக (நடக்கவும்) நால்வகை தேவர்உம் ‡ மூ ஆறு கணங்கள்உம் - நால்வகைப்பட்ட தேவர்களும் பதினெட்டுவகைப்பட்ட கணங்களுமென, பால் வகை தெரிந்த பகுதி தோற்றத்து - பகுப்புள்ள வேறுபாடுகளைத் தெரிந்து வகுத்த பகுதித்தோற்றத்தையுடைய, வேறு வேறுகடவுளர் சாறு ஒருபால் சிறந்து-வெவ்வேறுதேவர்களது திருவிழா ஒருபக்கத்திற் சிறப்பவும், நால்வகைத்தேவர் முப்பத்து மூவர். அவர்கள் அட்ட வசுக்கள், சூரியர் பன்னிருவர். உருத்திரர் பதினொருவர், மருத்துவர் இருவர்.

அறவோர் பள்ளி - அருகர்பள்ளியிலும் புத்தர்பள்ளியிலும், அறன்நோன்பு அடைஉம் - தருமம்போதிக்குமிடத்திலும், அறமாகிய நோன்பு அடுத்தலையுடையதென நிற்றலால் காரணப்பெயர். பிளவுபடாது ஒரு சொன்னீர்மைத்தாய் நிற்றலால் அறனோன்படு வரைக்கும் பகுதி. புறநிலைகோட்டத்து - புறம் புள்ளகோயிலிலும், புண்ணியம் தானம்உம்-எனைப் புண்ணியதலங்களிலும் (உள்ள) துறவோர் உரைக்கும் செயல் ஒருபால்சிறந்து - துறவினர் புராணம்படிக்கும் செய்கைகள் ஒருபக்கத்திற் சிறப்பவும், கூடா மன்னர் அடிதளைநீக்கும் - தம்மொடுகூடாத பகையரசர்களுடைய காலிலிட்டதளையை நீக்குதற்கு, கொடிதேர்வேந்தன் அருள் ஒருபால்சிறந்து - கொடிகட்டிய தேரையுடைய கரிகாற் பெருவளவனது அருள் ஒருபக்கத்திற் சிறப்பவும், நீக்கும் என்னும் பெயரொச்சம் தொழிற் பெயர்ப் பொருளில் "நின்முகங்காணுமருந்தினேன்" என்றாற்போலவந்தது. கண்ணுளாளர் - மதங்கரும், பெரும்பாணர் அல்லது குழலர்எனினும் அமையும். கருவி குயிலுவர்- தோற்கருவி வாசிப்பவர்களும், பண் யாழ் புலவர் - நரம்பின் வீக்கம் அமைந்த வீணையில்வல்ல அறிஞரும், பாடல் பாணர் ஒடு - பாடுதலையுடைய பாணர்களோடு, (பாடும்) எண் அரும் சிறப்பின் இசை - அளந் தறிதற்கரிய சிறப்பினையுடைய இசைகள், ஒருபால் சிறந்து - ஒருபக்கத்திற் சிறப்பவும், சிறந்து என வருவனவற்றை வினையெச்சத்திரிபுகள் எனக்கொள்க. முழவு கண் துயிலாத முடுக்கர்உம் வீதிஉம் - (இரவிலும் பகலிலும் இவ்வாறு நடத்தலால்) முரசங் கண்ணுறங்காத குறுந்தெருக்களிலும் நெடுந்தெருக்களிலும், விழவுகளி சிறந்த வியலுள் ஆங்கண் - விழவின் களிப்புமிக்க ஊரின்கண், வியலுள் அகன்ற இடம் இது ஒற்றுமையால் ஊரின்மேல் நின்றது;

இயைந்து ஈண்டி மேம்படீஇ ஏந்தி ஆட்டி இவ்வெச்சங்கள் ஒன்றனையொன்று கொண்டு சிறந்த என்னும் பெயரொச்சத்தின் முதனிலையோடும்,

---

‡ "கின்னரர் கிம்புருடர் விச்சாதரர் கருடர்-பொன்னமர் பூதர் புகழியக்கர் - மன்னும். உரகர் சுரர் சாரணர் முனிவர் மேலாம் - பரகதியோர் சித்தர் பாலர்" "காந்தருவர் தாரகைகள் காணுப்பசாசுகள் - எந்து புகழ்மேய விராக்கதரோ - டாய்ந்த திறல், போகா வியல்புடைய போக பூமியாருடனே- ஆகாய வாசிகளாவர்".

சொல்லெச்சமாய்நின்ற நடக்க சிறப்ப என்னும் எச்சங்கள் அப்பெயரெச்சத்தின் முதனிலையோடும், அப்பெயரெச்சம் வியலுள் என்னும் நிலப்பொருளோடு முடிந்தன.

காதல் கொழுநனை பிரிந்து அலர் எய்தா மாதர் கொடுங்குழை மாதவிதன் ஒடு - (தன்னால்) காதல்செய்யப்பட்ட கணவனைப் பிரிந்து (வேறுபாட்டால்) பழிச்சொல்லையடையாத அழகிய வளைந்த குண்டலத்தையுடைய மாதவியோடு, (யாவரும்) காதல்செய்யும் மலரும் பருவமுடைய அரும்பாந்தன்மையினின்று நீங்கி அலராத விருப்பந்தருந் தலைவளைந்த குழைகளையுடைய குருக்கத்தியோடு, இது மாதவிமேலுங் குருக்கத்திமேலும் வந்ததால் பிரிமொழிச்சிலேடை. நனை அரும்பு. கொழுமை மலரும்பருவம், மாதர் அழகு, விருப்பம். இல்வளர் முல்லை மல்லிகை மயிலை தாழி குவளை தண் செங்கழுநீர் பூ பயில் - (குருக்கத்தியோடு) இல்லின்கண் வளர்க்க வளரு முல்லை மல்லிகை இருவாட்சி தாழி குவளை குளிர்ந்த செங்கழுநீர் ஆகிய பூக்களாற்றொடுத்த, கோதை பிணையல்இல் பொலிந்து - மாலையாற் பொலிவுபெற்று, கோதை ஒழுங்கு எனப் பொருள்கொண்டு ஒழுங்காயுள்ள மாலையெனப் பொருள்கொள்ளினும் அமையும். காமம் களி மகிழ்வெய்தி - காமத்தாற் களித்து மகிழ்ந்து, மகிழ்வெய்தி ஒருசொன்னீர்மைத்து. நறுவிரை பொதிகாமர் பூபொழில் ஆட்டு அயர்ந்து - நறிய வாசம்பொதிந்த அழகிய பூக்களையுடைய சோலையில் மாதவியோடு விளையாடி, (புணர்ந்து என்பது கருத்து) நாள் மகிழ் இருக்கை நாள் அங்காடிஇல் - எப்பொழுது மகிழ்ந்திருக்கு நாளங்காடி யின்கண், இருக்கை என்னுந் தொழிற்பெயர் பெயரெச்சத்தில் வந்தது. பூமலி கானத்து புதுமணம் புக்கு - பூவிற்கும் இடங்களிலுள்ள புதியமணத்திற் கலந்து, பூவிற்கும் இடத்தைப் பூவின்மிகுதியாற் கானம் என்றார். புகைஉம் சாந்துஉம் புலராது - அகிற்புகையுஞ் சந்தனக்குழம்புமாகிய இவற்றின் செவ்விமாறாமல், சிறந்த நகை ஆடு ஆயத்து நல்மொழி திளைத்து - சிறந்த நகையோடு விளையாடுங் கூட்டத்தில் (காமக்குறிப்பாகிய) மகிழ்ச்சிமொழியி லிடைவிடாது பயின்று, குரல்வாய் பாணர் ஒடுஉம் - குரலென்னும் இசைபாடும் வாயையுடைய பாணர்களோடும், நகரம் பரதர் ஒடுஉம் - நகரத்திலுள்ள வணிகரோடும், திரிதரும் மரபின் கோவலன் போல - திரிகின்ற வொழுக்கத்தை யுடைய கோவலன்போல, மலயமாருதம் - (பொலிந்து மகிழ்வெய்தி ஆட்டயர்ந்து புக்கு திளைத்து) தென்றலானது, இளிவாய் வண்டின் ஒடு - (பாணர்போல) இளி என்னும் இசையைப்பாடும் வாயையுடைய வண்டினோடும், இன் இளவேனில் ஒடு - (நகரப் பரதர்போல) இனிய இளவேனிலோடும், திரிதரும் மறுகில் - உலாவும் வீதியின்கண் ;

இது கோவலன்மேலும் தென்றல்மேலும் செல்லுதலால் செம்மொழிச்சிலேடை. தென்றற்கு மொழிதிளைத்தல் மொழியின்தண்மையில் திளைத்தல். திளைத்தல் இடைவிடாது பயிலுதல். குரலுக்கு இளி கிளையாதல்நோக்கி இளி

வாய்வண்டு என்றார். "எழாநரம்பிணை நாலுநட்பாகும்- ஐந்துகிளையாறு மூன்றும்பகையே" என்றார் இசைமரபுடையார். பொலிந்து மகிழ்வெய்தி அயர்ந்து புக்கு திளைத்து என்னும் எச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு திரிதரும் என்னும் பெயரெச்சத்தின் முதனிலையோடும் அப்பெயரெச்சம் மரபுளன் னும் பிறபெயரோடும் போல என்னும் உவமவுருபிடைச் சொல்லடியாகப்பிறந்த வினையெச்சம் திரிதரும் என்னும் பெயரெச்சத்தோடும் அப்பெயரெச்சம் மறுகு என்னும் நிலப்பொருளோடு முடிந்தன.

அம் கண் வானத்து பகை அரவு அஞ்சி-அழகிய இடத்தையுடையவானத்தின்கண் பகையாகிய இராகுவென்னும்பாம்பு(வருமென்று)அஞ்சி,திங்கள்உம்-சந்திரனும், கருமுகில் சுமந்து-பெரியமேகத்தைச் சுமந்து, குறுமுயல் ஒழித்து-சிறிய களங்கத்தை யொழித்து, இரு கருங்கயல் ஓடு - (இருமருங்கினும்) இரண்டு கருங் கயல்களோடு, இடை குமிழ் எழுதி - இடையே ஒரு குமிழ மலரையுமெழுதி, ஈண்டு திரிதரும் கொல்என-இவ்விடத்துத் திரியாநின்றதோஎனவும், சிறப்பும்மைதொகுத்தல். மீன்எறுகொடியோன்-மீனக்கொடியையுடைய மன்மதன், நீர் வாய்-தண்ணிய தன்மை பொருந்துதலையுடைய, திங்கள் நீள் நிலத்து - சந்திரனாகிய பெரிய நிலத்தில், சீர் வாய் அமிர்தின் துவலை-சிறப்புப் பொருந்துதலையுடைய அமுதத்தின்று வலையை, மாந்தி மெய்பெற வளர்த்த - பருகி வடிவுபெற வளர வளர்த்த, வான வல்லி - மின்னற்கொடி, வருதல்உம் உண்டு கொல் என - வருதலும் உளதோ வெனவும், காமவல்லி யொன்றுளதாதலால் பிறிதினியைபு நீக்கிய அடைதந்து வானவல்லி என்றார். உம்மை சிறப்பு. இ செழும் பதி - இந்த வளத்தையுடைய நகரத்தின் கண், இரு நிலம் மன்னன்கு - பெரிய நிலத்தையுடைய கரி காலனுக்கு, பெருவளம் காட்ட - தனது அளவிறந்த வளத்தைக் காட்டுதற்கு, திருமகள் புகுந்ததாம் என-திருமகள் வந்து புகுந்தாளென்று, ஈற்றயல் தொக்கு நின்ற புகுந்ததாம் என்னும் வினைமுற்று ஒரு சொன்னீர்மைத்து. எரி நிறத்து இலவம்உம் - அழல்போலு நிறத்தையுடைய இலவ மலரையும், முல்லைஉம் - முல்லையரும்பையும், அன்றிஉம்-(இவை) ஒழிந்தும், கரு நெடுங் குவளைஉம் - (இரண்டு) கரிய பெரிய குவளை மலரையும், குமிழ்உம் (ஒரு) குமிழ மலரையும், பூத்து - மலர்ந்து, உள் வரிக் கோலத்து - உள்வரிக் கோலத்தோடு, உறுதுணை தேடி- (தனது அன்பு) மிக்க துணையைத்தேடி, கள் அக்கமலம் திரிதல்உம் உண்டு கொல் என - கள்ளையுடைய அத்தாமரை திரிதலும் உண்டோ எனவும், உள் வரிக்கோலம் வேற்றுருக்கொண்டு நடித்தல். இதனை வேனிற் காதையிற் காண்க, கள்ளம் கமலம் எனக்கொண்டு உரு மாறிவந்த கமலம் எனினும் அமையும். பல் உயிர் பருகும் பகுவாய் கூற்றம் - பல வுயிர்களையும் பருகும் அங்காந்த வாயையுடைய இயமன் (உருவொடு திரிந்து பருகில்) மன்னவன் செங்கோல் மறுத்தல் அஞ்சி-அரசனது செங்கோலை மறுத்தலாமென்று (அதற்கு) அஞ்சி, (மறைந்து நின்று பருகவேண்டி) தன் அருந்தொழில் திரியாது - தனது அரிய கொலைத்தொ

ழில் கெடாமல், ஆண்மையில் திரிந்து - ஆண் தன்மையினின்று திரிந்து, நாண் உடை கோலத்து - நாணமுடைய கோலத்தோடு, நகை முகம் கோட்டி - புன்னகையோடு முகத்தை வளைத்து, நரம்பின் திவவுயாழ் பண்மொழி மிழற்றி - (கடுங்குரலொழித்து) நரம்பின் கட்டு அமைந்த வீணையின் பண்போல மொழி பயின்று, பெண் வயின் திரியும் பெற்றிஉம் உண்டு கொல் என - பெண்ணுருவோடு இவ்விடத்துத் திரியும் தன்மையும் உளது கொல்லோ எனவும், (தமதுறுப்போடுந் தொழிலோடும் இவ்வாறு வமித்துப் புகழ்ந்து கூற) உருவிலாளன் ஒரு பெருஞ்சேனை - மன்மதனது ஒப்பில்லாத பெரிய சேனையாகி, இகல் அமர் ஆட்டியர் (தமது) உறுப்புகளால் மாறுபட்டுப் போர்செய்து வெல்லும் பொது மகளிர், எதிர் நின்று அவர் விலங்கி - எதிரே நின்று புகழ்ந்து கூறினோர் (போகாமல்) விலக்கி (புணர) எழுது வரிக்கோலம் மெய்உம் உறீஇ - (தமது முலை முதலிய வுறுப்புகளில்) எழுதிய தொய்யில் முதலிய கீற்றுகள் மார்பமுழுதும் தோய்தலால், விருந்து ஒடு புக்க பெருந்தோள் கணவர் - (தம்மகளிர் ஊடல் தீர்ப்ப) விருந்தினரோடு வந்த பெரிய தோளையுடைய கணவரோடு, உடன் உறைவு மரீஇ ஒழுக்கு ஒடு புணர்ந்த (ஊடாது) உடன் உறைதலை மருவி வழிபாட்டோடு புணர்ந்த, வடமீன் கற்பின் மனைஉறை மகளிர் - அருந்ததிபோலுங் கற்பையுடைய தமது இல் வாழ்க்கைக்குரிய மகளிரை, மாதர் வாள் முகத்து - அழகிய வொளி பொருந்திய முகத்திலுள்ள, மணி தோடு குவளை போது - நீலமணிபோலு மிதழையுடைய குவளை மலர், புறங்கொடுத்து போகிய கடை செம்மை - புறங்காட்டிப் போதற்குக் காரணமாகிய கண்களின் கடையின் செவப்பு, விருந்தில் தீர்ந்திலது ஆயின் - விருந்தால் தீராததாயின், இமா நிலம் வரைப்பு - இப்பெரிய நிலவெல்லை, யாவதுஉம் † மருந்துஉம் தருங்கொல் என - (ஊடல் தணிதற்கு) சிறிது மருந்துந்தரவல்லதோ வென்று (புகழ்ந்து) கை அற்று நடுங்கும் நல்வினை நடு நாள் - (தமது நெஞ்சோடு) செயலற்று நடுங்கா நிற்கும் விழவின் நடு நாளில்; "விருந்தொடு புக்க பெருந்தோட் கணவர்" முதல் "விருந்திற் றீர்ந்திலதாயின் பெருநில வரைப்பு மருந்துந் தருங்கொல்" என்பது பரத்தையிற் பிரிந்த தலைவர் "விருந்தொடு வந்துழிப் பொறுத்தல்கண்டு மகிழ்தல்" என்னும் துறைப் பொருண்மேல் நின்றது. விருந்து கண்டொளித்த வூடல் எங்கு வெளிப்படுமோ வென்று கருதினர் ஆதலால் "கையற்று நடுங்கும்" என்றார். போகிய என்னும் பெயரெச்சம் செங்கடை என்னுங் கருவிப்பொருள் கொண்டு முடிந்தது. யாவதும் மருந்தும் என்பவற்றினின்ற உம்மைகள் சிறப்புப்பொருளன. மா நில வரைப்பு மருந்துந் தருங்கொல் என்பதில் சல்லியகரணி முதலியன ஊடலைப் போக்கு மருந்தாகா என்பது எஞ்சி நிற்றலால் குறிப்பெச்சம்.

விண்ணவர்கோமான் விழவுநாள் அகத்து-அவ்விந்திரனது விழவுநாளின்கண், உள் அகம் நறுந்தாது - உள்ளிடத்திலுள்ள நறியதாதுகளால் (மதுஊறி)

---

† மருந்து—சல்லியகரணி, சமனகரணி, சந்தானகரணி, மிருதசஞ்சிவனி.

ம் நிறைநிறைந்து-அகத்தே நிறையநிறைந்து, ஒளித்து கள்உக (அகத்தினின்
ம் அத்தாரைத்தன்னுள்) ஒளித்து அம்மதுவழிய, நடுங்கும் கழுநீர்போல-சிந்
ங்கழுநீர்மலரைப்போல, கண்ணகி கருங்கண்உம் மாதவிசெங்கண்உம்-கண்
ணகியாரது கரியகண்களும்மாதவி செவந்தகண்களும், உள்நிறைகாந்தத்து நீர்
றைந்து ஒளித்து உகஉகுத்தன-உள்ளேநிறைந்த காதலால்(மனத்தேவருத்தம்
கிழ்ச்சிஎன்னும் நீரூறி நிறைந்து அக்காதலைத்தன்னுள்) ஒளித்து (மனத்தினி
ற்றும் அந்நீர்) வழியச் சிந்தின. எண்ணும்முறை இடத்தின்உம் வலத்தின்உம்
துடித்தன-(கருங்கண் செங்கண் என்று) எண்ணியமுறையே இடப்பக்கத்தும்
வலப்பக்கத்துந் துடித்தன—எ-று.

உவமைக்கும் பொருளுக்கும் ஒற்றுமை யுண்மையால் உவமையில் உள்ளநிறைந்து உகவென்னுந் தொழிலைப் பொருளுக்கும், பொருளிலுள்ள ஒளித்து என்னுந் தொழிலை உவமைக்குங் கொண்டு தொழிலுவமம் ஆகக்கொள்க, காந்தம் அழகு அதனைக் காதல்எனஉபசரித்தார். காதல்இருவர்க்கும் பொது. கூட்டமின்மையாலும் உண்மையாலும் கருங்கண் செங்கண்எனவும், பின்னர்க்கண்ணகியார்க்குக் கூட்டமும்மாதவிக்குப் பிரிவும் உண்மையால் இடத்திலும் வலத்திலும் துடித்தனஎனவும் கூறினார்.

வாரமுடையதிறல்வா னவர்கோனுக்கெனவே
ஓரமுடையோருயி ரிழப்ப—வீர
முழவெடுத்தபேரொலியான் மூவுலகோரேத்த
விழவெடுத்தான் பூம்புகார்வேந்து.

(இ-ள்.) பூ புகார்வேந்து - பொலிவையுடைய புகாரரசனாகிய கரிகாற்பெருவளவன், ஓரம்உடையோர் உயிர்இழப்ப-நடுநிலைமை கோடித்தன்னோடு போர்முகத்தெதிர்ந்த கொடுங்கோலரசர்கள் தமதுயிரிழப்பவும், மூவுலகோர் எத்த - மூன்றுலகத்தோர் வணங்கவும், வாரம்உடையதிறல் - தனக்கே யுரிய வெற்றியின்மேம்பட்ட, வானவர் கோனுக்குஎன - தேவேந்திரனுக்கென்று, வீரமுழவு எடுத்தபேர் ஒலியால்விழவு எடுத்தான் - வெற்றிமுரச மிடைவிடா தொலிக்கும் பெரியமுழக்கினோடு திருவிழாவை முட்டின்றி நடத்தினன்-எ-று.

படைமுரசு, கொடைமுரசு, வெற்றிமுரசுஎன முரசுமூன்றுவகைப்படும். படைமுரசைவிலக்கி நாண்முரசு எனக்கொள்ளலும் ஒன்று.

---

## சு - ஆவது. கடலாட்டுக்காதை.

விழவின்முடிவில் மாதவியோடு கோவலன் கடலில் நீராடுதலையுடைய கதையையுடையது எனவே;—கடல் ஆட்டு கடலில் ஆடுதல் என விரிதலால் ஏழாம்வேற்றுமைத்தொகைநிலைத்தொடர். ஆட்டுக்காதை ஆடுதலையுடைய கதையையுடையது எனவிரிதலால் உருபும் பயனுந்தொக்க இரண்

டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். ஆகவே மூன்றுசொல்இ செந்தியாகக்கொள்க,

இதுவும் அது.

வெள்ளிமால்வரை வியன்பெருஞ்செடிக்—கள்ளவிழ்பூம்பொழிற் கா கடவுட்குக்—கருங்கயனெடுங்கட் காதலிதன்னொடு—விருந்தாட் டயருமே விஞ்சையர்வீரன்—தென்றிசைமருங்கினோர் செழும்பதிதன்னுள்—இந்திர விழவுகொண் டெடுக்குநாளிதுவெனக் — கடுவிசையவுணர் கணங்கொண் ண்டிக்—கொடுவரியூக்கத்துக் கோநகர்காத்த—தொடுகழன் மன்னற்குத் தொலைந்தனராகி—நெஞ்சிருள்கூர நிகர்த்துமேல்விட்ட — வஞ்சம்பெயர்த்த மாபெரும்பூதம்—திருந்துவேலண்ணற்குத் தேவரேவ—விருந்துபலியுண்ணு மிடனுங்காண்கும்—அமராவதிகாத் தமரிற்பெற்றுத்—தமரிற்றந்த தகைசால்சிறப்பிற்—பொய்வகையின்றியும் பூமியிற்புணர்ந்த—ஐவகைமன்றத் தமைதியுங்காண்கும்—நாரதன்வீணை நயந்தெரிபாடலும்—தோரியமடந்தை வாரம்பாடலும்—ஆயிரங்கண்ணோன் செவியகநிறைய—நாடகமுருப்பசி நல்காளாகி—மங்கலமிழப்ப வீணைமண்மிசைத்—தங்குகவிவளெனச் சாபம்பெற்ற—மங்கைமாதவிவழிமுதற்றோன்றிய—அங்கரவகலல்குலாடலுங்காண்கும்—துவரிதழ்ச்செவ்வாய்த் துடியிடையோயே—அமரர்தலைவனை வணங்குதும்யாமெனச்—சிமையத்திமையமுஞ் செழுநீர்க்கங்கையும்—உஞ்சையம்பதியும் விந்தத்தடவியும்—வேங்கடமலையுந் தாங்காவிளையுட்—காவிரிநாடுங் காட்டியபின்னர்ப்—பூவிரிபடப்பைப் புகார்மருங்கெய்திச்—சொல்லியமுறைமையிற் றொழுதனன்காட்டி—மல்லன்மூதூர் மகிழ்விழாக்காண்போன்—மாயோன்பாணியும் வருணப்பூதர்—நால்வகைப்பாணியு நலம்பெறுகொள்கை—வானூர்மதியமும் பாடியபின்னர்ச்—சீரியல்பொலிய நீரணீங்கப்—பாரதியாடிய பாரதியரங்கத்துத்—திரிபுரமெரியத் தேவர்வேண்ட—எரிமுகப்பேரம் பேவல்கேட்ப—உமையவளொருதிற னாகவோங்கிய—இமையவனாடிய கொடுகொட்டியாடலும்—தேர்முன்னின்ற திசைமுகன்காணப்—பாரதியாடிய வியன்பாண்டரங்கமும்—கஞ்சன்வஞ்சங் கடத்தற்காக—அஞ்சனவண்ண னாடியவாடலுள்—அல்லியத்தொகுதியு மவுணற்கடந்த—மல்லினாடலு மாக்கடனடுவண்—நீர்த்திரையரங்கத்து நிகர்த்துமுன்னின்ற—சூர்த்திறங்கடந்தோ னாடியதுடியும் — படைவீழ்த்த வுணர்பையுளெய்தக்—குடைவீழ்த்தவர்முன் னாடியகுடையும் — வாணன்பேரூர் மறுகிடைநடந்து—நீணிலமளந்தோ னாடியகுடமும்—ஆண்மைதிரிந்த பெண்மைக்கோலத்துக்—காமனாடிய பேடியாடலும் — காய்சினவவுணர்கடுந்தொழில்பொறாஅள்—மாயவளாடிய மரக்காலாடலும்—செருவெங்கோல மவுணர்நீங்கத்—திருவின்செய்யோ ளாடியபாவையும் — வயலுழைநின்று வடக்குவாயிலுள்—அயிராணிமடந்தை யாடியகடையமும்—அவரவரணியுடனவரவர்கொள்கையின் — நிலையும்படிகமு நீங்காமரபின் — பதினோராடலும்பாட்டின்பகுதியும்—விதிமாண்கொள்கையின்விளங்கக்காணாய்—தாதவிழ்

பூம்பொழி லிருந்தியான்கூறிய — மாதவிமரபின் மாதவியிவளெனக் — காத
லிக்குணைத்துக் கண்டுமகிழ்வெய்திய—மேதகுசிறப்பின்விஞ்சையனன்றியும்—
அந்தரத்துள்ளோ ரறியாமரபின்— வந்துகாண்குறூஉம் வானவன்விழாவும்—
ஆடற்கோலமு மணியுங்கடை.க்கொள— ஊடற்கோலமோ டிருந்தோனுவப்
பப்—பத்துத்துவரினு மைந்துவிரையினும்—முப்பத்திருவகை யோமாலிகையி
னும்—ஊறியநன்னீருறைத்தநெய்வாசம்—நாறிருங்கூந்தனலம்பெறவாட்டி
ப்—புகையிற்புலர்த்திய பூமென்கூந்தலை—வகைபெறுமான்மதக்கொழுஞ்சே
றூட்டி—அலத்தகமூட்டிய வஞ்செஞ்சீறடி — நலத்தகுமெல்விர னல்லணிசெ
றீஇப் — பரியகநூபுரம் பாடகஞ்சதங்கை—அரியகங்காலுக் கமைவுறவணிந்
து—குறங்குசெறிதிரள் குறங்கிற்செறித்துப்—பிறங்கியமுத்தரை முப்பத்திரு
காழ்—நிறங்கிளர்பூந்துகி னீர்மையினுடீஇக்—காமர்கண்டிகை தன்னொடும்பி
ன்னிய—தூமணித்தோள்வளை தோளுக்கணிந்து—மத்தகமணியொடு வயிரங்
கட்டிய—சித்திரச்சூடகஞ் செம்பொற்கைவளை—பரியகம்வால்வளை பவளப்ப
ல்வளை—அரிமயிர்முன்கைக் கமைவுறவணிந்து—வாளைப்பகுவாய் வணங்குறு
மோதிரம்—கேழ்கிளர்செங்கேழ் கிளர்மணிமோதிரம் —வாங்குவில்வயிரத்து
மரகதத்தாட்செறி—காந்தண்மெல்விரல் கரப்பவணிந்து— சங்கிலிநுண்டொ
டர்பூண்ஞாண்புனைவினை—அங்கழுத்தக வயினாரமோடணிந்து—கயிற்கடை
யொழுகிய காமர்தூமணி—செயத்தகுகோவையிற் சிறுபுறமறைத்தாங்—கிந்
திரநீலத் திடையிடைதிரண்ட—சந்திரபாணித் தகைபெறுகடிப்பிணை—அங்கா
தகவயி னழகுறவணிந்து—தெய்வவுத்தியொடு செழுநீர்வலம்புரி—தொய்யகம்
புல்லகந் தொடர்ந்ததலைக்கணி—மையீரோதிக்குமாண்புறவணிந்து—கூடலு
மூடலுங் கோவலற்களித்துப்—பாடமைசேக்கைப் பள்ளியுளிருந்தோள் — உ
ருகெழுமூதூ ருவாத்தலைவந்தெனப்—பெருநீர்போகு மிரியன்மாக்களொடு—
மடலவிழ்கானற் கடல்விளையாட்டுக்—காண்டல்விருப்பு வேண்டினளாகிப்—
பொய்கைத்தாமரைப் புள்வாய்புலம்ப—வைகறையாமம் வாரண[illegible] —
வெள்ளிவிளக்க நள்ளிருள்கடியத் — தா[illegible]

[illegible]
தோறும்) விழவினை விரும்பிச் செய்யும் ஒரு[illegible]தரரு[illegible]
ரு என்னுங் குறிப்பால் செடி ஆலின்மேல் நின்றது. விஞ்சையர் வீர[illegible]
டிப்பிரித்தலில் வந்த ஏழாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். தெ[illegible]
மருங்கின் ஓர் செழும் பதி தன் உள்- தென்றிசையின் கண்ணுள்ள ஒ[illegible]
விய நகரின் கண், இந்திரன் விழவு கொண்டு எடுக்கும் நாள் இது என[illegible]
ரன் விழவிற்கு நாள் கொண்டு கொடி யெடுக்கும் நாள் இந்நாள் எ[illegible]
மனைவிக்குக் கூறி;

காமக்கடவுள் விழா முடிவு பங்குனிமாதத் திருபத் தொன்பதிற்[illegible]
[illegible]தலால் மேலை மாதத்தில் இச்சித்திரை நாள் என் பான் இ[illegible]
[illegible]ண்டெடுக்கு நாளிது என்றான். இங்கு மாதமும் நாளுங்[illegible]
[illegible]னின்; - கோவலனும் கண்ணகியாரும் ஊரினின்றும் ே[illegible]

கெழுவிளக்கமும்—இடையிடைமீன்விலை பகர்வோர்விளக்கமும் — இலங்கு
நீர்வரைப்பிற் கலங்காண்விளக்கமும்— விலங்குவலைப்பரதவர் மீன்றிமில்விள
க்கமும் —மொழிபெயரிடத்தோ ரொழியாவிளக்கமும்— கழிபெரும்பண்டங்
காவலர்விளக்கமும்—நுண்வினைக்கம்மியர் செய்வினைவிளக்கமும் —எண்ணுவ
ரம்பறியா வியைந்தொருங்கீண்டி—இடிக்கலப்பன்ன வீரயிர்மருங்கிற்—கடி
ப்பகைகாணுங் காட்சியதாகி—விரைமலர்த்தாமரை வீங்குநீர்ப்பரப்பின்—மரு
தவேலியின் மாண்புறத்தோன்றுங்—கைதைவேலி நெய்தலங்கானல்—பொ
ய்தலாயமொடு பூங்கொடிபொருந்தி—நிரைநிரையெடுத்த புரைதீர்காட்சிய—
மலைப்பஃறாரமுங் கடற்பஃறாரமும்— வளந்தலைமயங்கிய துளங்கலிலிருக்கை
யும்—அரசகுமாரரு முரிமைச்சுற்றமும் — பரதகுமாரரும் பல்வேறுயமும்—
ஆடுகளமகளிரும் பாடுகளமகளிரும்—தோடுகொண்மருங்கிற் சூழ்காவெழினி
யும்—விண்பொருபெரும்புகழ்க் கரிகால்வளவன்—தண்பதங்கொள்ளுந் தலை
நாள்போல—வேறுவேறுகோலத்து வேறுவேறுகம்பலை — சாறயர்களத்தின்
வீறுபெறத்தோன்றிக்—கடற்கரைமெலிக்கும் காவிரிப்பேரியாற் — றிடங்
கெடவீண்டிய நால்வகைவருணத்—தடங்காக்கம்பலை யுடங்கியைந்தொலிப்ப
க்—கடற்புலவுகடிந்த மடற்பூந்தாழை—சிறைசெய்வேலி யகவயினுங்கோர்—
புன்னைநீழற் புதுமணற்பரப்பின்—ஓவியவெழினி சூழ்வுடன்போக்கி— விதா
னித்துப்படுத்த வெண்காலமளிமிசை—வருந்துபுநின்ற வசந்தமாலைகைத் —தி
ருந்துபுநல்யாழ் செவ்வனம்வாங்கிக்—கோவலன்றன்னொடுங் கொள்கையினி
ருந்தனண்—மாமலர்நெடுங்கண் மாதவிதானென.

(இ-ள்.) மால் வெள்ளி வரைவியன் பெருஞ் செடி-பெரிய வெள்ளி மலை
யிற் பரந்துயர்ந்த ஆலின் கண், கள் அவிழ்பூ பொழில் - தேனொழுக வவிழ்ந்
த மலர்களையுடைய சோலையிடத்து, சருங்கயல் நெடுங்கண் காதலி தன்ஒடு -
கரிய கயல்போலு நெடிய கண்களையுடைய தனது மனையாளோடு, காமக் கட
[illegible]டு அயரும் ஓர் விஞ்சையர் வீரன் - மன்மதனுக்கு (ஆண்டு
[illegible] விச்ச[illegible] வீரன், வியன் பெ
[illegible]ணொடு பேரணியணிந்து—
ண்கைய னத்திரியேற—மானமர்நோக்கியும் வையமேறிக்—கோடிபல
கொழுநிதிக்குப்பை—மாடமலிமறுகிற் பீடிகைத்தெருவின் — மலர
ரழுக்கத்து மணிவிளக்கெடுத்தாங்—கலர்கொடியறுகும்நெல்லும்வீசி—
க்தாசியர் தங்கலனொலிப்ப—இருபுடைமருங்கி னுந்திரிவனபெயரும்—
ிருக்கை செவ்வனங்கழிந்து—மகரவாரி வளந்தந்தோங்கிய—நகரவீதி
கிக்—கலந்தருதிருவிற் புலம்பெயர்மாக்கள்— கலந்திருந்துறையு மி
வரைப்பின்—வேலைவாலுகத்து விரிதிரைப்பரப்பிற்—கூலமறுகிற்
டுத்துநுவலும்—மாலைச்சேரி மருங்குசென்றெய்தி—வண்[illegible]ஞ்சா
ருஞ்சுண்ணமும்—பண்ணியப்பகுதியும் பகர்வோர்விளக்
கம்மியர் கை[illegible]வினைவிளக்கமும் — காழியர்மோதகத் தூழ
ர்காரகல் குடைக்கால்விளக்கமும் — நொடைநவின்மக

௧0

ரையிற் புகுந்து அக்கோவலன் இறந்த மாத முதலியவற்றோடு மாறுபடாமை க் கென்க. இது பின்னர்க் காண்க.

கடுவிசை அவுணர் கணம் கொண்டு ஈண்டி - (போர் முகத்து) விரைந் து செல்லும் வேகத்தையுடைய அசுரர்கள் கூட்டங்கொண்டு நெருங்கி, கொ டு வரி ஊக்கத்து - புலி போன்ற வன்மையோடு, கோ நகர் காத்த கழல் தொ டு மன்னன்கு-விண்ணுலகத்தைப் புரந்த வீர கண்டையணிந்த முசுகுந்தச் சக் கரவர்த்திக்கு, தொலைந்தனர் ஆகி - புறங் கொடுத்து, நெஞ்சு இருள் கூர - (போரில் வெல்லுதல் தமக்கு அரிதாதலால் அவ்வரசன்) மனமுங் கண்ணும் ம றைபட, நிகர்த்து - தம்முளொத்து, மேல் விட்ட வஞ்சம் - அவன் மேலே வி யகாமாத்திரத்தை, பெயர்த்த-(தனது மந்திரமொழியால்) போக்கிய, மா பெ ரும் பூதம் - பெரிய பூதம், திருந்து வேல் அண்ணல் கு- (போர்முகத்துத் தன துடலிற்பட்ட புழை வழியால்) வளைவு நிமிர்ந்த வேலை யேந்திய அவ்வரசன் பொருட்டு, தேவர் ஏவ - இந்திரன் ஏவப்போந்து, விருந்து பலி உண்ணும் இடன்உம் காண்கும்-(நகரத்துள்ளோர்) விருந்தாக விடும்பலியை யுண்ணும் இடத்தையும் காண்போம்;

இதன் வரலாற்றை இந்திரன் விழவூ ரெடுத்தகாதையிற் காண்க. தன.து டலிற்பட்ட புழை வழியால் திருந்துதலாவது பகை வருடலிற் பட்டு வளைந்த வேலைத் தன துடலிற்பட்ட புழை வழியிற் போக்கி நிமிர்த்தல். கொடு வரிவ ளைந்த வரியையுடையது என வினைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொ ழித்தொகை நிலைத்தொடர். குடாவடி என வருதல் காண்க. கோ விண். கண ங்கொண்டு ஈண்டி தொலைந்தனராகி நிகர்த்து ஒன்றனையொன்று கொண்டு விட்ட என்னும் பெயரெச்சத்தின் முதனிலையையும் அப்பெயரெச்சம் வஞ்ச ம் என்னும் செயப்படு பொருளையும், ஏவ என்னும் வினையெச்சம் போந்து என்னும் சொல்லெச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் உண்ணும் என் னும் பெயரெச்சத்தின் முதனிலையையுங் கொண்[illegible]. உம்மை உயர்[illegible] பு. தேவர் ஒருவரைக் கூறும் [illegible]ன்மைக்கிளவி "ஒருமை சுட்டிய பெய[illegible] க்கிளவி -பன்மைக்[illegible] மிடனுமாருண்டே" தொ - சொ-எ-சுடு-கு-ஆ[illegible] ண்க. கா[illegible]கும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை முற்று.

அமராவதி காத்து அமரில் பெற்று - (அவ்வசுரரால் வந்த இடர் நீ[illegible] அமராவதியைக் காத்து அப்போரினாற் பெற்று, அமரரில் எனப் பாட[illegible] யின் அத் தேவேந்திரனால் எனப் பொருள் கொள்க. தமரில் தந்த - கரிகா[illegible] பெருவளவன் மரபிலுள்ளோர் தந்த, தகை சால் சிறப்பின் - பொலிவு மி[illegible] சிறப்பினையுடைய, பொய் வகை இன்றிஉம் பூமியில் புணர்ந்த - பொய்[illegible] கும் பகுதியில்லாமற் பூமியில் நிலைபெற வைத்த, ஐ வகை மன்றத்து அ[illegible] திஉம் காண்கும் - ஐந்து வகைப்பட்ட மன்றங்களின் பெருமையையுங் [illegible] போம்.

* நாரதன் வீணை நயந்தெரி பாடலும் - நாரதமுனிவன் யாழின் எழிசையின் இன்பந் தெரியப்பாடும் பாடலையும். தோரிய மடந்தை ० வாரம் பாடலும்-ஆடி முதிர்ந்தபின் ஆடும் பெண்கள் காலின் கொத்தறுத்துப்பாடுகின்றவள் பாடும் வாரப்பாடலையும், ஆயிரங் கண்ணோன் செவி அகம் நிறைய உருப்பசி நாடகம் நல் காள் ஆகி - இந்திரனது காதினகம் நிரம்ப உருப்பசியானவள் பாடிக் கண்ணார ஆடலும் விரும்பாள் ஆதலால், வீணை மங்கலம் இழப்ப என - நாரதமுனிவன் வீணை தனது மங்கலமிழந்து மண்ணுலகிற் பிறக்கவெனவும், இவள்மண் மிசைதங்குகஎன - இவ்வுருப்பசி மண்ணின்மேல் அவ்வீணையோடு பிறக்கவெனவும், சாபம்பெற்ற மங்கை மாதவி - சாபத்தையடைந்த உருப்பசியாகிய மாதவியின், வழிமுதல் அங்குதோன்றிய-வழிமுதற்

---

* "வயந்தமாலை நயந்தமுனிவரன் - எய்தியவவையி னிமையவர்வணங்க - இருந்தவிந்திரன் றிருந்திழையுருப்பசி - ஆடனிகழ்க பாடலோடிங்கென- ஓவியச்சொன்ன மேவினனெழுந்து - கோலமுங்கோப்பு நூலொடுபுணர்ந்த - இசையுநடமு மிசையத்திருத்திக் - கரந்துவரலெழினியொடு புகுந்தவன் பாடலிற் - பொருமுகவெழினியிற் புறந்திகழ்தோற்றம் - யாவரும்விழையும் பாவனையாகலின் - நயந்தகாதற் சயந்தன்முகத்தின் - நோக்கெதிர்நோக்கிய பூக்கமழ்கோதை - நாடியவேட்கையி னுடனெகிழப் - பாடன்முதலிய பல்வகைக்கருவிகள் - எல்லாநெகிழ்தலி னெல்லாமுனிவரன் - ஒருதலையின்றி யிருவர்நெஞ்சினுங் - காமக்குறிப்புக் கண்டனன்வெகுண்டு - சிந்தாமணிமுடி யிந்திரன்மகனை - மாணுவிறலோய் வேணுவாகென - இட்டசாபம் பட்டசயந்தன் - சாபவிடைய ருடவத்தோய்நீயென - மேவினன்பணிந்து மேதகவுரைப்ப - ஓடியசாபத் துருப்பசிதலைக்கட்டும் - காலைக்கழையு நீயே யாகி - மலையமால்வரை வந்துகண்ணுற்றுத் - தலையரங்கேறிச் சார்திசென்றவன் - அகலநாரதன் கைக்கொள்வீணை - அலகிலம்பணமா கெனச்சபி... [illegible] ...ரிற் - பண்ணியவீணை மண்மிசைப்பாடி - ஈ தந்திரியுவப்பத தந்... [illegible] ...முனியரங்கேவிட்டனன் - என் ...ருகெனப் பூண்டசாபம் - இட்டவக்குட... [illegible] ...ந்த னவையகத்தென" வயந்த மலை பொதிய ம... [illegible] ... இது வயந்த மாலை ...சிற்றல் விகாரம். உருப்பசி இந்திரன் மகன் மேற் காதல்கொண... [illegible] ...டமையை ...முனிவன் அறிந்து யாழின் பகை நரம்பு பட்விசைத் துணர்த்த, அதனை ...ர்ந்த அகத்திய முனிவர் நம்மை மதியாதிவ்வா றுணர்த்தினனென வெகு ...டு, அம் முனிவன் வீணையோடு இவள் மண்ணிற் பிறக்கவெனச் சாபமிட் ...னர் என்பது வரலாறு.

० வாரம்-ஒரொற்று வாரம் ஈரொற்று வாரம் எனச் செய்யுள் இருவகை ...டும். அவை தாளத்தில் ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெற்று ... அரங்கேற்றுக் காதையுள் வாரம் என்பதற்கு இவ்வாறு கொள்ளினும்

பெயரா யவ்விடத்திற்பிறந்த, அரவு அகல் அல்குல் ஆடல்உம் காண்கும்-அரவின்படம்போலும் அகன்ற அல்குலையுடையவளது ஆடலையுங் காண்போம் அரவல்குல் எனப் பாடமும் உண்டு.

துவர் இதழ் செவ்வாய் துடி இடையோய் - பவளம் போலும் செவந்த வாயும் உடுக்கை போலும் சிறுகிய இடையையு முடையாய், யாம்உம் அமரர் தலைவனை வணங்கு தும் என - நாமும் தேவேந்திரனை வணங்கு வோம் (வருக) என்று கூறி (போய்) யாம் என்பத னிறுதியில் எதிரது தழீஇய எச்சவும்மை தொகுத்தல். ஏகாரம் இசை நிறை. போய் சொல்லெச்சம். சிமை யத்து இமையம்உம் செழுநீர் கங்கைஉம் - சிகரத்தையுடைய இமைய மலையையும் மிக்க நீரையுடைய கங்கையையும், உஞ்சை அம்பதிஉம் விந்தத்து அடவிஉம் - அவந்தி யென்னும் நாட்டையும் விந்த மலையின் கண்ணுள்ள காட்டையும், வேங்கடம் மலைஉம் தாங்கா விளையுள் காவிரி நாடுஉம் - வேங்கட மலையினையும் நிலம் பொறுத விளைச்சலையுடைய காவிரி நாட்டினையும், விளையுள் தேரைப் பாய்த்துள் புலிப்பாய்த்துள் என்பதுபோல நின்றது. காட்டிய பின்னர் பூவிரி படப்பை புகார் மருங்கு எய்தி-(தன் காதலிக்கு இன்னது இன்னது) எனக் காட்டிச் சிலநாள் அங்குத்தங்கியபின்பு மலர்கள் விரிந்த படப்பைகள் சூழ்ந்த காவிரிப்பூம் பட்டினத்தின் கண்ணடைந்து, படப்பை தோட்டக்கூறு. சொல்லிய முறைமையின் தொழுதனன் காட்டி - முன் சொன்ன முறையாக இடமும் அமைதியும் இவை யென்று தொழுது தன் மனைவிக்குக் காட்டி, மல்லல் மூதூர் மகிழ் விழா காண்போன் -வளவிய பழைய அந்நகரின் கண் தேவர்கள் மகிழும் விழவினைக் காண் கின்றவன்;

மணி விழா எனப் பாடம் ஆயின் அழகிய விழவு எனப் பாடங்கொள்க. தொழுதனன் முற்றெச்சம். என போய் என்னும் வினை யெச்சங்கள் ஒன்றனை யொன்று கொண்டு காட்டிய என்னும் பெயரெச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் பின்னர் என்னுங் காலப் பொருளையும், எய்திதொழுது காட்டி என்னும் வினையெச்சங்கள் ஒன்றனையொன்று [illegible]
னும் வினைமுற்றுப்பெயரின் முதனிலையையுங் கொ[illegible]

† பாணியும் - திருமாலைப் பரவுந் தேவ[illegible]
ட்டு - இயற்றமிழின் வருங்கால் கொச்சக வொரு போகாய்[illegible]
பெருந் தேவபாணி சிறு தேவபாணி யென விருவகைத் தாய்வரும்[illegible]
றுப்பிற் குறைபாடின்றித் - தேறியவிரண்டுந் தேவபாணியும்" [illegible]
லின்; அங்ஙனம் வருந்தர வினை நிலை என வடக்கி முகத்திற் படுந்த[illegible]
நிலை எனவும், இடை நிற்பனவற்றை இடை நிலை யெனவும், [illegible]
பனவற்றை முரி நிலை யெனவும் பெயர் கொடுத்தார் செய்[illegible]

---

† "ஏனை யொன்றே - தேவர்ப் பராதன் முன்னிலைக்கக[illegible]
காப்பியம்-செ-கருஅ-சூ. அது முத்தமிழ்க்கும் பொது.

4762. V. 1(1)



இனி இசைத்தமிழின் வருங்கால் முகநிலை கொச்சகம் முரிவு என்பர். ஒருசா
ஆசிரியர் இசைப்பா இசையளவு பா என்னும் இரு பகுதியுள் அஃது இசைப்
பாவின் பகுதி என்பர் அது பத்துவகைப்படும் "செந்துறை வெண்டுறை தே
வபாணி யோரிரண்டும் - வந்தன முத்தகமே வண்ணமே - கந்திருவ - ஆற்று
வரி கானல்வரி முரண் மண்டிலமாத்-தோற்றுமிசைப்பாவின் சுட்டு" என்றார்
இசை நுணுக்கமுடைய சிகண்டியார். இது ஒன்பது வகைப்படும் என்றார்
பஞ்ச மரபுடைய அறிஞர் "செப்பரிய சிந்து திரிபதாதி சீர்ச்சவலை - தப்பொ
ன்று மில்லாத சம்பாதம் - எப்படியும் - செந்துறை வெண்டுறை பேருந்தேவ
பாணி யெனப் - பைந்தொடியா யின்னிசையின் பா" இனி நாடகத்தமிழிற்
பெருந் தேவபாணி வருங்கால் தேவரையும் சிறு தேவபாணியால் வருணப்பூ
தரையு மூவடி முக்கால் வெண்பாவாற் றுதிக்கின்றுழி அவர் அணியும் தாரும்
ஆடையும் நிறனும் கொடியும் துதித்து அவராற் பெறவேண்டு வனவாம் "தி
ருவளரரங்கிற் சென்றினிதேறிப் - பரவுந்தேவரைப் பரவுங்காலை - மணிதி
கழ்நெடுமுடி மாணிபத்தானை - அணிதிகழ்பளிங்கி னொளியினையென்றுங் -
கருந்தாதுடுத்த கடவுளையென்றும் - இரும்பனைத்தனிக்கொடி யேந்தினையெ
ன்றும் - கொடுவாய்நாஞ்சிற் படையோயென்றும் - கடிமலர்க் கண்ணியை
யென்றும் - சேவடிபோற்றிச் சிலபலவாயினும் - மூவடிமுக்கால் வெள்ளையி
ன் மொழிப" என்றார் மதி வாணனார். இனி முற்கூறிய பதினோராடற்கு
முதனிலை யாகிய மாயோன் பாணி வருமாறு "மலர்மிசைத்திருவினை வலத்தி
னிலமைத்தவன் - மறிதிரைக்கடலினை மதித்திடவடைத்தவன் - இலகொளித்த
டவரை கரத்தினிலெடுத்தவன் - இனநிரைத்தொகைகளை யிசைத்தலிலழைத்த
வன் - முலையுணத்தருமவண லத்தினைமுடித்தவன் - முடிகள்பத்துடையவ னுர
த்தினையறுத்தவன் - உலகனைத்தையுமொரு பதத்தினிலொடுக்கினன் - ஒளிம
லர்க்கழறருவதற் கினியழைக்குமே" இது பெருந்தேவ பாணி. இயற்றமிழி
ல் எண் சீரால் வந்த வொரு போகு கொச்சகக்கலிப்பா. சிறு தேவபாணி "வ
தன மவ்வ மிக வெய்யக் - கண்ணளபோர் புல
ரித்தனையால் - எண ணிறந்த தேவர்களு மிருடிக
ண்ணுதலாள் பாகங் கொண்டொரு இருந்
னை முற் கூறியது காவற் கடவுளாதல

ரப்பூதர் ¶ நால் வகை பாணிஉம் - வருணப்பூதரைப் பரவும் நால்

---

மாறு "அந்தணர்வேள்வியோ டருமறைமுற்றுக - வேந்தன்வே
ண்டுபல்வாழ்க - வணிகரிருநெறி நீணிதிதழைக்க - பதினெண்
க்குமிகுக - அரங்கியற்கூத்து நிரம்பிவினைமுடிக - வாழ்கநெடு
வாய்ச்சொலென்-றிப்படிபலிகொடுத் திறைவனிற்றெருக்குச்-
ச் செழும்புகைகாட்டிச் - சேவடிதேவரையேத்திப்பூதரை-

வகைத் தேவபாணியும், நலம் பெறு கொள்கை * வான் ஊர் மதியம்உம் பாடிய பின்னர் - (பல்லுயிர்களுந் தன் கலையால்) நன்மை பெறுந் தன்மையையுடைய வானிற் செல்லும் சந்திரனையும் பாடிய பின்பு, உம்மையால் சூரியனையும் அன்றி என்க. தேவர் வேண்ட - பிரமன் முதலிய தேவர்கள் வேண்டவும், எரி முகம் பேர் அம்பு ஏவல் கேட்ப - வடவையைத் தன் தலையிலுடைய திருமாலாகிய பெரிய அம்பு தனது ஏவல் வழி நிற்பவும், திரி புரம் எரிய - திரி புரம் எரிந்து நீறாக, பாரதி ஆடிய பாரதி அரங்கத்து - பைரவி யாடியவப் பைரவி யரங்கமாகிய ஈமத்தில், உமையவள் ஒரு திறன் ஆக - உமையவள் ஒரு கூற்றினளாய் நின்று (தாளங்களை) செலுத்த, ஓங்கிய இமையவன் ஆடிய o கொடு கொட்டி ஆடல்உம் - (எல்லாத் தேவரினும்) உயர்ந்த இறைவன் கை கொட்டி நின்றாடிய கொடு கொட்டி யென்னும் ஆடலும்; திரி புரம் தீ மடுப்பக் கண்டிரங்காது கை கொட்டி யாடுதலால் அக் கொடுமை நோக்கிக் கொடு கொட்டி எனப்பெயர் தந்தார். வேண்ட, கேட்ப, என்னும் வினை யெச்சங்கள் எரிய என்னும் எச்சத்தையும், அவ்வெச்சமும் ஆக என்னும்எச்சமும் ஆடிய என்னும் பெயரொச்சத்தையும் தனித்தனி கொண்டன.

தேர் முன் நின்ற திசை முகன் காண - (நான்கு வேதங்களாகிய குதிரைகளைப்பூட்டிக் கூர்முட் பிடித்து) தேரின் முன்னே நின்ற பிரமன் காண, பாரதி ஆடிய - (அவன் பிரிவால் வருந்தியதைக் கருதி) பாரதி வடிவாய் வெண்ணீறணிந்து இறைவன் நின்றாடிய, வியன் † பாண்டரங்கம்உம் - பெரிய பாண்டரங்கம் என்னும் திருக்கூத்தும், நின்றாடிய எனப்பாடம் ஆயில் காண நின்றாடிய எனப் பொருள்கொள்க. ஆடல்உள் கஞ்சன் வஞ்சங் கடத்தற்காக அஞ்சன வண்ண னாடிய வாடலுள், § அல்லியத் தொகுதிஉம் - ஆடல் பத்

---

மூவடிமுக்கால் வெண்பாமொழிந்து - செவியிழுக்குறுமை வேந்தனையேத்திக் - கவியொழுக்கத்தது நின்றுழிவேந்தன் - கொடுப்பனகொடுப்ப வடுக்குமென்ப'' என்றார் மதி வாணனார்.

* சந்திரனைப் பாடுந் தேவபாணி ''குரைகடன் மதிக்குமதலையைக் - குறுமுயலொளிக்கு மானனை - இரவிருளகற்று நிலவனை - இறையவன்முடித்த வணியனைக் - கரியவன்மனத்தி னுதையனைக் - கயிரவமலர்த்து மவுணனைப் - பரவுநர்தமக்கு நினதிரு - பதமலர்தபுப்ப வினையையே''

o ''கொட்டிகொடுவிடை யோனாடிற்றதற்குறுப் - பொட்டிய நான் காகு மென்ப''

† ''பாண்டரங்கமுக்கண்ண னாடிற்றதற்குறுப் - பாய்ந்தனவாறாகு மென்ப''

§ ''அல்லியமாயவ னாடிற்றதற்குறுப்புச் - சொல்லுபவாறாகு மென்று'' எனவும், ''ஆடலின்றி நிற்பதையெல்லா - மாயோனுடும் வைணவநிலையே'' எனவும் வருதல்காண்க.

துள் கஞ்சனது வஞ்சத்தால் வந்த யானையினது கொம்பை முறித்தற்காக நின்றாடிய அல்லியத் தொகுதி என்னும் கூத்தும், ஏழா முருபு கூட்டிப் பிரித்தற் பொருளில் வந்தது. முகம் மார்பு கை கால் முதலியன வட்டணை அவி நய முதலியன விரிந்து தொழில் செய்யாது நிற்றலால் தொகுதி என்றார்.

அவுணன் கடந்த * மல்லின் ஆடல்உம் - வாணனாகிய அசுரனை வெல்லுதற்கு மல்லனாய்ச் சென்றறை கூவி யெதிர்த்தவனுடலை நெரித்துத் தொலைத்த மல்லாடலும், மா கடல் நடு வண் நிகர்த்து முன்னின்ற சூர் திறம் கடந்தோன் - கரிய கடலினடுவில் நேரொத்து முன்னே நின்ற சூரனது வேற்றுருவாகிய வஞ்சனையைக் கடந்த முருகக்கடவுள், நீர் திரை அரங்கத்து - அக்கடலின் அலையாகிய அரங்கில் நின்று, ஆடிய 0 துடிஉம் - (துடி கொட்டி) ஆடிய துடிக்கூத்தும், அவுணர் படை வீழ்த்து மையுள் எய்த - அசுரர்கள் போரிற்கு ஆற்றாது படையைப்போட்டு விட்டு வருந்த, குடை வீழ்த்து அவர் முன் ஆடிய † குடைஉம் - (முற்கூறிய முருகன்) அவ்வசுரர்கள் முன்பு தன் குடையைச்சாய்த்து (அதுவே போர்முக எழினியாக) நின்று ஆடிய குடைக்கூத்தும், வாணன் (காமன் மகனாகிய அநுருத்திரனைத் தன்மகள் நிமித்தமாக) வாணாசுரன் (சிறைவைத்தலால்) பேர் ஊர் மறுகு இடை நடந்து - (அவனது) பெரிய சோ என்னு நகர வீதியின் கட்சென்று, நீள் நிலம் அளந்தோன் ஆடிய ‡ குடம்உம் - நெடிய நிலங்கடந்த கண்ணனாடிய குடக்கூத்தும், குடம் பஞ்சலோகத்தாலு மண்ணாலும் இயற்றியது. இது விநோதக் கூத்தாறனுள் ஒன்று "பரவியசாந்தியு மன்றியும்பரதம் - விரவியவிநோதம் விரிக்குங்காலை - குரவைகலிநடங் குடக் கூத்தொன்றிய-கரணநோக்குத் தோற்பாவைக்கூத்-தென்றிவையாறு நகைத் திறச்சுவையும் - வென்றியும்விநோதக் கூத்தெனவிசைப்ப" ஆண்மை திரிந்த - விகாரம் வீரியம் நுகருந்தன்மை பத்தி முதலிய ஆண்மைத் தன்மைகளினின்று வேறுபட்ட, பெண்மை கோலத்து - (முலைமுதலிய வுறுப்புகளையுடைய) பெண்மைக் கோலத்தோடு, காமன் ஆடிய பேடி ஆடல்உம்-(தன் மகனை வாணன் சிறையினின்று மீட்க) மன்மதனாடிய பேடிக்கூத்தும், ஆண்மை தாடி எனினும் அமையும். "சுருளிட்டாடிய மருள்படு பூங்குழல்-பவளச் செவ்வாய்த் தவளவெண்ணகை - ஒள்ளரிநெடுங்கண் வெள்ளிவெண்டோட்டுக் - கருங் கொடிப் புருவத்து மருங்குவளைதிருநுதற்-காந்தளஞ் செங்கை யேந்திளவனமுலை - அகன்றவல் குலந்நுண்மருங்குல் - இகந்த வட்டுடை யெழுதுவரிக்கோ

---

* "நெடியவனாடிற்று மல்லாடல்மல்லிற் - கொடியாவுறுப்போ ரைந் தாம்"

0 "துடி யாடல் வேன் முருகனாடலதனுக் - கொடியாவுறுப்போ ரைந் தாம்"

† "அறுமுகத்தோனாடல் குடைமற்றதற்குப் - பெறுமுறுப்பு நான்காகு மென்ப"

‡ "குன்றெடுத்தோனாட லதனுக்கடக்குப - ஐந்துறுப்பாகவே யாய்ந்து"

லத்து—வாணன்பேரூர்மறுகிடைநடந்து—நீணிலமளந்தோன் மகன்முன்னாடிய—ஆடற்கோலத்துப் பேடிகாண்குநரும்” என்றார் ஆகலின். காய்சினம் அவுணர்கடுந்தொழில் பொறாஅள்—(பிறரை) வருத்துங்கோபத்தையுடைய அசுரர்கள் (வஞ்சத்தாற்செய்யும்) கடியதொழிலைப்பொறாதவளாகிய, மாயோள் ஆடிய * மரக்கால் ஆடல் உம் - துர்க்கையாடியமரக்கால் என்னும்பெயரை யுடையகூத்தும், அசுரர்கள் உண்மைப்போராற்போர்செய்து வெல்லலாற்றாது வஞ்சத்தால் வெல்லக்கருதிப்பாம்புதேள் முதலிய வாய்ப்புகுத, அவற்றையுணர்ந்து கலக்கிக்களைதற்கு மரக்கால் கொண்டாடுதலான் மரக்கால் ஆடல் ஆயிற்று. அவுணர்செருவெம் கோலம்நீங்க—அசுரர்கள் போர் (செய்தற்குக்கொண்ட) வெய்யபோர்க்கோலம் ஒழிந்துமோகிக்க, செய்யோள் திரு ஆடிய † பாவை உம்-(கொல்லியம் பாவைவடிவாய்) செவந்தநிறத்தையுடையவளாகிய இலக்குமியாடிய பாவைக்கூத்தும். வடக்குவாயில் உள் (வாணனதுநகரின்) வடக்குவாயிலின் கண்ணுள்ள, வயல் உழைநின்று—வயலில்நின்று, அயிராணிமடந்தை ஆடிய ‡ கடையம்உம்—இந்திராணியாடிய கடையக்கூத்தும், கடையம்கடைசிக்கூத்து.

அவர்அவர் அணிஉடன்—அவரவர்களுடைய ஆபரணத்தோடும், அவர்அவர் கொள்கையின்—அவரவர்களுடைய கொள்கையோடும் (பொருந்தி) நீரல் நீங்க சீர் இயல்பொலிய — அவதாள நீங்கத்தாளவியல்பு பொலிவு பெறு நிற்க, நிலைஉம் படிகம் உம்—நின்றாடுதலும் வீழ்ந்தாடுதலும் ஆகிய, நீங்காமரபின் பதினோர் ஆடல் உம் (அவர் அவரினின்று) நீங்காத மரபினையுடைய பதினொருவகைப்பட்ட ஆடலும், பாட்டின் பகுதி உம் (அவ்வாடலுக்கேற்ற) பாடலின் வேறுபாடும், விதிமாண்கொள்கையின் விளங்ககாணாய் (ஆகிய அவற்றிற்கு) விதித்தமாட்சிமைப்பட்ட கொள்கையைப் புலப்படக்காணாய், தாது அவிழ் பூ பொழில்இருந்தயான் கூறிய—மதுவொடு மலர்ந்த பூக்களுடைய சோலையின் கண் (நின்னோடு) இருந்து நான் சொல்லிய, மாதவி மரபின் மாதவி இவள்என—மாதவி மரபில்வந்த மாதவி யிவளென்று, காதலிக்கு உரைத்துகண்டு மகிழ்வு எய்திய — தன் மனைவிக்குக் கூறித் (தானுங்) கண்டு மகிழ்கூர்ந்த, மேதகு சிறப்பின் விஞ்சையன் அன்றி உம்—மேம்பாடுள்ள சிறப்பினையுடைய விஞ்சைவீரன் அல்லாமலும்;

அந்தரத்துள்ளோர் அறியா மரபின் வந்து—விண்ணுலகிலுள்ள தேவர்கள் உள் வரியோடுவந்து, காண்குறும் வானவன் விழவுஉம்—காணும் இந்

---

† “காமனதாடல் பேடாடலதற் குறுப்பு—வாய்மையினாயினன்கு”

---

* “மாயவளாடன் மரக்காலதற்குறுப்பு - நாம் வகையாற்சொல்லுங் காணுன்கு”

† “பாவை திருமகளாடிற்ற தற்குறுப் — போவாமலொன்றுடனே யொன்று”

‡ “கடையமயிராணியாடிற்றதனுக்—கடையாவுறுப்புக்களாறு”

திரன் விழவும், நம்மைக்காணு மண்ணுலகினர்க்குப் பொருமைவிளையும் ஆதலால் உள்வரியோடு வந்து என்முர். ஆடல் கோலம்உம் அணிஉம் கடைக்கொள - ஆடலும் (அவ்வாடலுக்கமைந்த) கோலமும் (அவ்வாட்டத்தாற் பிறந்த) அழகும் முடிவுபெறுதலால், ஊடல் கோலம் ஓடு இருந்தோன் உவப்ப (இனிக்காட்சிதழிந்ததென) வெறுப்போடிருந்த கோவலன்மகிழ, மனத்தினிகழ்ந்த ஊடல்முகங்காட்டுதலால் ஊடலோடு என்றமையாது கோலமோடு என்முர். * பத்து துவரின் உம்—பத்து வகைப்பட்ட துவரினாலும்.

ஐந்து விரையின் உம்— ஐந்துவகைப்பட்ட வாசனையாலும், இதனை அந்திமாலை சிறப்புச் செய்காதையிற்காண்க. முப்பத்திருவகை † ஓமாலிகையின் உம்—முப்பத்திரண்டு வகையதாகிய ஓமாலிகையாலும் ஊறிய நல்நீர்—ஊறிக்காயப்பட்ட நல்லநீரால், வாசம் நெய்உறைத்த — வாசனையையுடைய நெய்மிக்க, நாறுஇரும் கூந்தல்—மணங்கமழும் பெரிய கூந்தலை, நலம்பெற ஆட்டி அழகுபெற நீராட்டி, "ஓரை விரையினும் ஈரைந்து துவரினும் - ஆறைந்தின்மேலிரண்டோ மாலிகையினும் — நாறைங்கதுப்பினுணமுறன்குறை-ஊறினநன்னீருவந்தனராட்டி" என்முர் பிறரும். புகையில் புலர்த்திய பூமென்கூந்தல் ‡ ஐவகைபெற-புகையாலுலர்த்திய பொலிவையுடைய மெல்லியகூந்தலை ஐந்துவகைபெறவகுத்து, பெறுவினையெச்சப் பொருளில் வந்தது. கொழுமான் மதம்சேறுஊட்டி - கொழுவிய மிருகமதக்குழம்பை யூட்டி, மிருகமதம் சவ்வாது. அலத்தகம் ஊட்டிய அம்செம் சீறுஅடி - செம்பஞ்சுக்குழம் பூட்டிய அழகிய செவந்த சிற்றடியிலுள்ள, நலத்தகுமெல்விரல் நல் அணிசெறீஇ — அழகு மிக்கமெல்லிய விரல்களில் (செறிக்கப்படும்) நல்ல மகரவாய் மோதிரமுதலாகிய நல்ல

---

* "பூவந்திரிபலை புணர்வன் கருங்காலி - நாவலொடு நான் மரமாம்." திரிபலைகடுக்காய், தான்றிக்காய், நெல்லிக்காய். நால்மரம் ஆல்அரசு அத்தி இத்தி. பூவம்மாமரம்.

† "இலவங்கம் பச்சிலைகச்சோலமேலம்-குலவியநாகணங்கோட்டம்-நிலவிய நாகமதர் வரிசிதக்கோலநன்னாரி - வேகமில்வெண்கோட்டமேவுசீர்-போகாத-கத்தூரிவேரிவிலாமிச்சை கண்டில்வெண்ணெய்—ஒத்தகடுநெல்லியுயர்தான்றி - தொத்தலரும்-வண்ணக்கச்சோமரோணுகமாஞ்சியுடன்—எண்ணுஞ் சயிரோக மின்புழுகு—கன்னியிளம் - புன்னைநறுந்தாது புலியுகிர் பூஞ்சரளம்—பின்னுதமாலம் பெருவகுளம் — பன்னும்—பதுமுகநுண்ணேலம் பைங்கோடுவேரி — கதிர் நகையாயோமாலிகை" இது கலிவெண்பா.

‡ ஐவகைஆவனமுடி, கொண்டை சுருள், குழல், பனிச்சை. முடிமயிரை உச்சியின்முடித்தல், கொண்டை பக்கல்முடித்தல், சுருள்பின்னேசெருகல், குழல்சுருட்டிமுடித்தல், பனிச்சையின் விவிடுதல். ஐந்துவகையாக முடித்தலை ஐவகை என்முர்.

அணிகளைச் செறித்து, அவைபீலி கால் மோதிரம் * பரியகம் நூபுரம்பாடகம் சதங்கை அரியகம் — பாத்சாலமும் சிலம்பும்பாடகமும் சதங்கையும் காற்சரியும்.என்னுமிவற்றை, காலுக்கு அமைவுற அணிந்து—கால்களுக்குப் பொருந்தவணிந்து.

"அவ்வாய் மாகதத்தணிகிளர் மோதிரம் பைவாய் பதம் பொற்பரிய கநூபுரம்-மொய்ம்மணிவரம்பின் முல்லையங்கிண்கிணி-கௌவியவேனவுங் காலுக்கணிந்தாள்" என்றார்பிறரும். குறங்குசெறிதிரள் குறங்கில்செறித்து-குறங்குசெறிஎன்னும் ஆபரணத்தைத்திரண்ட தொடையிற்செறித்து, குறங்குசெறிக வாணுபரணம். பிறங்கியமுத்தரை முப்பத்திருகாழ்—விளங்கிய பருமுத்தக் கோவையையும் முப்பத்திரண்டு கோவையாகிய விரிசிகையையும், நிறம் கிளர் பூந்துகில் நீர்மையின் உடீஇ - நிறங்கொண்டு விளங்கும் பொலிவையுடைய நீலச்சாதாருடையின்மேல் முறையாகவுடுத்து; "குறங்குசெறியொடு கொய்யலங்கார — நிறங்கிளர்பூந்துகி னீர்மையினுடீஇ—பிறங்கியமுத்தரை முப்பத்திருகாழ்—அறிந்தவவைய ரவல்குற்கணிந்தாள்" என்றார் பிறரும். காமர்கண்டிகை தன்னொடும் - விருப்பஞ்செய்யும் மாணிக்க வளையோடும், பின்னிய—நீங்காமற் பொற்றொடராற்பிணித்த, தூமணிதோள்வளை - களங்கமில்லாத முத்தாலாகிய தோள்வளையை, தோளுக்கு அணிந்து - தோள்களுக்கு அணிந்து, காமம் காமர்போலி. "ஆய்மணிகட்டிய மைந்த விலைச்செய்கைக் - காமர்கண்டிகை தண்டன் முத்திடைக் - காமர் பொற்பாசங் கொளுத்திக்கவின்பெற - வேய்மருண்மென்றோள் விளங்கவணிந்தாள்" என்றார் பிறரும். மத்தகம்மணி ஒடு - முகப்பிற்கட்டிய மாணிக்கத்தோடே, வயிரம் கட்டிய (பத்தியாக) வயிரங்கள் அழுத்திய, சித்திரம் சூடகம் - சித்திரத்தொழிலையுடைய சூடகத்தையும், செம்பொன்கைவளை - செவந்தபொன்னாற் செய்த வளையையும், பரியகம்-சரியையும், வால்வளை - சங்கவளைகளையும், அன்றி வெள்ளிவளை எனினும் அமையும். பல்பவளவளை பலபவளவளைகளையும், கைவடம் எனினும் அமையும். அரிமயிர்முன் கைக்கு அமைவுற அணிந்து - அழகியமயிரையுடைய முன்கைக்குப் பொருந்தவணிந்து "புரைதபுசித்திரப்பொன்வளைபோக்கில்—அரியவிர் பொன்மணி மெல்லென்கடகம்—பரியகம்வால்வளை பாத்தில்பவளம் — அரிமயிர்முன்கைக்கமையவணிந்தாள்" என்றார்பிறரும். வாளைபகுவாய் வணங்குறும்மோதிரம் - வாளைமீனின் அங்காந்த வாய்போலும் வளைந்தநெளியையும், பகுவாய்மோதிரம் ஒப்பிணுகியபெயர். செம்கேழ் கிளர்கேழ்மணிமோதிரம்-செவந்தவொளி(உச்சமாக) விளங்குமொளியையுடையமாணிக்கபீடத்தையும், வாங்குவில்வயிரத்து-(பக்கத்தே)வளைந்துதிரையும் ஒளியையுடைய வயிரம்இழைத்த,

---

* "பரியகம் ஆவது பொன்னிதழ்பொதிந்த பன்னிறமணிவடம்—பின்னியதொடரிற் பெருவிரன்மோதிரம்—தன்னொடுதொடக்கித் தமனியச்சிலம்பின்—புறவாய்சூழ்ந்து புணரவைப்பதுவே"

மரசதம்தாள்செறி-மரகதக்கடைச்செறியையும், காந்தள் மெல்விரல்கரப்ப அணிந்து - காந்தள் மலர்போலு மெல்லியவிரல்கள் (அவற்றின்) மறையவணிந்து, சங்கிலிநுண்தொடர் பூண்ஞாண் - வீரசங்கிலியையும் நுண்ணிய சங்கிலியையும் பூணப்படும் நாணையும், பூண்ஞாண் சவடிசரப்பளி முதலாயின. புனைவினை ஆரம்ஒடு - (கையால்) புனையப்பட்ட சித்திரத்தொழிலையுடைய முத்தாரத்தோடு, அம்கழுத்து அகம்வயின் அணிந்து-அழகியகழுத்தினிடத்தேயணிந்து, கயில்கடைகாமர் தூமணிசெயத்தகு ஒழுகிய கோவையில்-(சங்கிலிமுதல் ஆரம் இறுதியாயுள்ள அணிகளுக்கெல்லாம் தலையொன்றாய்) கோக்குவாய் தொடங்கி விருப்பஞ்செய்யும் களங்கமில்லாத பலமணிகளால் தூக்கமாகச் செய்தபின்னாலியால், சிறுபுறம்மறைத்து - பிடரியை மறைத்து, ஆங்குஅசை "சங்கிலிநுண்டொடர் பூண்ஞாண் புனைவினை—தொங்கலருத்தி திருந்துங்கயிலணி—தண்கடன்முத்தின் றகையொரு சாழனக்—கண்டபிறவுங் கழுத்துக்கணிந்தாள்" என்றார் பிறரும். இந்திரநீலத்து - இந்திரநீலத்தால், இடை இடைதிரண்ட சந்திரபாணிதகைபெறு கடிப்பிணை - இடையிடையே (பயிலமுகப்பில்) கட்டியவயிரங்களால்அழகுபெற்றகு தம்பையை, அம்காது அகவயின் அழகுஉற அணிந்து - அழகியவடிந்த காதின்கண் அழகுமிகவணிந்து, "நூலவராய்ந்து நுவலருங் கைவினைக்—கோலங்குயின்ற குணஞ்செய் கடிப்பிணை—மேலவராயினு மெச்சுவிறலொடு—காலமை காதிற் கவின்பெறப்பெய்தாள்" என்றார் பிறரும். தெய்வ உத்தியொடு—சிதேவியார் என்னும் அணியோடு, வலம்புரி செழுநீர்—வலம்புரிச் சங்கின்கடையும், தொய்யகம்—பூரப்பாளையும், புல்லகம்-தென்பல்லி வடபல்லியும், தொடர்ந்த தலைக்கணி (ஆகிய இவைதம்மில்) தொடர்ந்தொன்றான தலைக்கோலத்தை, மைஈர் ஓதிக்குமாண்பு உற அணிந்து—கரியபெரிய கூந்தலுக்கு அழகுமிகவணிந்து, கூடல் உம் ஊடல் உம் கோவலற்கு அளித்து—கூடலையும் பின்பு ஊடலையும் அக்கோவலனுக்குத் தந்து, பாடு சேக்கை அமைபள்ளிஉள் இருந்தோள்—பெருமையோடுபடுக்கையமைந்த பள்ளியிடத்தேயிருந்தமாதவி, ஊடல் ஆவது எண்ணில் காமம் எரிப்பினும் மேற்செலாப்பெண்மையு நாணுமழிந்து வந்து குறையற்றுக்கூடு மளவும் நீவிர் பிரிவாற்றியிருந்தீர் அன்பிலீர் என்றல். அளித்தல் ஆவது அதனால் வருந்துன்பத்தைத் தருதல்.

உவப்ப என்னும் வினையெச்சத்தின் முடிபாகிய ஆடி ஊட்டி செறீஇ அணிந்து செறித்து உடீஇ அணிந்துமறைத்து அணிந்து என்னும் வினையெச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு அளித்து என்னும் வினையெச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் இருந்தோள் என்னும் வினைமுற்றுப்பெயரின் முதனிலையையுங்கொண்டன.

உவாதலைவந்தென (விழவிற்குக் கொடியெடுத்த நாள்முதல் இருபத்தெட்டுநாளும் விழவுநடந்து பின்னாளில் கொடியிறங்கி விழவாற்றுப்படுத்

தநாளில்) பௌரணேவர, வந்தென வினையெச்சத்திரிபு. உருகெழுமூதூர் (பகைவர்)உட்கச்செய்யும் பழைய ஊரினின்றும். தொ-சொ-உ-ச-கு. "உருவுட்காகும் புரையுயர்வாகும்" என்பதனுல் அறிக. உட்கல்-அஞ்சல், பெருநீர் இரியல்போகும் மாக்கள்ஓடு - கடற்கரைக்கண் (இடம்பிடிக்க) விரைந்து செல்லுமக்களோடு,பெருநீர்"கங்கைக்கண் ணிடைச்சேரி" என்முற்போலநின்றது.மடல்அவிழ்கானல் கடல்விளையாட்டு (தானும்) இதழவிழ்ந்தகானலையுடைய கடல்விளையாட்டுள், கானல் நெய்தனிலத்திளஞ் சோலை. காண்டல் விருப்பு வேண்டினள் ஆகி (தோல்விவெற்றிகளை) காணும் விருப்பத்தால் கோவலனை வேண்டினளாகி, வேண்டினளாகிஎன்பது அவன் வேண்டாமையை உணர்த்தி நின்றது குறிப்பெச்சம். பொய்கை தாமரைபுள்வாய் புலம்ப—பொய்கைகளில் தாமரைப்பூவாகிய படுக்கையிற் றுயின்ற பறவைகள் அத்துயிலினின்று வாய்விட்டுப் புலம்பாநிற்கவும், வைகறையாமம் வாரணம் காட்ட—வைகறைப் பொழுதைக் கோழிகள்காட்டாநிற்கவும், வைகறைவிடியல் வைகு அறைஎனப்பிரித்து அற்றைநாட் பொழுதுகழிந்தறுதல் எனப் பொருள்கொள்க. வெள்ளி விளக்கம் நள் இருள் கடிய—சந்திரனது வெள்ளிய கிரணம் செறிந்த இருளையோட்டாநிற்கவும், வெள்ளிவிளக்கம்சந்திரன் எனினும் அமையும். தார் அணி மார்பன் ஓடு (தன் வேண்டுகோளால் உடன்பட்ட) மாலையையணிந்த மார்பையுடைய கோவலனோடு, பேர்அணிஅணிந்து—அணிதற்குரிய ஆபரணங்கள்முற்றும்அணிந்து, வானம் வண்கையன்அத்திரி ஏற—மேகம்போலும் கொடுத்தலையுடையகையையுடைய அக்கோவலன் கோவேறுகழுதையிலேற, மான் அமர்நோக்கி உம் வையம்ஏறி—மான் விரும்பும் பார்வையையுடைய அம்மாதவியும்கொல்லாவண்டியில் ஏறி.

வாரணம் என வாளாகூறினமையால் சங்குங்கொள்க. வந்தெனஎன்னும் வினையெச்சத்தின் முடிபாகிய வேண்டினளாகி அணிந்து என்னும்எச்சங்கள் ஒன்றனையொன்று கொண்டு, ஏற என்னும் வினையெச்சத்தின் முடிபாகிய ஏறி என்னும் வினையெச்சத்தின் முதனிலையைக் கொண்டன. புலம்ப காட்ட கடிய என்னும் வினையெச்சங்கள் ஏறிஎனனும் எச்சத்தின் முதனிலையைத் தனித்தனிகொண்டன.

கோடி பலஅடுக்கிய கொழுநிதிக்குப்பை - கோடியென்னும் இலக்கத்தைப்பலகோடி மேலடுக்கப்பட்ட வளவியநிதிக்கு வியலையுடைய, மாடம் மலிமறுகின் பீடிகை தெருவின் - மாடங்கள் நிறைந்த வீதிகளையுடைய கடைத்தெருவின்கண், மலர்அணி ஒழுக்கத்து-மலர்நிரையின் வரிசைபோல, மங்கலம் தாசியர் - அழகியபணிப்பெண்கள், மணிவிளக்குஎடுத்து - விளக்கையு மாணிக்கவிளக்கையு மெடுத்து, ஆங்கு அலர் கொடி அறுகும்நெல்லும் வீசி - அவ்விடத்துமலரையும் கொடியறுகையும் நெல்லையும்சிந்தி, தம்கலன் ஒலிப்ப இருபுடை மருங்கின் உம் திரிவன பெயரும்-தமது ஆபா

ணங்கள் (ஒன்றோடொன்று தாக்கி) ஒலிக்க இரண்டுபக்கத்திலும் திரிந்து செல்லும், திருமகள் இருக்கைசெவ்வன்கழிந்து - திருமகளுக் கிருப்பிடமாகிய அக்கடைத்தெருவை வேறுகக்கழிந்து, நீங்குதற்கு அருமைதோன்றத் திருமகளிருக்கை என்முர். செவ்வன் செம்மை என்னும்பண்படியாக வந்த பெயர்ச்சொல். அம்பதப்புணர்ச்சிக்கண் வந்தசாரியையிடைச்சொல். மகரம்வாரி வளம்தந்து ஓங்கிய - மகரமீன்களையுடையகடலினது வளத்தைக் கொண்டுவருதலால் உயர்ச்சிபெற்ற, வளம்ஆவது சங்குமுத்துப் பவளமுதலியன. நகரம்வீதிநடுவண்போகி - நகரத்தினது வீதியினடுவே சென்று, கலம்தரு திருவின்புலம்பெயர் மாக்கள் - மரக்கலங்கள் தருஞ்செல்வத்தின் பொருட்டால் (தாம்பிறந்த) இடத்தினின்று பெயர்ந்த பிறதேசத்தார் பலரும், கலந்து இருந்து உறையும் இலங்கு நீர்வேலை வரைப்பின் - (ஒருநிலத்தாரைப்போல) கலந்து நெருங்கியிருக்கும் விளங்கிய அலைகளையுடைய கடற்கரையின்கண், விரிதிரை வாலுகத்துப் பரப்புஇன்-விரிந்த அலைகள்கொழித்தவெண்மணற் பரப்பினையுடைய, கூலம் மறுகில்-பலகூலங்களையுங்குவித்த வீதியில், கொடிஎடுத்து நுவலும் மாலை-(இன்னசாதிக்கு இன்னதுண்டென்று)கொடிகளெடுத்துச்சொல்லும்ஒழுங்கினையுடைய,சேரிமருங்குசென்று எய்தி-சேரியிற்போய் (நெய்தலங்கானலை)அடைந்து, வண்ணம் உம்சாந்து உம் மலர் உம்சுண்ணம் உம்-(தொய்யிலெழுதும்) வண்ணங்களுஞ் சந்தனக்குழம்பும்மலரும்சுண்ணப்பொடியும். பண்ணியம்பகுதிஉம் பகர்வோர்விளக்கம் உம்-பண்ணிகாரவர்க்கங்களுமாகிய இவைகளை விற்போர் (வைத்தவிளக்குகளும், செய்வினை கம்மியர் கைவினைவிளக்கம்உம் - செய்யுந் தொழிலில் வல்லபணித்தட்டார் பணிபண்ணும் (இடங்களில்வைத்த) விளக்குகளும், காழியர் மோதகத்து ஊழ்உறு விளக்கம் உம்-பிட்டு வாணிபர்பிட்டு (விற்கும் இடங்களில்) முறையாக வைத்தவிளக்குகளும், கூவியர் கார் அகல் குடைகால்விளக்கம் உம்-அப்பவாணிபர் கரிய அகலையுடைய குடைத்தண்டில் வைத்தவிளக்குகளும், நொடைநவில் மகடூஉ கடைகெழு விளக்கம் உம் - (பல பண்டங்களையும்) விற்குமிலேச்சப் பெண்கள் தம்கடையில் வைத்த விளக்குகளும், இடை இடைமீன் விலைபகர் வோர்விளக்கம் உம்- இடையிடையே மீன்விற்போர் (வைத்த) விளக்குகளும், இலங்குநீர் வரைப்பில் கலம் காண்விளக்கம் உம் - நிற்கும் நாடு (இன்னதென) மரக்கலங்களை யழைக்கும் விளக்குகளும், விலங்குவலை பரதவர் மீன்திமில் விளக்கம் உம் - (மீன்களை) குறுக்கிட்டுப் படுக்கும் வலையையுடைய பரதவர்கள் திமிலில்வைத்த விளக்குகளும் "முந்நீர்நாப்பட்டிமிற்சுடர்போலச்-செம்மீனிமைக்குமாக விசும்பின்" என்முர்பிறரும். மொழிபெயர் இடத்தோர் ஒழியா விளக்கம் உம்—பாடைவேறுபட்ட தேயத்திலுள்ளோர் பிறதுறைகளிற்போகாமல் (பனைக்கால் நாட்டியதன்மீது மண்ணிட்டெரிக்கும் நீநாறு என்னும்) விளக்குகளும், கழிபெரும்பண்டம் காவலர் விளக்கம் உம்—மிக்கபெரியபண்டங்களையுடைய பண்டசாலை காப்போரிட்ட விளக்கு

களும், நுண்வினைகம்மியர் வினைசெய் விளக்கம்உம் (செய்தற்கரிய) நுண்ணிய தொழிலில் வல்ல கம்மியர்கள் வினைசெய்யும் (இடங்களில்வைத்த) விளக்குகளும் (ஆகியஇவைகள்) எண்ணு வரம்பு அறியா - எண்ணிக்கை வரம்பாலறிதற்கரியவாகி, ஒருங்கு இயைந்து ஈண்டி—ஒருசேரப்பொருந்தி நெருங்குதலால், இடி கலப்பு அன்ன - தெள்ளாத மாவைக் கலந்தாலொத்த, ஈர் அயிர் மருங்கின்—மிகவும் நுண்ணிய மணல்மேல் (இட்ட) கடிப்பகை காணும் காட்சியது ஆகி—வெண் சிறுகடுகும்(புலப்பட)காணுங் காட்சியையுடையதாகி, வீங்கு நீர்ப்பரப்பு இன்—மிக்க நீர்ப்பரப்பினுள்ள, விரை தாமரைமலர்—வாசனையையுடைய தாமரை மலர்களையுடைய, மருதம்வேலியின்—மருதநிலத்தினும், மாண்பு உறதோன்றும் — அழகு மிகத் தோன்றும், கைதைவேலி—தாழையை வேலியாகவுடைய, நெய்தல் கானல்—நெய்தனிலத்திலுள்ள கானலின்கண், கானல் இளஞ்சோலை. பொய்தல்ஆயம்ஒடு—விளையாட்டுப் பெண்களோடு, பூங்கொடி பொருந்தி—பூங்கொடிபோல் வாளாகிய மாதவி விளையாடச்சென்றுபொருந்தி:—

சுழிந்துபோகி எய்தி என்னும் இறந்தகால வினையெச்சங்கள் ஒன்றனையொன்று கொண்டு முடிந்து பொருந்தியென்னும் வினையெச்சத்தின் முதனிலையோடு முடிந்தன. ஈண்டி எனனும் இறந்தகால வினையெச்சம் தோன்றும் என்னும் பெயரொச்சத்தின் முதனிலையையும், அப்பெயரொச்சம் நெய்தல் என்னும் வினைமுதற் பொருளையுங் கொண்டன.

நிரை நிரை எடுத்த—வரிசை வரிசையாகக் குவித்த, புரைதீர் காட்சிய—குற்றமற்ற தோற்றத்தை யுடைய, மலை பல்தாரம் உம்—மலைகள் தந்த பலபண்டங்களும், கடல் பல்தாரம் உம் வளம்—கடல் தரும் பலபண்டமுமாகிய வளங்கள், தலைமயங்கிய இல் துளங்கல் இருக்கைஉம் - இடங்கள் தோறுமயங்கிக் கிடக்கின்ற தமதிடத்து (மரக்கலங்கள்) அசைகின்ற துறைமுகங்களும், அரசு இளங்குமாரரும் — அரச குமாரர்களும், உரிமை சுற்றம் உம்—அவர்களது உரிமைச்சுற்றமும், பரத குமாரரும்—வணிக குமாரர்களும், பல்வேறு ஆயம் உம்—அவர்களது பலவேறுவகைப் பட்ட பெண்கள் கூட்டமும், ஆடுகளம்மகளிர் உம்—அரங்கிலாடும் பெண்களும், பாடுகளம்மகளிர் உம்—பாடுங்கண்டத்தையுடைய பெண்டுகளும், தோடு கொள் மருங்கில்—கூட்டங்கொண்ட விடங்கடோறும், தோடு தொகுதி. தோடு கொள் மருங்கு என்பதற்கு - இதழையுடைய பொழிலிடத்து எனினும் அமையும். அரசர்க்கும் வணிகர்க்கும் அவரோடு புனலாடன் மரபன்மையால் உரிமையென்னுது பல்வேருயம் என்றார். கால்சூழ் எழினி உம்—காலைச் சூழ்தலையுடைய திரையும், வேறுவேறுகோலத்த (முற்கூறிய)வெவ்வேறு கோலமும், வேறுவேறு கம்பலை - வெவ்வே ருரவாரமும், விண்பொரு - விண்ணுலகிற்சென்ற, பெரும்புகழ் - பெரிய புகழையுடைய, கரிகால் வளவன் - கரிகாற் பெருவளவன், தண்பதம் கொள்ளும் தலைநாள்

போல - புநப்புனல் விழவு கொண்டாடுந் தலை நாளைப்போல, அவர் சாறு களத்தின் - நடக்கும்விழவின்இறுதியில் (புனலாடும்) இடங்களும்,வீறுபெற தோன்றி - பெருமை பெறத்தோன்று நிற்ப, தோன்றி வினையெச்சத்திரிபு தோடுஎன்பதனோடு கம்பலையையும் எழினி என்பதனோடும் கோலத்தையுங் கூட்டி எதிர் நிரனிறையாகக்கொள்க. கடல்கரைமெலிக்கும் - கடலினது கரையைக் குத்தியிடிக்கும், காவிரிபேர் யாறு - காவிரி யென்னும் பெரிய புகார்முக மெங்கும், இடம்கெட ஈண்டியநால் வகைவருணத்து - இடமில்லையாக நெருங்கிய நால்வகை வருணத்திலுள்ளோரது, அடங்கா கம்பலை - ஒடுங்குதலில்லாத ஆரவாரமானது, உடங்கு இயைந்து ஒலிப்ப-ஒருசேரக்கூடி யொலிக்க, கடல் புலவு கடிந்தமடல் பூதாழை சிறைசெய் வேலியின் அகவயின் - கடலினது புலால் நாற்றத்தைக் கெடுத்த மடல விழும் பூவையுடைய தாழையாற் சிறையாகச் சூழப்பட்ட இடத்தில் இடம் என்பது நடு. ஓர் புன்னைநீழல் புதுமணல் பரப்புஇன்—ஒப்பில்லாத புன்னைமரத்தி னிழலையுடைய அழுக்கில்லாத மணற்பரப்பினிடத்து, ஓவியம் எழினிசூழ உடன்போக்கி - சித்திரம் எழுதிய திரையைச் சூழவளைத்து, விதானித்து படுத்தவெண்கால் அமளிமிசை—மேற்கூடுங் கட்டிமுடித்த யானைக்கொம்பாற் கடைந்தகாலையுமுடைய அமளியின்மேல், வெண்மை முன்னத்தி னுணருங்கிளவி. வருந்துபு நின்ற வயந்தமாலைகை—வருந்திநின்ற வயந்த மாலையின் கையின் கண்ணுள்ள, நல்யாழ்—இன்பம் விளைத்தற்குக் காரணமாகிய வீணையை, திருந்துபு செவ்வன்வாங்கி — திருத்தமாக மகிழ்வோடு வாங்கி, பின்னர் ஊடலொடு வாங்குதலால் செவ்வன்வாங்கி என்றார். மாமலர் நெடுங்கண்மாதவி — கரியமலர்போலும் நெடியகண்களையுடைய மாதவி, கோவலன் தன்ஒடும் கொள்கையின் இருந்தனள்—கோவலனோடும் சேரவிருந்தாள். எ-று.

அமளிமிசை வாங்கி இருந்தனள் எனமுடிக்க - தோன்ற ஒலிப்ப என்னும் வினையெச்சங்கள் தனித்தனியாய் இருந்தனள் என்னும் வினைமுற்றின் முதனிலையோடு முடிந்தன.

## எ—ஆவது கானல்வரி.

—:0:—

கடலாடிய கோவலனும் மாதவியுமகிழக் கானலின் கண்ணிகழ்ந்தமைந் தொகைநிலைத் தொடராய்ப் படலத்திற்குக் காரணக்குறியாயிற்று. இதனுட் கதை நிகழ்ச்சியின்மையால் கானல்வரிக் காதை என்னாது கானல்வரி என்றார்.

## கட்டுரை.

சித்திரப் படத்துட்புக்குச் செழுங்கோட்டு மலர்புனைந்து - மைத்தடங் கண் மணமகளிர் கோலம்போல் வனப்பெய்திப் - பத்தருங் கோடுமாணியு நரம்புமென் - றித்திறத்துக்குற்ற நீங்கிய யாழ்கையிற் றொழுதுவாங்கிப் - பண்ணல் பரிவட்டணையாராய் தறைவரல் - கண்ணியசெலவு விளையாட்டுக் கையூழ் - நண்ணிய குறும்போக்கென்று நாட்டிய - எண்வகையாலிசையெ ழீஇப் பண்வகையாற் பரிவுதீர்ந்து - மரகதமணிக்காழ் செறிந்த மணிக் காந்தண் - மெல்விரல்கள் பயிரவண்டின் கிளைபோலப் - பண்ணரம்பின் மிசைபடர - வார்தல்வடித்தலுந்தலுறழ்தல் - சீருடனுருட்டறெருட்டலெள் ளல் - ஏருடைப்பட்டடையென - இசையோர் வகுத்த வெட்டுவகையின் - இசைகரணத்துப் பட்டவகை செவிதொரீஇ - ஏவலன்பின் பணியாதெனக் - கோவலன்கை யாழ் நீட்டவவனும் - காவிரியை நோக்கினவுங் கடற்கானல் வரிப் - பாணியுமாதவி தன்மனமகிழ - வாசித்த றொடங்கு மன்னே.

இ-ள். சித்திரம் படத்துஉள் புக்கு - சித்திரித்த உறையிற்புகுந்து, செழு கோடு மலர் புனைந்து - வளவிய கோட்டுறுப்பில் மலர்மாலையைத் தரித்து "வீழ்மணி வண்டுபாய்ந்து மிதிர்த்திடக் சிழித்தமாலை - சூழ்மணிக்கோட்டு வீணை" எனச் சிந்தாமணியிற் காந்தருவதத்தையார் இலம்பகத்திற்காண்க. இது அங்கிலக்கருப்பொருள்களுள்ஒன்று. மைதடம்கண்-மையெழுதிய அக ன்ற கண்களையுடைய, மணம்கோலம்மகளிர்போல்-மணக்கோலத்தையுடை ய பெண்களைப்போல, வனப்புஎய்தி-அழகுவாய்ந்து, உவமையும்பொருளும் ஒற்றுமையுண்மையால்பொருளின்றொழிலையுவமைக்கேற்றித்தொழிலுவமம் ஆகக்கொள்க * பத்தர்உம் கோடுஉம் ஆணிஉம் நரம்புஉம்என்ற-பத்தர்கோடு ஆணிநரம்புஎனக் கூறப்பட்ட, இத்திறத்து குற்றம் நீங்கிய-இக்கூறுபாடுகெ ளாகிய வுறுப்புக்களின் கண்ணுள்ள குற்றத்தினின்று நீங்கிய, யாழ்கையில் தொழுதுவாங்கி-(வயந்தமாலை நீட்டிய) வீணையைக்கையாற்றொழுது வாங் கி,குற்றம் ஆவது ஒவ்வோருறுப்பிற்குக் கூறிய அளவையி னின்று வேறு படுதல். பண்ணல் - இணைகிளை பகை நட்பு ஆன நரம்புகள் பெயருந் தன்மை மாத்திரையறிந்து வீக்குதலும், பரிவட்டணை - வீக்கினநரம் பை அகம்புறமாகிய விரல்களால் கரணம்செய்து தடவிப்பார்த்தலும், ஆராய்தல்-ஆரோகண அவரோகண வகையாலிசையைத்தெரிதலும், தைவ ரல் - சுருதியேற்றலும், கண்ணிய - கருதத்தக்க, செலவு - ஆளத்தியிலே நிரம்பப்பாடுதலும், கையூழ் - பாடநினைத்தவண்ணத்தில் சந்தத்தை விடுத் தலும், விளையாட்டு - வண்ணத்திற்செய்த பாடல்களை யின்பமாகப் பாடு தலும், குறும்போக்கு என்று - குடகச்செலவு துள்ளற்செலவு பாடுதலும் என, நாட்டிய எண்வகைஆல் (இசைநூலில்) நிறுத்திய எட்டுவகையால்,

* கோடேபத்தர் ஆணிநரம்பே - மாடகமெனவரும் வகையினதாகும், இவையாழினுறுப்பு என அறிக.

இசை எழீஇ (குரல்முதலிய) இசைகளையெழுப்பி, * பண்வகையால் பரிவு தீர்ந்து - பண்ணின் வகையால் வருத்தநீங்க, தீர்ந்து வினையெச்சத்திரிபு. இசை பண்என இருவகைய ஆதலால் பண் என்றார். மரகதமணி தாழ் செறிந்த - மரகத வயிரங்களாலாகிய வளையல்செறிந்த, மணிகாந்தள் மெல் விரல்கள் - அழகிய காந்தள்போன் றகையிலுள்ள மெல்லிய விரல்கள், பயிர - ஒலியையுடைய, வண்டின் கிளைபோல - வண்டின் கூட்டம்போல் (வண்டினொலிபோல என்பதுபொருள்) "பசும்பொன்யாழ்-நரம்புதேனார்த் தெனத்தீண்டி" என ஷை இலம்பகத்தில்வருதல்காண்க. பண் - வீக்குதலமைந் த, நரம்பு இன்மிசை படர - நரம்பின்மேற்செல்ல, வார்தல் வடித்தல் உறழ் தல் உந்தல் - எடுத்தலும் படுத்தலும் நலிதலும் கும்பித்தலும், சீர்உடன்- முறையோடு, உருட்டல் தெருட்டல் எள்ளல் பட்டைஎன் - உருட்டலும் தெருட்டலும் எள்ளலும் பட்டையுமென, இசையோர் வகுத்த - இசை நூலோர்கூறிய, எட்டுவகையின் இசைகரணத்து பட்டவகை செவ்விது ஒரீஇ - எட்டுவகைப்பட்ட பண்ணின் கிரியையிற் பொருந்திய குற்றத்தைச் செவ்விதாகநீக்கி, இசையும்பண்ணும் வேறன்மையால் இசை என்றார். அன் பின் ஏவல்பணி ஆகஎன - அன்பினையுடைய ஏவலன் போலப்பணித்த வழி யில் நிற்கஎன, "மாலை-சூழ்மணிக்கோட்டு வீணைச்சுகிர்புரிநரம்புநம்பி-வாழ் மணி மிடறுமொன்றாய்ப் பணிசெய்தவாறு" என்றார் ஷை இலம்பகத்தில் கோவலன் கையாழ்நீட்ட - கோவலன்கையில் வீணையைநீட்ட, அவன்உம் காவிரியை நோக்கினஉம் கடல்கானல் வரிப்பாணிஉம் - அக்கோவலனும் காவிரியைக் கருதிய சிறப்புகளையும் கடலின்கண் கானல்வரி இசையையும், மாதவி தன்மனம் மகிழவாசித்தல் தொடங்கும் - மாதவியினது மனங்களி கூர வாசிக்கத் தொடங்குகின்றான். மன் ஏ அசை நிலைகள்.

## ஆற்றுவரி.

இடைமடக்காய் அறுசீரான்வந்த ஒருபோகு கொச்சகம்.

௧. திங்கண்மாலைவெண்குடையான்சென்னிசெங்கோலதுவோச்சிக்
கங்கைதன்னைப்புணர்ந்தாலும்புலவாய்வாழிகாவேரி
கங்கைதன்னைப்புணர்ந்தாலும்புலவாதொழிதல்கயற்கண்ணாய்
மங்கைமாதர்பெருங்கற்பென்றறிந்தேன்வாழிகாவேரி.

௨. மன்னுமாலைவெண்குடையான்வளையச்செங்கோலதுவோச்சிக்
கன்னிதன்னைப்பபுணர்ந்தாலும்புலவாய்வாழிகாவேரி
கன்னிதன்னைப்புணர்ந்தாலும்புலவாதொழிதல்கயற்கண்ணாய்
மன்னுமாதர்பெருங்கற்பென்றறிந்தேன்வாழிகாவேரி.

---

* பாவோடணைத லிசையென்றார் பண்ணென்றார் - மேவார்பெருந்தா னமெட்டானும்-பாவாய் - எடுத்தன்முதலா விருநான்கும் பண்ணி[illegible]படுத்த லையாற் பண்ணென்று பார்.

ந. உழவரோதைமதகோதையுடைநீரோதைதண்பதங்கொள்
விழவரோதைசிறந்தார்ப்பநடந்தாய்வாழிகாவேரி
விழவரோதைசிறந்தார்ப்பநடந்ததெல்லாம்வாய்காவா
மழவரோதைவளவன்றன்வளனேவாழிகாவேரி.

இவை மூன்றும் ஒருதொடர்கள்.

க. இ-ள். திங்கள் - சந்திரனையொத்த, மாலை வெண்குடையான்-முத்தமாலையையுடைய வெண்கொற்றக்குடையானாகிய, சென்னி-கரிகாற்பெருவளவன், செங்கோல் அதலைச்சி - செங்கோல்செலுத்தி, கங்கைதன்னைபுணர்ந்தால்உம் - கங்கையென்னுமகளைப்புணரினும், காவேரி - காவேரியே, புலவாய் - நீ பிணங்காய், கயல் கண்ணாய் - கயலாகிய கண்களையுடையாய், காவேரி - கங்கைதன்னை புணர்ந்தாலும் புலவாதொழிதல் - கங்கையென்னுமகளைப்புணரினும் நீ பிணங்காதிருத்தல், மங்கைமாதர் பெருங்கற்பு என்று அறிந்தேன்-பெண்களது பெருங்கற்பியலென்றறிந்தேன், வாழி - நீ வாழ்க.

இல்விற்குவந்த பாங்கிபிரிந்த தலைவனோ டோதுவக்குந் தலைவியைப் புகழ்தல். மெய்ப்பாடு உவகைஇவற்றைக்குறிப்பித்துநின்றது. ஆன்மாக்களிடத்துத் தண்ணளியையுடையன் என்பார்வெண்குடையான் எனவும், நடுநிலைமையினின்று கோடாதவன் என்பார் செங்கோலது ஓச்சிஎனவும், இவற்றோடு இவன் ஆண்ட எல்லை கங்கைக்கரை காறும் என்பார் கங்கை தன்னைப் புணர்ந்தாலும் எனவுங்கூறினார். கங்கை தன்னைப்புணர்தல் ஆளுகைமேல் நிற்றலால் உதாரவணி. பின்வருவதற்குங்கொள்க. நதியிற் கயலுளதாதலிற் கயற்கண்ணாய் என்றார். செங்கோலது அது பகுதிப்பொருள் விகுதி. முன்னின்ற வாழி முன்னிலை அசை.

உ. இ-ள். மன்னுமாலை வெண்குடையான் - நிலைபெற்ற முத்தமாலையையுடைய வெண்கொற்றக் குடையையுடைய கரிகாற்பெருவளவன், வளைய (எல்லாநிலமும்) தன்னுட்பட, செங்கோல் அதுஓச்சி-செங்கோல்செலுத்தி, கன்னி தன்னை புணர்ந்தால் உம் காவேரி புலவாய் - குமரியைப்புணரினும் காவேரி நீ பிணங்காய், கன்னி தன்னை புணர்ந்தாலும் புலவாது ஒழிதல்-குமரியைப்புணரினும் நீ பிணங்காதிருத்தல். கயல்கண்ணாய்-கயலாகியகண்களையுடையாய், காவேரி-மன்னுமாதர் பெருங்கற்பு என்று அறிந்தேன்வாழி-பெண்களது பெருங்கற்பிய லென்றறிந்தேன் நீ வாழ்க.

முன்னர் வடக்கினெல்லை கூறியதுபோல இதனால் தெற்கின் எல்லை கூறினார்.

ந. இ-ள். உழவர்ஓதை - உழுதொழில்செய்வோர் ஆரவாரமும், மதகம் ஓதை-யாகஞ்செய்வோர் ஆரவாரமும், உடைநீர் ஓதை (கோலியஅணையை) உடைத்துச்செல்லும் நீர்ப்பெருக்கி னாரவாரமும், தண்பதம்கொள்விழவர் ஓதை - [illegible]ப்புனல்விழவுகொள்வோரும் விழவினராரவாரமும், சிறந்துஆர்ப்பமிக்கொலிக்க், காவேரி நடந்தாய் - காவேரியே நீ நடந்தாய், விழவர்ஓதை-

புதப்புனல் விழவுகொள்வோர் ஆரவாரமும், வாய் கா வா-நீர் வரும் வழியைக்காத்த, மழவர்ஓதை - இளமைப்பருவமுடைய மள்ளர்கள்செய்யும் ஆரவாரமும், சிறந்துஆர்ப்ப - மிக்கொலிப்ப, நடந்ததுஎல்லாம் - நடத்தலெல்லாம், வளவன் தன் வளன் ஏ - கரிகாற்பெருவளவனது வெண்குடை செங்கோலின் வளங்களே, காவேரி - வாழி - வாழ்க. எ - று.

இவனதுவெண்கொற்றக்குடைசெங்கோல்இவைகளால்காவிரியினிடையறுவொழுக்கும் அதனால்வரும் செல்வங்களும் உளவாம் என்பார் வளவன்றன்வளனே என்றார். வாய் வழி "வாய்நன்கமையாக்குளனும்" என்பதனாலறிக. ஆற்றுவரி இசைப்பாவுறுப்பினுள் ஒன்று.

## சார்த்துவரி.

### அறுசீரான்வந்த ஒருபோகு கொச்சகம்.

இது நகர்மேற் சார்த்திக் கூறுதலால் சார்த்துவரி ஆயிற்று.

க. மோதுமுதுதிரையான்மொத்துண்டுபோந்தசைந்தமுரல்வாய்ச்சங்கம்
மாதர்வரிமணன்மேல்வண்டலுழுதழிப்பமாழ்கியைய
கோதைபரிந்தசையமெல்விரலாற்கொண்டோச்சுங்குவளைமாலைப்
போதுபுறங்கணிப்பப்போவார்கண்போகாப்புகாரேயெம்மூர்

உ. காதலராகிக்கழிக்கானற்கையுறைகொண்டென்பின்வந்தார்
ஏதிலர்தாமாகியாமிரப்பநிற்பதையாங்கறிகோமைய
மாதரார்கண்ணுமதிநிழனீரிணைக்கண்டுமலர்ந்தநீலப்
போதுமறியாதுவண்டூசலாடும்புகாரேயெம்மூர்.

ங. கரியமலர்நெடுங்கட்காரிகைமுன்கடற்றெய்வங்காட்டிக்காட்டி
அரியசூள்பொய்த்தாரறனிலரென்றேழையம்யாங்கறிகோமைய
விரிகதிர்வெண்மதியுமீன்கணமுமாமென்றேவிளங்கும்வெள்ளைப்
புரிவளையுமுத்துங்கண்டாம்பல்பொதியவிழ்க்கும்புகாரேயெம்மூர்.

இவை மூன்றும் ஒருதொடர்கள்.

(க.) மோதுமுது திரையால் மொத்துண்டு - கரையொடு பொருதும் பெரிய அலையால் தாக்கப்பட்டு, போந்து அசைந்த சங்கம் முரல்வாய், (அதினின்று) நீங்கித் தளர்ந்த சங்குகள் ஒலிக்கும் வாயால், மாதர்வரி மணல்மேல் வண்டல உழுதுஅழிப்ப — அழகிய நிறத்தையுடைய மணலின்மேல் மகளிர் விளையாட்டை யுழுதழிக்காநிற்ப, மாழ்கி - மயங்கி, கோதைபரிந்து அசைய - (கடைகூடாக்) கூந்தல்கட்டினின்று சோர, மெல்விரலால் கொண்டு ஓச்சும் குவளைமாலை போது புறங்கணிப்ப - (தமது) மெல்லியவிரல்களால் கொண்டு ஓச்சாநிற்கும் குவளைமாலையின் கண்ணுள்ளமறைப்புறத்தில்) கடைக்கணித்தலால், போவார் கண்போகா புகார் ஏ எம்மூர்-செல்

னும் விளையாட்டுமகளிர் கண்கள் (செல்லும் வழிமேற்) செல்லுதலொழிந்த காவிரிப்பூம்பட்டினமே எமதூராம்.

கரிகாற் பெருவளவனது ஆற்றைப்புகழ்ந்துகூறி, அதனாற் சிறந்த நகர்ச்சிறப்புக் கூறுவார் தலைவியிளமைத் தன்மை பாங்கிகூறல் என்னுந் துறைமேலேற்றிக் கூறினார். தாம் விளையாடும் சிற்றிலைச்சிதைத்த சங்கினை வெகுண்டு கடைகூடாத கூந்தல்கூடக் கட்டிய குவளைமாலையைக் கொண்டு ஓட்டுதலால் வெகுளியென்னும் மெய்ப்பாடும் அம்மாலையின் கண்ணுள்ளமலர் விழிப்பைப் பார்ப்போர் நோக்காக மருண்டமையால் மருட்கையென்னு மெய்பாடும் காண்க. ஐயஅசைநிலை. போதுகிண்கிணிவாய்க் கொள்ளுமலராதலால் புறங்கணிப்ப என்றார். ஏ பிரிநிலை.

உ. இ-ள். கழிகானல் காதலர்ஆகி - கழியின்கண்ணுள்ள கானலில் (என்மேல்) விருப்பமுடையராய், கையுறைகொண்டு என்பின்வந்தார் — கையுறையேந்தி (யான்ஏற்கும்சமயம் நோக்கி) என்பின்வந்து நின்றதலைவர், தாம் ஏதிலர்ஆகி(இன்று)தாம அயலாராகி, ஆங்குயாம் இரப்பநிற்பது அறிகோம்-அவ்விடத்து (இன்று) நாம் இரக்க நிற்றலையறியா நிற்போம், மாதரார் கண்ணும்—பெண்களது கண்ணையும், மதிநிழல் நீரிணைகண்டு மலர்ந்த நீலம் போதும்—சந்திரனது கிரணத்தின் றன்மையைப்பார்த்து மலர்ந்த நீலமலரையும், அறியாது வண்டு ஊசலாடும் புகார் ஏ எம்மூர்—(வேறுபாடறியாமல்) வண்டுகள் ஊசல்போல வருவதுபோவதுமாய்த்திரியும் புகாரே யெம்மூராம்.

ஏதிலர்தாமாகி என்றமையால் அமையம்நோக்கி நின்றதலைவன் இன்று அயலான்போல் காலந்தாழ்த்தமையால் தலைவன்மேற் பாங்கி குறிபிழைப்பேற்றல் என்னும் துறையும் மெய்ப்பாடுவருத்தமும், இவன் குறிமருண்டமையை வண்டின்மேலேற்றி உள்ளுறையுவமமும் படக்கூறினார். அறிகுவோம் அறிகோம் தொகுத்தல். மாதரார் அழகினையுடையார். தலைவன்சிறைப்புறமாகக் கூறினமையால் ஆங்குஎன்றது படர்க்கையிடத்தானுகிய தலைவனை யெனவறிக.

௩. கரியமலர் நெடுங்கண் காரிகை—நீல்மலர்போலும் நெடியகண்களையுடைய பாங்கியே, கடல்தெய்வம் முன்—வருணன் முன்னர், காட்டி காட்டி (உன்னை)பிரியேனென்று வற்புறுத்திக்கூறி, அரியசூள் பொய்த்தார்-(ஒருவழித்தணத்தலால்) அரியசூளினின்றும் தவறினார், அறன் இலர் என்று - அறமில்லாதவரொன்று (நீ இயற்பழித்தலால்) ஏழையம்யாங்கஅறிகோம் (ஏழையமாகிய நாம்எவ்விடத்து (அறனிலரென்று) அறிவோம், விரிகதிர்வெண்மதிஉம் மீன்கணம் உம்ஆம் என்று—விரிந்தகிரணத்தையுடைய வெள்ளிய சந்திரனும் நட்சத்திரமுமாமென்று, விளங்கும் வெள்ளைபுரி வளைஉம் முத்துஉம் - விளங்காநின்ற வெள்ளியவிரும்பும் சங்கையும் முத்தையும் — பார்

த்த, ஆம்பல்போதிஅவிழ்க்கும்—ஆம்பலரும்புமுறுக்கவிழ்க்காநிற்கும், புகாரே யெம்மூர்.

கடற்றெய்வங்காட்டிக் காட்டி அரியசூள்பொய்த்தார் என்பது தலைவி நெஞ்சொடு புலத்தலும், அறனிலனென்பது பாங்கியியற்பழித்தலும், ஏழையம் யாங்கறிகோம் என்பது தெய்வம் பொறைகொளச் செல்வோம் என்றலும், மெய்ப்பாடுவருத்தமும் இளிவரலும் அச்சமும், சங்கைச் சந்திரனென்றும் முத்தைநட்சத்திரமென்றும் ஆம்பல் கருதிமலர்தல் கூடவுளதாய போது பிரிவுமுளதாக அவற்றைக் கருதாமல் தலைவன்கூறியதையே கூற்றாகப்பற்றிநின்றமை மேல்நிற்றலால் உள்ளுறையுவமமுங்காண்க. காட்டிக் காட்டிதொழிற்பன்மைபடுக்கு இதுவற்புறுத்தல்மேல்நின்றது. தாம்கூறிய சூள்தப்பில் தெய்வம் கடுந்துன்பஞ்செய்யும் என்பதுதோன்ற அரியசூள் என்றார். யாங்கு வினாவிடைசசொல்லடியாகப்பிறந்த இடப்பெயர்ச்சொல். கடற்றெய்வம் எனக் கருப்பொருள் கூறினார் "தெய்வமுணாவே மாமரம் புட்பறை - செய்தியாழின் பகுதியொடுதொகை இ - அவ்வகைபிறவும் கரு வென மொழிப" தொ-பொருள்-அகத்திணையியல்-௧௮ - கூ.

கானல்வரி.

இசைப்பாவினுள் ஒன்று.

ஒரொலிவெண்டுறை.

க. துறைமேயவலம்புரிதோய்ந்துமணலுழுததோற்றமாய்வான்
பொறைமலிபூம்புன்னைப்பூவுதிர்நுண்டாதுபோர்க்குங்கானல்
நிறைமதிவாண்முகத்துநேர்கயற்கண்செய்த
உறைமலியுய்யாநோயூர்சுணங்குமென்முலையேதீர்க்கும்போலும்

உ. நிணங்கொள்புலாலுணங்கனின்றுபுள்ளோப்புதலைத்தலைக்கிடாக்
கணங்கொள்வண்டார்த்துலாங்கன்னிநறுஞாழல்கையில் ~~ஏந்தி~~ ஏந்தி
மணங்கமழ்பூங்கானன்மன்னிமற்றாண்டோர்
அணங்குறையுமென்பதறியேனறிவனேலடையேன்மன்னோ.

௩. வலைவாழ்நர்சேரிவல்லியுணங்குமுன்றின்மலர்க்கையேந்தி
விலைமீனுணங்கல்பொருட்டாகவேண்டுருவங்கொண்டுவேறோர்
கொலைவேனெடுங்கட்கொடுங்கூற்றம்வாழ்தல்
அலைநீர்த்தண்கானலறியேனறிவனேலடையேன்மன்னோ.

கந்தருவம்.

நாற்சீரான் இடைமடக்காய்வந்த தாழிசை ஒருபோகு கொச்சகம்.

௪. கயலெழுதிவில்லெழுதிக் காரெழுதிக்காமன்
செயலெழுதித்தீர்ந்தமுகந் திங்களோகாணீர்
திங்களோகாணீர்தி மில்வாணர்சிறூர்க்கே
அங்கணேர்வானத் தரவஞ்சிவாழ்வதுவே.

௫. எறிவளைகளார்ப்ப விருமருங்குமோடும்
கறைகெழுவேற்கண்ணோ கடுங்கூற்றங்காணீர்
கடுங்கூற்றங்காணீர் கடல்வாணர்சிறூர்க்கே
மடங்கெழுமென்சாயன் மகளாயதுவே.

௬. புலவுமீன்வெள்ளுணங்கல் புள்ளோப்பிக்கொண்டார்க்
கலவனோய்செய்யு மணங்கிதுவோகாணீர்
அணங்கிதுவோகாணீ ரடம்பமர்தண்கானல்
பிணங்குநேரைம்பாலோர் பெண்கொண்டதுவே.

வேறு.

௭. பொழிறருநறுமலரேபுதுமணம்விரிமணலே
பழுதறுதிருமொழியேபணையிளவனமுலையே
முழுமதிபுரைமுகமேமுரிபுருவவிலிணையே
எழுதரியமினிடையேயெனையிடர்செய்தவையே.

௮. திரைவிரிதருதுறையேதிருமணல்விரியிடமே
விரைவிரிதருமலரேமிடைதருபொழிலிடமே
மருவிரிபுரிகுழலேமதிபுரைதிருமுகமே
இருகயலிணைவிழியேயெனையிடர்செய்தவையே.

௯. வளைவளர்தருமணலேமணம்விரிதருபொழிலே
தளையவிழ்நறுமலரேதனியவடிரியிடமே
முளைவளரிளநகையேமுழுமதிபுரைமுகமே
இழைவளரிளமுலையேயெனையிடர்செய்தவையே.

இவை ஒன்பதும் ஒருதொடர்கள்.

௪. இ-ள். துறைமேய - நீர்த்துறையிற் பொருந்திய, வலம்புரி மணல் தோய்ந்து உழுத-வலம்புரிச்சங்கு மணலிற்றோய்ந்து மூக்காலுழுத, தோற்றம் மாய்வான் - காட்சி கெட, பூ புன்னை பொறைமலி - பொலிவையுடைய புன்னையிற் பாரமாக மிக்க, பூஉதிர்நுண்தாது போர்க்கும்கானல் - பூக்கள்சிந்திய நுண்ணியமகரந்தமூடும் கானலின்கண், நிறைமதி - கலைநிறைந்த, வாள்முகத்து, ஒளிபொருந்தியமுகத்தில், நேர்கயல்கண்செய்த - (தம்மில்) ஒத்தகயல்போன்ற கண்கள்செய்த, உறைமலி (என்னினின்று) நீங்காத மிக்க, உய்யாநோய் - பிழைத்தற் கரியவிரகநோயை, சுணங்கு ஊர் மெல் முலைதீர்க்கும் - தேமல் பரவிய மெல்லியதனமே தீர்க்காநிற்கும்.

போலும் ஒப்பில்போலி, தலைவனெஞ்சொடு கிளத்தல் - மெய்ப்பாடு அச்சத்திற்பெருமிதம், துறைசெயப்படு பொருளில் வந்த தொழிற்பெயர் துறு பகுதி. மாய்வான் வான் வினையெச்ச விகுதி.

உ. நிணம் கொள்புலால் உணங்கல்நின்று - நிணங்கொண்ட புலாலுண ங்கலின் கண்ணின்று, புள்ஓப்புகாலை - (கவரவரும்) காக்கைகளை யோட் டுங் காலத்தில், தலைக்கு ஈடாக (அச்சிறுமியர்களுக்கு) உதவியாக (ஓட்டுதல் போல) கணம்கொள்வண்டு ஆர்த்து உலாம்—கூட்டங்கொண்டவண்டுகள் ஒலித்துஉலாவும், கன்னிநறுஞாழல் கையில்ஊன்றி—கன்னித் தன்மையை யும் நல்லவாசனையையுமுடைய குங்குமமரங்கள் அவ்விடங்களில் நிலைபெ ற்று, மணம் கமழ் பூகானல்—வாசனைகமழும் பொலிவையுடைய கானத் தில், மன்னிஆண்டு ஓர் அணங்கு உறையும்என்பது—நிலைபெற்று அவ்விடத் து ஒருபிணித்தெய்வம் வசிக்கும் என்பதை, அறியேன் — நான் அறியேன், அறிவனேல் அடையேன்—அறிவேனாகில் நானங்குச்சேரேன்.

புள்ளோப்புவார்க் குவண்டுகளும் ஒப்பி உதவிசெய்யும்என்பார்கணங் கொள்வண்டார்த்துலாம் என்றார். தலைவன்நெஞ்சொடு புலந்துகூறல். மெ ய்ப்பாடு அச்சம், கன்னியெயில் குமரிவாழை எனவழங்குதல்போலக்கன்னி ஞாழல்என்றார் இது குணவணி.

ங. வலைவாழ் நர்சேரி-வலையான்முபன்றுண்ணும் பரதர் சேரியின்கண், வலைஉணங்கு முன்றில்-வலைபுலருமுற்றத்தில், மலர்கையேந்தி - மலர்போன்ற கையின்கணேந்தி, மீன்உணங்கல்விலைபொருட்டாக - மீனுணங்கல்விற்கும் பொருட்டாக, கொலைவேல்நெடும்கண்-கொல்லும்வேல்போன்றநெடியகண் களையுடைய, வேறு ஓர் கொடும்கூற்றம் - வேறொரு கொடிய இயமன், வேண்டுஉருவம்கொண்டு-விரும்பும்அந்நிலச்சிறுமியருருவத்தைக்கொண்டு, அலைநீர் தண்கானல் வாழ்தல்அறியேன் — அலைக்கும் நீரையுடைய குளிர்ந்த கானலின்கண் வாழ்தலையறியேன், அறிவனேல் அடையேன் - (நான்) அறி வேனாகிற்சேரேன்.

விலைதொழிற்பெயர் அதுபெயரெச்சப்பொருளில்வந்தது. கூற்றம்சொ ல்லால் அஃறிணையாதலால் வேறு என்றார்.

ச. கயல்எழுதிவில் எழுதி கார் எழுதி - கண்களும் புருவமும் கூந்தலும் எழுதி, காமன்செயல் எழுதிதீர்ந்த - காமனது செயல்கள் எழுதிமுடிந்த, முகம் ஓதிங்கள் காணீர் - முகமோசந்திரன் (அதனைக்) காணுகிற்பீர், திங் களோ - அச்சந்திரனே, திமில்வாணர் சிறூர்க்குஏ-பரதர் சிற்றூரின் கண் ணே, (நீர்செல்லில்) அம் கண் நேர்வானத்து - அழகிய இடம்பொருந்திய வானத்தின்கண், அரவு அஞ்சிவாழ்வது காணீர் (தனக்குப்பகையாயுள்ள) இராகுவையஞ்சி வாழ்தலைக்காணுகிற்பீர்.

திங்கள் கலை நிறைந்தசந்திரன். தீர்ந்த என்பது தொழில்முடிந்த என் பதன்மேல்நின்றது. காமன்செயல் ஆவதுபிறரைத் தன்வசப்படுத்துகை பாங்கற்குக்குறை நேர்தலைவன், தலைவியியலிடங்கூறுநிற்றல் துறை, மெய்ப் பாடு உவகை. நிலமக்கள் திமில்வாணர், முதற்பொருளாகிய நிலம் சிற்றூர்.

மற்றையவற்றிற்கும் ஒக்கும்-வினைப்பொருளில் வந்த ஓகாரம்பொருத்த மில் புணர்ச்சி. வாழ்நர் வாணர் மரூஉ. குஉருபுமயக்கம். ஏபிரிநிலை. வாழ்வது இடைநிலைபெற்றுவந்த தொழிற்பெயர். அகரச்சுட்டுத் தொகுத்தல்.

௫. எறிவளைகள் ஆர்ப்ப (தனது கையிலணிந்த) ஒளி வீசும்வளையல்கள் ஒலிப்ப, இருமருங்கு உம் ஓடும்-இரண்டுகுண்டலத்தின் சண்ணும் ஓடிப் பாயும், கறைகெழுவேல்கண்ஓ - உதிரந்தோய்ந்த வேல்போன்ற கண்ணோ கடுங்கூற்றம் - கடியயமன், காணீர் - காணுகிற்பீர், கடுங்கூற்றம் - அக்கடியஇயமன், கடல்வாணர் சிறூர்க்கு - பரதர்சிற்றூரில், மடம்-அறியாமையையும், கெழுமென்சாயல் மகள் ஆயது காணீர் - மிக்கமென்மைத் தன்மையையு முடைய பரத்தியா யிருத்தலைக் காணு கிற்பீர்.

கடுமைகடியென்னும் உரிச்சொற்றிரிபு "சாயன்மென்மை" தொ-உரி-உகூ. ரு. மென்சாயல் "ஒருபொருளிரு சொற்பிரிவிலவரையார்" ஷை எச்சவியல். கூச-ரு. சாயல் என்பதனிறுதியில் எண்ணும்மை தொகுத்தல்.

௬. புலவு - புலால் நாற்றத்தையுடைய, மீன்வெள் உணங்கல்—மீனுகிய வெள்ளிய உணங்கலை, புள்ஓப்பிகொண்டார்க்கு—(கவரவரும்) காக்கையையோட்டும் பரத்தியருள், அலவல்நோய் செய்யும்—துன்பநோய் செய்யா நிற்கும், அணங்குஓ—தெய்வப்பெண்ணோ, இது—இவ்வுருவம், காணீர்—காணுகிற்பீர், அணங்குஇதுஓ—அத்தெய்வப் பெண்ணோ, அடம்பு அமர்—அடப்பங்கொடி நிறைந்த, தண்கானல்—குளிர்ந்தகானலின்கண், பிணங்கு நேர்ஐம்பால்—இடைவெளியின்றிநெருங்கிக்கடை யொத்தகூந்தலையுடைய, ஓர்பெண்கொண்டது—ஒருபெண்வடிவங்கொண்டிருத்தலை, காணீர்—காணுகிற்பீர்.

மீன்வெள்ளுணங்கல் புள்ளோப்பிக்கொண்டார் செய்தி. அடம்புவார் கொடி. ஐம்பால் ஐந்துவகையாய்முடித்தல் ஐந்தாகியபகுப்பினை யுடையது எனப் பண்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்த வன்மொழித்தொ கை. இதனைக்கடலாட்டுக்காதையிற்காண்க. உணங்கல் (காய்தல்) தொழிலாகுபெயர். வற்றல் என வழங்குதல் காண்க. ஓப்பிக்கொண்டார் தற்செயலில் வந்த வினையாலணையும்பெயர். ஓப்பு பகுதி, இகரச்சாரியை, உகரக்கேடும் ககரத் தோற்றமும் சந்தி, கொள் தற்செயலில்வந்த விகுதி, அனைத்தும் ஒருபகுதி. ஓம்பு ஓப்புவிகாரம். கொள்விகுதி தொல்காப்பி யச்சூத்திரவிருத்தியுட் காண்க. அலவல் தொழிற்பெயர் அலம் பகுதி. கு உருபு மயக்கம்.

எ. பொழில்தருநறுமலர் ஏ - சோலைகள் தரும்நல்ல வாசனையையுடைய மலர்களே, புதுமணம் விரிமணல் ஏ - (மலர்கள்சிந்திக் கிடத்தலால்) புதிய மணம்வீசும்மணற்குன்றுகளே, என்னை இடர்செய்தவை - என்னை வருத்திய பொருள்கள், பழுது அறுதிருமொழி ஏ-பணைஇளவனமுலை ஏ - குற்றமற்ற

தலைவியின் சொற்களுமே பெருத்தமுதிராத சந்தனக்கோலத்தை யுடைய தனங்களுமே, முழுமதிபுரைமுகம் ஏ-முரிபுருவம்வில் இணை ஏ-கலைநிறைந்த சந்திரனையொத்த முகமுமே (நெரிதலால்) நிலையினின்று பிறழ்ந்தபுருவமாகியவில்லிரண்டுமே, எழுது அரியமின் இடை ஏ-(உருவில்லாமையால்) சித்திரமெழுதற்கரிய மின்னல்போன்ற இடையேயாம்.

நெய்தனிலத்திற்கு உரிப்பொருள் இரங்கல் ஆதலால் அஃறிணைப்பொருள்களைக்கேட்குநபோல முன்னிலைப்பாற்படுத்தி என்னைத்துன்பஞ் செய்தன இவையென்றுகூறுதலால் தலைவனிரங்கல். இதுபுலனெறிவழக்கல்லாத துறை.மற்றை யவற்றிற்கும் இஃது ஒக்கும். மலரோமணலே விளிவேற்றுமை மற்றை ஏகாரங்கள் பிரிநிலைப்பொருளன.

அ. திரைவிரிதருதுறையே திருமணல்விரியிடமே -'அலைவிரிந்தநீர்த்துறையே அழகியமணல்பரந்த இடமே, விரைவிரிதருமலரோ மிடைதரு பொழில் இடமே - வாசனையொடு மலர்ந்தமலரோ இடமின்றிமரங்கள் நெருங்கிய சோலையிடமே, எனை இடர்செய்தவை - என்னையிடர் செய்தபொருள்கள் மருவிரிபுரிகுழல் ஏ மதிபுரைதிருமுகம் ஏ - வாசனைநீங்காத புரியையொத்த கூந்தலுமே சந்திரனையொத்த அழகியமுகமே, இருகயல் இணைவிழி ஏ இரண்டுகயல்களையொத்த இரண்டுகண்களுமேயாம்.

கூ. வளைவளர்தருமணலே மணம்விரிதருபொழிலே-சங்குகள்கண்வளருமணற்குன்றே வாசனைபரந்தசோலையே, தளை அவிழ்நறுமலரோ தனி அவள்திரி இடமே - கட்டவிழ்ந்த வாசனையையுடைய மலரோதனித்து அத்தலைவி உலாவும்.இடமே, என்னை இடர்செய்தவை - என்னைத்துன்பஞ் செய்தபொருள்கள், முளைவளர் இளநகை ஏ - அங்குரம்போலவிளங்கும்விளக்கமுடையபற்களே, முழுமதிபுரைமுகம் ஏ-சந்திரனை யொத்தமுகமே, இழைவளர் இளமுலை ஏ - ஆபரணமிடையறுத முதிராத தனங்களேயாம்.

மூன்றிடத்துமுகத்தைப் புகழ்ந்துகூறியது காட்சிக்குரிய பொருளாதலால்என்க. புகுமுகம்புரிதலுள் அடங்கும். அதாவது ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டவழித் தன்னைப்பவனைக் குதற்கண்விரும்புமுள்ள நிகழ்ச்சி.

## தி ணை நி ல வ ரி.

இதுவும் அது.

ச. கடல்புக்குயிர்கொன்றுவாழ்வர்நின்னையர்
உடல்புக்குயிர்கொன்றுவாழ்வைமன்னியும்
மிடல்புக்கடங்காதவெம்முலையோர்பாரத்
திடர்புக்குகுமின்னிடையிழவல்கண்டாய்.

உ. கொடுங்கண்வலையாலுயிர்கொல்வர்நுந்தையர்
நெடுங்கண்வலையாலுயிர்கொல்வைமன்னீயும்
வடங்கொண்முலையான்மறைமின்னுப்போல
நுடங்கியுகுமென்னுசுப்பிழவல்கண்டாய்.

ங. ஓடுந்திமில்கொண்டுயிர்கொல்வர்நின்னையர்
கோடும்புருவத்துயிர்கொல்வைமன்னீயும்
பீடும்பிறரெவ்வம்பாராய்முலைசுமந்து
வாடுஞ்சிறுமென்மருங்கிழவல்கண்டாய்.

வேறு.

இடை மடக்காய் வந்தது.

ச. பவளவுலக்கை கையாற்பற்றித்
தவளமுத்தங்குறுவாள்செங்கண்
தவளமுத்தங்குறுவாள்செங்கண்
குவளையல்லகொடியகொடிய.

ரு. புன்னைநீழற்புலவுத்திரைவாய்
அன்னநடப்பநடப்பாள்செங்கண்
அன்னநடப்பநடப்பாள்செங்கண்
கொன்னேவெய்யகூற்றங்கூற்றம்.

சு. கள்வாய்நீலங்கையிலேந்திப்
புள்வாயுணங்கல்கடிவாள்செங்கண்
புள்வாயுணங்கல்கடிவாள்செங்கண்
வெள்வேலல்லவெய்யவெய்ய.

ஈற்றயலடி யொழிப ஏனையடி மடக்காய் வந்தது.

எ. சொன்மடவன்னஞ்சொன்னடையொவ்வா
ஊர்நீரோதமூழ்கித்திரிவாண்முன்
சொன்மடவன்னஞ்சொன்னடையொவ்வா.

இவை ஏழும் ஒரு தொடர்கள்.

க. இ-ள். நின்ஐயர்-உனது தந்தை மார்; கடல்புக்கு-கடலிற்சென்று, உயிர் கொன்றுவாழ்வர் - மற்றோருயிரைக்கொலைசெய்து அதனால் வாழாநிற்பர், நீஉம்உடல்புக்கு - நீயுமக்களுடம்புட்சென்று, உயிர்கொன்றுவாழ்வைமன் - உயிரைக்கொலைசெய்து அதனால்வாழாநிற்பாய் (உமதுதொழிலிதுவாதலால்) மிடல்புக்கு அடங்காத - வலிமையமைந்து அடங்குதலில்லாத, வெம்முலை ஓர் பாரத்து - விருப்பந்தருந்தனமாகிய ஒருபாரத்தால், இடர்புக்குஉகும்-

தேய்ந்தசிதையும். மின் இடை இழவல் கண்டாய்-மின்னலையொத்த இடையையிழத்தலைக்காணாய்.

பிறர்க்கு முன்னர்த் துன்பஞ்செய்வோர் பின்னர்த்தாம் பெருந்துன்பம் அடைவர் என்பதுதோன்ற முன்னர்க்குலத்தியல்புகூறி உறுவது கூறலாக மின்னிடையிழவல்கண்டாய் என்றார். மெய்ப்பாடு அச்சம். அறிவையுஞ் சிதைப்பாய் என நிற்றலாய் மன் ஆக்கத்தில் வந்தது. தெளிவுபற்றிக் கண்டாய் என எதிர்காலத்தையிறந்த காலமாகக்கூறினார். கடல்புக்குயிர் கொன்று வாழ்வர் செய்த.

உ. நுந்தையர் - உமதுதந்தைமார், கொடுங்கண்வலை ஆல் - வளைந்தகண்ணையுடையவலையினால், உயிர்கொல்வர், உயிர்கொல்லாநிற்பர், நெடுங்கண் வலையால் - நெடியகண்ணாகிய வலையினால், நீயும் உயிர்கொல்வைமன் - நீயும் உயிரைக்கொல்லாநிற்பாய், வடம்கொள்முலையால் - முத்துவடமணிந்ததனபாரத்தால், மழைமின்னுப்போல - வானத்தில்மழையுமின்னுப்போல, நுடங்கி உகும்மெல்நுசுப்பு இழவல்கண்டாய் - துவண்டுமெலிபுமெல்லிய இடையிழத்தலைக்காணாய்;

ங. நின்ஐயர் - உனதுதந்தைமார், ஒடும்திமில்கொண்டு உயிர்கொல்வர் (கடலில்) செல்லுந்தோணியால் உயிரைக்கொலைசெய்யாநிற்பர், நீயும் கோடும்புருவத்து உயிர்கொல்வைமன் - நீயும்வளைந்த புருவத்தாலுயிர்கொல்லாநிற்பாய், பிறர்பீடும் எவ்வம்பராய் - (நின்னால்) பிறர்மிகவும் (வருந்தும்) துன்பத்தைப்பாராய், முலைசுமந்துவாடும் சிறுமெல்மருங்குஇழவல் கண்டாய்-முலைசுமத்தலால் வாடாநின்ற சிறியமெல்லிய இடையை இழத்தலைக்காணாய்.

பீடும் பண்புப்பெயரடியாகப்பிறந்த பெயரெச்சம் பீடு பகுதி.

ச. பவள உலக்கை கையால்பற்றி-பவளக்கொடியை உலக்கையாகக்கையிற்பற்றி, தவளம்முத்தம் குறுவாள் செங்கண் - வெள்ளிய முத்தத்தை (அரிசியாகக்கொண்டு) குற்றம்பரத்தின் செவந்தகண்கள், குவளை அல்ல (நண்ணிய அன்மையால்) குவளை மலரல்ல, கொடியகொடிய (கொலைசெய்தலால்) கொடியனவாம்.

படைத்துமொழிகிளவி. மெய்ப்பாடு அச்சம். பவளம் முத்தம் கருப்பொருள்கள். கொடியகொடிய தொழிற்பண்மைப்பொருளில்வந்த அடுக்கு. தனக்கு வருத்தஞ்செய்தலின் வேறொன்றாகக் கற்பித்துக்கூறினமையால் படைத்துமொழி கிளவியாயிற்று.

ரு. புன்னைநீழல் - புன்னைமரத்தினிழலில், புலவுதிரைவாய் - புலால்நாற்றமுடைய அலைதவழும் இடத்தில், அன்னம்நடப்ப - அன்னம்கற்றுநடக்க, நடப்பாள்செம்கண் - நடக்கின்றவள் செவந்தகண், கொன்னே - வாளா, வெய்யகூற்றம்கூற்றம் (உயிரைக்கவர்தலால்) கொடிய இயமனும்.

புன்னை மரம், அன்னம் புள். கூற்றம்கூற்றம் துணிவுப்பொருளில் வந்த அடுக்கு.

சு. கள்வாய் நீலம் கையில் ஏந்தி - கள்ளமைந்த குவளை மலரைக் கையிலேந்தி, உணங்கல் வாய்புள் கடிவாள் செம்கண் - மீனுணங்கலைக் கவர வரும் புள்ளை ஓட்டுவாளது செவந்தகண்கள், வெள்வேல் அல்ல - நிணம் தோய்ந்தவேலல்ல, வெய்யவெய்ய (எப்பொழுதும் தீமையைத்தருதலால்) தியனவாம்.

எ. ஊர் ஓதம்நீர் - தவழும் அலைநீரில், மூழ்கிதிரிவாள்முன் - முழுகியுலவும்பரத்தியின்முன், சொல்நடை-புசமும் (அவளது) நடையை, சொல்மடமை அன்னம் ஒவ்வா - சொல்லும் அறியாமையையுடைய அன்னங்கள் ஒப்பாகா.

கட்டுரை.

ஆங்குக்கானல்வரிப்பாட்டின்பாணிகேட்டுவரிமானெடுங்கண்மாதவி—மன்னுமோர்குறிப்புண்டவன்றன்னிலைமயங்கினனெனக்—கலவியான்மகிழ்ந்தனள்போற்புலவியால் யாழ்வாங்கித் — தானுமோர் குறிப்பினள்போற் கானல்வரிப்பாட்டின்பாணி — நிலத்தெய்வம்வியப்பெய்த நீணிலத்தோர் மனமகிழக் — கலத்தொடு புணர்ந்தமைந்த கண்டத்தாற்பாடத் தொடங்குமன்.

இ-ள். ஆங்கு-கேட்டு-வரிபொருந்தியமான்போன்றநெடியகண்களையுடையமாதவி யென்பவள், அவ்விடத்துக் (கோவலன்பாடிய) கானல்வரிப்பாட்டினிசைகேட்டு, மன்னும் — மயங்கினன் என — நிலைபெற்ற ஓர் குறிப்பினைப்பொருந்திய கோவலன் றனது நிலையினின்று மயங்கினனென்று, கலவியால்—வாங்கி—புணர்ச்சியால்களிகூர்ந்தவள்போலப் பிணக்கோடுவீணையைவாங்கி, தான் உம்—வியப்பு எய்த—தானும் ஒருகுறிப்பினள்போலக் கானல்வரிப் பாட்டினிசையால் செய்த நிலத்துக்குரிய தெய்வம் அதிசயிப்ப, நீள் நிலத்தோர்—மன்—அகன்றவுலகிலுள்ளோர் மனங்களிப்யாழோடு பொருந்தியமைந்த கண்டத்தால் பாடத்தொடங்கினள். மன அசைநிலை. உண்ட அசரவீறு தொகுத்தல். கலம்யாழ்.

ஆற்றுவரி.

இடைமடக்காய் அறுசீரான்வந்த ஒருபோகு கொச்சகம்.

க. மருங்குவண்டுசிறந்தார்ப்பமணிப்பூவாடையதுபோர்த்துக்
கருங்கயற்கண்விழித்தொல்கிநடந்தாய்வாழிகாவேரி
கருங்கயற்கண்விழித்தொல்கிநடந்ததெல்லாநின்கணவன்
திருந்துசெங்கோல்வளையாமையறிந்தேன்வாழிகாவேரி.

உ. பூவார்சோலைமயிலாலப்புனப்பூங்குயில்களிசைபாடக்
காமர்மாலையருகசைய நடந்தாய்வாழிகாவேரி
காமர்மாலையருகசைய நடந்ததெல்லாநின்கணவன்
நாமவேலினிறங்கண்டேயறிந்தேன்வாழிகாவேரி.

ங. வாழியவன்றன்வளநாட்டின்மகவைவளர்க்குந்தாயாகி
யூழியுய்க்கும்பேருதவியொழியாய்வாழிகாவேரி
யூழியுய்க்கும்பேருதவியொழியாதொழுகலுலகோம்பும்
ஆழியாள்வான்பகல்வெய்யோனருளேவாழிகாவேரி.

இவை மூன்றும் ஒருதொடர்கள்.

க. மருங்கு - பக்கத்தில், வண்டு (வளையல்) வண்டுகள், சிறந்து ஆர்ப்ப - மிக்கொலிப்ப, மணிபூ ஆடை அதுபோர்த்து - அழகிய (பொலிவையுடைய) பூவாகிய ஆடையைப்போர்த்து, கருங்கயல்கண்விழித்து - கரியகயலாகிய கண்ணைவிழித்து, காவேரி ஒல்கிநடந்தாய் - காவேரியேதுவண்டுநடந்தாய், கருங்கயல் - நடந்தது எல்லாம்—அவ்வாறு நடத்தலெல்லாம் - நின்கண வன் - உனதுகணவனாகிய கரிகாற்பெருவளவன், செங்கோல் வளையாமை அறிந்து - செங்கோல்கோடாமையை யறிந்து, காவேரி - அறிந்தேன் (நானும்) அறிந்தேன்.

காவேரி அண்மைவிளி. மருங்குவண்டுசிறந்தார்ப்ப மணிப்பூவாடை யது போர்த்து செம்மொழிச்சிலேடை - அறிந்து என்னும் வினையெச்சம் தன்முடிபாகிய நடந்ததஎன்னும் தொழிற்பெயரி னிறுதியில் நின்றது.

உ. பூ ஆர் சோலைமயில்ஆல - மலர்நிறைந்த சோலையில் மயில்கள் கூத் தாட, புனம்பூ குயில்கள் இசைபாட - புனத்திலுள்ள பொலிவையுடைய குயில்க ளிசைபாடாநிற்க, காமர் மாலை அருகு அசைய - விருப்பந்தருமலர் மாலையருகிலசையாநிற்ப, காவேரி நடந்தாய், காமர்—நடந்ததெல்லாம்— இவ்வாறு நடத்தலெல்லாம், நின்கணவன்-உனதுகணவனாகிய கரிகாற்பெ ருவளவனது, நாமம் - அச்சத்தைத்தரும், வேலின்நிறம் கண்டு — வேலி னொளியைக்கண்டு, காவேரி—அறிந்தேன் - (நானும்) அறிந்தேன்.

தங்கணவர் களிகூரத் தாங்களிகூர்தல் கற்புடைமகளிரியல் பாதலால் தன்கணவன் ஏந்தியவேல் அழுக்கடையாது ஒளிவீசுதலைக்காணுதலில் மயி லாலக் குயிலிசைப்ப மாலையசையக்காவேரி நடந்தது என்றார்.

ங. அவன் தன்வளம் நாட்டின் மகவைவளர்க்கும் தாய் ஆகி — அக்கரி காற் பெருவளவனது நாட்டின்கண் (எங்கும்பரவி யெவ்வுயிர்களையும் வள ர்ப்பித்தலால்) பிள்ளையைவளர்க்குந் தாய்போலாகி, காவேரி - ஊழிஉய்க் கும் பேர்உதவி ஒழியாய்—ஊழிகாறும் (அளவறிந்து) செலுத்தும் பெரிய வுதவியினின்றும் நீங்காய், ஊழிஒழுகல்—அவ்வாறு செலுத்தும் பெரிய

வுதவியினின்று நீங்காது செல்லுதல், உலகுஓம்பும்ஆழி ஆள்வான் — உலகினைப்பாதுகாக்கும் சக்கரத்தையுடையவனுகி, பகல் வெய்யோன்அருளே- சூரியன் மரபிற் பிறந்தகரிகாற் பெருவளவன் கருணையே, காவேரி.

கரிகாற் பெருவளவனது குலத்திற்குமுதல் வெய்யோன் ஆதலால் பகல் வெய்யோனருளே என்றார்.

சார்த்துவரி.

அறுசீரான்வந்த ஒருபோகு கொச்சகம்.

க. திங்கதிர்வாண்முகத்தாள்செவ்வாய்மணிமுறுவற்கொவ்வாவேனும்
வாங்குநீர்முத்தென்றுவைகலுமான்மகன்போலவருதிராய
வீங்கோதந்தந்தவிளங்கொளிர்வெண்முத்தம்விரைசூழ்கானற்
பூங்கோதைகொண்டுவிலைஞர்போன்மீளும்புகாரேயெம்மூர்

உ. மறையின்மணந்தாரைவன்பரதர்பாக்கத்துமடவார்செங்கை
இறைவளைகடேற்றுவதையேழையரொங்ஙனமியாங்கறிகோமைய
நிறைமதியுமீனுமெனவன்னநீள்புன்னைநிரையரும்பிப்பூத்த
பொறைமலர்ப்பூங்கொம்பேறவண்டாம்பன்மலருதம்புகாரேயெம்மூர்

ரு. உண்டாரையொன்றுவூழெனுழியாப்பாக்கத்துளுறையொன்றின்றித்
தண்டாநோய்மாதர்தலைத்தருதியென்பதியாங்கறிகோமைய
வண்டாறிரையழிப்பக்கையான்மணன்முகந்துமதிமேனீண்ட
புண்டோய்வேனீர்மல்கமாதர்கடூர்க்கும்புகாரேயெம்மூர்.

க. இ-ள். தி கதிர்வாண்முகத்தாள் — இனிய கிரணத்தையுடைய சந்திரனையொத்த வொள்ளிய முகத்தையுடையாளது, செவ்வாய்மணிமுறுவற்கு ஒவ்வாஎனும் — செவந்தவாயிலுள்ள அழகிய முறுவல்கள் அளவறுக்கக்கூடா? அவைகளுக்கு (இவை) ஒப்பாகாவாயினும், வாங்கு நீர்முத்து என்று (ஒருவாறுஅளவறுத்து)வாங்குந்தன்மையையுடையமுத்துகளென்று, வைகல் உம்மால்மகன்போலவருதிர்—நாள்தோறும்உருவுள்ளமன்மதன்போலவராநின்றீர், எம் ஊர்—எமதுரோ, வீங்கு ஓதம்—பெருத்த அலையானது, தந்தவிளங்கு ஒளிர் வெள்முத்தம் (கடல்) தந்தவிளங்காநின்றவிளக்கத்தையுடைய வெள்ளியமுத்தத்தை, பூ கோதை கொண்டு — மலராகிய மாலையோடுகொண்டு, விரைசூழ்கானல்—வாசனைமிக்க கானலின்கண், விலைஞர் போல் மீளும் புகார் ஏ—விலைபகர்வாரைப்போல மீளாநிற்கும் காவிரிப்பூம் பட்டினமே.

அமிர்தகிரணன் ஆதலால் தீங்கதிர் என்றார் இது பண்புத்தொகை நிலைக்களத்துப்பிறந்த அன்மொழித்தொகை நிலைத்தொடர். நீர்மையுறையாகவுந்

திவந்த முத்தினை நான் என் தலைவிக்கணிவேனாகில் இந்நெய்தனிலத்துள்ள எமதை யன்மார்காணி னிந்நிலத்து முத்துஅன்றென்று ஐயப்படுவர் அதனால் திங்குவிளையும் என்பாள் புகாரே யெம்மூர் என்றாள். துறைபாங்கிகை யுறைமறுத்தல் மணிமுறுவற்கொவ்வா என்றது அவயவத்தருமைகூறல். மெய்ப்பாடு இளிவரல். வியப்பு.வலைஞர்ஞகரம் பெயரிடைநிலை.வருதிர் தகர இடைநிலை நிகழ்காலத்தின்மேல் நின்றது. எம்மூர் தலைவியையும் தன்னொடு படுத்தி எம்மூர் என்றாள் இதுவழாநிலை. மீளும் என்னும்பெயரொச்சம் புகார் என்னும் நிலப்பொருளோடு முடிந்தது. பின் வருவனவற்றிற்கும் இஃதொக்கும்.

உ. இ-ள். வன்பரதர் பாக்கத்து - வலியநெய்தனில மாக்களது ஊரின்கண், மறையின்மணந்தாரை - களவிற்புணர்ந்ததலைவரினின்று (பிரிந்த) மடவார் செங்கை இறைவளைகள் தூற்றுவதை - மாதரது செவந்தகையில் நிலைபெற்றவளைகள் கழன்று மறையொழுக்கத்தை வெளிப்படுத்தலை. ஏழையர் அறிகோம் - ஏழையராகிய யாங்களறிவோம் (எமதை யன்மார்அறிந்தால்) யாங்கு (இது) எவ்விடத்து (நிகழ்ந்ததென) எங்ஙனம் - எவ்வாறு (முடியுமோ அதனை அறியமாட்டோம்) நிறைமதி உம் மீனும் என - கலைநிறைந்த சந்திரனும் நட்சத்திரமும்போல, அன்னம் - அன்னப்புள்ளானது, நீள் புன்னை - ஓங்கியபுன்னைமரங்கள், நிரைஅரும்பிபூத்த - வரிசையாக அரும்பிமலர்ந்த, மலர்பொறை பூகொம்பு ஏற - மலராகிய பாரமிக்க பொலிவையுடைய கொம்பின்கண்ணேற, வண்டு ஆம்பல்மலர் ஊதும் எம் ஊர்புகார் ஏ - வண்டுகள் (மதுவைக்கொள்ளைகொள்ள) ஆம்பல்மலரின்கண் ஊதாநிற்கும் எமதூர் காவிரிப்பூம் பட்டினமே.

தலைவன் சிறைப்புறமாகத் தலைவிசெறிப்பறிவுறுத்திய தோழிகுறியிடமாகத் தமதூரையும் கூறினள். மெய்ப்பாடு அவலம். அறியமாட்டோம் சொல்லெச்சம். ஐ உருபுமயக்கம். அரும்பிபூத்த விரோதஅணி.

ஙா. இ-ள். ஊன் ஒழியாபாக்கத்துள் - புலால்நீங்காதநெய்தனிலத்தின்கண், உண்டாரை ஒன்றா - அனுபவித்தவரினின்று நீங்காது, உறை ஒன்று இன்றி - உறைதல்சிறிதுமில்லாமல், தண்டாநோய் - நீங்காதபிரிவென்னும் நோயை, மாதர்தலைதருதி - (எமது) தலைவியின்கண் தராநின்றாய், என்பது யாங்குஅறிகோம்-என்பதை (நின்னிடத்தன்றி) எவ்விடத்தறிவோம், திரைகடற்றிரையானது, வண்டல் ஒழிப்ப - விளையாட்டைச் சிதைக்க, மாதர்விளையாட்டு மகளிர்கள், கைஆல் மணல்முகந்து - கையினால்மணலையள்ளி, மதிமேல்நீண்டபுண் தோய்வேல் - சந்திரனையொத்த முகத்தின்கண்நீண்ட ஊன்தோய்ந்தவேல்போன்ற கண்கள், நீர்மல்க - நீர்சிந்த, கடல்தூர்க்கும் எம் ஊர்புகார் ஏ - அக்கடலைத்தூர்க்கா நிற்கும் எமதூர் காவிரிப்பூம்பட்டினமே.

வண்டாரா உருபுமயக்கம். ஒன்று செய்யா என்னும் இறந்தகாலவினையெச்சம். வண்டால்நீட்டும் வழிநீட்டல். பாங்கி தலைவியினமைத் தன்மை கூறுதலோடு தலைவனொடுநொந்துவினுதல் என்னுந்துறைப்பொருளும் அவலம் என்னும்மெய்ப்பாடுங்காண்க.

## கானல்வரி.

நாற்சீரான்வந்த தாழிசை ஒருபோகு கொச்சகம்.

க. புணர்துணையோடாடும்பொறியலவனோக்கி
இணர்ததைபூங்கானலென்னையுநோக்கி
உணர்வொழியப்போனவொலிதிரைநீர்ச்சேர்ப்பன்
வணர்சுரியைம்பாலோய்வண்ணமுணரேனுல்.

உ. தம்முடையதண்ணளியுந்தாமுந்தம்மான்றேரும்
எம்மைநினையாதுவிட்டனரேல்விட்டகல்க
அம்மெனிணரவடம்புகாளன்னங்காள்
எம்மைமறந்தாராயாமறக்கமாட்டேமால்.

ந. புன்கண்கூர்மாலைபுலம்புமென்கண்ணேபோல்
துன்பமுழுவாய்துயிலப்பெறுதியால்
இன்கள்வாய்நெய்தானீயெய்துங்கனவினுள்
வன்கணார்கானல்வரக்கண்டுயிலுதியோ.

இடைமடக்காய் வந்தது.

ச. புள்ளிமான்றேராழிபோனவழியெல்லாம்
தெள்ளுநீரோதஞ்சிதைத்தாய்மற்றென்செய்கோம்
தெள்ளுநீரோதஞ்சிதைத்தாய்மற்றெம்மோடிங்
குள்ளாரோடுள்ளாயுணராய்மற்றென்செய்கோம்.

ஒருபோகுதரவுகொச்சகம்.

ரு. நேர்ந்தநங்காதலர்நேமிநெடுந்திண்டேர்
ஊர்ந்தவழிசிதையவூர்ந்தாயாலோதமே
ஊர்ந்தவழிசிதையவூர்ந்தாய்மற்றெம்மோடும்
தீர்ந்தாய்போற்றீர்ந்திலையால்வாழிகடலோதமே
பூந்தண்பொழிலேபுணர்ந்தாடுமன்னமே
ஈர்ந்தண்டுறையேயிதுதகாதென்னீரோ.

க. இ-ள். வணர்சுரி ஐம்பாலோய் - கடைகுழன்ற இடையில் நெறிந்த கூந்தலையுடைய பாங்கியே, புணர்துணை ஓடு ஆடும் (தன்னின்று) நீங்காத பெட்டை நண்டோடு ஆடாநின்ற, பொறி அலவன்நோக்கி—புள்ளிகளை

யுடைய ஆணண்டைப்பார்த்து, இணர்தவைத பூகானல் என்னை உம்நோக்கி - பூங்கொத்து நெருங்கிய பொலிவையுடைய கானலில் என்னையும் பார்த்து, உணர்வு ஒழிய - அறிவு (என்னினின்று) நீங்கியொழிய (தன்னோடு வர என்றபடி) போன-சென்ற, ஒலிதிரை நீர் சேர்ப்பன் வண்ணம் உணரேன் ஆல்—ஒலிக்கும் அலையையுடைய கடற்றுறைவனது கருத்தினையறியாதாயினேன்.

ஆடுதல் கலத்தல். நோக்கி என்னும் இறந்தகால வினையெச்சம்போன என்னும் பெயரெச்சத்தின் முதனிலைகொண்டது. பாங்கியொடு தலைவிதலைவனிலையெடுத்துக்கூறல் என்னுந்துறை. மெய்ப்பாடு வருத்தம்.

௨. இ-ள். அம்மென் இணரஅடம்புகாள் அன்னங்காள்—அழகியமெல்கிய பூங்கொத்துகளையுடைய அடம்புகளே அன்னங்களே, தாமும் தம் உடைய தண் அளிஉம்—தாமும் தமது தண்ணிய அன்பும், தம்மான் தேர் உம்—தமது குதிரை கட்டிய தேரும், எம்மை நினையாது விட்டனரோல்—(வந்தமறவேனென்றுகூறி) மறந்து பிரிந்தனராயில், விட்டகல்க—மறந்து பிரியக்கடவர், எம்மை மறந்தாரை யாம் மறக்கமாட்டோம்—எம்மைமறந்த அத்தலைவனை நாம் மறக்கமாட்டோம்.

தாம் என்னும் தலைமைப்பொருளோடு தண்ணளியும்மான்றேரும்எனத் தலைமையில் பொருளையும் விராயெண்ணித்தலைமைப்பொருள் கொண்டுமுடிந்தவினையையேதலைமையில்பொருளுங்கொள்ளவைத்தல்தொ-கி-௬௧-ஆம்-சூ-இல் காண்க. நன்னூலார்-பொது-உஎ-சூ-இல் திணைவிரவிச்சிறப்பினால் உயர்திணை முடிபேற்றலில் திணைமரபு வழுவமைதி யென்றார். இணரசினையடியாகப்பிறந்த குறிப்பு வினைப்பெயரொச்சம் இது காமமிக்க கழிபடர் கிளவி. மெய்ப்பாடு இளிவரல்.

௩. இ-ள். புன்கண்கூர்மாலை - துன்பமிக்கமாலைப்போதில், புலம்பும் என்கண்ஏ போல் - (துயிலாது) வருந்தும் எனதுகண்களேபோல, இன்கள் வாய்நெய்தால் - இனியமதுநிறைந்த நெய்தன்மலரோ, துன்பம் உழவாய்-வருந்தாய், துயிலப்பெறுதி - நித்திரைசெய்கின்றாய், கானல் - கானலின்கண், நீ எய்தும்கனவினுள் - நீ காணும்கனவில், வன்கணார்வாரகண்டுயிலுதிஓ - (பிரிந்த) தறுகண்மையை யுடையதலைவனைக் காணத்துயில்கின்றாயோ (நீகூறாய்)

புன்கன் கூர்மாலை எனச்சிறுபொழுது கூறினார். நெய்தால் விளிவேற்றுமை.இது ஒருவகைமலர்.உழவாய்முன்னிலை. ஒருமையேவல் வினைமுற்று. கண்டுயிலுதி முன்னிலையொருமை வினைமுற்று. ஏவல் தொழிற்படுத்துவதாலும்முன்னிலை தொழிலுணர்த்துவதாலும் தம்முள்வேற்றுமை. உழ பகுதி. கண் என்னும்பெயர்ச்சொல் தன்னைவினைப்படுத்த வரும் வினைப்பகுதியோடு

கூடியொருசொற்றன்மைப் பட்டுநின்றகண் டுயில்பகுதி, உ, து இரண்டுஞ் சாரியைகள், உகரக்கேடுசந்தி, இதுநிகழ்காலத்தின் மேல்நின்றது. இ முன்னிலையொருமைவிகுதி, இதுநெய்தலோடு புலந்துகூறல்துறை. மெய்ப்பாடு வருத்தம்.

௪. இ - ள். புள்ளிமான் தேர்ஆழி - புள்ளியையுடைய குதிரைபூண்ட தேரினுருள், போனவழி எல்லாம்-சென்றவழிகளெல்லா வற்றையும், தெள்ளும் நீர் ஓதம்சிதைத்தாய் - தெள்ளியநீர்த்திரையே நீயழித்தாய், மற்று என்செய்கோம் - (அதற்கு) பிறிது (யாம்) யாதுசெய்வோம், எம்ஓடு இங்கு உள்ளார் ஓடு உள்ளாய் - எம்முடன் இங்குள்ள நட்பினராகிய பாங்கிமாரோடு நீயும்உள்ளாய், உணராய் (அவர்கள் என்துயர்அறியாமைபோலநீயும்) அறியாய், என்செய்கோம் - யாதுசெய்வோம்.

உள்ளாரோடு என்றமையால் நட்பினராகிய பாங்கிமார் எனவும், அறியாய் என்றமைபால் பாங்கிமாரும் என்துயரையறியார் எனவுங்கூறினும். இப்போது என்றலைவர் வருகின்றிலர் அவர்சென்றதேர்வழியையாவதுநோக்கியுயிருய்வோ மெனவிருக்க நீயதனையழித்தாய் எனத்தேர்வழியை நோக்கிக்கடலோடு புலந்துகூறுதலால்,தேர்வழிநோக்கிக் கடலொடுபுலந்துகூறல் துறை.மெய்ப்பாடுவருத்தம்.

௫. இ - ள். நேர்ந்தநம்காதலர் - மனமொத்தநமதுதலைவரது, நெடுதிண் தேர்நேமி - நெடியதிண்ணியதேர் பூண்ட வுருள், ஊர்ந்தவழிசிதைய ஓதம் ஏ ஊர்ந்தாய்-சென்றவழிதூரக் கடற்றிரையேயதன்மேற்சென்றாய், எம்ஓடு உம்தீர்ந்தார்போல் (தூர்த்துத்துன்பமுறுத்தலால்) எம்மினின்றுநீங்கியதலைவரைப்போல, தீர்ந்திலை - நீங்காது உள்ளாய் (கொடியை என்றபடி) கடல் ஓதமேவாழி - கடற்றிரையேவாழாய்(கெடுவாய்என்றபடி)பூதண்பொழிலே பொலிவையுடைய தண்ணியசோலையே, புணர்ந்து ஆடும் அன்னம்ஏ-பிரியாதாடும் அன்னங்களே, ஈர்தண்துறை ஏ-மிக்கதண்ணிய நீர்த்துறையே(நீவிர் தண்மையும் உவகையும்உடையராயிருந்தும்) இதுதகாது என்னீர்-இச்செய்கைதக்க தன்றென்றுகூறிமறுக்கிலிர் (நீவிருங்கொடியர் என்றபடி)

அளியும் உவகையுமுடையோர் தம்மாட்டுள்ளோர் பிறர்க்குக்கெடுதி செய்வதை நோக்கின் ஒழிகவென்று ஒழிப்பது மரபு, ஒழிக்காராயின் அவர் வன் கண்ணராவர், ஆதலால் ஓதத்தின் கண்ணுள்ளபொழிலும் துறையும் அன்னமு மறுக்காமையா லவற்றைக் கொடியன எனவும், தீர்ந்திலை என்றமையாற் கொடியையெனவும், வாழி என்றமையாற்கெடுவாய் எனவும் குறிப்பாற்கூறினும். கடலோதமே என்பது காறும் தேர்வழிநோக்கிக் கடலொடு புலந்து கூறலும், பொழிலே அன்னமே துறையே என அவற்றின் கொடுமை கூறினமையாற் காம மிக்கசழிபடர் கிளவியும் ஆம். மெய்ப்பாடு வருத்தம். நீர் நிலை ஈர்தண்டுறை.

## திணை நிலவரி.

### அறுசீரான்வந்த ஒருபோகு கொச்சகம்.

க. நன்னனிலத்தின்பூணணிந்துநலஞ்சால்பவளக்கலையுடுத்துச்
செந்நெற்பழனக்கழனிதொறுந்திரையுலாவுகடற்சேர்ப்ப
புன்னைப்பொதும்பர்மகரத்திண்கொடியோனெய்தபுதுப்புண்கள்
என்னைக்காணுவகைமறைத்தாலன்னைகாணிலென்செய்கோ.

உ. வாரித்தரளநகைசெய்துவண்செம்பவளவாய்மலர்ந்து
சேரிப்பரதர்வலைமுன்றிற்றிரையுலாவுகடற்சேர்ப்ப
மாரிப்பீரத்தலர்வண்ணமடவாள்கொள்ளக்கடவுள்வரைந்
தாரிக்கொடுமைசெய்தாரென்றன்னையறியிலென்செய்கோ.

ங. புலவுற்றிரங்கியதுநீங்கப்பொழிற்றண்டலையிற்புகுந்துதிர்ந்த
கலவைச்செம்மண்மணங்கமழத்திரையுலாவுகடற்சேர்ப்ப
பலவுற்றொருநோய்தணியாதபடர்நோய்மடவாடனியுழப்பப்
பலவுற்றிரங்கியறியாநோயன்னையறியிலென்செய்கோ.

க. இ-ள் நல்நல் நிலத்தின் பூண் அணிந்து-நல்லநெய்தல் நிலத்துக்குரிய ஆபரணத்தையணிந்து, நலம்சால்பவளம் கலைஉடுத்து - அழகுமிக்க பவளமாகிய ஆடையுடுத்து, திரை - கடலினலையானது, செந்நெல் - செந்நெற் பயிரை யுடைய, பழனம் கழனிதோறும்-வயல்கடோறும், உலாவு கடல் சேர்ப்ப—உலாவும் கடற்றுறையை யுடைய தலைவனே, புன்னைபொதும்பர்-புன்னைமரச்சோலையின்கண், மகரம்திண்கொடியோன் - திண்ணியமீனக் கொடியையுடையமன்மதன், எய்தபுதுபுண்கள்—எய்தலாலாகியபுதியபுண்களை, என்னைகாணுவகை மறைத்தால்உம் - எனக்குத்தெரியாவண்ணமறைப்பினும், அன்னைகாணில் என்செய்கு - தாய்அவற்றைக் கண்டால் நான்யாது செய்வேன்.

ஊரன் ஆகியதலைவன் அந்நிலத்துக்குரியஆடை அணிமுதலியவற்றோடு துறைவன்ஆனான் என்பாள்நன்னனிலத்தின்பூணணிந்துபவளக்கலையுடுத்துக் கழனிதொறும் உலாவுங் கடற்சேர்ப்பஎன்றாள். இதுஇறைச்சிப் பொருட்டு எய்த காரணப்பொருளில் வந்த இறந்தகாலப்பெயரொச்சம். என்னை உருபு மயக்கம். செய்குதன்மை யொருமைவினைமுற்று, குவ்விகுதியே எதிர்காலத்தையுணர்த்தியது. பாங்கிதாயறிவுகூறி வரைவுகடாதல். மெய்ப்பாடுஅச்சம் பயன்வரைதல். மற்றையவற்றிற்குமொக்கும்.

உ. வாரிதரளம்நகைசெய்து - கடலின் கண்ணுள்ள முத்தமாகிய புன்னகைசெய்து, வண்செம்பவளம் வாய்மலர்ந்து—வளவிய செவந்தபவளமாகிய வாயைத்திறந்து, பரதர் சேரிவலை முன்றில் திரை உலாவுகடல்

சேர்ப்ப — பரதாது சேரியின்கண் வலையுணங்கு முன்றிலில் திரைகளுலவுங் கடற்றுறையையுடையாய், மாரிபீரத்து அலர்வண்ணம்—கார்காலத்து மலர்ந்த பீர்க்கமலரினிறத்தை, மடவாள் கொள்ள—என் தலைவிகொள்ள, கடவுள்வரைந்து—கந்தருவமணஞ்செய்து, இகொடுமை செய்தார் ஆர் என்று அன்னை அறியில் என்செயகு—இந்தக்கொடுமை செய்தவரெவரொன்று தாயறிந்தால் நான்யாதுசெய்வேன்.

பீர்க்கமலரினிறத்தைக்கொள்ளுதல்பசலைபூத்தல்.மாரிபெரும் பொழுது இதுநெய்தலுக்கு இன்மையால் பீர்க்கலருக்குஅடையாகக்கொள்க. பீர் பீரம் அம்பகுதிப் பொருள்விகுதி.

ங. புலவு உற்று—புலால்நாற்றமிகுந்து, இரங்கியது நீங்க(பலரும்)வருந்தாநின்ற முடை நாற்றம்நீங்க, பொழில் தண்டலைபுகுந்து — சோலையிற்சென்று, உதிர்ந்தகலவை செம்மல்மணம்கமழ—அங்கு உதிர்ந்தபலவாகிய பழம்பூக்களின் மணங்கமழாநிற்க, திரைஉலாவுகடல் சேர்ப்ப—அலைகளுலவுங் கடற்றுறையையுடையாய், பலஉற்று எழுநோய்—பலவாகமிக்கெழுந்த நோயான், தணியாத படர்நோய்—ஆற்றத்தணியாத வருத்தஞ்செய்யுங் காமநோயில், மடவாள்தனிஉழப்ப—என்தலைவி துணையின்றி வருந்த, பலஉற்று இரங்கி அறியாநோய் (இவள் வருந்துதற்குக் காரணம்யாதென) பலவாகக்கருதி மெலிந்து என்னாலறிதற்கரிய நோயை, அன்னையறியில் என்செய்கு—தாயறிந்தால்யாது செய்வேன்.

கலவை கலத்தல் அதனாற் பலவென்றும். கல பகுதி ஐ புடைபெயர்ச்சிப்பொருளில்வந்த விகுதி - பலவற்றால் எழுதலாவது சந்திரன் தென்றல் முதலியவற்றாலெழுதல். இரங்கியது வினையாலணையும் பெயராதலால் அகரச்சுட்டுத்தொகுத்தல். உழப்பவென்னும் வினையெச்சம் நிகழ்காலத்தின்மேல் நின்றது. உழபகுதி.

## மயங்கு திணை நிலவரி.

### தாழிசை ஒருபோகு கொச்சகம்.

க. இளையிருள்பரந்ததுவேயெரிசெய்வான்மறைந்தனனே
களைவரும்புலம்புநீர்கண்பொழியுகுத்தனவே
தளையவிழ்மலர்க்குழலாய்தளர்ந்தார்நாட்டுளதாங்கொல்
வளைநெகிழவெரிசிந்திவந்ததிம்மருண்மாலை.

உ. கதிரவன்மறைந்தனனேகாரிருள்பரந்ததுவே
எதிர்மலர்புரையுண்கண்ணெவ்வநீருகுத்தனவே
புதுமலர்புரைமுகத்தாய்போனார்நாட்டுளதாங்கொல்
மதியுமிழ்ந்துகதிர்விழுங்கவந்ததிம்மருண்மாலை.

௩. பறவைப்பாட்டடங்கினவேபகல்செய்வான்மறைந்தனனே
நிறையிலாநோய்கூரநெடுங்கணீருகுத்தனவே
துறுமலரவிழ்குழலாய்துறந்தார்நாட்டுளதாங்கொல்
மறலியாயென்னுயிர்மேல்வந்தவிம்மருண்மாலை.

க. இ-ள். தளைஅவிழ்மலர்குழலாய்—கட்டவிழ்ந்தமலரையணிந்தகூந்தலையுடைய பாங்கியே, எரிசெய்வான் மறைந்தனன்—சூரியன் மறைதலால், இளை இருள்பரந்தது—காடுபோலும் இருள்பரவியது, புலம்புகளைவுஅரும் நீர் - புலம்புதலாவிடைவிடாது வருநீரை, கண்பொழி உகுத்தன - கண்கள் பொழிந்து சிந்தின, வளைநெகிழ எரிசிந்தி - (கையினின்றும்) வளைகள்கழல அழலைச்சிந்தி, வந்தது இம்மருள் மாலை—வந்த இம்மருளுமாலைப் பொழுது, தணந்தார்நாடு உளதுசொல் — (என்னை) பிரிந்த தலைவர் நாட்டில் உளதோ (இருப்பின்வாராரல்லர்)

மறைந்தனன் வந்தது என்னும் வினைமுற்றுகள் கருவிப் பொருளினும் பெயரொச்சத்தினும் வந்தன. மருள் என்னும் காலங்கரந்த பெயரொச்சம் மாலையென்னும் எல்லைப் பொருளோடுமுடிந்தது. மாலையம் பொழுதுகண்டு பெருமகள்புலம்பல் துறை. மெய்ப்பாடுவருத்தம். கொல் ஒழியிசைப் பொருளில்வந்த இடைச்சொல். மற்றையவற்றிற்கும் ஒக்கும்.

உ. இ-ள். புதுமலர் புரைமுகத்தாய்—அன்றலர்ந்த தாமரையையொத்த முகத்தையுடையபாங்கியே, கதிரவன் மறைந்தனன்—சூரியன் மறைதலால், கார் இருள்பரந்தது—கரிய இருள்பரவியது, மலர் எதிர் —(தமக்கு உவமையாகவந்த) தாமரைமுதலிய மலர்களோடு போர்செய்யும், புரை உண் கண்—மேலாகிய்மையுண்டகண்கள், எவ்வம் நீர் உகுத்தன—துன்பத்தால் நீரைச்சிந்தின, மதி உமிழ்ந்து கதிர்விழுங்க வந்தது இ மருள் மாலை—சந்திரனை யுமிழ்ந்து சூரியனைவிழுங்கவந்த இம்மருளு மாலைப்பொழுது, போனார் நாடு உளது கொல—(என்னின்று) நீங்கினதலைவரது நாட்டிலுளதோ (இருப்பின்வாராரல்லர்).

மதியுமிழ்ந்துகதிர்விழுங்க இதுசமாதியணி. குணவணியெனினுமொக்கும்.

௩. துறுமலர் அவிழ்குழலாய்—நெருங்கிய மலரவிழ்ந்த கூந்தலையுடையாய், பகல்செய்வான் மறைந்தனன்—சூரியன்மறைதலால், பறவை பாடு அடங்கின—பறவையினொலியடங்கின, நிறைஇலா நோய் கூர — அளவுபடாத விரகநோய் மிகுதலால், நெடுகண்நீர் உகுத்தன — நெடியகண்கள் நீரைச் சிந்தின, மறலி ஆய் என் உயிர்மேல்வந்தது—இயமனாய் எனதுயிரின்மேல் (கோபித்து) வந்த, இமருள் மாலை — இம்மருளு மாலைப்பொழுது, துறந்தார் நாடு உளது சொல் (என்னை) பிரிந்ததலைவர் நாட்டிலுளதோ (இருப்பின் வாராரல்லர்).

மறலி காரணப்பெயர்மறல்(கொலை)பகுதி, இ பெயர்ப்பொருள்விகுதி.

வேறு.

இடைமடக்காய்வந்ததாழிசை ஒருபோகுசொச்சகம்.

சு. கைதைவேலிக்கழிவாய்வந்தெம்
பொய்தலழித்துப்போனாரொருவர்
பொய்தலழித்துப்போனாரவரெம்
மையன்மனம்விட்டகல்வாரல்லர்

ரு. கானல்வேலிக்கழிவாய்வந்து
நீநில்லென்றேநின்றாரொருவர்
நீநில்லென்றேநின்றாரவரெம்
மானேர்நோக்கமறப்பாரல்லர்

சா. அன்னந்துணையோடாடக்கண்டு
நென்னனோக்கிநின்றாரொருவர்
நென்னனோக்கிநின்றாரவரென்
நெடுங்கண்விட்டுப்போவாரல்லர்.

சு. இ-ள். கைதைவேலி கழிவாய்வந்து—தாழையைவேலியாகவுடைய கழியின்கண்வந்து, எம்பொய்தல் அழித்துபோனார் ஒருவர் - எமதுவிளையாட்டைச் சிதைத்துச் சென்றார் ஒருவர், அவர் எம்மையல் மனம்விட்டு அகல்வார் அல்லர் — அவர் எமது மயக்கத்தையுடைய மனத்தைவிட்டு நீங்காரல்லர்.

பொய்தலழித்தல் கூடல்மேல் நிற்றலால் மையல் மனமென்றாள். பொய்தலழித்தல் இடக்கரடக்கல். போனார்என்னும் வினைமுற்று ஒருவர்என்னும் பெயரோடுமுடிந்தது. அகல்வாரல்லர் இத்தொடருள்வருமொழிமறை. தலைவனைப் பழித்த பாங்கிக்கு வரைதல் வேட்கையையுடைய தலைவி தலைவனியற் படமொழிதல் துறை.மெய்ப்பாடுபெருமிதம். பயன்வரைதல்வேட்கை.

ரு. இ-ள். கானம்வேலி கழிவாய்வந்து—கானலை வேலியாகவுடைய கழியின்கண்வந்து, நீநில்களென்று நின்றார் ஒருவர் - நீநிற்கவென்று (தாமும்) நின்றார் ஒருவர், அவர் எம்மான் நேர்நோக்கம் மறப்பார் அல்லர்—அவர் எமது மான்போன்ற பார்வையினின்று நீங்காரல்லர்.

நில்க அகரவீறுதொகுத்தல் - கனவுநிலைகூறல்துறை. மெய்ப்பாடும் பயனும்முற்கூறியன. பின் வருவதற்கும் ஒக்கும்.

சா. அன்னம் துணை ஓடி நென்னல் ஆடக்கண்டு—அன்னம் தனது பெடையோடு நேற்று விளையாடநோக்கி, நோக்கி நின்றார் ஒருவர் - என்னையும் பார்த்து நின்றார் ஒருவர், அவர் என்நெடுங்கண்விட்டு போவார் அல்லர்—அவர் எனதுநெடியகண்விட்டு நீங்காரல்லர்.

### வேறு.

ஈற்றயலடியொழிய முற்றும் அடிமடக்காய்வந்த தாழிசை ஒருபோகு கொச்சகம்.

எ. அடையல்குருகேயடையலெங்கானல்
அடையல்குருகேயடையலெங்கானல்
உடைதிரைச்சேர்ப்பற்குறுநோயுரையாய்
அடையல்குருகேயடையலெங்கானல்.

இ-ள். கானல்-கானலின்கண், அடையலெம்-(எமர்அறிந்தனர்இனி) அடையோம், குருகே-நாரைகளே,(இங்குவரும்) உடை (கரையொடுமோதி) உடைந்த, திரைசேர்ப்பன்கு—அலைகளையுடைய துறைவனை (காணில்)அடையல்—வாயடைதலொழிக, உறுநோய்—(எமது) மிக்க பிரிவுநோயை (கூறாய்)

மற்றையவைவெளி. அடையலெம் தன்மைப் பன்மை வினைமுற்று. அடையல் எதிர்மறைவியங்கோள் வினைமுற்று. "மகனெனல்மக்கட் பதடியெனல்" அல்விகுதி எதிர்மறையிலும் உடன்பாட்டிலும் வருதல்காண்க. அடையாதேஎனப் பொருள்கொண்டு அல் எதிர்மறையேவ லொருமை விகுதியெனினும் அமையும். தலைவியையுடன்கொண்டு போகாநின்ற தோழி இக்கானலின்கண் ஒருவர்வருவர், வரின்நுமரொடுகூடி யுலவுமகிழ்ச்சியால் எம்மைமறவன்மின்என்பாள் அடையல் என்றாள். நாரையொடு கூறி வரைவுகடாதல். மெய்ப்பாடுஅழுகை. பயன்செறிப்பறிவுறுத்தல்.

### வேறு.

அ. ஆங்ஙனம்பாடியவாயிழைபின்னரும்
காந்தண்மெல்விரல்கைக்கிளைசேர்குரல்
தீந்தொடைச்செவ்வழியரும்பாலையிசையெழீஇப்
பாங்கினிற்பாடியோர்பண்ணுப்பெயர்த்தாள்.

இ - ள். ஆங்ஙனம்பாடிய ஆயிழை - அவ்வாறுபாடியமாதவி, பின்னர் உம் - பின்னும், காந்தள் மெல்விரல் - காந்தள்போன்றமெல்லியவிரலினால் கைக்கிளைகுரல்சேர்-கைக்கிளையே குரலாகவும் உழையே குரலாகவும் - தீந் தொடைசெவ்வழிஅரும்பாலைஇசைஎழீஇ-இனிமைதொடுத்தலையுடையசெவ் வழிப்பாலை அரும்பாலைஎன்னும் இசையையெழுப்பி, பாங்கினில்பாடி (இசை நூலுட்கூறிய) முறையினின்றுவழுவாது பாடி, ஓர்பண்ணுபெயர்த்தாள்- ஒருபண்ணினை நடத்தினாள்.

### இடைமடக்காய்வந்தது.

க. நுளையர்விளரிநொடிதரும்தீம்பாலை
இளிகிளையிற்கொள்ளவிறுத்தாயான்மாலை
இளிகிளையிற்கொள்ளவிறுத்தாய்மன்னீயெற்
கொளைவல்லாயென்னாவிகொள்வாழிமாலை.

௧0. பிரிந்தார்செறிந்துரைத்தபேரருளினீழல்
இருந்தேங்கிவாழ்வாருயிர்ப்புறத்தாய்மாலை
உயிர்ப்புறத்தாய்நீயாகியுள்ளாற்றுவென்றன்
எயிற்புறத்துவேந்தனோடென்னாதிமாலை.

இறுதிமடக்காய்வந்தது.

௧௧. பையுணோய்கூரப்பகல்செய்வான்போய்வீழ
வையமோகண்புதையவந்தாய்மருண்மாலை
மாலைநீயாயின்மணந்தாரவராயின்
ஞாலமோநல்கூர்ந்ததுவாழிநீமாலை.

௯. இ - ள். ழவளையர்நொடிக்கும் விளரித்தீம்பாலை - பாதர்பாடும் இனிய விளரிப்பாலை, இளிகிளையில்கொள்ளமாலை இறுத்தாய்-இளி என்னும் இசைக்குரிய ஐந்தாம்நரம்பிற் பொருந்தமாலைப்பொழுதேவந்துவிட்டாய், மாலைநீ என்கொலைவல்லாய் - மாலையேநீ என்னைக்கொள்ளுதலில் வல்லாய் (ஆதலால்) என் ஆவிகொள் - எனது உயிரை (பலியாகச்) கொள்ளாய். வாழி (அதனாலாயினும்நீ) வாழ்க.

௮-௯-இவ்விரண்டு செய்யுள்களுக்கும் இவ்வுரை ஒருவாறுகக்கொள்க. விளரி அந்நிலத்தின் பண், இது கருப்பொருள். எற்கொலைவல்லாய் என்றது இரங்கல், இது உரிப்பொருள். துறையும் மெய்ப்பாடும் முன்னர்க்கூறியவை கொள்க.

௧0. இ-ள். மாலை—மாலைப்போதே, பிரிந்தார் (தம்மினின்று) பிரிந்த தலைவர், செறிந்து உரைத்த (தம்மொடு) கலந்து கட்டுரைத்த, பேர்அருளின் நீழல் இருந்து—பெரிய (அவரது) அருளினிழலிலிருந்து, ஏங்கி வாழ்வார் உயிர்புறத்தாய் - மனம்வருந்தி வாழுமகளிரது உயிரின்கண்ணுள்ளாய், நீ உயிர்புறத்தாய் ஆகி—நீ உயிரின்கண்ணுள்ளாயாதலால், உள்ஆற்று என்தன்-ஆற்றுதலில்லாத மனத்தையுடையஎனது, எயில்புறத்து வேந்தன்ஒடு(வரைவிடைவைத்துப் பொருள்மேற்பிரிந்து) மதிலின்புறத்து முற்றிய தலைவனோடு, மாலை என் ஆதி—மாலைப்போதே என்னுகின்றாய் (உயிர்ப்புறத்தாயோ நட்பினையோ என்றபடி) கூறாய்.

கூறாய்சொல்லெச்சம். இருந்தேங்கி வாழ்வாருள் தானும் ஒருத்தியாதலால் தன்னையும் உளப்படுத்தி ஆகி என்றன் வேந்தனோடென்னாதி எனவும் இங்கிருப்பதுபோல் தலைவருயிர்ப்புறத்தாயாகில் வாராதிரார் என்பதுதோன்ற என்னாதி எனவுங்கூறினள். ஆதி முன்னிலை யொருமை வினைமுற்று ஆ பகுதி, த சாரியை, உகரக்கேடு சந்தி, இ முன்னிலை யொருமைவிகுதி. இவ்விகுதி நிகழ்காலத்தின்மேல் நின்றது, தான்சாரியை தன்மையொடுசார்ந்து நிற்றலால் இடவழுவமைதி. மாலைப்பொழுதொடு வருந்திக்கூறல் துறை. மெய்ப்பாடு அழுகை. அடியில் வருவன வற்றிற்கும் ஒக்கும்.

கக. இ-ள். பகல் செய்வான் போய்வீழ — சூரியன் அத்தமித்தலால், பையுள் நோய்கூர—(பிரிந்தோர்) துன்பநோய் மிகவும், வையம் ஓ கண் புதைய—உலகமோ செயலற்றொடுங்கவும், மருள்மாலை வந்தாய்—மருளு மாலைப்பொழுதேவந்தாய், நீ மாலை ஆயின்—நீமாலைப்பொழுதானால், அவர் மணந்தார் ஆயின்—அத்தலைவர் மணந்தோரானால், மாலை மாலைப்போதே, ஞாலம் ஓ நல்கூர்ந்தது—உலகோ வறுமையுற்றது, நீவாழி—நீவாழ்க.

உலகிலுள்ள உயிர்களுள் தானொருத்தியாதலால் தன்னையும் உளப்படுத்தி ஞாலம் எனவும், மாலைப்போதும் பிரிந்த தலைவரும் ஒரு நிகரனவாய் துன்பத்தைச் செய்தலின் நல்கூர்ந்தது எனவும் கூறினாள்.

## கட்டுரை.

எனக்கேட்டுக்-கானல்வரியிற்பாடத்தானொன்றின்மேல்வைத்துமாயப் பொய்பலகூட்டுமாயத்தாள்பாடினளென - யாழிசைமேல்வைத்துத்தன்னூழ்வினைவந்துருத்ததாதலின்-அவ்வுற்ற திங்கண்முகத்திகவவுக்கைநெகிழ்ந்தனனாய்ப்-பொழுதீங்குகழிந்ததாதலின்எழுதுமென்றுடனேயெழாதே - ஏவலாளருடன் சூழ்தரக்கோவலன் போயபின்னர்த் - தாதவிழ்மலர்ச்சோலையோதையாயத்தொலியவித்துக் - கையற்றநெஞ் சினளாய்வையத்தினுட்புக்குக் - காதலுடனன்றியே மாதவிதன் மனைபுக்காள் - ஆங்கு மாயிருஞாலத்தரசுதலைவணக்கும் - சூழியானைச்சுடர்ப்பூட் செம்பியன் - மாலைவெண்குடைகவிப்ப - ஆழிமால்வரையகவயி னாங்கென.

என(பாடாய்)என, தானொன்றின்மேல்வைத்து கானல்வரியில் பாடகேட்டு-தான்ஒருபொருளின்மேல்வைத்துக்கானல்வரியிற்பாடக்கேட்டு, பலமாயப்பொய்-பாடினாள்என-பலபொய்களைக் கூட்டியுண்மைபோலக்கூறும் வஞ்சனையுடையாள் யாழிசையின்கண்வைத்துப்பாடினாளென்று, தன் ஊழ்வினை வந்து உருத்தது ஆதலின் - தனது ஊழ்வினைவந்து முதிர்ந்தது ஆதலால், இதனைப்பதிகத்திற்காண்க. அஉற்றதிங்கள் முகத்திகவவுகைநெகிழ்ந்தனன் ஆய் - அவ்விடத்திருந்த சந்திரன்போலு முகத்தையுடைய மாதவியி னகத்திட்டகை நெகிழ்ந்து, ஈங்குபொழுது - கோவலன்போயபின்னர் - ஈங்குச் சூரியன் அத்தமித்தனன் ஆதலால்நாம் எழுவோமென்று மாதவியுடனே யெழாமல் ஏவலாளர் தன்னொடுசூழ்ந்துவரக் கோவலன்போனபின்பு, தாது அவிழ்மலர்சோலை ஓதைஆயத்து ஒலி அவித்து - மகரந்தத்தோடு மலர்ந்த மலர்களையுடைய சோலையின்கண் (கோவலனைப் பிரிதலால்) ஆரவாரத்தையுடையபெண்கள் கூட்டத்தின்மகிழ்ச்சி யொலியைக்கெடுத்து, கை அற்ற நெஞ்சினள் ஆய்வையத்தின் உள்புக்கு - செயலற்ற மனத்தையுடையவளாகிக்கொல்லாவண்டியிலேறி, காதல் உடன் அன்றிமாதவி - வெறுப்போடு மாதவியானவள், ஆங்குமாயிருஞாலத்து - அவ்விடத்து பெரியவுலகின்கண்

அரசுதலைவணக்கும் - அரசர்களது தலைதன்னைவணங்கச் செய்யும், சூழியானை சுடர்பூண்செம்பியன் - முகபடாத்தையுடைய ஒளியையுடைய அணிகளணிந்தகரிகாற் பெருவளவனது, மாலைவெண்குடைமால்ஆழிவரை அகவயின் உம் கவிப்ப - முத்தமாலையையணிந்த வெண்கொற்றக் குடையானது பெரிய சக்கரவாளகிரியின் கண்ணுங்கவிந்து நிழலைச்செய்ய, தன்மனைபுக்கான்-தனதுமனையிற்புகுந்தான்.

உருத்தது முதிர்ந்தது. கவவு அகத்திடுதல். மாயம் வஞ்சனை பொய். பொழுது சூரியன். கை - செயல். அகம்வயின் ஒருபொருட் பன்மொழிகள். குமரிநதியின் கண்ணும் என நிற்றலால் அகவயின் என்பதனிறுதியில் இறந்ததுதழீஇய எச்சவும்மை தொகுத்தல். அரசர்கள் குமரிநதிக்கும் சக்கரவாளகிரிக்கும் இடையிலுள்ளோர். மாயிரு உடம்படுமெய்யல்லாத யகரம் பெறுதல் "இடையுரிவடசொலின்" என்பதனாற்கொள்க. இசைப்பா ஆதலால் கொச்சகம் வெண்டுறைகளால் வந்தது.

### இன்னிசைச்சிந்தியல்வெண்பா.

சேவலொடுதுயின்மணிவண்டுகாலைக்
களிநிறவண்டாதுதிர்ப்பத்தோன்றிற்றேகாமர்
தெளிநிறவெங்கதிரோன்றேர்

இ - ள். சேவல் ஒடுதுயில்—ஆண்வண்டோடு (பிரியாது) துயிலும், மணிவண்டு-கரியபெட்டைவண்டு, காலை-வைகறைப்போதில், களி-களிப்போடு, நிறம்வண்தாது உதிர்ப்ப—ஒளியையுடைய வளவிய மகரந்த தத்தை யுதிர்க்காநிற்க, காமர்—அழகிய, தெளிநிறம்வெங்கதிரோன்தேர்தோன்றிற்று—மறைதலில்லாத வொளியையுடையசூரியனது தேர்தோன்றியது. (சூரியன் உதயஞ்செய்தான் என்றபடி)

சேவலோடுதுயில்வண்டு ஆதால்களிஎனவும், வேனிற்காலத்துச்சூரியன் ஆதலால் தெளிநிற வெங்கதிரோன் தேர் எனவும் கூறினார்.

---

## அ—ஆவது வேனிற்காதை.

:0:

இளவேனிற் போதில் (பிரிந்தமாதவி) வருந்திய கதையையுடையது எனவே;—உருபும் பயனுந்தொக்க ஏழாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர் என்க; ஆகவே இரண்டு சொல் ஒரு சந்தியாகக் கொள்க.

*நிலைமண்டில ஆசிரியப்பா.*

நெடியோன் குன்றமுந் தொடியோள் பௌவமும்-தமிழ்வரம்பறுத்த தண்புனனாட்டு — மாடமதுரையும் பீடாருறந்தையுங் — கலிகெழுவஞ்சியு

மொழிபுனற்புகாரும்—அரசுவீற்றிருந்தவுளைசால்சிறப்பின்—மன்னன்மார
ன்மகிழ்துணையாகிய—இன் னிளவேனில் வந்த திவணென — வளங்கெழு
பொதியின் மாமுனிபயந்த — இளங்காற்றூதனிசைத்தனளுதலின் — மகர
வெல் கொடிமைந் தன்சேனை—புகரறுகோலங்கொள்ளுமென்பதுபோற்—
கொடிமிடை சோலைக்குயிலோனென்னும்—படையுள்படுவோன் பணிமொ
ழிகூற—மடலவிழ்கானற் கடல்விளையாட்டினுள் — கோவலனூடக் கூடா
தேகிய—மாமலர்நெடுங்கண்மாதவிவிரும்பி—வானுறநிவந்த மேனிலைமருங்
கின்—வேனிற்பள்ளியேறிமாணிழை—தெண்கடன்முத்துந் தென்மலைச்சந்
தும்—தன்கடனிறுக்குந்தன்மையவாகலிற்—கொங்கைமுன்றிற் குங்குமவ
ளாகத்து — மையறுசிறப்பிற்கையுறையேந்தி — அதிராமரபின் யாழ்கை
வாங்கி—மதுரகீதம்பாடினண்மயங்கி—ஒன்பான்விருத்தியுட் டலைக்கண்வி
ருத்தி—நன்பாலமைந்த விருக்கையளாகி—வலக்கைப் பதாகைகோட்டொ
டுசேர்த்தி—இடக்கைநால்விரன்மாடகந்தழீஇச்—செம்பகை யார்ப்பேயதிர்
வேகூடம் — வெம்பகைநீக்கும் விரகுளியறிந்து — பிழையாமரபி னீரேழ்
கோவையின் — உழைமுதற்கைக்கிளையிறுவாய்கட்டி—இணைகிளைப கைநட்
பென்றிந்நான்கின்—இசைபுணர் குறிநிலையெய்த நோக்கிக் - குரல்வாயிளி
வாய்கேட்டன ளன்றியும்—வரன்முறைமருங் கிணைந்தினுமேழினும் - உழை
முதலாகவுமுழையீருகவும்-குரல்துரலாகவுங் குரலீருகவும் - அகனிலைமருத
மும்புறனிலைமருதமும்-அருகியன்மருதமும்பெருகியன்மருதமும்-நால்வகை
ச்சாதியுநலம்பெறநோக்கி-மூவகையியக்க முறையுளிக்கழிப்பித்-திறத்திசை
ப்படுத்தென்றிசைக் கரணத்துப்-புறத்தொரு பாணிபிற்பூங்கொடிமயங்கிச்
சண்பகமாதவித மாலங்கருமுகை - வெண் பூமல்லிகை வேரொடுமிடைந்த
அஞ்செங்கழுநீரா யிதழ்க்கத்திகை - எதிர்பூச்செம்மலிடை நிலத்தியாத்த-மு
திர்பூந்தாழை முடங்கல்வெண்டோட்டு - விரைமலர்வாளியின் வியனிலமா
ண்ட - ஒருதனிச்செங்கோ லொருவனாணையின் - ஒருமுகமன்றியு மூலகு
தொழுதிறைஞ்சுந் - திருமுகம்போக்குஞ் செவ்வியளாகி - அலத்தகக்கொ
ழுஞ்சேறளை இயல்லது - பித்திகைக்கொழுமுகை யாணிகைக் கொண்டு-
மன்னுயிரொல்லா மகிழ்துணை புணர்க்கும் - இன்னிளவேனிலிள வரசாள்வா
ளன் == அந்திப்போதகத்தரும் பீடர்த்தோன்றிய - திங்கட்செல்வனுஞ்செவ்
வியனல்லன் - புணர்ந்தமாக்கள் பொழுதிடைப்படினும் - தணந்தமாக்கடந்
துணைமறப்பினும் - நறும்பூவாளிநல்லுயிர்கோடலின் - இறும்பூதன்மையஃ
தறிந்திடுமின்னென - எண்ணெண்கலையு மிசைந்துடன்போக்கிப்-பண்ணுந்
திறனும் புறங்கூறுநாவில் - தளைவாயவிழ்ந்த தனிப்படுகாமத்தின் - விளை
யாழ் மழலையின் விரித்துரையெழுதிப் - பசந்தமேனியள்படருறுமாலையின்
வசந்தமாலையை வருகெனக்கூஉய்த் - தூமலர்மாலைத் துணிபொருளெல்
லாம் - கோவலற்களித்துக் கொணர்கவீங்கென் - மாலைவாங்கிய வேலரிநெ
டுங்கண் - கூலமறுகிற் கோவலற்களிப்பத் - திலகமுமளகமுஞ் சிறுகருஞ் ௫

சிலையும் - குழையுங்குமிழுங் கொவ்வையுங்கொண்ட - மாதர்வாண்முகத்து
மதைந இயகோக்கமொடு - காதலிற்றேன் றியகண்கூடுவரியும் - புயல்சுமந்
துவருந்திய பொழிகதிர்மதியத்துக் - கயலுலாத்திரி தருங்காமர்செவ்விபிற
பாகுபொதிபவளந்திறந்துநிலவுதவிய - நாகிளமுத்தினகைநலங்காட்டி-வரு
கென வந்துபோகெனப்போகிய-கருநெடுங்கண்ணிகாண் வரிக்கோலமும்-
அந்திமாலைவந்ததற்கிரங்கிச்-சிந்தைநோய் கூருமென்சிறுமை நோக்கிக்—
கிளிபுரைகிளவியு மடவனநடையும் - களிமயிற்சாயலுங் கரந்தனளாகிச்-
செரு வேனெடுங்கட்சிலதியர் கோலம் - ஒருதனிவந்த வுள்வரியாடலும்-
சிலம்புவாய் புலம்பவு மேகலையார்ப்பவும் - கலம்பொருசுப்பினள் காதனோ
க்கமொடு - திரிந்துவேறுயவென் சிறுமைநோக்கிப் - புறத்துநின்றூடிய
புன்புறவரியும் - கோதையுங்குழலுந்தாதுசேரளகமும் - ஒருகாழ்முத்துந்
திருமுலைத்தடமும் - மின்னிடைவருத்த நன்னுதறோன்றிச் - சிறுகுறுந்தொ
ழிலியர் மறுமொழியுய்ப்பப் - புணர்ச்சியுட்பொதிந்த கலாந்தருகிளவியில்,
இருபுறமொழிப்பொருள் கேட்டனளாகித் - தளர்ந்தசாயற்றகைமென்கூந்
தல்-கிளர்ந்துவேறுகிய கிளர்வரிக்கோலமும் - பிரிந்துறைகாலத்துப் பிரிந்த
னளாகி - என்னுறுகிளைகட்குத் தன்னுறுதுயரம் - தேர்ந்துதேர்ந் துரைத்த
தேர்ச்சிவரியன்றியும் - வண்டமர்கோதையு மாலையுண்மயங்கிக்-கண்டவர்
க்குரைத்த காட்சிவரியும் - அடுத்தடுத்தவர்முன் மயங்கியமயக்கம் - எடுத்த
வர்தீர்த்த வெடுத்துக்கோள்வரியும் - ஆடன்மகளேயாதலினாயிழை - பாடு
பெற்றவப்பைந் தொடிதனக்கென - அணித்தோட்டுத்திருமுகத் தாயிழை
யெழுதிய - மணித்தோட்டுத்திருமுக மறுத்தற்கிரங்கி - வாடியநெஞ்சத்து
வசந்தமாலையும் - தோடலர்கோதைக்குத் துனைந்துசென்றுரைப்ப - மாலை
வாராராயினுமாணிழை - காலைகாண்குவமெனக் கையறுநெஞ்சமொடு-பூம
லரமளிமிசை பொருந்தாதுவதிந்தனள் - மாமலர்நெடுங்கண் மாதவிதா
னென.

இ-ள். நெடியோன்குன்றம் உம் - திருமாலினது வேங்கடமலையும்,
தொடியோள் பௌவம் உம் - குமரிக்கடலும், தொடியோள் எனவே பெ
ண்பாற்பெயராற் குமரியென்பதாயிற்று;—ஆகவே தென்பாற் கன்னதோ
ரார்த்திற்குப் பெயராம். ஆயின்? தொடியோணதியும்என்னாதுபௌவம் என்
றது என்னையெனின்;—முதலூழி யிறுதிக்கட்டங்கண் மதுரையகத்துத்தலை
ச்சங்கத்த கத்தியனாரும் இறையனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாக
ராயரும் நிதியின் கிழ வனுமென்றிவருள்ளிட்டநாலாயிரத்து நானூற்று
நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும், முதுநாரையும் முது
குருகுங்களரியா விரையு முள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயி
ரத்துநானூற்றுநாற்பதிற்றாண்டிருந்தனர் * இரியனார் காய்சினவழுதிமுதல்
கடுங்கோனிறுயுள்ளார் எண்பத்தொன்பதின்மர் அவருட்கவியரங்கேறினார்

* இரியனார் சங்கமிருந்தவர்.

எழுவர் பாண்டியருள், ஒருவன் செயமாகீர்த்தியனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்திரியினான். அக்காலத்தவர் நாட்டுத் தென்பாலிமுகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும் குமரியென்னும் ஆற்றிற்கும் இடையே யெழுநூற்றுக்காவதம், இவற்றினீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ் மதுரைநாடும் ஏழ் முன்பாலைநாடும் ஏழ் பின்பாலைநாடும் ஏழ் குன்றநாடும் ஏழ் குணகாநாடும் ஏழ் குறும்பனைநாடும் என்னும் இந்நாற்பத்தொன்பது நாடுங் குமரிகொல்ல முதலிய பன்மலைநாடுங் காடும் பதியுந் தடநீர்க்குமரி வடபெருங்கோட்டின் காறுங்கடல்கொண் டொழுகலாற்குமரி நதியைப்பௌவம் என்றார் எனவுணர்க. இஃதென்னை பெறுமாறெனின்;—"வடிவேலெறிந்த வான்பகைபொறாது - பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக் - குமரிக்கோடு கொடுங்கடல்கொள்ள" என்பதனானுங் கணக்காயனார்மகனார் நக்கீரனாருரைத்த இறையனார் அகப்பொருள் * உரையானும், உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் † முகவுரையானும்பிறவாற்றானும்பெறுதும். அஃதற்றாக வடக்கின்கண் வேங்கடமலை, தெற்கிற்கு மரிக்கடலெனக் குறியாற் கூறினாரேனுங் கீழ்பான்மேல் பாற்கெல்லை கூறாததென்னையோ வெனின்;—நெடுந்திசையாகிய வடபாற்கெல்லை குன்றமென்றுந் தென்பாற் கெல்லை குமரிப்பௌவமென்றுங்கூறினமையான் ஒழிந்ததிசைகட் கொழிந்தபௌவமென்பது எல்லையாயிற்று. என்னை "வேங்கடங்குமரித் தீம்புனற்பௌவமென் - றந்நான்கெல்லை தமிழதுவழக்கே" என்றார் சிகண்டியாரும் ஆக

---

* இறையனாரகப்பொருள் "அன்பினைந்திணைக்களவெனப்படுவ-தந்தணரருமறைமன்றலெட்டினுள்-கந்தருவவழக்கம்என்மனார்புலவர்" வடக்குங்குடக்குங்குணக்கும்வேங்கடங்குமரித்தீம்புனற்பௌவமென் றிந்நான்கெல்லையகவயிற்கிடந்தநூலதன் முறைமை வாலிதின்விரிப்பின் இந்நூலதுவரலாறு மூவகைச்சங்கமிரியனார் பாண்டியர்கள், அவருட்டனிநூல்கேட்டார் யாரோவெனின்;—தலைச்சங்கமிருந்தார்அகத்தியனாரும்திரிபுரமெரித்த விரிசடைக்கடவுளும் குன்றமெறிந்த முருகவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும்நிதியின்கிழவனுமித்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மரொன்பது. அவருள்ளிட்டுநாலாயிரத்துநானூற்றுநாற்பத்தொன்பதின்மர்பாடினாரொன்பது. அவர்களாற் பாடப்பட்டன பரிபாடையுமுது நாரையுமுது குருகுங்களரியா விரையு மித்தொடக்கத்தன. அவர்நாலாயிரத்து நானூற்றுநாற்பதிற்றியாண்டு சங்கமிருந்தாரொன்ப. அவர்களுட் சங்கமிரியனார் காய்சின வழுதி முதலாகக்கடுங் கோனீறாகவெண்பத்தொன் பதின்மரொன்ப. அவருட்கவியரங் கேறினார் எழுவர்பாண்டியர் என்பது, அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப.

† "கடல்கொள்வதன்முன்பு பிறநாடும்உண்மையிற் றெற்கு எல்லையாகக்கூறினார்" தொல்காப்பியம் எழுத்ததிகாரம் ௪-ஆம் பக்கத்திற்காண்க.

வின். அன்றியும் வடதிசைக்கண் ஒழிந்த திரிபுடை மொழிபல வுளவாகலான் மலையெல்லை கூறியொழிந்த திசைமூன்றிற்குந் திரிபின்மையாற் கடலெல்லை கூறினானெனினும் அமையும். தமிழ்வரம்பு அறுத்த தண்புனல்நாடு-தமிழ்நாட்டிற்கு எல்லையென்று கூறப்படும் தமிழ் வேந்தருடைய குளிர்ந்த நீரையுடையநல்லநாட்டிடத்து,மாடம்மதுரைஉம் - மாடங்கணிறைந்த மதுரையும், பீடுஆர் உறந்தைஉம்-பெருமைநிறைந்தஉறையூரும்,கலிகெழு வஞ்சிஉம் - மங்கலவோசை மிக்கவஞ்சிநாடும், ஒலிபுனல் புகார்உம்-ஒலிக்கும் நீர்சூழ்ந்த காவிரிப்பூம்பட்டினமும், அரசுவீற்றிருந்த உரைசால் சிறப்பின்-(ஆகிய இந்நான்கு நகரிற்கும்) அரசனாய் * ( தன்தேரும் குதிரையும் யானையும்சேனையும் இச்சொன்ன முறையேவைத்து ) வீற்றிருந்த புகழமைந்த சிறப்பினையுடைய, மாரன்மன்னன் - மன்மதனாகிய அரசனுக்கு, மகிழ்துணைஆகியஇன்இளவேனில்-மகிழ்ச்சியைத்தருந்துணைவனாகியஇனியஇளவேனில்என்னும்அரசன்,இவண்வந்தது(இப்பொழுது) இவ்விடத்து வந்துவிட்டானென்று,வரும்என்னும்எதிர்காலத்தைவந்ததென இறந்தகாலத்தாற்கூறினார் இதுவிரைவு, என்னை; -"வாராக்காலத்து வினைச்சொற்கிளவி - இறப்பினுநிகழ்வினுஞ் சிறப்பத்தோன்றும் - இயற்கையுந் தெளிவுங்கிளக்குங்காலை" தொ - சொ - வி - ௪௮ - ௬. இஃதென் சொல்லியவாறோ வெனின்;—காமனுக்குத் தேர்தென்றலும் குதிரைகிளியும்யானை அந்திப்போதும்சேனைமகளிரும் ஆதலால்,தேர்பாண்டியர்காவலும்,குதிரைசோழர்காவலும்,யானைசேரமான்காவலுமாக்கித்தானும்தன்சேனையும்புகாரின்வீற்றிருந்தானென்பது இதனது கருத்து. வளம் கெழுபொதியில் மாமுனிபயந்த-வளமைபொருந்திய பொதிய மலையிலுள்ள பெருந்தவத்தை யுடைய அகத்தியமுனிவன்பெற்ற, இளங்கால்தூதன் இசைத்தனன் ஆகலின் -தென்றற்காற்றாகியதூதன் (குயிலோனுக்கு) சொன்னானாதலின், மகரம்வெல்கொடி மைந்தன் சேனை புகர் அறுகோலம் கொள்ளும் என்பதுபோல் - வெல்லுமீனக்கொடியையுடைய காமன் சேனையாயுள்ளாரெல்லோரும் குற்றமற்ற போர்க்கோலத்தைக் கொண்மினென்னும்பொருள்தோன்ற, கொடிமிடைசோலை குயிலோன் என்னும்படை உள்படுவோன் † பணிமொழிகூற-பூங்கொடிகள்நெருங்கியசோலை யென்னும்படை வீட்டிலிருக்கும் அக்குயி

---

* உருவிலாளனொருபெருஞ்சேனைஇகலமராட்டியெதிர்நின்றுவிலங்கி எனவும் "மகரவெல்கொடி மைந்தன்சேனை-புகரறுகோலங் கொள்ளுமென்பதுபோல்" எனவும்மேற்கூறுதலானும் "திண்பரித் தென்றலுந்தேருந்தார்புனை-வண்பரிக்கிள்ளையுமாலையானையுங்-கண்கடைப்படுங்கோலக்காமர்சேனையும்-என்படப்புகுந்தனனிரதிகாந்தனே" எனப் பிறர்கூறுதலானும் உணர்க.

† "கோவையார் - விண்டலையாவர்க்கும் வேந்தர்வண்டில்லைமெல்லங்சழிசூழ் - கண்டலையே கரியாக்கன்னிப் புன்னைக்கலந்தகள்வர்-கண்டிலையே வரக்கங்குலெல்லா மங்குல்வாய்விளக்கும்-மண்டிலமே பணியாய் தமியேற்கொருவாசகமே என்பதுட்காண்க".

லோனென்னும் சேனையுளோர் வாச்சியமாயுள்ளவன் (தென்றற் காற்று
கியதூதன் தனக்குபணித்தமொழியை (சேனைக்குச்சின்னமூதி) கூற, பணி
பணித்தல் அது ஆவது அருளிச்செய்தல் இதுதிசைச்சொல் கடல்விளை
யாட்டின் உள்மடல் அவிழ்கானல் - கடலாட்டாகிய விளையாட்டின்கண்
ணே இதழவிழ்ந்தகானலின்கண், கோவலன் ஊட கூடாது ஏகிய - கோ
வலனூடுதலால்கூடாமல் (தமியளாய்த் தம்மனையில்) சென்ற, விளையாட்
டென்றூர் விளையாட்டுப் பூசலாயிற்று என்னும்வழக்கு. மாமலர் நெடுங்கண்
மாதவி - கரியமலர்போலும் பரந்தகண்களையுடைய மாதவி,வான் உறநிவந்த
மேனிலைமருங்கின் விரும்பி ஏறி - விண்ணுலகிற்பொருந்த வுயர்ந்த (பருவத்
திற்குப்பொருந்திய) மேனிலையில் ஒருபக்கத்தில் (நிலாமுற்றத்தில்) விரும்பி
யேறி,மாணிழை-மாட்சிமைபட்ட ஆபரணத்தையணிந்தஅம்மாதவியானவ
ள், தெண்கடன்முத்துஉம்தென்மலை சந்துஉம்—தெள்ளியநீரையுடைய கட
லிற்றோன்றிய முத்தமும் பொதியமலையிற் றோன்றிய சந்தனமும், தன்க
டன் இறுக்கும் தன்மைய ஆகலின் - (தான் இளவேனிற் காலத்தில் மன்
மதனுக்கு) தனதுதிறையாக விறுக்குந்தன்மையை யுடையபொருள்களாத
லால், குங்குமம் (முன்சென்றபின் பனிக்காலத்தில்) குங்குமத்தால் (அலங்
கரிக்கப்பட்ட) கொங்கைமுன்றில்வளாகத்து - தனமுற்றமாகியபரப்பில்,
மை அறுசிறப்பின் கையுறை ஏந்தி-குற்றமற்றசிறப்பினையுடைய காணிக்கை
ப்பொருள்களாக (அவற்றை) ஏந்தி, (ஏந்தி என்றது பூண்டும்பூசியும் என்ற
படி) தனத்துக்குமுற்றம் மார்பு. அதிராமரபின் யாழ்கைவாங்கி-(கோவை)
கலங்காத மரபினையுடையயாழ்கையில்வாங்கி, மயங்கி (முந்துகண்டத்தாற்
பாடி யமதுரகீதம்) மயங்கி, மதுர கீதம்பாடினள் (யாழால்) மதுர கீதம்
பாடத் தொடங்கினவள்;

கூற என்னும் வினையெச்சம் காரணப்பொருளில் வந்த எச்சமாதலால்
விரும்பி என்னும் வினையெச்சத்தின் முதனிலையையும் அது ஏறி என்னும்
வினையெச்சத்தின் முதனிலையையும் அது பாடினள் என்னும் வினைப்பெய
ரின் முதனிலையையுங் கொண்டன. மயங்கிஎன்னும் எச்சத்தின் முடிபும்
அது * ஒன்பான் விருத்திஉள்-ஒன்பதுவகைவிருத்தியுள், தலைக்கண்விருத்தி
முதலிலுள்ள விருத்தியாகிய, நன்பால் அமைந்த இருக்கையள் ஆகி - நன்
மைப்பகுதியமைந்த பதுமாசனத்தையுடையவளாய், (தனக்கு நாயகனின்

---

* விருத்தி யென்பது ஓவிய நூலுள் நிற்றல் இருத்தல் கிடத்தல்இய
ங்குத லென்னு மிவற்றின் விகற்பங்கள் பலவற்றுள், இருத்தல் திரிதர
வுடையனவும் இல்லனவுமென விருபகுதி, அவற்றுள் திரிதர வுடையன
யானை, தேர், புரவிமுதலியன. திரிதரவில்லன ஒன்பது வகைப்படும்.
"பதுமுகமுற் கட்டிதமே யொப்படி - இருக்கை சம்புட மயமுகஞ்சுவத்
திகம் - தனிப்புட மண்டில மேகபாதம் - உளப்பட ஒன்பதும் - ஆகுந்
திரிதர வில்லாதிருக்கை" என்றாராகலானும் "பன்னாள்சழிந்தபின்னர் மூன

மையாற் காதிநாயகனுக மானதத்தானேக்கி யெதிர்முகமாகவிருந்து) காதிநாயகன் என்னை "முகத்தோ டெதிர்முகமாகநோக்கி-நயத்தகவொருவனுங் கவனுகிய-தோற்றமும்" எனவும் "நல்லிசை மடந்தை நல்லெழில்காட்டி-அல்லியம் பங்கயத்தயனி னிதுபடைத்த - தெய்வஞ்சான்ற தீஞ்சுவை நல்யாழ் - மெய்பெறவணங்கிமேலொடு கீழ்புணர்ந்-திருகையின் வாங்கியிடவயினிரீஇ - மருவியவினையம் பாடுதல்கடனே" என்றார் ஆகலின். வினையம் தேவபாணி. இதனுள் * வலக்கைப்பதாகைகோடு ஒடுசேர்த்தி-வலக்கைப்பதாகையைக்கோட்டின்மேல்வைத்து, இடக்கைநால்விரல்மாடசம்தழீஇ-இடக்கையிலுள்ள நான்குவிரல்களால் மாடகத்தைத்தழுவி, மாடசம்வீக்குங்கருவி. வலக்கைப்பதாகையாவது பெருவிரல்குஞ் சித்தொழிந்தவிரலெல்லாம்நிமிர்த்தல் † செம்பகை ஆர்ப்பு ஏ அதிர்வு ஏ கூடம்-இசைவழிப்படா திசைத்தலும், மாத்திரைகடந் தொலித்தலும், நரம்பைச்சிதறவுந்தலும், இசைநிறவாது தன்பகையாகிய ஆருநரம்பினிசையிற்குன்றித் தன்னேசை மழுங்குதலும், ஏகாரம் எண். வெம்பகை நீக்கும் விரகு உளி அறிந்து - (ஆகிய) வெய்ய பகை நரம்பு நான்கும் புகாமல், நீக்கும்பேரறிவாற்கடைப்பிடித்தறிந்து, உளிமூன்றும் வேற்றுமைப்பொருள்பட்டுநிற்கும் ஓரிடைச்சொல்

---

ளுள் - எண்மைப் பாட்டினு ளிரக்கமே நிறீஇ - ஒண் வினையோ வியர் கண்ணிய விருத்தியுட் - டலைவயினும் பர்த்தாள் குறிக்கொண்ட - பாவைநோக்கத் தாரணங்கெய்தி" எனப்பெருங்கதையுட்கூறினமை யானுங்கொள்க. இனி, நாடக நூலா ரிவ்விருப்பை யைம்பதென விரிவலா யறையாற்கூறித் தொகைவரையறை கூறுவாரதனை யொன்பதி னடக்கினரென வுணர்க "ஆதிப்பாவிருத்தி யைம்பதிற்புலவர்-ஓதிக்கொண்டனரொன்பான்விருத்தி" என்றாராகலின்இதனுள் தலைக்கண்விருத்தியாவது பதுமாசனம்; அதுகாலடிகள்மாற்றிக் குதிமேலா யிருத்தல்.

---

* "நிரும்த்-தெல்லா விரலுநிமிர்த்திடையின்றிப்-பெருவிரல்குஞ் சிப்பதாகையாகும்" எனறூர் ஆகலின்.

† "இன்னிசைவழியதன்றி யிசைத்தல் செம்பகையதாகும் - சொன்னமாத்திரையி னேங்க விசைத்திடுஞ் சுருதியார்ப்பே - மன்னிய விசைவராது மழுங்குதல் கூடமாகும் - நன்னுதல் சிதறவுந்தலதிர்வென நாட்டினூரோ" இது பஞ்சபாரதீயம். செம்பகையார்ப்பேயதிர்வேகூடம்என்பதற்கு "பண்ணேடுளரா-வின்பமிலோசையென்மனூர்புலவர்" "ஆர்ப்பெனப்படுவதளபிறந்திசைக்கும்" "அதிர்வெனப்படுவ திழுமெனலின்றிச் - சிதறியுரைக்கு நருச்சரிப்பிசையே" "கூடமென்பது குறிப்புறவிளம்பின் - வாய்வதின்வராது மழுங்கியிசைப்பதுவே" இவை நான்கு மரக்குற்றத்தாற் பிறக்கும் என்னை "நீரிலே நிற்றலழுகுதல்வேத னிலமயக்கும் - பாரிலேநிற்றலிடிவீழ் தனேய்மரப்பாற்படல்கோள் - நேரிலேசெம்பகையார்ப் பொடுகூடமதிர்வு நிற்றல்-சேரினேர்பண்கனி லமயக்சம்படுஞ்சிற்றிடையே" இதனைக்காந்தருவதத்தை யாரிலம்பகத்திற்காண்க.

* பிழையா மரபின் ஈரேழ் கோவையின் — மயங்காத மரபினையுடையபதினாற் கோவையாகிய சகோடயாழை, உழைமுதல் கைக்கிளை இறுவாய் கட்டி — உழைக்குமுதலாகிய குரலாகவும், கைக்கிளைக்குஇறுதியாகிய தாரமாகவும் கட்டி, இக்குரல் முதலேழினு முற்றோன்றியது தாரம். † இணைகிளைபகை நட்புஎன்ற இந்நான்கின்—இணைகிளை பகைநட்புஎன்றுசொல்லப்பட்ட இந்நான்கினும், கிளை ஐந்தாம் நரம்பு, இசைபுணர்குறி நிலைஎய்த நோக்கி—உழை குரலதாகிய கைக்கிளை தாரமதாகிய கொடிப்பாலை முதற்பிறக்கக் நோக்கி, கு, இ, து, வி, கை, தா. செம்பகை ஆர்ப்பு அதிர்வுகூடம் இவைஅவையொழிந்தஆறுநரம்பும்.முன்னர்காண்க ‡ குரல்வாய் இளிவாய் கேட்டனள்-இளிகுரலாக வாசித்து, கேட்டனள் முற்றெச்சம். இனிவட்டப்பாலை இடமுறைத்திரிபுகூறுகின்றார். என்னெனின், உழைகுரலாகியகொடிப்பாலைநிற்கஇடமுறைதிரியுமிடத்துக்குரல்குரலாயதுசெம்பாலை, இதனில்குரலிற்பாதியுந்தாரத்திலொன்றும் இரண்டினந்தரத்திலே கிளையாக்கித் தாரத்திலேநின்ற வோரலகைவிளரியின்மேலேறிட,விளரிகுரலாய்ப் படுமலைப்பாலையாம், இம்முறை யேதுத் தங்குரலாயது செவ்வழிப்பாலையாம், விளரிகுரலாயது அரும்பாலையாம், கைக்கிளை குரலாயது மேற்செம்பாலையாம், தாரம் குரலாயது விளரிபபாலையாம். என அந்தரலமைந்து நீக்கியுறழ்ந்து கண்டுகொள்க. இவ்விடத்திற்றார நரம்பினந்தரக் கோலைத்தாரமென்பது "தன்னந்தானுந் தன்வழிப்படாத" என்னுஞ் சூத்திரவிதியானென்க. இவ்வேழுபெரும்பாலையினையு முதலெடுத்து நூற்றுமூன்று பண்ணும்பிறக்கும். அவற்றுட் செம்பாலையுட் பிறக்கும் பண்கள்பாலையாழ், நாகநாதம், ஆசரி,தோடி,கௌளி, காந்தாரம், செந்துருத்தி, உதையகிரி எனவிவைபிறவும், விரிப்பினுரை பெருகுமாதலி லவற்றைவந்தவழிக் கண்டுகொள்க. "நாற்பெரும்பண்ணுஞ் சாதிநான்கும்-பாற்படுதிறனும்பண்ணெனப்படுமே" என்றாராகலின். அன்றியும் வரன்முறைமருங்கின் ஐந்தின்உம் ஏழின்உம் - அல்லாமலும் முற்கூறியவகையே கிளையாகிய ஐந்தாநரம்பினும் இணையாகிய ஏழாநரம்பினும்,

---

* "ஒன்றோடிருபது மொன்பதும் பத்துடனே - நின்றபதினாலும் பின்னேழுங் - குன்றாத - நால்வகையாழிற்கு நன்னரம்பு சொன்முறையே மேல்வகைய நூலோர் விதி. நால்வகையாழ் அரங்கேற்றுக் காதையிற் காண்க.

† இந்நான்கும் தாரமுதலாக எண்ணவுள்ள ஆறுநரம்பும் "தாரத் துட் டோன்று முழை யுழையுட்டோன்றும் - ஒருங்குரல் குரலினுட்டோன்றும் - சேருமிளி - உட்டோன்றுந் துத்தந்துத் தத்துட்டோன்றும் விளரி- கைக்கிளையுந் தோன்றும் பிறப்பு"

‡ "குன்றாக்குரற்பாதி தாரத்திலொன்றும்-நடுவணைய இணைகிளையாகக்- கொடியிடையாய் - தாரத்திலொன்று விளரி மேலேறுமென் - றோர்த்திளி குரலாய் நின்று.

உழைமுதல் ஆகஉம் - உழைகுரலாகவும், உழைஈறுஆகஉம் - உழைதார மாகவும், குரல்குரல் ஆகஉம் - குரல்குரலாகவும், குரல் ஈறுஆகஉம் - குரல் தாரமாகவும், அகனிலை மருதம்உம் - (கிளையே) உழையேகுரலாய்க் கொடிப்பாலை அகனிலைமருதமாகவும், புறனிலைமருதம்உம் - உழைதாரமாய்க் கைக்கிளை குரலாய் மேற்செம்பாலை புறனிலைமருதமாகவும், அருகியல் மருதம்உம் - குரல்குரலாய்ச் செம்பாலை அருகியன் மருதமாகவும், பெருகியல்மருதம்உம் - குரல்தாரமாய்த் தாரக்குரலாய்ப் பெருகியன் மருதமாகவும் இது நிரனிறை. நால்வகை சாதிஉம் நலம்பெறநோக்கி - (சொல்லப்பட்ட) நால்வகைச்சாதிப்பண்ணையும் ஓசையினினிமைபெறநோக்கி, மூவகை இயக்கம் - வலிவுமெலிவுஞ் சமனுமென்னு மூவகைப்பட்ட (சுருதியினிற்கு நிலைமையிலே நிறுத்தி) முறைஉளிகழிப்பி-முறையானே யத்தொழிலைக்கழித்து, திறத்து இசைப்படும் தென்றிசைக்கரணத்து புறத்து ஒருபாணியில் பூங்கொடிமயங்கி - திறங்கட்குப் பிறப்பிடமாகிய (இச்சாதிப் பெரும்பண்களுள்) புறனிலைமருதப்பண்ணை வாசித்தலில் மாதவிமயங்கி, அன்றியத்திறங்களுட் புறநீர்மையென்னுந் திறத்தின் மயங்கிஎன்றுமாம்;

சேர்த்தி தழீஇ அறிந்துகட்டி நோக்கிகேட்டு நோக்கிசழிப்பி என்னும் வினையெச்சங்களொன்றனை யொன்றுகொண்டு மயங்கியென்னும் வினையெச்சத்தின் முதனிலைகொண்டன.

பசந்தமேனியள் — (கோவலனைப்பிரிதலால்) நிறம் வேறுபட்டமேனியையுடைவளாய், விரைமலர்வாளியின் - வாசனையையுடைய சிறியமலரம்பால், வியன்நிலம்மாண்ட—பெரியநிலமுழுமையுந்தன்னடிப்படுத்திய, ஒருதனிசெங்கோல் ஒருவன்ஆணையின் - ஒப்பில்லாததனிச் செங்கோலையுடையவொருவனுகிய காமராசனுணையால், ஒருமுகம்அன்றி உலகுஉம்தொழுது இறைஞ்சும் திருமுகம்போக்கும் செவ்வியள் ஆகி—ஒருமுகமல்லாமலெல்லாவுலகமுந்தொழுது வணங்குமிவன் திருமுகத்தைப் போகவிடக்கடவோமென்னும் நினைவாற்பிறந்த செவ்வியையுடையவளாகி, செவ்விமனோரதம்உம்மைபொருத்தமில்புணர்ச்சி. திருமுகம்தருதிவழக்கு. சண்பகம்மாதவிதமாலம் கருமுகைமல்லிகைவெண்பூவேர்ஒடுஅம்செங்கழுநீர்ஆய்இதழ்மிடைந்தபூகத்திகைஇடைநிலத்துயாத்த—சண்பகமலரும்குருக்கத்தியும் பச்சிலையும்இருவாட்சியும்மல்லிகைமலரும்வாசனைப்புசலும் அழகிய செங்கழுநீரிதழுமாகிய இவற்றின் நெருங்கத்தொடுத்தபூவின்(மணமாறுபடுஞ்செவ்வியையுடைய) மாலையினடுவில், செம்மல் எதிர்முதிர்தாழைபூ (தொடுத்த) மலரும்பருவமெதிர்கொள்ள முதிர்ந்ததாழைப்பூவினது, முடங்கல்வெண்தோடு—முடக்கத்தையுடைய வெள்ளியதோட்டால், அல்லதுபித்திகை கொழுமுகை ஆணிகைகொண்டு (அதற்கு) அய்யலதாகியசிறுசண்பகத்தின்கொழுவியமுகையாகிய வெழுத்தாணியைக் கையின்வாங்கிக்கொண்டு, அலத்தகம்கொழும்சேறு அளைஇ — கொழுவிய செம்பஞ்சுக் குழம்பிற்றோய்த்து (எழுதுகின்

றவன்) மன்உயிர்எல்லாம் மகிழ்துணைபுணர்க்கும்இன்இளவேனில் இளவரசு
ஆள்வான்—ஆக்கத்தையுடையவுயிர்ப்பரப்புகளையெல்லாம்தாமகிழுந்துணை
யோடு புணர்விக்கும் இனியஇள்வேனி லென்பான் இளவரசனுதலால்,
செவ்வியன் அல்லன் - நெறிப்படச்செய்யான் (அவனேயன்றியும்) அந்திப்
போது அத்து - அந்திப்பொழுதின்கண் அரும்புஇடர் தோன்றிய திங்கள்
செல்வன் உம் - உண்டாகும் விரகத்தின்மேலே தோன்றிய சந்திரனுகிய
செல்வனும், அந்தியாகிய யானையின் பிடரிற்ருேன்றிய திங்களொனிற்பிறை
யாம் ஆகவே;—நாடு காண்காதையுள் "வைகறையாமத்து-மீன்திகழ் விசும்
பின் வெண்மதிநீங்கக் காரிருணின்ற கடைநாட்கங்குல்" பூருவபக்கத்துப்
பதினுலாம்பக்கம் என்பதனேடும் "ஆடித் திங்கட்படம் வெள்ளிவாரத்தொ
ள்ளெரியுண்ணெனும்" என்பதனேடு மாறுகொள்ளுதலாற் பொருந்தா தெ
ன்க. இனிவிழவின் முதலுமுடிவுங் கடலாட்டும் புலவியும் புறப்பாடும் வழி
ச்செலவும் பொறையுயிர்த் திருப்பும்நீறைபதி புகுதலுந் திதறுநாளு மூர்
திப்பாடு முதனடுவிறுதியாகக் கட்டுரைகாதையுள் விரித்துக் கூறுவாம் அத
னுட் கண்டுகொள்க. திங்கட்செல்வன் என்பதற்கு அந்திமாலை சிறப்புச்செ
ய்காதையில் திங்களஞ்செல்வன் என்பதற்குக் கூறியவிதிகொள்க. உம்மை
இறந்தது தழீஇய எச்சப்பொருட்டு. தந்தைதாயரிடத்தன்றி மாலையேயெ
ன்னும் யானையின் பிடரிற்பிறந்த செல்வன் என இழித்துக் கூறினுளெனினு
அமையும். புணர்ந்தமாக்கள் பொழுதுஇடைப்படின் உம் - புணர்ந்தோர் சி
றிதுபொழுது ஊடலால் இடையேகழியினும், தணந்தமாக்கள் தம்துணை
மறப்பின்உம் - (ஓதல்முதலியவற்றுல்) பிரிந்தோர் தமது மனைவியர்க்குக்
(கூறியபருவம்) பொய்ப்பினும்,நறும் பூவாளியின்—(மன்மதனது) நறியம
லரம்பால், நல்லுயிர் கோடலின்—இன்பறுகரு முயிர்களைக் கொண்டுவிடுத
லால், செவ்வியன் அல்லன்—அவனுஞ்செவ்வியனல்லன், இறும்பூது அன்
மை—(அவனுக்குஇது) புதியதன்று, அஃது அறிந்திடுமின்என—அதனை யறி
மினென்றுகொண்டு, அறிந்திடுமின் அறிபகுதி, து சாரியை, நகரத்தோற்றமு
ம் உகரக்கேடும்சந்தி,இடுபகுதிப் பொருள் விகுதி, அனைத்தும் ஒருபகுதி, மி
ன் ஏவற் பன்மை விகுதி. எண்ணெண்கலை உம் இசைந்து உடன்போக்கி—
அறுபத்துநான்குகலைகளும் வழிபட்டுப் புகழ்ந்து நடக்க, போக்கி தன்வினை
ப்பொருளில்வந்த பிறவினை யெச்சத்திரிபு. பண்உம் திறன்உம் (அவற்றுள்)
பண்களுந் திறமுமாகிய இவற்றுல், தொக்குநின்ற எழாமுருபு கூட்டிப்பிரி
த்தல். புறங்கூறுநாவில்—புறங்கூறப்படு நாவினுல்,பண்களும்திறனும் இவள்
சொல்லுக்குத் தோற்றமையால் புறங்கூறும் என்ருர். புறங்கூறுதல் நிகர
ல்லாதார் தம்பொருமையின், அவரில் வழி யிகழ்ந்து கூறுதல். அன்றிப்பண்
ணையுந்திறனையும் பழிக்குநா எனினும் அமையும். யாழ்விளை மழலையின்—யாழ்
போலும் (இனிமை) முற்றிய மழலைச் சொல்லோடு, தளைவாய் அவிழ்ந்த
சுட்டுக்குலைந்த, தனிப்படு காமத்தின் — சிறந்தார்க்குஞ் சொல்லுதற்கரிய
சுட்டுருக்குங் காமத்தினை, விரித்து உரை எழுதி—(அப்பாசுரத்தை) பேசிப்

பேசி யெழுதி, படர் உறுமாலையின் — நினைவு மிகுமாலைக்கண்ணே, படர் துன்பம் எனினும் அமையும். வசந்தமாலையை வருக என கூய் — வசந்த மாலையை வருகவெனவழைத்து, தாமலர் மாலையின் — ஆராய்ந்தமலராற் றொடுத்த மாலையின்கண் (எழுதி) துணிபொருள் எல்லாம் — தீர்ந்த பொருளெல்லாவற்றையும், கோவலற்கு அளித்து ஈங்கு கொணர்க என — கோவலனுக்கு ஏற்பச் சொல்லி யிப்பொழுதே கொண்டுவருவாயாகவென்று சொல்ல, கொணர்க கொணு பகுதி. அளிக்க என்னுது அளித்துக்கொணர்க என்றாள் அதுகாமன் திருமுகம் ஆதலானும் முன்னரிவன் பிரிவதறியாமையாதலானும் என்க.

செவ்வியளாகி அலை இகைக்கொண்டு எழுதி கூய் அளித்து என்னும் இறந்தகால வினையெச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு கொணர்க என்னும் வியங்கோள் வினைமுற்றின் முதனிலைகொண்டன.

மாலைவாங்கிய வேல் அரி நெடுங்கண் — (மாதவிகொடுத்த) மாலையை வாங்கிச்சென்ற வேல்போன்ற அரிபரந்த நீண்டகண்களையுடைய அவ்வசந்தமாலை, கூலம் மறுகின் கோவலற்கு அளிப்ப—கூலத்தையுடைய கடைவீதியின்கட் கோவலனைக் கண்டு கொடுக்க, கூலம் என்பதனை முன்னர்க் காண்க. சிறு கடுஞ்சிலை உம் குமிழ் உம் கொவ்வை உம் அளகம் உம் திலகம் உம் குழை உம் கொண்ட மாதர் வாள்முகத்து—சிறிய கடிய வில்லையும் குமிழ மலரையும் கோவைக்கனியையும் தனக்கு உறுப்பாகக்கொண்டு திலகத்தையுங் கூந்தலையுங் குண்டலத்தையுமுடைய அழகிய ஒள்ளிய முகத்தின்கண், மதைஇயநோக்கம்ஒடு—மதர்த்தநோக்கத்தோடு, காதலின்தோன்றிய * கண்கூடுவரியும்—(என்மேல்)காதலையுடையாள்போற் றோன்றிமுதலில்எதிர்முகமாகநின்று நடித்தநடனமும், கண்கூடுதெரிசனம் அல்லது காட்சி. அதாவது ஒருவர் கூட்டவன்றித்தானே வந்து நிற்கும் நிலைமை. வரிமுன்னர்க்காண்க.புயல்சுமந்து வருந்தியகதிர்பொழிமதியத்து-கூந்தலைச்சுமந்துவருந்தியஅமிர்தகிரணத்தைவீசுமுகத்தினிடத்து,கயல்உலாதிரிதரும்காமர்செவ்வியின்-கண்களுலாவித்திரியும்விருப்பந்தருஞ்செவ்வியோடே,பாகுபொதி பவளம் திறந்து-பாகைப்பொதிந்தபவளம்போன்ற வாயைத்திறந்து, நிலவு உதவியஇளநாகுமுத்தின்நகைநலம்காட்டி-ஒளியைத்தருகின்ற இளஞ்சங்குபெற்றமுத்தையொத்தநகையினலத்தைக்காட்டி,இளமுத்து ஒளிதருதல்கருதிநாகிளமுத்தென்றாெனினும்அமையும்.வருகஎனவந்துபோகஎனபோகிய-

* வரி எண்வகைப்படும் என்னை "கண்கூடு காண்வரியுள் வரிபுறவரி—கிளர்வரியைந்தோடொன்ற வுணைப்பிர்—காட்சி தேர்ச்சி யெடுத்துக்கோளென—மாட்சியின்வரூஉமெண்வகை நிலைத்தே" "கண்கூடென்பது கருதுங்காலை—இசைப்பவாராதுதானேவந்து—தலைப் பெய்து நிற்கு நிலையிற்றென்ப".

வருகவெனவந்துபோகவெனப்போகிய,கருநெடுங்கண்ணி * கான்வரிக்கோலம்உம்-கரியநெடுங்கண்ணையுடையமாதவியினதுகான்வரியென்னுங்கோலமும், புயல்மதிகயல்பவளம் இவைஉவமையாகு பெயர்கள். அந்திமாலைவந்தஅதற்கு இரங்கி-(யான்பிரிந்தகாலத்து)அந்திமாலைவந்ததாக (பிரிவாற்றாமல்) இரங்கி, என்சிந்தைநோய் கூரும்சிறுமைநோக்கி—எனது சிந்தைநோயாகியமிக்கவறுமையைத் தானறிந்து, செருவேல்நெடுங்கண் - போரிற்குரியவேல்போன்ற நீண்டகண்களையுடையாள், கிளிபுரைகிளவி உம்மடம் அனம்நடை உம்களிமயில்சாயல் உம்—கிளியையொத்த சொல்லையும் மடப்பம்பொருந்திய அன்னத்தையொத்த நடையினையும் களித்தமயில் போலுஞ்சாயலினையும், கரந்தனளாகி - ஒளித்தவளாகி, சிலதியர்கோலம்—தோழிமார்கோலத்தை, (கொண்டு) ஒருதனிவந்த † உள்வரி ஆடல் உம் - தான் தனிவந்துநின்றுநடித்த உள்வரி யென்னும்நடிப்பும், உள்வரியென்பது வேற்றுருக்கொண்டுநடித்தல். கலம்பொருநுசுப்பினள்-ஆபரணங்களை யணியவும்பொருதநு சுப்பினையுடையவள், சிலம்புவாய்புலம்பஉம்மேகலைஆர்ப்ப உம்-சிலம்புகள்வாய் விட்டுப்புலம்பவும் மேகலைவாய் விட்டார்ப்பவும், காதல்நோக்கம் ஒடு (என்மேற்) காதலையுடையாள் போலவந்துநோக்கு நோக்கமோடு, திரிந்துவேறு ஆய என்சிறுமைநோக்கி - தன்னைப்பிரிதலால் என்தன்மை) திரிந்துவேறுபட்ட வெனதுவறுமையை யறிந்து, புறத்து நின்றுஆடிய ‡ புன்புறவரி உம் (என்னுடனணையாது) புறம்பேநின்று நடித்தநடிப்பும், புறவரியாவது தானுடனணையாது புறத்திநின்று விடைபெறுவது. நல்நுதல் - நல்லநெற்றியை யுடையாள், கோதை உம் குழல் உம்தாது சேர்அளகம் உம் ஒருகாழ்முத்தம் உம்திருமுலைதடம் உம் — மாலையுங்கூந்தலும்மகரந்தஞ்செறிந்த மயிர்க்குழற்சியும் ஒப்பில்லாதமுத்துவடமும் அழகியதனமாகிய உயர்ந்தவிடமும், மின் இடைவருத்த (ஆகியவிவை) மின்னல்போன்ற இடையைவருத்த, தோன்றி(புறவாயிலில்)வந்துநின்று,சிறுகுறுந்தொழிலியர் மறுமொழி உய்ப்ப-தோழியர்மறுமாற்றஞ் சொல்ல, புணர்ச்சிஉள்பொதிந்தகலாம் தருகலவியில் - புணர்ச்சியைத் தன்னுட்பொதிந்த கலகந்தருங்கலவி நிமித்தமாக (யான்சொல்லி விட்டதனை) இருபுறமொழிபொருள்கேட்டனள்ஆகி - இருபுறமொழிப்பல பொருளாகக்கொண்டு, தளர்ந்தசாயல்தகைமென்கூந்தல் - தளர்ந்தமென்மைத் தன்மையையும் அழகிய

---

* "கான்வரியென்பதுகாணுங்காலை - வந்தபின்னர் மனமகிழ்வுறுவனதந்து நீங்குந்தன்மைய தாகும்"

† "உள்வரியென்ப துணர்த்துங்காலை - மண்டிலமாக்கள் பிறிதோருருவங்-கொண்டுங் கொள்ளாது மாடுதற்குரித்தே" என்றாராகலின். மண்டிலமாக்களாவார் பாண்டவர்.

‡ "புறவரியாவது புணர்க்குங்காலைத் - தலைப்படவிசைப்பவராது தலைவர்முன்னர்ப் - புறத்துநின்று விடைபெறுவதுவே"

மெல்லிய கூந்தலையுமுடைய அம்மாதவி, கிளர்ந்துவேறு ஆகிய * கிளர் வரிக்கோலம் உம் - புலவியாற் போகின்றாள்போல நடித்துப்போன நடிப் பும், இதனாற்கூறியது யான்புணர்ச்சி நிமித்தமாகப்புலந்து தன்சிலதியர்க் குச்சொல்லிவிட்ட மொழியைக்கேட்டபடி யன்றிப்புலந்து சொன்னேனாக என்பது. கிளர்வரியென்பது நடுநின்றாரிருவர்க்குஞ் சந்துசொல்லக் கேட்டு நிற்பது. பிரிந்து உறைகாலத்து பிரிந்தனள் ஆகி - (நான்) பிரிந்திருக்கும் பொழுதில்பிரிவாற்றாமல் வருந்தினவளாகப் பாவித்து, என் உறுகிளைகட்கு - எனதுமிக்கவுறவினர்க்கு, தன் உறுதுயரம் - தனதுமிக்க துயரத்தை, தேர் ந்து தேர்ந்துஉரைத்த † தேர்ச்சிவரிஉம்-தேடித்தேடிக்கூறியதேர்ச்சிவரியும் தேர்ச்சிவரி என்பது நாயகன் கிளைசட்குத் தன்றுன்பங்களைத் தேடித்தே டிச் சொல்லுதல், அன்றி உம்-அதுவல்லாமலும், வண்டு அமர்கோதை உம்-வ ண்டுவிரும்புங்கூந்தலையுடையாள், மாலைஉள்மயங்கி-மாலைக்காலத்தில்மயங் கி, கண்டவர்க்கு உரைத்த ‡ காட்சிவரி உம்-கண்டோரெவர்க்கும் (தன்விரக த்தை)சொல்லிநடித்தகாட்சிவரியும், காட்சிவரியென்பதுதன் வருத்தைப்பல ருங்காணநடித்தல். அடுத்தவர்முன்அடுத்துமயங்கிய மயக்கம்-அடுத்த பிறர் முன்புஅடுத்து(தான்மேன்மேலும்)மயங்கியமயக்கத்தை, அவர்எடுத்துதீர்த்த ¶ எடுத்துக்கோள்வரிஉம்-அவர்களெடுத்துத்தீர்த்த அம்மயக்கைத்தீர்த்த எடு த்துக்கோள்வரியும், எடுத்துக்கோள்வரியென்பது தான்கையறவெய்திவீழ்ந் தாளாகவீழ்ந்து பிறரெடுத்துக்கொள்ளும்படி நடித்தல். ஆயிழை-ஆராய்ந்த ஆபரணத்தையுடையாய், அ பைந்தொடி அப்பசியவளையலையுடைமாதவி, ஆயி ழைபைந்தொடி இவ்விரண்டும்அன்மொழித்தொகைகள். ஆடல்மகள்ஏ ஆதலி ன்-நாடகமகளேயாதலால், தனக்குஅவளுக்கு(இங்ஙனம்நடித்தல்இடல்பல்ல வா)பாடுபெற்றன (அவள்) படுக்கைஇனிவறிதாயின என்றுகூறி (அம்மாலை யைமறுக்க) பாடுமுதனிலை திரிந்ததொழிலாகுபெயர். இவற்றாற்கூறியதென் னையெனின்;-முன்புதா னிவளோடுகூடியுமூடியுஞ்செல்கின்றகாலத்து இங் ஙனம்நடித்தநடிப்பை நாடகவுறுப்பாகியகண்கூடுமுதல்எடுத்துக் கோளீறாயு ள்ளவரியெட்டினோடுஞ் சிலேடித்துக்கூறிய கோவலன், நாடகமகளிர்க்கு இ ந்நாடகம்பிறந்துடைமையன்றோவெனச்சொல்லிமறுத்தது. அணிதோடுதிரு

---

* "கிளர்வரியென்பது கிளக்குங்காலை - ஒருவருய்ப்பத்தோன்றியவ ரவாய்-இருபுறமொழிப்பொருள் கேட்டுநிற்பதுவே" என்றாராகலின்.

† "தேர்ச்சியென்பது தெரிக்குங்காலைக் - கேட்டமாக்கள் கிளைகண்ட வர்முன் - பட்டதுமுற்றது நினை இயிருந்து - தேர்ச்சியோடுரைத்தலிற்றேர் ச்சியாகும்" என்றாராகலின்.

‡ "காட்சிவரியென்பது கருதுங்காலைக் - கேட்டமாக்களைக் கண்டவர் முன்னர்ப் - பட்டதுகூறிப்பரிந்து நிற்பதுவே" என்றார் ஆகலின்.

¶ "எடுத்துக்கோளை யிசைக்குங்காலை-அடுத்தழிந்து மாழ்கிவீழ்தரவம் பர்-எடுத்துக்கோள்புரிந் தெடுத்துக்கோளே" என்றாராகலின்.

முகத்து ஆயிழை எழுதிய-சாதணியாகிய தோட்டையுடைய அழகிய முகத்தையுடைய மாதவிஎழுதியனுப்பிய, மணிதோடு திருமுகம் மறுத்தற்கு-அழகியதாழைமிசழாகிய வோலையை மறுப்ப, குவ்வுருபு விணையெச்சப் பொருளில் வந்தது. இரங்கி வாடியநெஞ்சத்து வசந்தமாலை உம்-வருந்திமெலிந்த மனத்தையுடைய வசந்தமாலையாகிய கூனியும், தோடு அலர்கோதைக்கு துனைந்து சென்றுஉரைப்ப - பூவிசழ்பரந்த கூந்தலையுடைய மாதவிக்கு விரைந்துபோய்க்கூற, மாமலர் நெடுங்கண்மாதவி-சரியமலர்போன்ற நீண்ட கண்களையுடைய அம்மாதவி, மாணிழை - மாட்சிமைப்பட்ட ஆபரணத்தையுடைய வசந்தமாலையை (நோக்கி)மாலைவாரார் ஆயின் உம் - (ஆற்ருளாகிய தலைவியை யாற்றுவித்தற்பொருட்டுத் தலைவனியற்பழித்த தோழிக்குத் தலைவியியற்படமொழிகின்ருளாதலால்)இம்மாலைப்பொழுதில்வருவர்வாராராயினும், காலைகாண்குவம் என - காலைப்பொழுதி லிங்குக்காண்போமென்று கூறி, கைஅறுநெஞ்சம் ஒடு - செயலற்றமனத்தோடு, பூமலரமளிமிசைபொருந்தாது வதிந்தனள்—(தானிருந்த) மலரமளியின்கண் இமைபொருந்தாது (வருந்திக்) கிடந்தனள். எ-று.

பொருந்தாது வதிந்தனள் என்பதற்குக் கணவனுெடு கூடாது தங்கினள் எனப் பொருள்கொள்ளினும் அமையும்.

இனிதான் என்னும் இரண்டும் அசைகள். அளிப்ப என்னும் நிகழ்கால விணை யெச்சம் மறுத்தற்கு என்னும் பிறவிணைமுதல்விணை யெச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் இரங்கி என்னும் பிறவிணைமுதல்விணை யெச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் துனைந்து என்னும் எச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் சென்று என்னும் எச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் உரைப்பஎன்னும் எச்சத்தின்முதனிலையையும் அவ்வெச்சம்என என்னும் இடைச்சொல்லடியாகப்பிறந்த பிறவிணைமுதல்விணையெச்சத்தின்முதனிலையையும் அவ்வெச்சம் பொருந்தாது என்னும் எதிர்மறையெச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் வதிந்தனள் என்னும்விணைமுற்றின் முதனிலையையுங்கொண்டன.

ஊடினீரெல்லாமுருவிலான்றன்னுணை
கூடுமினென்றுகுயில்சாற்ற - நீடிய
வேனிற்பானிற்கலந்தாள்மென்பூந்திருமுகத்தைக்
கானிற்பாணிக்கலந்தாய்காண்.

(இ - ள்) ஊடினீர் எல்லாம் - (உலகத்துள் ஒருவனும் ஒருத்தியுமாயுள்ளோருள்) ஊடினவராயுள்ளீ ரெல்லீரும், உருவிலான்தன் ஆணை - மன்மதனது திருவாணையே, கூடுமின் என்று (தம்மில்) கூடுங்களென்று, குயில் சாற்ற - குயில்கள்கூற, நீடிய (பிரிந்தகாலம்) நீடுதலால் (ஆற்ருளாகி) வேனில்பால் -இளவேனிற்காலத்தில், நின்கலந்தாள் (என்றும்) நின்னோடுகலந்

தமாதவியினது, மெல்பூதிருமுகத்தை - மெல்லியபூவிலெழுதிய திருமுகத்தை, கான்இல்பாணிக்கு அலந்தாய்காண்-கானலிடத்து (அவள்பாடிய) பாட்டிற்கு வருந்தினவனே, காண் - காணாய் (என்று ஓலையை நீட்டினாள்). எ - று.

அலந்தாய் விளிவேற்றுமை. எல்லாம் என்னும் பொதுப்பெயர் பொதுமை நீங்கிநின்றது. நீடியகாரணப்பொருளில் வந்த இறந்தகாலப் பெயரொச்சம். கானல்கான் தொகுத்தல்.

செந்தாமரைவிரியத்தேமாங்கொழுந்தொழுக
அந்தாரசோகமலரவிழக் - கொந்தார்
இளவேனில்வந்ததாலென்னாங்கொலென்றன்
வளவேனில்கண்ணிமனம்.

(இ-ள்) செந்தாமரை விரிய (பின்பனிக்காலத்துக்கருகிய) செந்தாமரையரும்புகள் (கருகாது) மலரவும், தேமாகொழுந்து ஒழுக-தேமாமரங்களின் தளிர் விளங்கவும், அம்தார் அசோகம் மலர்அவிழ - அழகியவரிசையாயுள்ள அசோகங்களினதுபோது அவிழவும், கொந்து ஆர் (எங்கும்) பூங்கொத்துகள் நிறைய, இளவேனில்வந்தது - இளவேனிற் பொழுதுவந்தது, என்தன்-எனது, வளம் வேல்நில்கண்ணி-கோடாதவேல்(தன்னுருத்திரிந்து) நிலைபெற்ற கண்களையுடையாளது, மனம் என்ஆம் கொல் (நின்னைப் பிரிதலால்) மனம் யாதாய்முடியுமோ (கோவலனையருளாய்) எ-று.

கருகிய கருகாது என்பவற்றை யெல்லாவற்றிற்கும் கூட்டுக. முதலொடு சினைக்கொற்றுமையுண்மையால சினைவினையைமுதல் மேலேற்றிச் செந்தாமரை விரிய தேமாங்கொழுந்தொழுக அந்தாரசோகமலரவிழ என்றார். ஆர் என்னு முதனிலை வினையெச்சத்தில்வந்தது. மலரும் பருவத்தையுடைபோதை மலர் என்றது முதனிலைத்தொழிலாகுபெயர். விரிய ஒழுக அவிழ ஆர என்னும் வினையெச்சங்கள்தனித்தனியாய்வந்ததுஎன்னும்பிறவினைமுதல் வினையின் முதனிலை கொண்டன. கோவலனை அருளாய் சொல்லெச்சம்.

———:0:———

## கூ—ஆவது கனத்திறமுரைத்தகாதை.

(தான்கண்ட) கனவினதுவரலாற்றைத்தேவந்திக்குக்கூறியகதையையுடையது எனவே; கனாதிறம் ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர், திறம் உரைத்த இரண்டாம் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர், உரைத்தகாதை பெயரொச்சத்தொடர்;ஆகவே-நான்குசொல்மூன்று சந்தியாகக் கொள்க.

## கலிவெண்பா.

அகனகரெல்லாமரும்பவிழ்முல்லை
நிகர்மலர்நெல்லொடுதூஉய்ப் - பகன்மாய்ந்த
மாலைமணிவிளக்கங்காட்டியிரவிற்கோர்
கோலங்கொடியிடையார்தாங்கொள்ள - மேலைநாள்
மாலதிமாற்றாண்மகவுக்குப்பாலளிப்பப்
பால்விக்கிப்பாலகன்றான்சோர - மாலதியும்
பார்ப்பானொடுமனையாளென்மேற்படர்தல்விட்
டேற்பனகூறாரென்றேங்கி - மகக்கொண்
டமரர்தருக்கோட்டம்வெள்ளியானைக்கோட்டம்
புகர்வெள்ளைநாகர்தங்கோட்டம் - பகல்வாயில்
உச்சிக்கிழான்கோட்டமூர்க்கோட்டம்வேற்கோட்டம்
வச்சிரக்கோட்டம்புறம்பணையான் - வாழ்கோட்டம்
நிக்கந்தக்கோட்டம்நிலாக்கோட்டம்புக்கெங்கும்
தேவிர்காளெம்முறுநோய்தீர்மென்று - மேவியோர்
பாசண்டச்சாத்தற்குப்பாடுகிடந்தாளுக்
கேசம்படியோரிளங்கொடியாய் - ஆசிலாய்
செய்தவமில்லோர்க்குத்தேவர்வரங்கொடார்
பொய்யுரையன்றுபொருளுரையே - கையிற்
படுபிணந்தாவென்றுபறித்தாள்கைக்கொண்டு
சுடுகாட்டுக்கோட்டத்துத்தூங்கிருளிற் - சென்றாங்
கிடுபிணந்தின்னுமிடாகினிப்பேய்வாங்கி
மடியகத்திட்டாண்மகவை - இடியுண்ட
மஞ்ஞைபோலேங்கியழுதாளுக்கச்சாத்தன்
அன்னைநீயேங்கியழேலென்று - முன்னை
உயிர்க்குழவிகாணாயென்றக்குழவியாயோர்
குயிற்பொதும்பர்நீழல்குறுக - அயிர்ப்பின்றி
மாயக்குழவியெடுத்துமடி திரைத்துத்
தாய்கைக்கொடுத்தாளத்தையலாள் - தூய
மறையோன்பின்மாணியாய்வான்பொருட்கேள்வித்
துறைபோயவர்முடிந்தபின்னர் - இறையோனுந்
தாயத்தாரோடுவழக்குரைத்துத்தந்தைக்குந்
தாயர்க்கும்வேண்டுங்கடன்செய்து - மேலைநாள்

தேவந்தியென்பாண்மனைவியவளுக்குப்
பூவந்தவுண்கண்பொறுக்கென்று - மேவித்தன்

மூவாவிளநலங்காட்டியென்கோட்டத்து
நீவாவெனவுரைத்துநீங்குதலும் - தூமொழியாள்

ஆர்த்தகணவனகன்றனனைப்போயெங்குந்
தீர்த்தத்துறைபடிவேனென்றவனைப் - பேர்த்திங்ஙன்

மீட்டுத்தருவாயெனவொன்றின்மேலிட்டுக்
கோட்டம்வழிபாடுகொண்டிருந்தாள் - வாட்டருஞ்சீர்

கண்ணகிநல்லாளுக்குற்றகுறையுண்டென்
றெண்ணியநெஞ்சத்தினையளாய் - நண்ணி

அறுகுசிறுபூளைநெல்லொடுதூஉய்ச்சென்று
பெறுககணவனோடென்றாள் - பெறுகெனக்

கடுக்குமென்னெஞ்சங்கனவினாலென்கை
பிடித்தனன்போயோர்பெரும்பதியுட் - பட்டேம்

பட்டபதியிற்படாததொருவார்த்தை
யிட்டனரூராரிடுதேளிட் - டென்றன்மேல்

கோவலற்குற்றதோர்தீங்கென்றதுகேட்டுக்
காவலன்முன்னர்யாங்கட்டுரைத்தேன் - காவலனோ

டூர்க்குற்றதீங்குமொன்றுண்டாலுரையாடேன்
தீக்குற்றம்போலுஞ்செறிதொடீஇ - தீக்குற்றம்

உற்றேனோடுற்றவுரவோனோடியானுற்ற
நற்றிறற்கேட்கினகையாகும் - பொற்றொடீஇ

கைத்தாயுமல்லைகணவற்கொருநோன்பு
பொய்த்தாய்பழம்பிறப்பிற்போய்க்கடுக - உய்த்துக்

கடலொடுகாவிரிசென்றலைக்குமுன்றில்
மடலவிழ்நெய்தலங்கானற் - றடமுள

சோமகுண்டஞ்சூரியகுண்டத்துறைமூழ்கிக்
காமவேள்கோட்டம்தொழுதார் - கணவரொடு

தாமின்புறுவருலகத்துத்தையலார்
போகஞ்செய்பூமியினும்போய்ப்பிறப்பர் - யாமொருநாள்

ஆடுதுமென்றவணியிழைக்கவ்வாயிழையாள்
பீடன்றெனவிருந்தபின்னரே - நீடிய

காவலன்போலுங்கடைத்தலையான்வந்துநங்
கோவலனென்றாளோர்குற்றிளையாள் - கோவலனும்

பாடமைசேக்கையுட்புக்குத்தன்பைந்தொடி
வாடியமேனிவருத்தங்கண் - டியாவுஞ்
சலம்புணர்கொள்கைச்சலதியோடாடிக்
குலந்தருவான்பொருட்குன்றந் - தொலைந்த
இலம்பாடுநாணுத்தருமெனக்கென்ன
நலங்கேழ்முகத்தினகைநலங் - காட்டிச்
சிலம்புளகொண்மெனச்சேயிழைகேளிச்
சிலம்புமுதலாகச்சென்றகலறோ
டுலந்தபொருளீட்டலுற்றேன் - மலர்ந்தசீர்
மாடமதுரையகத்துச்சென்றென்னோடிங்
கேடலர்கோதாயெழுகென்ன - நீடு
வினைகடைகூட்டவியன்கொண்டான்கங்குல்
கனைசுடர்கால்சியாமுன்.

இ-ள், கொடி இடையார் தாம் - பூங்கொடிபோன்ற இடையையுடைய பெண்கள், அகல் நகர் எல்லாம் - அகன்றபட்டினத்திலுள்ள மனையிடமெங்கும், நகர் இடவாகுபெயர். பகல் மாய்ந்தமாலை-கதிரோன்மறைந்த மாலைக்காலத்தே, அரும்புஅவிழ்முல்லை * நிகர்மலர் - அரும்பினைத் முறுக்கவிழ்ந்த ஒளியையுடைய மலரை, நெல்ஒடு தூய் - நெல்லொடுதூவி, மணிவிளக்கம் காட்டி (இல்லுறை தெய்வத்தை வணங்கி) மாணிக்கவிளக்கையும் மைவிளக்கையுமெடுத்து (அம்மாலைக்காலத்தே) இரவிற்கு ஓர் கோலம்கொள்ள - இரவின் (தம்கொழுநரோ டெதிர்க்கும்) போர்க்கோலங்கொள்ளாநிற்ப, கோலங்கொள்ளல் முன்புபூண்ட அணிமுதலியவற்றையும் உடையையுங்களைந்து வேறுபூணல் - நிகர் ஒளி. கோலம் ஒப்பனை. பகல் தொழிலாகுபெயர். மாய்தல் மறைதல்"களிறுமாய்கழனி" என்பதனாற்காண்க.மணிவிளக்கம்உம்மைத்தொகை.அன்றிஅழகியவிளக்குஎனினும்அமையும். "தூயமகளிர் தாம்-நெல்லுமலருந் தூய்க்கைதொழுது - வல்லார் வளை மாலையயர்வு" என்றார் நெடுநல்வாடையினும். மேலைநாள் - முன்னொருநாளில், மாலதிமாற்றாள் மகவுக்கு பால்அளிப்ப - மாலதி யென்பவளோர் பார்ப்பனிதன் மாற்றாள் பிள்ளைக்குத் தன்முலை சுரந்தபாலை (சங்கால்) ஊட்ட, பால் ஆன்பாலெனினும் அமையும். பால்விக்கி பாலகன் தான்சோர - அப்பால் விக்குதலால் (தன் கையிலுள்ள) அப்பாலகன்மரிக்க, பாலகன் என்பது காலவழக்கு மாலதிஉம் - அம்மாலதியென்பவளும், உம்மை இழிவு சிறப்பு. பார்ப்பான் மனையாள்-பார்ப்பானும் அவன் மனைவியும், ஒடு எண்ணொடு. என்மேல் படர்தல்விட்டு - என்மேலடாப் பழிகூறுதலொழித்து, ஏற்பனகூறார் என்று ஏங்கிமககொண்டு - ஏற்குஞ்சொற்களைக் கூறாரென்று மனம்வருந்தி யப்பிள்ளை

* "நீர்வார் நிகர்மலர் கடுப்ப" என்றார்.

யைக்கொண்டு, அமரர் தருகோட்டம்-தேவர் தருநிற்குங்கோயிலும், வெள்ளையானைகோட்டம்-அயிராவத நிற்குங்கோயிலும், புகர் வெள்ளை நாகர்தம்கோட்டம் - அழகிய பலதேவர் கோயிலும், வெள்ளைநாகர் பலதேவர்-புகர் அழகு.பகல் வாயில் - கீழ்த்திசையிற்றோன்றும், உச்சிக்கிழான் கோட்டம்-சூரியர்கோயிலும், பகல்வாயில் பகல்தோற்றுகிறவாயில், அன்றிப்பகற்பொழுதிற்கு வருவாயா யுள்ளவனெனினும் அமையும். உச்சிக்கிழான் பகற்பொழுதிற் சூரியோன். ஊர்க்கோட்டம் - இறைவனூராகிய கயிலாயநிற்குங்கோயிலும், வேல்கோட்டம் - முருகவேள் நிற்குங்கோயிலும், வேல் சினையாகுபெயர். வச்சிரம் கோட்டம் - வச்சிராயுத நிற்குங்கோயிலும், * புறம்பணையான் வாழ்கோட்டம் - சாத்தனூர் கோயிலும், புறம்பு அணைந்த இடம் புறம்பணையாயிற்று. † நிக்கந் தன்கோட்டம் - அருகன் கோயிலும், நிலா கோட்டம் - சந்திரன்கோயிலும், எங்குஉம் புக்கு (இக்கோயில்கள்) எங்கும் புகுந்து, இவைசெவ்வெண். தேவிர்காள் - தேவர்காள், இர் முன்னிலைப்பன்மைவிகுதி. எம் உறுநோய் தீரும்என்று-எமதுமிக்க நோயைத்தீர்மினென்று (இரப்பவும் ஒருவருந்தீராமையினங்குப்பொருந்தாது) தீர்ம் ஈற்று உகரங்கெட்டது. ‡ பாசண்டம் சாத்தற்கு பாடுகிடந்தாளுக்கு-எவரும்தீண்டும் சாத்தரிடத்து (பொருந்தியவரிடத்து) வரங்கிடந்தாளை, கு உருபுமயக்கம், பாசண்டம் தொண்ணூற்றறுசமையக்கோவை, இவற்றிற்குமுதலாயுள்ளசாத்திரங்களைப்பயின்றவனாதலான் மகாசாத்தர் என்று அவர்க்குப்பெயராயிற்று.சுடுகாடுகோட்டத்து இடுபிணம்தின்னும்-சுடுகாட்டுக்கோட்டத்தில் குழியிலிட்ட பிணத்தைத் தின்னுநிற்கும், ஏசும்படி இடாகினிப்பேய்—(பிறர்) பழிக்கும் வடிவத்தையுடைய இடாகினிப் பேயானது, படிவம் படி கடைக்குறை விகாரம். இடாகினிப்பேய் இருபெயரொட்டுப் பண்புத்தொகை. தூங்கு இருளில் சென்று—செறிந்த இருளிற்சென்று,யாவருந்துஞ்சும் இருளுமாம். ஆங்கு—அவ்விடத்தில் (பாடுகிடந்தாளைநோக்கி) ஓர் இளங்கொடியாய்—ஒரு இளங்கொடிபோல்வாய், ஆசிலாய் — குற்றமில்லாய் (கேள்) செய்தவம் இல்லோர்க்கு (முற்பிறப்பில்) நற்றவஞ்செய்யாதவர்க்கு,தேவர் வரம் கொடார்—தேவரும் வரங்கொடார், பொய் உரை அன்று-இதுபொய் மொழியல்ல, பொருள் உரை ஏ—மெய்மொழியே (என்றுசொல்லி)கையில் படு பிணம் தாஎன்று பறித்தாள்—உன்கையிலுள்ள பட்டபிள்ளைப் பிணத்தைப்பார்க்கத்தருவாயென்றுசொல்லிப்பறித்தவள், வாங்கிகைக்கொண்டு-

* "புறம்பணை யியம்புமோசை" என்றார் சிந்தாமணியிலும்.

† "துக்கந் துடைக்குந் துகளறுகாட்சிய-நிக்கந்தவேடத் திருடிகணங்களை - ஒக்கவடி வீழ்ந்துலகியல் செய்தபின் - அக்கதை யாழ்கொண்டமைவரப்பண்ணி" என்றார் வளையாபதியினும்.

‡ "பண்ணாற்றிறத்திற் பீழுதின்றிமேம்பட்ட-தொண்ணூற்றறுவகைக் கோவையும்வல்லவன்-விண்ணாறியங்கும் விறலவராயினும் - கண்ணாறிநோக்கிற்கடுநகை செய்வான்" என்றார் வளையாபதியினும்.

வாங்கித் தன்கையிற்கொண்டு, மகவை * மடி அகத்து இட்டாள்—அப்பிள்ளைப்பணத்தைத் தன்வயிற்றில் வைத்தாள், (விழுங்கினள் என்றபடி) குழவி மக்கள் இரண்டும் மக்களின்பாற்படும் "குழவியுமகவு மாயிரண்டல்லவை-கிழவவல்லமக்கட்கண்ணே" தொ-பொ-மரபியல் உ௩-௬. இடி உண்டமஞ்ஞைபோல் ஏங்கி அழுதாளுக்கு — இடிக்குரல் கேட்ட மயிலாடுதல்போலவருந்தியழுகின்ற மாலதிக்கு, உண்டல் உறுதல். அசாத்தன் அன்னை நீ - அந்தச்சாத்தன் தாயே நீ, முன்னை ஓர் குயில் பொதும்பர் நீழல் உயிர்க்குழவி காணாய் என்று (செல்கின்றவழி) முன்னர் ஒப்பில்லாத குயில்கள் வசிக்குஞ் சோலையினிழலில் உயிரோடு கிடக்கின்ற நினது பிள்ளையைக்காணாயென்றுகூறி, அ குழவியாய் குறுக—(அவனது) பிள்ளைவடிவாய்த்தான் (அவ்விடத்து) சென்று கிடக்க, ஏங்கி அழேல் என்று (குழந்தாய்) வருந்தியழுகின்று யழாதொழிகவென்று, மாயம் குழவி - அப்பொய்வடிவமாகிய பிள்ளையை, அயிர்ப்பு இன்றி எடுத்து — ஐயமில்லாமல் (தன்குழவி) என்றெடுத்து, அதையலாள் மடிதிளைத்து தாய்கைகொடுத்தாள் — அம்மாலதிதன்வயிற்றிலே யணைத்துக்கொண்டுபோய்த் தாயின் கையிற் கொடுத்தாள், இறையோன் உம்—அக்குழவியாய இறையவனும், உம்மை உயர்வு சிறப்பு. தூய மறையோன் பின்மாணியாய்—இருமரபுந்தூய அந்தணனுக்குப்பின்பிள்ளையாய், மாணிஎனவே சவுளம் உபநயனங் கொள்க. வான் பொருள் கேள்வி துறைபோய் — மறைநூற் கேள்வி நிரம்பியதற்குத் தகநின்று, வான்பொருள் பெரிய பொருளையுடையதென நிற்றலால் பண்புத்தொகைநிலைக்களத்துப்பிறந்தஅன்மொழித்தொகை.துறைபோய்எனவேபிரமசரியங் கூறினர். மேல் தேவந்தி எனவே விவாகமுங் காருகத்தமுங் கூறினர். காருகத்தம் கிரகத்ததன்மம். அவர் முடிந்தபின்னர்—தந்தை தாயர் இறந்தபின்பு, தாயத்தார் ஓடு உம் வழக்கு உரைத்து — தன் தாயத்தார்களோடும் வழக்குப்பேசி, தந்தைக்கு உம் தாயர்க்கு உம் வேண்டும் கடன் செய்து—தந்தைக்கும் தாயர்க்குஞ் செய்யவேண்டிய நீர்க்கடன் முதலியனசெய்து, தன் மனைவிக்குப் பொருள் குறையாமற் செய்தான் என்பார் வழக்குரைத்து என்றார். மேயநாள்—எட்டியாண்டு மனைவியோடு கூடிநடந்தபின் ஒருநாளில், மேவினவள் என்று பாடமோதித் தன்னை மேவினவளெனப் பொருள் கூறுவாருமுளர். தேவந்திஎன்பாள் மனைவி அவளுக்கு பூவந்த † உண்கண் பொறுக்க என்று—தேவந்தியென்று பெயர் கூறப்படு

---

* படியை மடியகத்திட்டானடியினால்—முக்காற்கடந்தான் முழு நிலம்—அக்காலத் - தானிமா தாங்கிய சூள்றெடுத்தான் சோவின்—அருமையழித்தமகன்" என்பதனால் அறிக. "படுமகன் கிடக்கை காணூஉ" என்றாற்போல உயிர்கழிந்த உடம்பைமகவு என்றார்.

† "காந்தருவெய்திய கடவுளாளரும்" எனவிதனுள்ளும் "தேவருமக்களு மொத்துடன் திரிதரும் - நாலேழ் நாளினும்" என மணிமேகலையுள்ளுங் கூறினமை காண்க.

வாளாகியதன் மனைவியினதுபூவின் தன்மை தன்மேல் வந்த,மையுண்டகண்களிதனைப் பொறுக்கவென நிருமித்து, மக்கள் கண்ணிற்குத் தெய்வயாக்கை காணப் பொருதாகலா னிவட்குப் பொறுக்கவென நிருமித்தான். உண் கண் என்பதனை முன்னிலை விளியாக்கி யிம்மறையை நீ பொறுக்கவென்றுசொல்லிக் காட்டினுனெனினுமமையும். மேவி (அவனை)பொருந்தி, தன் மூவா இளநலம் காட்டி - தனது(எக்காலத்தும்) முதிராத இளையஅழகினது நலத்தை வெளிப்படுத்தி, என் கோட்டத்து நீவா என உரைத்து - எனது கோயிலிற்கு நீவா வெனச்சொல்லி (பிறர்க்கெல்லாந் தீர்த்தத்துறைபடிவேனெனச்சொல்லி) நீங்குதலும் - சாத்தனுகிய மறையோனீங்க, தூமொழியாள் - இனிய சொல்லையுடைய தேவந்தி, ஆர்த்தகணவன் (என்மனத்தை) பிணித்தகணவன், தீர்த்தம்துறை எங்குஉம் போய் - தீர்த்தத்துறைகளெங்குஞ்சென்று, படிவேன் என்று அகன்றனன் ஆய் அவனை - ஆடுவேனென்றென்னை விட்டகன்றவவனை,பேர்த்து இங்ஙன்மீட்டு தருவாய்என ஒன்றின் மேலிட்டு - மறுத்து மிவ்விடத்தே (அவன் மனத்தை) திரும்பப்பண்ணியழைத்துத் தருவாயென்றொரு பெயரிட்டுக்கொண்டு, கோட்டம் வழிபாடு கொண்டு இருப்பாள் - அவன் கோட்டத்தை வழிபடுதலை (நாடோறும் கடனாக) கொண்டிருக்கின்றவள், வாட்டு அரும்சீர் கண்ணகி நல்லாளுக்கு- நிறைந்த புகழையுடைய கண்ணகியாகிய நல்லாளுக்கு, வாட்டு இடையில் ஒற்றிரட்டித்த தொழிற்பெயர். உற்றகுறை உண்டுஎன்று (கொழுநன் பிரிதலால்) பொருந்திய குறையொன்றுளதென்று, எண்ணிய நெஞ்சத்து இனையளாய் - கருதியமனத்தில் வருத்த முடையவளாய், இனை வருத்தம். இது முதனிலைத் தொழிற்பெயர். நண்ணி (கோட்டத்தை) அடைந்து, அறுகு சிறுபூளை நெல் ஒடு தூய் (இவள் கணவனைப் பெறுகவென்று) அறுகையுஞ் சிறுபூளை மலரையும் நெல்லினொடு தூவி, சென்று கணவன் ஒடு பெறுக என்றாள் (கண்ணகிபாற் சென்று) கணவனைப் பெறுகவென்று ஆசிகள் கூறினள், கணவனொடுவாழ்வுபெறுகஎன்றாள் எனினும் அமையும். ஒடு உருபு மயக்கம். செறி தொடிஇ - நெருங்கிய வளையலையணிந்த தேவந்தியே, பெறுகஎன் நெஞ்சம் * கடுக்கும் - நீ பெறக்கடவாயென்று கூறுதலால் (பெறுவேனாயினும்) எனது மனம் ஐயுறாநிற்கும், கடு என்னும் பகுதி கடிஎன்னும் உரிச்சொல்லின்விகாரம். கனவினில் என்கைபிடித்தனன் போய் ஓர் பெரும்பதி உள்பட்டேம் — (நேற்றிரவில்) கனவினிடத்துக் கொழுநன் எனதுகைப்பற்றினனாகப் போய்யாங்கள் ஒரு பெரிய நகரிற் புகுந்தோம், பட்டபதியில் படாதது ஒருவஞ்சவார்த்தை—புகுந்த நகரில் எங்களுக்குப் பொருந்தாததாகிய ஒருவார்த்தையை, ஊரார் இடுதேளிட்டு என்றன்மேல் இட்டனர்—அந்நகரிலுள்ளோர் இடுதேளிடுமாறுபோல என்

* "போற்றினரியவைபோற்றல் கடுத்தபின்—தேற்றுதல்யார்க்கு மரிது". என்னுந் திருக்குறளிற்காண்க.

மேலிட்டனர், தேளிடுதல் தேளிடப்படுவார் காணாமே தேளல்லாததொன்றை மறையக்கொடுவந்துமேலேயிட்டுஅவரைக்கலகம்பண்ணுதல். பாய்ச்சுத்தேள் என்பாரும் உளர். பெண்பாற் றன்மையாலன்றி இப்பழிதான் சுமந்து நிற்றலால் என்மேல் என்றாள். கோவலற்கு ஓர் தீங்கு உற்றது என்றுசொல்ல அதுகேட்டு — (அவர் இடப்பட்ட வஞ்சத்தால்) கோவலனுக்கு ஒருபொல்லாங்கு வந்தது என்று பிறர்சொல்லக் கேட்டு அதைப் பொறுமல், காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன் — (அந்நகரத்து) அரசன் முன்பு (செல்லாத) யான்சென்று(பிறர்க்கரிய)வழக்குத் தொடுத்துப்பேசினேன், காவலன் ஓடு ஊர்க்கு உற்ற தீங்கு உம் ஒன்று உண்டு ஆன் — (ஆதலால்) அவ்வரசனோடு அவ்வூர்க்கும் வந்த ஒருதீங்குள தாயினும், ஆயின் இடைக்குறை. தீக்குற்றம் — (அவை) தீக்கனவாதலான், உரையாடேன் — (எடுத்து)பேசேன், உரையாடேனென்றாள் "உரையாரழைக்கக்காணுங்கனா" என்பது பழமொழியாகலின். தீ குற்றம் உற்றேன் ஓடு உற்ற — தீவினையையுடைய என்னோடு பொருந்திய, உரவோனோடு யான் உற்ற நல்திறம் கேட்கின் நகையாகும் என — பெரியோனுடனே யான்அடைந்த நல்ல வரலாறுகளை நீகேட்பாயாகில் நினக்கு நகையைத் தருமென்று சொல்ல, ஓடு வேறுவினையுடனிகழ்ச்சி. அன்றி உரவோனும் யானும் எனச் சொல்வகை செய்து எண்ணொடு எனினும் அமையும். சொல்ல, என இவைசொல்லெச்சம். தீக்கனவு முலை திருகி எறிதல். நற்றிறம் இருவருஞ் சுவர்க்கம் புகுதல். நகையாகும் என்றாள் கிட்டாததொன்றாகலான். பொற்றொடீஇ — பொன்னாலாகிய வளையலையணிந்த கையையுடைய கண்ணகியே, கைத்தாய்உம் அல்லை (கண்டகனாவால் வருந்தவேண்டாம் உனகணவனால் நீ) வெறுக்கப்பட்டாயு மல்லை, பழம்பிறப்பில் - முற்பிறப்பில், கணவற்கு ஒருநோன்பு பொய்த்தாய் - கணவன்பொருட்டுச் செய்த ஒருவிரதந்தப்பினாய் (அத்தீங்கும் கனவின்தீங்கும் கெட) காவிரிகடுகசென்று கடல்ஓடு உய்த்து அலைக்கும் - காவிரி விரையத் தன்னீரைக்கொண்டுசென்று கடலோடெதிர்த்தலைக்கும், முன்றில் - சங்கமுகத்தினயலதாகிய, மடல்அவிழ் நெய்தல்கானல் தடம் உள - இதழ் விரிந்த நெய்தற்பூவையுடைய கானலிடத்து இரண்டுதடாகம் உள்ளன (அவையாவையெனில்) சோமகுண்டம் சூரியகுண்டம் - சோமகுண்டம் சூரியகுண்டமென்னும் பெயரையுடையன, துறைபோய்மூழ்கி (அவற்றின்) துறைகளிற்சென்றுநீராடி, காமவேள்கோட்டம் தொழுதார் - மன்மதனுடைய கோயிலுட்சென்று அவனைத் தொழுதவர்களாகிய, தையலார் தாம் - பெண்கள், முற்றுப்பெயரெச்சமாயிற்று. உலகத்து கணவர்ஓடும் இன்பு உறுவர் - இவ்வுலகத்தில் தமதுகணவரொடும் பிரிவில்லாம லின்பநுகர்வர், போகம் செய் பூமியின்உம்போய் பிறப்பர் (மறுமையில்) போகபூமியினுஞ் சென்று பிறந்து மூன்றுபல்லங்காமவின்பநுகர்வர், பல்லம்ஓர்கணக்கு. குண்டமிரண்டிற்கு மிரண்டனையும் நிரனிறையாகக்கொள்க. "இருகாமத்தினேரி" என்றார் பட்டினப்பாலையுள், யாம் ஒருநாள் ஆடுதும்என்ற அணியிழைக்கு-(ஆத

லால்) யாமும் ஒருதினம் ஆடக்கடவேமென்று கூறிய தேவந்திக்கு, அ ஆயி ழையாள் - அக்கண்ணகி, பீடுஅன்று என இருந்தபின்னர் - (துறைமூழ்கித் தெய்வந்தொழுதல் எங்கட்கு) இயல்பன்றென்று சொல்லி யிருந்தபின்- "காமனையென்றுஞ் சொல்லார்சணவர்க்கை தொழுதுவாழ்வார்" என்றுரா கலின். ஓர்குற்றிளையாள் - (அவரிங்ஙனம்பேசியிருந்தவளவில்) ஒரு குறுந் தொழில்செய்யும் இளையாள், நம் கோவலன்வந்து கடைத்தலையான் நீடிய காவலன்போலும் என்றாள் - நமதுகோவலன்வந்து கடைவாயிலாயினன் (அவன் வருகைநம்மை) நெடுங்காலங்காப்பான் போலிராநின்று னென் றாள், நீடியகாவலன்போலும் நம்கோவலன் வந்து கடைத்தலையான் என் பதற்குத் ஆரத்தேபார்த்து ஐயுற்று நங்காவலன்போலும் என்றவள் கடை த்தலையில் அணுகினவிடத்து ஐயந்தீர்ந்து நங்கோவலன் என்றாள் எனினும் அமையும். பாடுஅமை சேக்கை உள்புக்கு (கொடியிடையார் தாம்விளக்கங் காட்டிக் கோலங்கொள்ளாநிற்ப) படுக்கையாக அமைந்த சயனத்தினிடத் துச்சென்று, சேக்கைபடுக்கப் படுவது சேபகுதி, கு சாரியை, ககரத்தோற் றமும் உகரக்கேடுஞ் சந்தி, ஐ செயப்படு பொருள் விகுதி. தன்பைந்தொடி மேனிவாடிய வருத்தம்கண்டு - தனதுமனைவி மேனிவாடிய மனவருத்தங் கண்டு, யாஉம் - எல்லாப்பொருளையும், சலம்புணர்கொள்கை சலதிஓடு ஆடி - பொய்யை (மெய்யாக) பொருந்துவித்தொழுகுங் கொள்கையயு டையபொய்த்தியோடுகூடி நடத்தலால், சலம்பொய். சலதிபொய்த்தி. குல ம்தருவான் பொருள்குன்றம் தொலைந்த இலம்பாடு-நமதுகுலத்துள்ளோர் தேடிவைத்த மிக்கபொருட்பெருக்கம் தொலைதலால் வந்தவறுமை, இலம் பாடு இன்மைபடுதல் ஒருசொன்னீர்மைய. எனக்கு நாணுதரும் என்ன- எனக்கு நாணைத்தரா நின்றதென்று கூற, குலந்தருவான் பொருள்-தொ ன்று தொட்டுவரும்பொருள். நாணுத்தரும் என்றான் "கெட்டான் மதிதோ ன்றும்" என்னும் வழக்கு. நலம் சேழ்முகத்தின் நலம் நகைகாட்டி (இலம் பாடு நாணுத்தரும் என்றதனை மாதவிக்குக் கொடுக்கும் பொருட்குறை பாட் டால் தளர்ந்து கூறினனெனக்கருதி) அழகிய ஒளிபொருந்திய முகத்தே நலம்பொருந்திய புன்னகையைவிளைத்து, சிலம்புஉளகொள்ளும் என - இர டுசில ம்புள்ளன (அவற்றை) கொண்மினென்று கூற, சிலம்புள என்றாள் இவையொழிந்த கலனெல்லாந் தொலைதலால். புலந்துகூறினளெனில் கற் பின்றன்மையன்றாம். சேயிழைகேள் இ சிலம்புமுதலாக - (இங்ஙனம் கரு திய) செவந்தஅணியையுடையாய் கேளாய் இந்தச்சிலம்பை வாணிபமுத லாகக்கொண்டு, சென்றகலன்ஓடு உலந்த பொருள் ஈட்டல் உற்றேன் (முன் வாங்கினான்) அழித்த ஆபரணத்தோடும் (அதுவல்லாமல்) கெட்ட பொரு ளைப் பொருளாலுந் தேடித்தொகுத்தலைத் துணிந்தேன், இரண்டும் இதனால் தேடலுற்றேன்எனினும்அமையும்.மலர்ந்தசீர்மாடம்மதுரைஅகத்துசென்று- (எவ்விடத்தேசென்றெனின்) விரிந்தபுகழையுடைய மாடங்கள்நிறைந்த மது ரையென்னு நகரிடத்துச்சென்று, ஏடுஅலர்கோதாய் இங்கு என்ஓடு எழுக

என்ன - பூவிதழ்பரந்த கூந்தலையுடையா யிங்குநின்றும் எழுவாயாக வென்று கூறி, தீடுவினைகடைகூட்ட - முற்பவத்திற் செய்த தீவினை (தன்மனத்தை) ஒருப்படுத்தலால், வியன்கொண்டான் - (அவ்வினையினது) ஏவலைக் கைக்கொண்டான், வியம் வியன்போலி. வியங்கோள் என வருதல்காண்க. கங்குல் கனைசுடர்கால் சீயாமுன் (எப்போதெனில்) இருட்போதை மிக்க கிரணத்தையுடைய சூரியன் போக்குவதன்முன். எ-று.

கனவென்னும் ஒருபொருளையே கருதாது மாலதிகதையையும் தேவந்திகதையையுங்கலந்து கூறிற்றேனும் உறுப்பழிவின்றி நடந்ததேனும் நான்கடியிறந்துவருதலால் நெடுவெண்பாட்டாகாது இது கலிவெண்பா ஆயிற்றென்க "ஒருபொருணுதலிய கலிவெண்பாட்டால் - திரிபின்றி முடிவதுகலிவெண்பாட்டே" தொ- பொ - செய்யுளியல். கசுடு-சு. நான்கடி அளவியல் வெண்பாட்டின்சிறுமை. ஒருபொருணுதலி யதனைத் திரிபின்றி முடிவது என்றாரேனும் "திரிபின்றிமுடியும் என்றதனுன் ஒருபொருளன்றிப் பலவுறுப்புடைத்தாகித் திரிபுடைய தூஉங்கலிவெண் பாட்டென்பது கொள்ளவைத்தலமையின்" என நச்சினார்க்கினியர் கூறியது காண்க.

### நேரிசைவெண்பா.

காதலிகண்டகனவுகருநெடுங்கண்
மாதவிதன்சொல்லை வறிதாக்கி—மூதை
வினைகடைகூட்டவியன்கொண்டான்கங்குல்
கனைசுடர்கால்சியாமுன்.

(இ-ள்) காதலிகண்டகனவு- கண்ணகியார்கண்டகனு, கருநெடுங்கண்-கரியநெடியகண்களையுடைய, மாதவிதன் சொல்லைவறிது ஆக்கி—மாதவியினது சொல்லைப் பயனின்மையாக்க, மூது வினைகடைகூட்ட - முற்பவத்திற் செய்த தீவினை யொருப்படுத்தலால், வியன்கொண்டான் (அதனது) ஏவலைக் கொண்டான். கங்குல்-இருட்போதை, கனைசுடர்கால் சீயாமுன் - சூரியன் போக்குதற்குமுன். எ-று.

மேற்கூட்டமின்மையால் கருநெடுங்கண்"எனவும் "காலைகாண்குவம்" என்றசொல் பயன்படாதொழிதலாற் சொல்லை வறிதாக்கிஎனவுங் கூறினர். ஆக்கி வினையெச்சத்திரிபு. இ பகுதிப்பொருள் விகுதி.

---

## கய—ஆவது நாடுகாண்காதை.

---:o:---

(மதுரைக்குத் தமது கணவனோடு சென்ற கண்ணகியார்) சோணாட்டின் வளத்தைக் கண்டகதையையுடையது எனவே;—நாடுகாண் இரண்

டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர், காண்காதைவினைத்தொகைநிலைத்
தொடர்; ஆகவே மூன்றுசொல் இரண்டுசந்தியாகக்கொள்க.

---

## நிலமண்டில அகவற்பா.

வான்கண் விழியாவை கறையாமத்து — மீன்றிகழ்விசும்பின் வெண்ம
திநீங்கக் — காரிருணின்ற கடைநாட்கங்குல் — ஊழ்வினைகடைஇ யுள்ள
ந்துரப்ப — ஏழுசத்தகரு மெகினக்கவரியும் — தூமயிரன்னமுந் துணையெ
ணத்திரியும் — தாழொடுகுயின்ற தகைசால் சிறப்பின் — நீணெடுவாயி
னெடுங்கடைகழிந்தாங் — கணிகிளர்ராவி னறிதுயிலமர்ந்த — மணிவண்ண
ன் கோட்டம் வலஞ்செயாக்கழிந்து — பணையைந்தோங்கிய பாசிலைப்
போதி—அணிதிகழ்நீழலறவோன்றிருமொழி— அந்தரசாரிகளறைந்தனர்
சாற்றும்—இந்திரன்விகாரமேழுடன்போக்கிப்—புலவூண்டுறந்து பொய்யா
விரதத்—தவலநீத்தறிந்தடங்கியகொள்கை- மெய்வகையறிந்தவிழுமியோர்
குழீஇய—ஐவகைநின்றவருகத்தானத்துச் — சந்தியைந்துந் தம்முடன்கூ
டி-வந்துதலைமயங்கியவான்பெருமன்றத்துப்-பொலம்பூம்பிண்டிநலங்கிளர்
கொழுநிழல்-நீரணிவிழவினும்நெடுந்தேர்விழவினும்—சாரணர்வருஉந்தகுதி
யுண்டாமென—உலகநோன்பிகளொருங்குடனிட்ட- இலகொளிச்சிலாதலந்
தொழுதுவலங்கொண்டு—மலைதலைக்கொண்டபேரியாறுபோலும் — உலக
விடைகழியொருங்குடனீங்கி—கலையிலாளன் காமர்வேனிலொடு — மலைய
மாருதமன்னவற்கிறுக்கும்—பன்மலரடுக்கிய நன்மரப்பந்தர் — இலவந்தி
கையினெயிற்புறம்போகித் — தாழ்பொழிலுடுத்த தண்பதப் பெருவழிச்—
காவிரிவாயிற் கடைமுகங்கழிந்து—குடதிசைக்கொண்டுகொழும்புனற்காவி
ரி—வடபெருங்கோட்டு மலர்ப்பொழினுழைந்து—நாவதங்கடந்து கவுந்தி
பள்ளியோர்—பூமரப்பொதும்பர் பொருந்தியாங்கண்—இறு கொடிநுசுப்
போடினைந்தடிவருந்தி—நறும்பல் கூந்தல் குறும் பலவுயிர்த்து — முதிராக்
கிளவிமுள்ளெயிறிலங்க—மதுரை மூதூர்யாதெனவினவ—ஆறைங்காதநம்
மகனாட்டும்பர் — நாறைங்கூந்தனணித்தெனநக்குத் — தேமொழிதன்னொ
டுஞ்சிறையகத்திருந்த — காவுந்தியையைக்கண்டடிதொழலும் — உருவுங்
குலனுமுயர்பேரொழுக்கமும்—பெருமகன்றிருமொழி பிறழா நோன்பும்—
உடையீரொன்றோ வுறுகணாளரின்—கடைகழிந்திங்ஙனங்கருதிய வாறெனை-
உரையாட்டில்லையுறுதவத்தீர்யான்—மதுரைமூதூர்வரைபொருள் வேட்கை
யன்—பாடகச்சீறடிபரற்பகையுழவா — காடிடையிட்டநாடு நீர்கழிதற்—
கரிதிவள்செவ்வியறிகுநர் யாரோ—உரியதன்றீங்கொழிகென வொழியீர்-
மறவுரைநீத்தமாசறுகேள்வி—அறிவுரைசேட்டாங் கறிவனையேத்தத் — தெ
ன்றிசைநாட்டுத் தீதுதீர்மதுரைக்—கொன்றியவுள்ளமுடையே னாகலின்—
போதுவல்யானும்போதுமினென்ற—காவுந்தியையைக்கைதொழுதேத்தி—
அடிகணீரேயருளுதிராயினித்—தொடிவளைத்தோளிதுயர்தீர்த்தேனெனக்—

கோவலன்காணாக்கொண்டவிந்நெறிக் — கேதந்தருவனயாங்கும் பலகேண்
மோ—வெயினிறம்பொறாமெல்லியற்கொண்டு — பயில்பூந்தண்டலைபடர்கு
வமாயின்—மண்பகவீழ்ந்த கிழங்ககழ்குழியைச் — சண்பகநிறைத்த தாது
சேர்பொங்கர்—பொய்யறைப்படுத்துப்போற்றாமாக்கட்குக்—கையறு துன்
பங்காட்டினுங்காட்டும்—உதிர்பூஞ்செம்மலினொதுங்கினர்கழிவோர் - முதிர்
தேம்பழம்பகை மூட்டினு மூட்டும் — மஞ்சளுமிஞ்சியு மயங்கரில் வலையத்
துச்—செஞ்சுளைப்பலவின்பரற்பகையுறுக்கும்—கயனெடுங் கண்ணி காதற்
கேள்வ—வயலுழைப்படர்குவமெனினே யாங்குப் — பூநாறிலஞ்சிப்பொரு
கயலோட்டி—நீர்நாய்கவ்விய நெடும்புறவாளை — மலங்குமிளிர்செறுவின்
விலங்கப்பாயின்—கலங்கலுமுண்டிக்காரிகையாங்கண்—கரும்பிற்றொடுத்த
பெருந்தேன்சிதைந்து—சுரும்புசூழ்பொய்கைத்தூநீர்கலக்கும் — அடங்கா
வேட்கையினறிவஞ ரொய்திக்—குடங்கையின்மொண்டு கொள்ளவுங்கூடும்-
குறுநரிட்டகுவளையம்போதொடு—பொறிவரிவண்டினம்பொருந்திய கிடக்
கை—நெறிசெல்வருத்தத்து நீரஞரொய்தி — அறியாதடியாங்கிடுதலுங்கூடு
ம்—எறிநீரடைகரையியக்கந்தன்னில்—பொறிமாணலவனும் நந்தும்போற்
றா—தூழடியொதுக்கத்தறுநோய்காணில்—தாழ்தருதுன்பந் தாங்கவுமொ
ண்ணா—வயலுஞ்சோலையுமல்லதியாங்கணும்—அயல்படக்கிடக்குநெறியாங்
கில்லை—நெறியிருங்குஞ்சிநீவெய்யோளொடு — குறியறிந்தவையவைகுறு
காதோம்பெனத்—தோமறுகடிஞையுஞ்சுவன்மேலறுவையும் - காவுந்தியை
யைபீலியுங்கொண்டு—மொழிப்பொருட்டெய்வம்வழித்துணை யாகெனப்—
பழிப்பருஞ்சிறப்பின்வழிப்படர் புரிந்தோர் — கரியவன்புகையினும்புகைக்
கொடிதோன்றினும்— விரிகதிர்வெள்ளிதென்புலம்படரினும் — கால்போகு
நிவப்பிற்கடுங்குரலேற்றொடு-சூன்முதிர்கொண்மூப்பெயல்வளஞ் சுரப்பக்-
குடமலைபிறந்தகொடும்பஃறாரமொடு — கடல்வளனெதிரக்கயவாய் நெரிக்
கும்—காவிரிப்புதுநீர்க்கடுவரல்வாய்த்தலை —ஓவிறந்தொலிக்கு மொலியே
யன்றியும்—ஆம்பியுங்கிழாரும் வீங்கிசையேற்றமும் — ஓங்கு நீர்ப்பிழாரு
மொலித்தல்செய்யாக்—கழனிச்செந்நெற் கரும்புசூழ்மருங்கின்— பழனத்
தாமரைப்பைம்பூங்கானத்துக்—கம்புட்கோழியுங் கனைகுரனாரையும்—செங்
காலன்னமும் பைங்காற்கொக்கும் — கானக்கோழியுமா நீர்க்காக்கையும்—
உள்ளூரலும் புள்ளும் போதாவும்—வெல்போர்வேந்தர் முனையிடம்போ
லப்—பல்வேறுகுழூஉக்குரற்பரந்தவோதையும் — உழாஅநுண்டொளியுள்
புக்கழுந்திய—கழாஅ மயிர் யாக்கைச்செங்கட்காரான்—சொறிபுறமுரிஞ்
சப் புரிஞெகிழ்புற்ற—குமரிக்கூட்டிற்கொழும்பலுணவு—கவரிச் செந்நெ
ற்காய்த்தலைசொரியக்—கருங்கைவினைஞருங் களமருங் கூடி—ஒருங்குநின்றா
ர்க்குமொலியேயன்றியும்—கடிமலர்கடிந்துமுடிநாறழுத்தித் - தொடிவளைத்
தோளுமாகமுந் தோய்ந்து—சேறாடுகோலமொடுவீறுபெறத் தோன்றிச்—
செங்கயனெடுங்கட்சின்மொழிக்கடைசியர் — வெங்கட்டொலைச்சிய விருந்
திற்பாணியும் — கொழுங்கொடியறுகையுங் குவளையுங்கலந்து — விளங்கு

கதிர்தொடுத்த விரியல் சூட்டிப் — பாருடைப்பனர்போற் பழிச்சுநர் கை தொழ—ஏரோடுநின்றோரோமங்கலமும்—அரிந்து கால்குவித்தோர் கரிசடா வுறுத்த—பெருஞ் செந்நெல்லின் முகவைப்பாட்டும் — தெண்கிணைப் பொருநர் செருக்குடனெடுத்த — மண்கணை முழவின் மகிழ்செயோதையும்— பேரியாற்றடைகரைநீரிற்கேட்ட — ஆர்வநெஞ்சமோடவலங்கொள்ளார்— உழைப்புலிக்கொடித்தேருரவோன்கொற்றமொடு-மழைக்கருவுயிர்க்குமழற்றிகழட்டின்—மறையோராக்கியவானவருணு அ — இறையுயர் மாடமெங்கணும்போர்த்த—மஞ்சுசூழ்மலையின்மாணத்தோன்றும் — மங்கலமறையோரிருக்கையன்றியும்—பரப்புநீர்க்காவிரிப்பாவைதன்புதல்வர் — இரப்போர் சுற்றமும்புரப்போர்கொற்றமும் -உழவிடைவிளைப்போர்பழவிறலூர்களும்- பொங்கழியாலைப்புகையொடுபரந்து—மங்குல்வானத்துமலையிற்றோன்றும்- ஊரிடையிட்டநாடுடன்கண்டு-காவதமல்லது கடவாராகிப்- பன்னாடங்கிச் சென்றனொருநாள்-ஆற்றுவீயரங்கத்து வீற்றுவேறுகிக்- குரங்கமையுடுத்த மரம்பயிலடுக்கத்து-வானவருறையும்பூநாறொருசிறைப் - பட்டினப்பாக்கம் விட்டனர் நீங்காப்-பெரும்பெயரையரொருங்குடனிட்ட - இலங்கொளிச்சிலாதலமேலிருந்தருளிப்-பெருமகனதிசயம்பிறழாவாய்மைத் - தருமஞ்சாற்றுஞ்சாரணர்தோன்றப்-பண்டைத்தொல்வினைபாறுகவென்றே-கண்டறிகவுந்தியொடுகாலுறவீழ்ந்தோர் — வந்தகாரணம்வங்கியகொள்கைச்—சிந்தை விளக்கிற் றெரிந்தோனாயினும் - ஆர்வமுஞ் செற்றமுமகலநீக்கிய - வீரனாகலின் விழுமங்கொள்ளான் - கழிபெருஞ் சிறப்பிற்கவுந்திகாணாய் - ஒழிகென வொழியா தூட்டும்வல்வினை - இட்டவித்தி னெதிர்ந்துவந்தெய்தி - ஒட்டுங் காலையுதிர்க்கவுமொண்ணு - கடுங்காலனேர்வெளியிடுஞ்சுடரொன்ன - ஒருங்குடனில்லா வுடம்பிடையுயிர்கள் - அறிவனறவோனறி வுவரம்பிகந்தோன்- செறிவன்சினேந்திரன் சித்தன்பகவன் - தருமமுதல்வன் றலைவன்றருமன்- பொருளன்புனிதன் புராணன்புலவன் - சினவரன்றேவன் சிவகதிநாயகன்- பரமன் குணவீதன் பரத்திலொளியோன் - தத்துவன்சாத்துவன் சாரணன் காரணன் - சித்தன்பெரியவன் செம்மறிகழொளி-இறைவன்குரவ னியல்குணனெங்கோன் - குறைவில்புகழோன் குணப்பெருங் கோமான் - சங்கரனீசன்சயம்புசதுமுகன்-அங்கம்பயந்தோனருகனருண்முனி-பண்ணவனெண்குணன்பாத்தில்பழம்பொருள்-விண்ணவன்வேதமுதல்வன்விளங்கொளி- ஓதியவேதத்தொளியுறினல்லது-போதார் பிறவிப்பொதியறையோனச்- சாரணர்வாய்மொழிகேட்டுத்தவமுதல் - காவுந்தியையையுங் கைதலைமேற்கொண்டு-ஒருமூன்றவித்தோ னேதியஞானத்-திருமொழிக்கல்லதென் செவியகந்திறவா-காமனைவென்றோனாயிரத்தோரெட்டு - நாமமல்லது நவிலாதென்னு - ஐவரைவென்றோனடியிணையல்லது - கைவரைகாணினுங் காணுவென்கண் - அருளறம்பூண்டோன் திருமெய்க்கல்லதென் - பொருளில்யாக்கை பூமியிற்பொருந்தாது-அருகரறிவனருகதற்கல்லதென்-இருகையுங்கூடியொருவழிக்குவியா - மலர்மிசைநடந்த மலரடிக்கல்லதென் - தலைமிசையு

ச்சிதானணிபொருது - இறுதியிலின்பத்திறைமொழியல்லது - மறுதரவோ
தி மனம்புடைபெயரா - என்றவனிசைமொழி யேத்தக்கேட்டதற்-கொன்றி
யமாதவனுயர்மிசையோங்கி—நிவந்தோங்கொருமுழ நீணிலநீங்கிப்—பவந்
தருபாசங்கவுந்திகெடுகென்—றந்தரமாருப்படர் பவற்றெழுது—பந்தமறு
கெனப் பணிந்தனர்போந்து—காரணிபூம்பொழிற் காவிரிப்பேரியாற்று-நீர
ணிமாடத்து நெடுந்துறைபோகி—மாதருங்கணவனு மாதவத்தாட்டியுந்—
தீதுதீர்நியமத் தென்கரையெய்திப்—போதுசூழ்கிடக்கைப் பூம்பொழிலிரு
ந்துழி—வம்பப்பரத்தை வறுமொழியாளனொடு—கொங்கவிழ் பூம்பொழிற்
குறுகினர்சென்றழிக்—காமனுந்தேவியும் போலுமீங்கிவர்—ஆரெனக்கேட்
டேயறிகுவமென்றே—நோற்றுணல்யாக்கைநொசிதவத்திருடன்—ஆற்றுவ
ழிப்பட்டோராரென வினவவென் - மக்கள்காணீர்மானுடயாக்கையர் - பக்
கநீங்குமின்பரி புலம்பினரென - உடன்வயிற்றோர்க ளொருங்குடன்வாழ்க்
கை - கடவதுமுண்டோ கற்றறிந்தீரெனத் - தீமொழிகேட்டுச் செவியகம்
புதைத்துக் - காதலன்முன்னர்க்கண்ணகிநடுங்க - எள்ளுநர்போலுமிவரென்
பூங்கோதையை - முள்ளுடைக்காட்டு முதுநரியாகெனக் - கவுந்தியிட்ட
தவந்தருசாபம் - கட்டிய தாதலிற்பட்டதையறியார் - குறுநரிநெடுங்குரற்
கூவிளிகேட்டு-நறுமலர்க்கோதையு நம்பியுநடுங்கி-நெறியினீங்கியோர்நீரல
கூறினும் - அறியா மையென்றறியல்வேண்டும் - செய்தவத்தீர்நுந்திரு
முன் பிழைத்தோர்க்—குய்திக்கால முரையீரோவென—அறியாமையி னி
ழிபிறப்புற்றோர்—உறையூர் நொச்சி யொருபுடையொதுங்கிப் - பன்னிரு
மதியம்படர் நோயுழந்தபின் - முன்னையுருவம் பெறுகவீங்கிவரெனச்-சாப
விடைசெய்து தவப்பெருஞ்சிறப்பின் - காவுந்தியையையுந் தேவியுங்கணவ
னும் - முறஞ்செவி வாரணமுன் சமமுருக்கிய - புறஞ்செவி வாரணம் புக்
கனர் புரிந்தென.

இ-ள். வான்கண் - வானின்கண் (உலகிற்குக்) கண்ணாகிய சூரியன், கண் உவமையாகுபெயர். விழியாவை கறையாமத்து - தோன்றி விளங்காத வைகறை யென்னும் யாமத்திடத்து, வைகறை வைகல்துயிலுதல் அதுவிகாரத்தால் வைகுஎன நின்றது, அஃது அற்றல். அறுதல் அறையாயிற்று, பொறியறை என்றாற்போல். இது தொழிலாகுபெயர். வைகறை என்பதற்குத் தொல்காப்பியச் சூத்திரவிருத்திகாரர் கூறியது கடலாட்டுக் காதையிற்காண்க. மீன் திகழ் வெண்மதி விசும்பின்நீங்க - மீனொடு விளங்காநின்ற வெள்ளிய சந்திரன் விண்ணினின்று நீங்க, கடைநாள் கார் இருள்நின்ற கங்குல்-(பூருவபக்கம்) பதினான்காம் நாளில் கரிய இருள்நின்ற அவ்வைகறை இராப்பொழுதில், கடைநாள் இறுதியில் நின்றநாள். இறுதியில் நின்ற நாள் என்றார்; சித்திரைத்திங்கள் சோதிநாள்மூன்றாந்திதி, வாரம்ஞாயிறு, இத்திங்களிருபத்தெட்டிற் சித்திரையும் பௌரணமியும் கூடியதினத்திற் சனிவாரத்திற் கொடியேறறி "ஏழுநாளினும்" என்றதனால் இருபத்தெட்டுநாளும் விழாநடந்து கொடியிறங்கி வைகாசி யிருபத்தெட்டிற் பூருவபக்கத்திற் பதின்மூன்

ரும்)பக்சமும் சோமவாரமும்பெற்ற அநுஷத்திற் கடலாடி யூடுரலின் வைகாசி யிருபத்தொன்பதிற் செவ்வாய்க்கிழமையும் சேஷ்டையும் பெற்ற நரசயோகத்தில் நிறைமதிப்பதி னலாம்பக்கத்து வைகறைப்பொழுதில் நிலவு சழிந்த இருளில் என்பது தோன்ற. வினை ஊழ் உள்ளம் கடை இதரப்ப- முன்செய்த தீவினை முறையானே (வந்து) தன்மனத்தைச் செலுத்துதலால், ஏழகம் தகர்உம் எகினம் கவரிஉம் தூமயிர் அன்னம் உம் - ஆட்டுக்கடாவும் கவரிமானும் தூயமயிரினையுடைய அன்னமும், ஏழகத்தசர் எகினக் கவரிஇருபெயரொட்டுப் பண்புத்தொகைகள். துணைஎன திரியும் (ஒன்றோடொன்று) இனமல்லன வாயினும் இனமுடையன போலத்திரியும், தகர்முதலியன இவளால் வளர்த்தன வாகலான் இவளைத் தம்மினமென்று கருதினவும், வாயிலின் கண்ணெழுதினவற்றைத் தம்மினமென்று கருதியெனவுங்கூறினும் அமையும். தாழ் ஒடுகுயின்ற தகைசால் சிறப்பின் - தாழொடு கூடப்பண்ணப்பட்டபெருமையமைந்த சிறப்பினையுடைய, தாழொடுகுயின்றவென்றார் பேராக்கதவாதலான். குயில் வினைப்பகுதி. நீள் நெடுங்டுவாயில் கடைகழிந்து - மிகவும் பெரிய நீண்ட கதவையுடைய இடைசழியைக்கடந்து, இடைசழி இடையிற்கழிதல். சழிந்துஎன்றார் மனையின் பெருமையுங் காவன்மிகுதியுந்தோன்ற.ஆங்குஅணிகிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த - அவ்விடத்தில் அழகினால் விளங்கும் சர்ப்ப சயனத்தின்மேல் யோக நித்திரைகொள்ளும், மணிவண்ணன் கோயில்வலஞ்செயாசழிந்து- மணிவண்ணனென்னுந திருநாமத்தையுடைய திருமாலினதுகோயிலைவலத்திலிட்டுச்சென்று, ஓங்கிய பணைஐந்து பாசுஇலைபோதி - உயர்ந்தஐந்துகிளைகளையும் பசிய இலையினையுமுடைய அரசமரத்தின்; அணிதிசழ்நீழல் அறவோன் - அழகால்விளங்கும் நிழலின்கண் (எழுந்தருளிய) அறவோன் திருமொழி - தரும வடிவாகிய புத்தன் (அருளிய) பிடவாகமத்தை, திருமொழி கருவியாகுபெயர். பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகையெனினும் அமையும். அந்தரசாரிகள் மறைந்தனர் * சாற்றும்- ஆகாயசாரிகள் மறையவிருந்து (யாவர்க்கும் அதன்பொருளை) விளக்கும், இந்திரன்விகாரம் ஏழ் உடன்போக்கி-புத்தசவுத்திரி யிந்திரன் (கையாலும் கருவியாலுமின்றிமனத்தால்) நிருமிக்கப்பட்ட ஏழுவிகாரங்களையும் அடைவேகண்டு அவற்றைக்சழிந்துபோய், புலவுஊண் துறந்து - புலாலோடுண்ணுமுணவைத்துறந்து, பொய்யாமை விரதத்து - பொய் கூறுமையாகியவிரதத்தோடு, பொய்யாமை ஈறுதொக்கது. அவலம்நீத்து-அழுக்காறு அவாமுதலியவற்றைக்கைவிட்டு, அறிந்துஅடங்கிய (தருமநூல்முதலியவற்றை) உணர்ந்து(ஐம்புலன்கள்)அடங்கிய, கொள்கை-கோட்பாட்டையுடைய, மெய்வகை உணர்ந்த விழுமியோர் குழீஇய - உண்மைவகையையறிந்த சீரியர்திரண்ட,

---

* "தானந்தவமே தருமம்பேணல் - ஞானங்கல்வி நலனிவைதெரிதல்- ஈனமில்லாவிராசதகுணமே."

ஐவகைநின்ற அருகத்தானத்து - பஞ்சபரமேட்டிகள் நிலைபெற்ற அருகத்தானமாகிய, அத்துச்சாரியை வேண்டாவழியில்வந்தது. பஞ்சபரமேட்டிகளாவார் அருகர், சித்தர், உபாத்தியாயர், ஆசிரியர், சாதுக்கள். ஐவகை என்பதற்கு ஐந்து ஸ்ரீகோயில் என்பாரும் உளர். ஐந்து சந்திஉம் தம்உடன்கூடி வந்து தலை மயங்கியவான் பெருமன்றத்து - ஐந்துசந்தியுந் தம்மொடுகூடி வந்து தலைமயங்கிக் கிடக்கின்ற மிக்க பெரியமன்றில், பொலம்பூம்பிண்டி நலம்கிளர்கொழுநிழல்-பொற்பூவையுடைய அசோகினது அழகுவிளங்கும்நிழலின் கண்ணே, புலம்பொலிவாகாமல்எப்பொழுதம்அருகனுணையாற்பூக்கும்பிண்டிஎன்பார் பொலம்பூம்பிண்டிஎன்றார். பொன்என்னுஞ்சொல்வல்லெழுத்துவரப்பொலம் என்றாயிற்று "பொன்னென்கிளவியீறுகெடமுறையின்-முன்னர்த்தோன்றும்லகாரமகாரம்-செய்யுண்மருங்கிற்றொடரியலான" தொள - புள்ளி மயங்கியல் - சுசு - ரு. நீர் அணிவிழவின்உம் நெடுந்தேர் விழவின்உம்-அபிஷேகவிழாவினும் நெடியதேர்விழாவினும்,சாரணர் வரூஉம்தகுதி உண்டாம் என - ஆகாயசாரிகள்வரத்தகுமென்று, உலகநோன்பிகள் ஒருங்குஉடன் இட்ட - சாவகரொரு சேரக்கூடியிடப்பட்ட, இலகு ஒளி சிலாதலம் தொழுதுவலங்கொண்டு - விளங்காநின்ற ஒளியையுடைய சந்திரகாந்தக்கல்லாலாகியசிலாதலத்தைத்தொழுதுவலங்கொண்டு,மலைதலைக்கொண்டபேர்யாறுபோலும் - மலையினிடத்தே தலையையுடைய (ஒரு) பெரிய ஆறுபோலும், உலகம் இடைகழி ஒருங்கு உடன்நீங்கி - உலகிலுள்ளோர் (போக்குவரவுசெய்தற்கமைந்த) ஊர் வாயிலை (போவாரோடு)ஒருசேரத்தானுங்கூடிநீங்கி, இடைகழி கோயில்வாயில். கோபுரமலையாகவும் அதனொடு பொருந்திய தெருவை ஊராகவும் உவமித்தார். கலையிலாளன்-மன்மதன், கலைசரீரம். மன்னவன்கு - கரிகாற்பெருவளவனுக்கு, காமர்வேனில் ஒடும மலையமாருதம் இறுக்கும் - விருப்பந்தரும்வேனிலோடு தென்றலைத்திறையாக இடுதற்குப் பொருந்திய, பல்மலர் அடுக்கிய நல்மரம்பந்தர் - பலமலர்களை நிரைத்தநல்லமரங்களி னிழலையுடைய, பந்தர் நீழல் * இலவந்திகையின் எயில்புறம்போகி - அரசர்க்குரிய காவற்சோலையாகிய மதிலின்புறத்தேசென்று, இலவந்திநீராவியைச்சூழ்ந்தவசந்தச் சோலை. தாழ்பொழில் உடுத்த-இருமருங்குஞ்சோலைசூழ்ந்த, தண்பதம் பெருவழிகாவிரி கடைமுகம் வாயில்கழிந்து-புதுப்புனலாடப்போம் பெரியவீதியையுடைய காவிரிக்கரையின் கண்ணுள்ள திருமுகத் துறையின்வாயிலையுங் கழிந்து, தண்பதப்பெருவழி காவிரிவாயில் கடைமுகங்கழிந்து என்றார் காலையில் நாணி ராடுவோர் பிறர் முகநோக்காதுபோதற்குமறைந்து கழிவாரும்அவ்வாறுசுழிந்தார் என்றற்கு. குடதிசை கொண்டு-மேற்றிசையைநோக்கிக்கொண்டு,கொழும்புனல்காவிரி வடபெருங் கோடுமலர் பொழில்நுழைந்து—வளவியபுனலையுடைய காவிரி

* இலவந்திகையினெயிற்புறம் போகின் - உலகமன்னனுழை யோராங்குளர், என்றார் மணிமேகலையினும்.

யினதுபெரியவடகரையின்கண்ணுள்ள சோலையைக்கழிந்து, அன்றி இளமரக்கா ஆதலால் தாழ்ந்த கொம்பினிடையேநுழைந்து எனினும் அமையும். கோடுகரை, கொம்பு. நறும்பல்கூந்தல்—நறிய ஐவகைப்பகுதியாய் முடிக்கும் கூந்தலையுடைய கண்ணகியார், காவதம் கடந்து — காதமென்றுசொல்லப்படும் எல்லையைக்கடந்துசென்று, கவுந்தி பள்ளி—கவுந்தியடிகளிருக்கும் பள்ளிக்கு (அயலதாகிய) ஓர் பூமரம் பொதும்பர் பொருந்தி — ஒரு பொலிவினையுடைய (செறிந்த) இளமரச் சோலையளவுஞ் சென்று பொருந்தி, ஆங்கண்—அவ்விடத்து, இறு கொடி நுசுப்பு ஒடு அடிஇணைந்து வருந்தி-முறியுங் கொடிபோன்ற இடையோடு பாதமும் வருந்தி, இணைதல்வருந்தல். குறுபல உயிர்த்து—(இளைப்பால்) குறுகமிகவும் பெருமூச்செறிந்து, குறு என்னும்பண்படியாகப்பிறந்தவினைப்பகுதி வினையெச்சத்தின்மேல்நின்றது. குற்றியலுகரமெனவருதலறிக.முதிராகிளவிமுள்எயிறுஇலங்க-முற்றாதமழலைச்சொல்லாலே கூர்த்த எயிறுகள்விளங்க, மதுரைமூதூர்யாதெனவினவ - மதுரையென்னும் பழைய நகரம் யாதென்று(கோவலனை)வினவ; நாறு ஐங்கூந்தல் - மணம்வீசும் ஐந்துபகுப்பாய் முடிக்கும் கூந்தலை யுடையாய், நம் அகல் நாடு உம்பர்(நீகூறியமதுரை)நமது அகன்றநாட்டுக்குமேல், ஆறைங்காதம் நணித்து என நக்கு - ஆறைங்காவதம் இனி அண்ணிதென்று நகைத்து, யாதென்றவட்கு முப்பதென்னும் பொருண்மறைத்து ஆறு ஐங்காதம் என்றாற்போலிருத்தற்கு ஆறைங்காதம்என்றான். நகுதல் துன்பத்தால் நகுதல். தே மொழிதன் ஒடு உம் சிறை அகத்து இருந்த காவந்தி ஐயை கண்டு அடி தொழலும் - கண்ணகியாரோடு சிறைப்பள்ளியிலிருந்த கவுந்தியாகிய அடிகளைக்கண்டு வணங்க, அடி தொழலும் வினையெச்சம் அடிதொழு பகுதி, உகரக்கேடு சந்தி, அல்விரித்தல் விகாரம்,உம்விகுதி அடிதொழு ஒரு சொன்னீர்மைய. ஐயை தவப்பெண்;

கழிந்து வலஞ்செயா கழிந்துபோகி தொழுது வலங்கொண்டு நீங்கி போக்கி கழிந்து நுழைந்து பொருந்தி நக்கு கண்டு என்னும் இறந்தகால வினையெச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு அடிதொழலும் என்னும் எச்சத்தின் முதனிலையோடு முடிந்தன.

இணைந்துவருந்தி உயிர்த்து என்னும் வினையெச்சங்கள் ஒன்றனை யொன்றுகொண்டு வினவ என்னும் வினையெச்சத்தின் முதனிலையோடுமுடிந்தன இணைஉயிர்பகுதிகள்.

உருவும் குலனும் உயர் பேர் ஒழுக்கமும் பெருமகன் திருமொழி பிறழா நோன்பும் உடையீர் - வடிவமும் குடிப்பிறப்பும் உயர்ந்த பெரிய வொழுக்கமும் இறைவன் ஆகமத்தில் (கூறிய) விரதந்தப்பாமையும் (என்னு மிவற்றை யெல்லாம்) ஒருதலையாகவுடைய நீங்கள், உறுகணாளரின் கடைகழிந்து இங்ஙனம் கருதிய ஆறு என்னோஎன - தீவினை யாளரைப் போல (நமது) இடத்தைக்கழிந்து இங்கு (வருதற்கு) கருதியவகை

யாதோவென்று வினவ, உறுகணாளர் மிடியாளரெனினும் அமையும். கடைகழிதல் இவர்க்குமரபன்மையாற் கழிந்து என்றார். இவ்வும்மைகள் உயர்வு சிறப்பின் கண்வந்த எண்ணும்மைகள். உறவத்தீர் - மிக்கதவத்தினையுடையீர், யான் உரையாடு இல்லை - யான்சொல்லுதல் வேறில்லை, மதுரை மூதூர்வரை பொருள் வேட்கையன் என - மதுரையாகிய பழைய வூரிற்சென்று நிருமித்தபொருளைத் தேடும்பேரவாவை யுடையேனென்று கூற, என இசையெச்சம். முன்னர்க் காதையில் "சென்றகலனோடுலந்த பொருளீட்டலுற்றேன்" என்றானாகலின் அதனை "வளைபொருள்" என்றான் இத்துணைப்பொருட்கு மேம்பட்டதே தானம்பண்ணக் கடவேனென்பான் வளைபொருளென்றான் என்பாருமுளர். பாடகம்சீறு அடி - பாடக மணிந்த இவள்சிற்றடி, பரல்பகை உழவா—பருக்கைக் கல்லாகியபகையை வெல்ல மாட்டா (ஆதலால்) கீர்காடு இடையிட்டநாடுசெழிதற்கு அரிது—கீர்காட்டையிடையிட்ட நாட்டைக்கழிந்து செல்லுதற்கு அரிது, இவள்செவ்வி—இவளதற்கு ஏற்றதன்மையள் (அல்லள்) யார் கூறிகுர் (இதனை) யாரறியவல்லார், உழவா எதிர்மறைப்பன்மை வினைமுற்று. உழபகுதி, உழப்புவன்மை. இது பரிவிற்கூறியது, ஈங்கு உரியது அன்று—இவ்விடத்தில் (இவளோடு கூடச் செல்லுதல் குடிப்பிறப்புக்கு) தக்கதன்று, ஒழிக என ஒழியீர் (இனிச்செலவை) ஒழிமினென்று யாமொழிப்பவும் நீர் ஒழியீர், ஒழிகென வொழியீர் என்பதற்கு இவற்கெதிர்வதறிந்து கூறினானெனின் "தவந்தருசிறப்பிற்கவுந்தி சீற்றம்—சிவந்தோங்கு செங்கோனீ ணிலவேந்தன் — போகுயிர்தாங்காப் பொறைசாலாட்டி—என்னோடிவர் வினையுரித்தோ ஒவென-உண்ணு நோன் போடுயர்பதிப்பெயர்த்துமென" வஞ்சிக்காண்டத்துள் நீர்ப்படையில்மாடலனென்னுமறையோன் கூறுதலானும், மதுரைக்காண்டத்துள் அடைக்கலக் காதையில் "மாதரிகேளிம் மடந்தைதன்கணவன் — தாதையைக்கேட்கிற் றங்குலவாணரும்—பொருள் பெறுநரின்விருந்தெதிர்கொண்டு - கருந்தடங் கண்ணியொடு கடிமனைப்படுத்துவர்—உடைப்பெருஞ் செல்வர்மனைப் புகுமளவும்—இடைக்குலமடந்தைக் கடைக்கலந்தந்தேன் எனவும் "தாயு நீயே யாகித்தாங்கு" எனவும் "மிகப்பேரின்பந் தருவதுகேளாய்" எனவும், ஒரு போழ்திற்கித்துணை யோம்படையெல்லாங்கூறவேண்டா ஆகலானும், இவர்க்குத்தவப்பயனுலே சபித்தலன்றிக் காலவுணர்ச்சி யின்மையறிக. மறம் உரை நீத்தமாசு அறுகேள்வி—பாவச்சொற்களை நீக்கியகுற்றமற்றபொருட் பயனையுடைய, அறிவு உரைகேட்டு—ஆகம நூலைக்கேட்டு, ஆங்கு அறிவனை ஏத்த—கேட்டபடியே அருகக்கடவுளை வணங்குதற்கு, தென்திசை நல்நாடு நீது தீர மதுரைக்கு—நல்ல தென்றிசை நாட்டினிடத்த தாகியகுற்றமற்ற மதுரைக்கு (போதற்கு) ஒன்றியஉள்ளம் உடையேன்ஆகலின்—ஒருப்பட்ட மனமுடையேனாதலால், யான் உம்போதுவல்போதுமின் என்ற—நானும் வருகின்றேன் நீரும்வருமினென்று கூறிய, போதுவல் தன்மையொருமை எதிர்காலவினைமுற்று. புகு பகுதி - காவுதி ஐயைகை தொழுது எத்தி—

கவுந்தியடிகளைக் கையாற்றொழுது நாவால்வாழ்த்தி, அடிகள் ஏ நீர் அருளு
திர் ஆயின்—அடிகளே நீர் (இவ்வாறு) அருள்செய்வீராயின், ஏகாரம்பொரு
த்தமில்புணர்ச்சி. அருளுதிர் முன்னிலைப்பன்மை எதிர்காலவினைமுற்று. தகர
விடைநிலை எதிர்காலத்தின் மேல்நின்றது. தொடிவளை தோளிதுயர் தீர்த்
தேன் என—வளைந்தவளையலையணிந்த தோளையணிந்தவள் துயரெல்லாம்
(இப்பொழுதே) போக்கினேனென்றுகூற, தொடிவளைவு "தொடிக்கட்பூ
ணை"என்றார் ஆகலான். கொண்ட இநெறிக்குஏதம்தருவனயாங்குஉம்பலகோ
வலன்காணாய்கேண்மோ (நாம்போவதாக) உட்கொண்ட இவ்வழியினிடத்து
வருத்தத்தைத்தருவன எவ்விடத்தும் பலவுள (அவற்றை) கோவலனே நீமுன்
பு அறியாய் (யாம்சொல்ல) கேளாய், காணாய் முன்னிலை யொருமை யெ
திர்மறைவினைமுற்று. காண்பகுதி. ஆ எதிர்மறைவிகுதி, அனைத்தும் ஒரு
பகுதி, ஆய்விகுதி, விகுதியின் ஆமுதற்குறை. மோமுன்னிலையசை. இந்நெறி
வடகளைவழி. வெயில்நிறம்பொறு மெல்லியல் கொண்டு—வெயிலினது ஒளி
யை (கண்ணுற்பார்க்கவும்) பொறுதமெல்லியவியல் புடையாளைக்கொண்டு,
பூபயில்தண்டலைபடர்குவம் ஆயின் (நாம்)பூக்கள்மிகுந்தசோலையினூடுசெல்
வோமானால், மண்பகவீழ்ந்த கிழங்கு அகழ்குழியை (அவ்விடத்து) நிலம்பி
ளவுபட (இடங்கொண்டுகீழே)வீழ்ந்தவள்ளிக் கிழங்கையகழ்ந்து கொண்ட
குழிகளை, சண்பகம் நிறைத்ததாதுசேர்பொங்கர் - சண்பகமரங்கணிறைத்த
தாது செறிந்தபழம்பூக்கள், பொய்யறைபடுத்து—பொய்க் குழியைப் படு
வித்து, போற்றுமாக்கட்கு (அவ்விடத்தை) அறிந்துபாதுகாத்துச் செல்லாத
மக்களுக்கு; கையறுதுன்பம் காட்டின் உம் காட்டும் — செயலறுதியாகிய
துன்பத்தைக்காட்டினும் காட்டாநிற்கும் (காட்டுதலையுஞ்செய்யும் என்படி)
பொங்கர்பழம்பூ "பொங்கர்வெண்பொரிசிந்தினபுன்கென்ப" என மேலே
கூறுதலுங் காண்க. கையறுதுன்பம் மீளாத்துன்பம். உதிர்செம்மல் பூவின்
ஒதுங்கினர்கழிவோர்—உதிர்ந்தபழம் பூமறைத்தகுழிகளை (நாடுதற்குநிலத்
தைநோக்கி) ஒதுங்கிச்செல்வோர்; ஒதுங்கினர் முற்றெச்சம். முதிர்தேம்ப
ழம் - முற்றிப்பழுத்துத் தேனொழுகும் பலாப்பழங்கள் (கொம்பின்கண்ணி
ருந்து) பகைமுட்டின் உம்முட்டும்-பகைபோலமுட்டினுலும்முட்டாநிற்கும்,
முட்டினுமுட்டுவர் எனப்பாடமாயின்கழிவோர்செய்யினுஞ்செய்வர் எனப்
பொருளுரைக்க-தேம்இனிமையெனப்பொருள்கொண்டுதெங்கம்பழமெனப்
பொருள்கூறுவாரும் உளர். இரண்டிடத்தும் வந்தவும்மை ஐயப்பொருட்டு.
செல்வோர் கருத்தைக்கூறினார், உலகியலாகலான். மஞ்சள் உம் இஞ்சிஉம்ம
யங்கு அரில்வலையத்து—மஞ்சளும் இஞ்சியும் (தம்முள்) மயங்கிப்பிணக்கை
யுடைய (தோட்டங்களின்) பாத்திதோறும், அரில்பிணக்கு. வலையம்பாத்தி.
பலவின்செஞ்சுளை பரல்பகை உறுக்கும்-பலாக்கனியின் செவ்வந்தசுளையினு
ள்ளவித்தாகிய பருக்கைகள் (இவள்மெல்லடிக்கு) பகையாயுறுத்தாநிற்கும்,
கயல்நெடுங்கண்ணிகாதல் கேள்வ—கயல்போலும்நெடிய கண்ணையுடையவ
ளால்காதலிக்கப்பட்ட கொழுநனே, வயல் உழைபடர்குவம் எனின் (சோலை

யுந்தோட்டமுமாகிய களைவழியன்றி) வயல்வழிபோகக்கடவேம் என்பாயாகில், ஆங்கு—அவ்வழியில், பூநாறு இலஞ்சிநீர்நாய் - பூக்களின்மணங்கமழாநின்ற குளங்களிலுள்ள நீர்நாய்கள், பொருகயல் ஒட்டி (தம்முள்) போர்செய்தலையுடைய மீன்கள்வெருவி யோடவோட்டி, கவ்வியநெடும்புறம்வாளை (தம்மால்) கௌவப்பட்ட நீண்டமுதுகையுடைய வாளைமீன்கள், மலங்குமிளிர் செறுவின்விலங்கபாயின் - மலங்குமீன்கள்ரெளியும்வயலின் கண்குறுக்கிடப்பாயுமாயின், இகாரிகைகலங்கல் உம் உண்டு — இப்பெண் கலங்குந்தன்மையை யுடையாள், மீனிரைதேருநீர்நாய்காணினும், இடைப் பொருகயல்கள் தாவக்காணினும்,வாளைபாயக்காணினும்,மலங்குமீன் மீளக் காணினும்,மனத்தில் இக்காரிகைகலங்குவாள் என்பதுகருத்து. ஆங்கண்—அவ்விடத்து, கரும்பில்தொடுத்த பெருந்தேன்சிதைந்து (கரும்பல்லது காடின்மையால்) அக்கரும்பில்வைத்த பெரியதேன் கூடுகள்முதிர்ந்து அழிந்து, சுரும்புசூழ்பொய்கை தூநீர்கலக்கும் (ஒழுகியதேன்) வண்டுகள்சூழ்ந்து கிடக்கப் பொய்கையிலுள்ள மாசில்லாத நீரோடுசென்று கலக்கும், அடங்காவேட்கையின் அறிவு அஞர் எய்தி — தணியாதநீர் வேட்கையாலே (அதனை) அறியாமல், * குடங்கையில் மொண்டுகொள்ள உம்கூடும் — தன்குடங்கையினால் மொண்டுபருகவுங்கூடும், குடங்கையாவது ஐந்துவிரலுங்கூட்டியுட் குழிப்பது. இதனாற்சொல்லியது நமது தெரிசனத்திற்கடியப்பட்ட தேனுண்டலைப்பரிகரி என்றல். எனவே ஊனையும் உடன் கூறிற்றும், மேலும் இவ்வாறு வருவன கொள்க. குறுநர் இட்ட குவளை அம்போது ஒடு - களைபறிப்போர் (பறித்து வரம்பின் மேல்) இட்டகுவளை மலருடனே, பொறிவரிவண்டு இனம் பொருந்திய கிடக்கை—புள்ளிகளையும் வரிகளையுமுடைய வண்டின்கூட்டம் (மதுமயக்கத்தாற்போக அறியாது) உள்ளொடுங்கிக்கிடத் தலை, நீர்வழிசெல் வருத்தத்து அஞர் எய்தி - நீங்கள்வழிவரும் வருத்தத்தால் துன்பமடைந்து (அறிவுமயங்கிஎன்றபடி) அறியாது ஆங்கு அடி இடுதலும் கூடும்-வறம்பூவெனக்கருதி அவற்றின்மேல் அடியிடவுங்கூடும், இதனாலுயிர்க்கொலை புகாமற்பரிகரிஎன்படி. எறி நீர் அடைகரை இயக்கம்தன்னில்-எறியுநீரையுடைய பெருவாய்க்காலினது அடைகரைவழியில் (போகக்கடவோமெனப்போயின்) எறிநீர் வாய்த்தலையி னின்றுங் குதித்துவரும் வாய்க்கானீர். இயக்கம் வழி. இது செயப்படுபொருளில் வந்த தொழிற்பெயர் - இயங்குபகுதி. பொறிமாண் அலவன் உம் நந்து உம் போற்றாது (அவ்வடைகரை நீரினுள்ளனவாகிய) புள்ளியினழகினையுடைய நண்டும் நத்தையும் (உள்வழியறிந்து) பாதுகாவாது, ஊழ் அடிஒதுக்கத்து (முன்புநடக்கும்) முறையாலடியிட்டு நடக்கு நடையால், உறுநோய்காணில் - (அவை) அடையும்நோய் (நம்மால்) வருமாயின், தாழ்

* "குடங்கையென்பது கூறுங்காலை - உடங்குவிரல் கூட்டியுட்குழிப்பதுவே"

தருதுன்பம் (அதனால்நமக்கு)வருங்கொலைத்துன்பம்,தாங்கவும் ஒண்ணு (நம்மால்) சுமக்கவுங்கூடா, ஒதுக்கம் நடை. கொலையென வாக்கால் கூறவொண்ணுமையான் நோய் என்ருர். உம்மை எதிரது தழீஇய எச்சப்பொருட்டு இம்மைக் கண்ணன்றி மறுமைக்கண்ணுந்தாங்காவளவிற்றென்றதனுல்.யாங்கண் உம் வயலும் சோலையும் அல்லது - எவ்விடத்தும் ஆண்டுவயலும் ஈண்டுச்சோலையுமன்றி, வயல் என்றதனுல் வாய்க்காலும், சோலை என்றதனுல் தோட்டமும் உபலக்கணமாகக் கொள்க. அயல்படகிடக்கும் நெறி ஆங்கு இல்லை - வேறுபடக்கிடக்கும் வழி அவ்விடத்தில் இல்லை (ஆதலால்) நெறி இருங்குஞ்சி - நெறித்த பெரியசிகையையுடைய கோவலனே, நீவெய்யாள் ஒடு - உன்னுல் விரும்பப்பட்ட கண்ணகியாரோடு, நீதிரிந்த தன்றிரிபு. வெய்யாள் வெம்மையென்னும் பண்படியாகப் பிறந்த பெயர்ச்சொல். வெம்மைவிருப்பம். குறிஅறிந்து அவை அவை குறுகாது ஓம்புஎன-(அவ்விடங்களை) குறிப்பாலறிந்து அப்பாவங்கள் புகாமற் பாதுகாவாயென்றுகூறி,

காட்டினுங் காட்டும் மூட்டும் பரற்பகையுறுக்கும் கலங்கலு முண்டு கொள்ளவுங் கூடும் அடியிடுதலுங்கூடும் தாங்கவுமொண்ணுஎன்பார் அவை அவை என அடுக்கிக்கூறினுர். இங்ஙனம் கண்ணகியார் மென்மைத்தன்மை கூறுவார் வருணனையும் உடன்கூறினுர். இத்துணையுங் கவுந்தியடிகள் தமது பள்ளியிடத்தே யிருந்து கூறினுரெனவுணர்க.

காவுந்திஐயை-கவுந்தியடிகள், தோம் அறுகடிஞை உம்-குற்றமற்றபிச்சையேற்கும் பாத்திரமும்,சுவல்மேல் அறுவை உம்-தோளின்மேலிடத்து முறியும்,கைபீலிஉம்கொண்டு-கையில்மயிற்ருேகையுங்கொண்டு,மொழிப்பொருள் தெய்வம் வழித்துணை ஆக என-பஞ்சமந்திரமே நமக்கு வழித்துணையாகவெனச்சொல்லி, பஞ்சமந்திரம் ஆவன ந, ச,உ,வ,ஈ.பழிப்பு அருஞ்சிறப்பின் வழிபடர் புரிந்தோர்-(செல்வாரோடு) பழித்தலில்லாத வொழுக்கத்தோடுவழியிற் சென்ருேர், படர்தல் செல்லுதல். படர்புரிந்தோர்ஒருசொன்னீர்மைய. கரியவன்புகையின் உம்-(கோள்களில்) சனிக்கோள் இடபம்சிங்கம்மீனம் என்னு மிவற்றினேடு மாறுபட்டாலும், * புகைக்கொடி தோன்றின் உம்-தூமக்கோள் தோன்றினுலும், வட்டம், சிலை, நுட்பம், தூமம் என்னும் கோள்கள் நான்கினுள் புகைக்கொடி என்றது தூமக்கோளை. விரிகதிர் வெள்ளி தென்புலம் படரின் உம் - விரிந்தகிரணத்தையுடைய வெள்ளிக்கோள் தென்றிசைக்கண்ணே செல்லினும். உம்மைகள் காவிரியைச் சிறப்பித்து நிற்றலால் சிறப்பும்மை கள், கால்போகு நிவப்பில் (குடகமலையின்)உச்சிக்கண்; கால்போகு நிவப்பு உச்சி. குடகமலைசையமலை. கடுங்குரல் ஏற்ருெடு - கடியகுரலையுடைய இடியேற்ருேடு, சூல்முதிர்கொண்மூ - சூல் முதிர்ந்த பருவமேகம், பெயல்வளம் சுரப்ப-மழையாகியவளத்தைச்சுரத்தலான், குடமலை

* "பைம்மீன் புகையினும் தூமந்தோன்றினும் - தென்றிசை மருங்கின் வெள்ளியடரினும் என்ருர் பிறரும்.

பிறந்த கொடும்பல் தாரம் ஒடு-அக்குடகமலையிற் பிறந்தமிக்க* பலபண்டத்தோடு, குடமலை குடக்கின் கண்ணுள்ளமலை. இதனால் மலைவளங்கூறிற்று கயவாய்நெரிக்கும் - கழிமுகத்தைக் குத்தியிடிக்கும், † கடல்வளன் எதிர - கடல்தன்வளத்தைக் கொண்டெதிர்தலால், இதனால்கடல்வளங்கூறிற்று. கடுவரல்காவிரிபுதுநீர்-கடுகிவருதலையுடையகாவிரிப்புதுவெள்ளநீர், கடுவரல்முடுகிவருதல். வாய்த்தலை ஓ இறந்து ஒலிக்கும் ஒலியே அன்றி - வாய்த்தலைக்கிடக்கின்ற மதகுநீர் தாங்குபலகையின் மீதெழுந்து குதித்தொலிக்கும்ஒலியேயன்றி, உம்மை அசைநிலை. ஆம்பி உம் கிழார்உம் வீங்கு இசை ஏற்றம் உம் ஓங்குநீர்ப் பிழார்உம் ஒலித்தல்செல்லா - பன்றிப்பத்தர்போன்ற நீரிறைக்குங் கருவியும், பூட்டுப்பொறியும், மிக்கவொலியையுடைய ஏற்றமும் மிக்கநீரிறைச்கும் இறைகூடையும் ஆகிய விவைகள் ஒலித்தல் (பிறர்க்கு) புலப்படாத;—

புகையினுந் தோன்றினும் படரினு நெரிக்குங் காவிரியென முடிக்க. செல்லா ஈறுதொக்க எதிர்மறைப் பெயரொச்சம்.

கழனி செந்நெல் கரும்புசூழ் மருங்கின் - கழனியிற் செந்நெல்லுங் கரும்புஞ் சூழ்ந்த விடத்தே, பழனம் பைதாமரை பூவினத்து - நீர்நிலைச் செறுவிலுண்டான பசியதாமரைமலர்க் காட்டில், கம்புள்கோழிஉம் கனைகுரல் நாரை உம்-சம்பங்கோழியும் ஒலிக்கும் பேரோசையையுடைய நாரையும், செம்கால் அன்னம் உம் பைங்கால்கொச்கு உம்-செவந்தகாலை யுடைய அன்னப்புள்ளும் பசியகாலையுடைய கொக்கும், கானம் கோழிஉம் மாநீர்க்காக்கைஉம் - கானுங்கோழியும் பெரியநீர்க்காக்கையும், உள்ளு உம் ஊரல் உம் புள்உம் போதா உம் - உள்ளானும் குளுவையும் கணந்துட்புள்ளும் பெருநாரையும், ஊரல் நீர்மேலூர்தல். இது, தொழிலாகுபெயர். புதா போதா எனநிற்றல் விகாரம். வெல்போர் வேந்தர் முனையிடம்போல-வெல்லும் போரில்வல்ல அரசரிருவர் போர்செய்யும் இடம்போல, பல்வேறு குழூஉக்குரல் பரந்த ஓதைஉம் - பலவேறுவகைப்பட்ட (இவைகள்) ஒலிக்கு மிக்கவோசையும், குழூஉக்குரல் பலவாயொன்றான வோசை. முனையிடம், வெல்போர் வினைத்தொகைகள். உழாநுண்தொளி உள்புக்கு அழுந்திய (உழவரால்) உழப்படாத குழம்பிய சேற்றிற் புகுந்தழுந்திய, தொளிசேறு. கழாமயிர் யாக்கை செங்கண்காரான் - கழுவாத மயிரையுடைய உடலையும் செவந்தகண்களையுமுடைய எருமை, சொறிபுறம் உரிஞ்ச-தினவையுடைய தன் முதுகையுரிஞ்சுதலால், புரிஞெகிழ்பு உற்ற குமரிகூட்டில் கொழும்பல் உணவு-புரிதேய்ந்த அழிவில்லாத புரிக்கூட்டினின்று (சரிதலுற்ற) வளவிய

* "தக்கோலந்தீம்பூதகைசாலிலவங்கம்-கற்பூரஞ்சாதியோடைந்து"

† "ஓர்க்கோலை சங்கமொளிர் பவளம் வெண்முத்து - நீர்ப்படு முப்பினோடைந்து."

பலவருக்கத்தையுடைய நெல்லுகள், கவரி செந்நெல்காய்தலை சொரிய-கவரித்தொங்கல்போல் (விளைந்துகிடக்கின்ற) செந்நெற்கதிர்த்தலை யிடத்தே சொரிய, கருங்கைவினைஞர் உம் - வலியகையால் தொழில்செய்வோரும், பறையர் பள்ளர் முதலானோர். களமர் உம் - உழவரும், இவர்கள் கீழ்க்குடிமக்கள். கருங்கை இருவர்க்கும்பொது. கூடி ஒருங்குகின்று ஆர்க்கும் ஒலிஅன்றி உம் — கூடி யொருசேரநின்று ஒலிக்கும் ஒலியும் அதுவேயல்லாமலும், கடிமலர்களைந்து — கடியுங்கழுநீர் முதலிய மலர்களைக் களைந்து, முடிநாறு அழுந்தி (மறித்து) முடியின் கண்ணுள்ள நாற்றைப் பகுத்துநட்டு, தொடிவளை தோள் உம் ஆகம் உம் தோய்ந்து சேறு ஆடுகோலம் ஒடு-(களித்து ஒருவர்மேலொருவர் சேற்றை யிறைத்துக்கொள்ளுதலால்) வளைந்தவளையலையணிந்த தோள்களு மார்பும் தோய்ந்த சேறுடியகோலத்தோடு, வீறு பெறதோன்றி — அழகுபெறத் தோன்றி, வெம்கள் தொலைச்சிய - விரும்புங்கள்ளையுண்டு தொலைத்தலால் (மயங்கிய) செம் கயல் நெடுங்கண் சில்மொழி கடைசியர் — செவந்த கயல்போலும் நெடிய கண்களையும் சிறிய சொல்லையுமுடைய பள்ளப்பெண்கள், விருந்தின் பாணியும் — (தம்மிசையில்) புதுமை யுண்டாகப் பாடும் பாட்டும், இதனைப் பெருமுளை என்பாரும் உள். விளங்குகதிர் - விளங்குஞ்செந்நெற்கதிரோடு, கொழுங்கொடி அறுகு ஐ உம் குவளை உம் கலந்துதொடுத்த விரியல் சூட்டி - வளவிய் கொடியறுகையும் குவளைமலரையுங் கலந்து தொடுத்தமாலையை (மேழியில்) சூட்டி, பழிச்சுநர் கைதொழ - போற்றுவோர் வணங்க, பார்உடைப்பனர்போல் - பூமியை (இரண்டாக) பிளப்பவர்போல, ஏர் ஒடு நின்றோர் ஓமங்கலம் உம் - பொன்னேர் பூட்டிநின்றோரைப் பாடும்ஓமங்கலப்பாட்டும், பெருஞ்செந்நெல்லின் அரிந்துகால்குவித்தோர்கரிகடாவுறுத்தமுகவைப்பாடும்-பெரியசெந்நெல்லையரிந்துபோர்குவித்தோர் அச்சூட்டைக்கரிக்கடாவிடுலானுண்டானமுகவைப்பாடலும்,அதாவதுபொலிபாடுதல். முகக்கக்கொடுத்தலால் முகவையெனப் பெயராயிற்று * தெண்கிணைபொருநர் - தெள்ளிய வோசையையுடைய தடாரிகொட்டுவோர், செருக்கு உடன்எடுத்த - களிப்போடெடுத்த, மண்கணை முழவின் மகிழ்செய் ஓதைஉம் - மார்ச்சனையமைந்த திரண்டமுழவினது (கேட்டோர்) மகிழும்இசையினதுஒலியும்,பேர்யாறு அடைகரை நீரில்கேட்ட-பெரியஆற்றினடைகரையின்கண் (இவ்வோசைகளை) முறையொடுகேட்டலால்,ஆர்வம்நெஞ்சம்ஒடு அவலம் கொள்ளார் - விருப்பமுற்றமனத்தோடு (வழிநடத்தலாலாகிய)துன்பத்தைக்கொள்ளாராகி, கொள்ளார் முற்றெச்சம்.

---

* "கிணைநிலை - தண்பணைவயலுழவனைத் - தெண்கிணைவன் றிருந்து புகழ்கிளந்தன்று. வெண்பா. பகடுவாழ்கென்று பனிவயலுளாமை - அகடு போலங்கட்டடாரித்-துகடுடைத்துக்-குன்றுபோற் போர்விற்குரிசில் வளம் பாட - இன்றுபோமெங்கட்கிடர்" புறப்பொருள் வெண்பாமாலை வாகைப் படலம்௩உ-செய்யுள்.

பரந்தவோதையும் ஆர்க்குமோதையும் விருந்திற் பாணியும் ஓமங்கலமும்முகவைப் பாட்டும்மகிழ்செயோதையுமென்று மிவற்றைப் பேரியாற்றடைகளைக்கண்ணே நீர்மைபெறக் கேட்டதனுலுண்டானவிருப்பத்தானெஞ்சிலவலங்கொள்ளாரெனக் கூட்டியுணர்க.

புலி உழைகொடிதேர் உரவோன் கொற்றம் ஒடு - புலியைத் தன்னிடத்தேயெழுதப்பட்ட கொடியையுடைய தேரையுடைய பெரியோனாகியகரிகாற்பெருவளவனது வெற்றியுடனே, மழைகரு உயிர்க்கும் அழல்திகழ் அட்டில் - மழைக்குக்கருப்பத்தைக் தோற்றுவிக்கும் அழல்விளங் கும்யாகசாலையில், மறையோர் ஆக்கியவானவர்உணு - அந்தணராலாக்கப்பட்ட அவியுணவு, இறை உயர்மாடம் எங்கணும்போர்த்த-நிலைபெற்றுயர்ந்தமாடங்களிடங்களெங்கும் (அந்தயாகதூமம்) போர்த்தலால், இறை இறுபகுதி. மஞ்சுசூழ் மலையின்மாணதோன்றும் - மேகஞ்சூழ்ந்த மலைபோல மாட்சிமைப்படத்தோன்றும், மங்கலம்மறையோர் இருக்கை அன்றி உம் - மங்கலத்தையுடைய அந்தணர்களிருக்கும்அவ்விடங்களும்(அது) அல்லாமலும், இரவுபோர் சுற்றம் உம் புரப்போர் கொற்றம் உம் - இரக்கும்யாசகரையும் சுற்றத்தாரையும் உலகினைப்பாதுகாக்கும்அரசருடையவெற்றியையும், உழவு இடை விளைப்போர் (தமது) உழவினால்தாங்குவோராகிய,எண்ணும்மைதொகுத்தல்இடைஉருபுமயக்கம். நீர்ப்பரப்புகாவிரிபாவைதன்புதல்வர்-நீர்ப்பரப்பினையுடையகங்கையின்புத்திரரது (வேளாண்மக்கள்என்றபடி) பழமைவிறல் ஊர்கள் உம் - தொன்றுதொட்டுள்ளஊர்களும், காவிரிநீர்கங்கைநீர்ஆதலால்கங்கைப்புதல்வரைக்காவிரிப்புதல்வர்என்றார் "மகவாய்வளர்க்குந்தாயேயாகியும்" என்பதனானுங்கொள்க. பொங்கழி-தூற்றுநெற்பொலி, ஆலைபுகையொடுபரந்து ஆலையின் (பாகுகாய்கின்ற) புகையால்பரக்கப்பட்டு, மங்குல்வானத்து மலையில்தோன்றும் ஊர் - இருட்சியையுடைய மேகங்களாற் சூழப்பட்டமலைபோலத்தோன்றும் ஊர்களும், இடை இட்டநாடு உடன்கண்டு (இவ்வூர்களை) இடையிலிட்ட நாட்டினைக்கண்டு (நடக்குநாள்) காவதம் அல்லது கடவார் ஆகி - காதமென்னும் எல்லையல்லது தொலைக்கமாட்டாராய், பல்நாள்தங்கி செல்நாள் ஒருநாள் - பலநாள்தங்கி நடக்கின்ற நாள்களி லொருநாள், உடன்கண்டு என்றார் அந்நாட்டுச் சிறப்பெல்லாம் கண்டுதொலைத்துக் கழிதலருமையாதலின். வீ ஆறு அரங்கத்து - மலர்செறிந்த காவிரியி னிடைக்குறையாகியஅரங்கத்தின், வீற்றுவேறுகி-எதிர்கரையின்கண்ணதாகி, அமைகுரங்கு உடுத்த-மூங்கின்முளையால்வளைக்கப்பட்டவேலியையுடைய, மரம்பயில்அடுக்கத்து-மரஞ்செறிந்தசோலையில், வானவர்உறையும் பூநாறு ஒருசிறை-தேவர் இருப்பதற்கு ஒத்தப்பூக்கள் கமழும்ஒருபக்கத்து, ஆகிஎன்னும்வினையெச்சம்நாறுஎன்னுங் காலங்கரந்த பெயரொச்சத்தோடுமுடிந்தது. பட்டினம்பாக்கம்-பட்டினப் பாக்கத்தில்(வான்பெருமன்றத்தில் அசோகநிழலின் கண்ணே) பெரும்பெயர்ஐயர் ஒருங்குடன்இட்ட-உலகநோன்பிகளொருசேர இட்ட, இலங்குஒளிசிலாதலம்மேல்இருந்து-விளங்குமொளியையுடையசிலா

தலத்தின்மேலிருந்து, அருளின்பெருமகன்-அருளினாற்பெருமகனால்(செய்ய
ப்பட்ட) * அதிசயம்பிறழாவாய்மைதருமம்சாற்றும்சாரணர்-அதிசயங்கள்
மூன்றுந்தப்பாதஆகமநூலினுண்மைத்தன்மையையுடையதருமவொழுக்கத்
தை(யாவருங்கேட்க)அருளிச்செய்யுஞ்சாரணர், விட்டனர்நீங்காதோன்ற(அ
ப்பட்டினப்பாக்கத்தை) விட்டுநீங்கிவந்துதோன்ற, விட்டனர் முற்றெச்சம்.
பண்டைத்தொல்வினைபாறுகஎன்றுகண்டுஅறிகவுந்தியொடு-முன்செய்தபழவி
னைவேரோடறுகவென்று(உட்கொண்டுஅவர்வந்தமையைக்) கண்டறிந்தகவு
ந்தியடிகளோடு, கால்உற வீழ்ந்தோர்-(அவர்கள்)திருவடிதமதுதலையில்பொ
ருந்தவீழ்ந்தார், வந்தகாரணம் (வீழ்ந்தவர் இங்கு) வந்தகாரணம், வயங்கிய
கொள்கை சிந்தைவிளக்கில்தெரிந்தோன்ஆயினும் (தனது) விளங்கியகோட்
பாட்டையுடைய அதிஞானத்தால் (நமது அருகக்கடவுள்) தெரிந்தவனா
லும், ஆர்வம்உம்செற்றம் உம் அகலநீக்கியவீரன் ஆகலின் - விருப்பும்வெறு
ப்புந்தன்னினின்று அகலநீக்கியவீரனாதலால், விழுமம்கொள்ளான் (இவர்க்
குவரும்துன்பத்திற்கு) வருத்தங்கொள்ளான். ஒடு.வினை;ஒடு.கழிபெருஞ்சிற
ப்பின்கவுந்தி — மிக்க பெரியதவச்சிறப்பினை யுடையகவுந்தியே, கவுந்தி
அண்மைவிளி. ஊட்டும்வல்வினை ஒழிக என ஒழியாதுகாணாய் - உண்பிக்
கவந்து நிற்கின்றதீவினையை (யாவராயினும்) ஒழிக்கவொழியாது நீபாராய்,
இட்டவித்தின் எதிர்ந்துவந்து எய்தி - வினை நிலத்திலிட்டவித்துப் போல
(கண்கூடாகநல் வினைப்பயன்) எதிர்ந்துவந்து, ஒட்டுங்காலை உதிர்க்க
உம் ஒண்ணா - ஊட்டுங்காலத்து மொழிக்கவொண்ணா, "உறற் பால நீக்க
லுறுவர்க்குமாகா" என்றார் பிறரும். உம்மை இறந்தது தழீஇய எச்சம்.
கடுங்கால் நேர் வெளிஇடுஞ் சுடர்என்ன-கடியகாற்றுவீசும் வெளியிலிடப்
பட்ட விளக்கைப்போல, உடம்பு இடைஉயிர்கள் - உடலொடு கூடிநின்ற
வுயிர்கள், ஒருங்கு உடன்நில்லா (மாயினல்லது) ஒருசேரக்கூடி யுடனில்
லா, இவற்றாற் கூறியது நல்வினை தீவினைப் பயனாகிய வின்பதுன்பங்கள்
வருங்கால் யாவராயினும் ஒழிக்கவொண்ணா என்பதும் யாக்கை நிலையா
மையும். விளக்கு உவமித்தார் நினைவற அழிதலின்; அறிவன் — எல்லாப்
பொருளையும் அறியும் அறிவுடையவன், அறவோன் — அறஞ்செய்தலையே
தொழிலாக வுடையோன், அறிவு வரம்பு இகந்தோன் — (யாவரும் அறி
யப்படும்) அறிவெல்லையைக் கடந்தோன், செறிவன் (எல்லா வுயிர்களுக்
கும்) அடைக்கலமாயுள்ளவன், சாயாதவன் எனினும் அமையும். சிநேந்தி
ரன் — எண்வகைக்கன்மங்களையுஞ் செயித்தவன், அவையாவன ஞானாவர்
ணியம், தரிசனாவர்ணியம், வேதநீயம், மோகநீயம், ஆயுஷ்ஷியநாமம்,
கோத்திரநாமம், ஆயுவந்தராயம், காயவந்தராயம். இவை ஞானாவர்ணி
யங்களென்றும் தீக்குணங்களென்றும் பெயர்பெறும். அந்தராயம் துக்கம்,

---

* அதிசயமூன்றாவன அநுபாயவதிசயம், விக்ஷமாவதிசயம், இபமாவ
திசயம்.

சித்தன் கிருத்தியன் அதாவது செய்யப்படுவனவற்றைச் செய்து முடித்த வன். கன்மத்தைக் கழுவினவனெனினும் அமையும். பகவன் - அறுகுணங்களையுடையவன், அவையாவன ஐசுவரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம். தருமமுதல்வன்-தருமங்களுக்குஅடியாயுள்ளவன். தலைவன்-எல்லாத்தேவர்கட்குந் தலைவனாக வெண்ணப்பட்டவன், தருமன் - தருமந் தானாயுள்ளவன், பொருளன் - ஆகமத்தின் பொருளாயுள்ளவன், உண்மைப் பொருளாயுள்ளவன் எனினும் அமையும். புனிதன் - சுத்தன், புதியவன்எனினும் அமையும். புராணன்-பழையவன், புலவன்-எல்லார்க்கும் அறிவா யுள்ளவன், சினவரன் - சினத்தைக் கீழ்ப்படுத்தினவன், தேவன் - தேவர்களுக்கு ஆதியாகியதேவன், சிவகதிநாயகன் - வீட்டுலகிற்கு நாயகனாயுள்ளவன், பரமன் - மேலானவன், குணவதன் - குணத்தையுடையவன், வதம் விரதமுமாம். பரத்தில் ஒளியோன் - மேலுலகிற்கு விளக்காயுள்ளவன், தத்துவன் - தத்துவங்களையுடையோன், சாத்துவன்-ஒடுங்கினவன், சாரணன்-ஆகாசவாசி, காரணன் - எல்லாவற்றிற்குங் காரணமாயுள்ளவன், சித்தன்-எண்வகைச் சித்தியினையும் உண்டாக்கினவன்; அவையாவன அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம். பெரியவன் - எல்லாவற்றினும் பெரியவன், செம்மல் - நாயகமூர்த்தி, திகழொளி - விளங்கும் ஒளியாயுள்ளவன், இறைவன் - எப்பொருளினுந் தங்குகின்றவன், குரவன் - குருமூர்த்தியாயுள்ளவன், இயல்குணன் - இயல்பேகுணமாகவுடையவன், எங்கோன் - எம்முடையசுவாமி, குறைவுஇல்புகழோன்-நிறைந்த புகழையுடையவன், குணப்பெருங்கோமான் - குணங்களைச் சம்பந்தமாக வுடையவன், சங்கரன் - சுகத்தைப்பண்ணுகிறவன், ஈசன் - ஐசுவரியவான், சுயம்பு - தானேதோன்றினவன், சதுமுகன் - நான்குமுகன், அங்கம்பயந்தோன் - அங்காகமத்தை யுண்டாக்கினவன், அருகன் - பூச்சியன், அருள்முனி - சிவபரமூர்த்தி, பண்ணவன் - கடவுள், எண்குணன்-எட்டுக்குணங்களையுடையவன், அவையாவன அநந்தஞானம், அநந்த தரிசனம், அநந்தவீரியம், அநந்தசுகம், நிர்நாமம், நிர்கோத்திரம், நிராயுஷ்யம், சம்மியதாபாவம் அல்லது அழிவின்மை, பாத்து இல்பழம்பொருள் - பகுத்தற்கரிய புராணப்பொருளாயுள்ளவன், பகுஎன்னும் பகுதிவிகாரப்பட்டு நின்ற பா பகுதி, த் சந்தி து தொழிற்பெயர் விகுதி. ஓட்டமற்றபொன்னை யொப்பான் எனினும் அமையும். விண்ணவன் - சுவர்க்கவாசி, வேதமுதல்வன்-ஆகமமூன்றிற்கு முதலாயுள்ளவன், அவையாவன பூர்வாகமம், அங்காகமம், வெகுசுருதி. விளங்குஒளி - அஞ்ஞானவிருள் நீங்க விளங்கும் ஒளி, ஓதிய வேதத்து ஒளிஉறின் அல்லது (இந்நாமங்களை யுடையோனால்) ஓதப்பட்ட ஆகமமாகிய விளங்கொளியைப் (பெற்றார்) போந்தேறினல்லது, பிறவிபொதியறையோர் போதார் என - (யாவரும்) பிறவியாகிய சிறையினின்றும் போகமாட்டாரென்று, பொதியறைதுவாரமில்லாத கீழறை. சாரணர் வாய்மொழிகேட்டு — சாரணரருளிச்செய்த உண்மை வாசகத்தைக் கேட்டு;

தவம்முதல்காவுந்தி ஐயை உம்-தவத்திற்குமுதல் வியாகியகவுந்தியடிகளும்,
தலைமேற்கொண்டு—கைகளைத் தலைமேற்குவித்த, ஒருமூன்று அவித்தோன்
ஓதிய ஞானத்திருமொழிக்கு அல்லது - காமம் வெகுளிமயக்கம் என்னு முக்
குற்றங்களைக் கெடுத்தவனுலோதப்பட்ட ஞானபாதமாகிய திருமொழியை
க் (கேட்பதற்கு) திறப்பினல்லது, என்செவி அகம்திறவா - என்செவிகள்
(பிறிதொன்றற்கு) திறப்பனவல்ல, காமனைவென்றோன் ஆயிரத்து ஒரெட்டு
நாமம் அல்லது - காமன்செயலை வென்றவனுடைய ஆயிரத்தெட்டு வகைப்
பட்ட நாமத்தைச் (சொல்வதுஅல்லது) என் நாவிலாது-எனது நா (பிறி
தொன்றனை) சொல்லாது, ஐவரைவென்றோன் அடியிணை அல்லது- ஐவகை
ப்பட்ட இந்திரியங்களையும் வென்றவனுடைய அடியிணைகளை, ஐவர்தொ
கைக்குறிப்பு (காணின்) அல்லது, என்கண் கைவரை காணின் உம் காணு-
எனது கண்கள் (பிறிதொருதேவரடிகளை) கையிடத்தேகாணினும் காணு,
ஐவர் செறலின்கண்வந்த திணைமயக்கம். கைவரை காணல்கண்விழித்திருத்
தல். அருள் அறம் பூண்டோன் திருமெய்க்கு பூமியில் அல்லது - அருளால
றத்தைப் பூண்டோனுடைய திருமேனிப்பொருட்டுப் பூமியிற் பொருந்தி
னல்லது, என் பொருள் இல்யாக்கை பொருந்தாது - எனது பயனற்ற சரீ
ரம் (பிறிதொன்றற்கு) பொருந்தாது, அருளறம் உம்மைத் தொகையாகக்
கொள்ளினும் அமையும். அருகர் அறிவன் அருகற்கு அல்லது - அருகர்க்கு
அறத்தைக் கூறும் அறிவனாகிய அருகன் பொருட்டு அன்றி, என் இருகை
யும் கூடி ஒருவழி குவியா - என திரண்டுகைகளுங் கூடிப் பிறிதொரு தே
வர்பொருட்டுக்குவியா; அருகர் இருடிகள். மலர்மிசை நடந்தமலர் அடிக்கு
அல்லது - பூவின்மீது நடந்ததாமரைபோன்ற திருவடியாகிய அணியை
யன்றி, என் தலைமிசை உச்சிதான் அணிபொறாது - எனதுதலையினுச்சி (பி
றிதொரு) அணியை (அணிய) பொறாது, இறுதி இல் இன்பத்து இறைமொ
ழி அல்லது - முடிவில்லாத இன்பமாகிய அநந்தசுகத்தையுடைய இறைவ
னருளிச்செய்த ஆகமமாகிய மொழியையன்றி, மனம்மறுதரஓதி புடைபெ
யரா - எனது மனம் (பிறிதொருமொழியை உருவேற) மீளவும் ஓதிப்புடை
பெயரா, என்று அவன் இசைமொழி ஏத்த கேட்டு - என்று அவனது புகழ்
மொழிகளைத் துதிக்கக்கேட்டு, அதற்கு ஒன்றியமாதவன் - அதற்குப்பொரு
ந்திய திருவுள்ளத்தையுடைய அருகச்கடவுள், நிவந்து ஓங்கு நீள் நிலம்
நீங்கி - உயர்ந்த நீண்டசிலாதலத்தி னின்றுநீங்கி (எழுந்து) ஒருமுழம்உயர்
மிசை ஓங்கி - (அதற்கு) ஒருமுழவுயரமேலேமேவி, கவுந்திபவம் தருபாசம்
கெடுகஎன்று - கவுந்திக்குப் பிறப்பைபத்தரும் பந்தங்களறுவதாக வென்று
கூறி, அந்தரம் ஆறுபடர்பவன் தொழுது - ஆகாயவழியாக விரைந்து செல்
கின்றவனை (நோக்கி) தொழுது, பந்தம் அறுகஎன பணிந்தனர்போந்து-பா
சபந்தங்கள் (தங்களினின்று) நீங்குவதாக வெனப்பணிந்து (அவ்விடத்தி
னின்று)போய், போ பகுதி. கார் அணிபூபொழில் காவிரிபேர்யாறு - முகில்
தவழும் மலர்களையுடைய சோலைகள் செறிந்த காவிரியாகிய பெரியயாற்

றில், மாதரும் கணவன் உம் மாதவத்து ஆட்டியும் - கண்ணகியாரும் கோவலனும் கவுந்தியடிகளும், நீர் அணி மாடத்து நெடுந்துறைபோகி - பள்ளியோடத்து (ஏறி) நீரணிமாடம் "பறவாக்குளவி" என்றாற்போல வந்தகுறிப்பு, நெடியநீர்வழியே சென்று, தீது தீர்நியமம் தென்கரைஎய்தி - குற்றந் தீர்ந்த கோயில்கள் செறிந்த தென்கரையை யடைந்து; போதுசூழ் கிடக்கைபூபொழில் இருந்தஉழி—மலர்கள் சூழ்ந்துகிடக்கின்ற பொலிவையுடைய சோலையிடத்தே சென்றிருந்தவிடத்து; கிடக்கை பெயரொச்சப் பொருளில் வந்தது. இருந்த அகரவீறுதொகுத்தல்.

தொழுது பணிந்து போந்து போகி ஏறி எய்தி வினையெச்சங்கள்ஒன்றனையொன்றுகொண்டு இருந்தஎன்னும் பெயரொச்சத்தை யும் அவ்வெச்சம் உழி என்னும் இடப்பொருளையுங்கொண்டன.

வம்பப்பரத்தைவறுமொழியாளனொடு - புதியபரத்தைத் தன்மையையுடைய ஒருவிடனோடு (கூடி) மனத்திற்றோன்றியபடிசொலவித்திரியும்; பரத்தையெனினும் அமையும்.வறுமொழியாளன் பயனில்சொல்லையுடையவன் கொங்கு அவிர்பூம்பொழில் குறுகினர்சென்ற உழி - (இவர்களிருந்த) மணம் பரந்த மலர்களையுடைய சோலையிலணுகிச்சென்றவிடத்து, குறுகினர்முற்றெச்சம். காமனும்தேவியும்போலும் இவர்ஈங்குஆர்என கேட்டு அறிகுவம் என்று—காமனையும்இரதியையும் ஒக்கும்இவர்கள் இவ்விடத்து யாரெனக் கேட்டறிவோமென்று, போலும்என்பதை ஒப்பில்போலியாக்கி இவர்கள் காமனும் இரதியுமே, அல்லராகில் இப்பொழுது யாரெனக் கேட்டறிவோம் என்றுரைப்பினும் அமையும், நோற்று உணல்யாக்கை நொசிதவத்தீர் - (உவா முதலிய விரதங்களை) நோற்று உண்ணுதலால் மெலிந்த உடலையும் நுண்ணியதவத்தையுமுடையீர்,உடன்ஆறுவழிப்பட்டோர்ஆர்எனவினவ-நும்மோடு கூடியவழிவந்தஇவர்யாரென்றுவினவ, ஆற்றுவழிப்பட்டோர்வழியிற் கூட வந்தோர். நீர்என்மக்கள்காணீர் மானுடயாக்கையர் - நீர் (வினவிய இவர்) எனதுமக்கள்காணும்(காமனும்இரதியுமல்லர்) மானிடசரீரத்தையுடையவர், பரிபுலம்பினர் (வழிவருதலால்) மிகவும்வருத்தமுடையவர்,ஒருசொன்னீர்மைய. பக்கம்நீங்கு மின்என-அவரிடத்துச்செல்லாதுபோமினென்றுகூற, காதலன்முன்னர் கண்ணகிநடுங்க - கோவலன்முன்பு கண்ணகியார்நடுக்கமுற, கற்று அறிந்தீர் - (நூல்களை) கற்றதன்பயனை யுணர்ந்தவரே, உடன் வயிற்றோர்கள் ஒருங்கு உடன்வாழ்க்கை கடவது உம் உண்டு ஓ என - ஒருவயிற்றுட்பிறந்தோர் ஒருசேரக்கணவனு மனைவியுமாய்க்கூடி வாழக்கடவதென்று (நீர்கற்றநூலில்சொல்வது) உண்டோ (இருப்பிற்சொல்லுக) என்று கூற, கற்றறிந்தீர் இகழ்ச்சிக்குறிப்பு. தீமொழிகேட்டு செவி அகம்புதைத்து (அவர்கூறிய) இழிசொல்லைக் கேட்டலாற்செவியைப் புதைத்து, என்பூங்கோதையை இவர் எள்ளுநர் - எனதுபுத்திரியாகிய கண்ணகியாரை இவர் நிந்தித்தனர் (அதனால்) போலும் ஒப்பில்பொலி. முள் உடைகாடு முதுநரி

ஆக என - தொடக்குமுள்ளை யுடையகாட்டில் (திரியும்) ஓரியாகக்கடவொன்று, கவுந்தி இட்டதவம் தருசாபம் கட்டியது ஆதலின் - கவுந்தியடிகளிட்டதவத்தால் விளைந்தசாபம் (அவரை) சென்று பூண்டதாதலால், பட்டதை அறியார் - விளைந்ததையறியாதவராகிய, அடிகள்மனத்தால் நினைத்திட்டசாபம் ஆதலால்பட்டதையறியாரென்றார். நறுமலர்க்கோதை உம்நம்பி உம் - நல்லவாசனையையுடைய கூந்தலையுடைய அக்கண்ணகியாரும் கோவலனும், குறுநரிநெடுங்குரல் கூவிளிகேட்டுநடுங்கி - குறியநரிதனது நெடியகுரலாகக்கூவும் ஒலியைக்கேட்டுநடுங்கி, விளி ஓரிக்குரல். தம்பொருட்டாக விளைதலால்நடுங்கி என்றார். நெறியில் நீங்கியோர் நீரலகூறினும் - ஒழுக்கவழியினின்றுநீங்கினவர்தகுதியல்லா தனவற்றைச்சொன்னாலும், செய்தவத்தீர் அறியாமை என்று அறியல்வேண்டும் - செய்யுந்தவத்தையுடைய அடிகேள் அவரறியாமையால் (கூறியதன்றோ) என்று (உயர்ந்தோர் தமது அறிவால்) அறிதல்வேண்டும், இவர் உட்கோள். நம்திருமுன் பிழைத்தோர்க்கு நமதுசந்நிதியில் (தீவினையால்) பிழைத்தவர்க்கு, உய்திகாலம் உரையீர் என - (இனி இவர்சாபம் நீங்கி) உய்யுங்காலத்தை யருளிச்செய்வீர் என்று வினவ, ஓ இசைநிறை. அறியாமையின் இழிபிறப்பு உற்றோர் - பொறிகளால் துன்பம்வரும்என்பதனை அறிந்துகூறாமையால் (இன்று) இழிபிறப்பையுற்றவிவர். இழிபிறப்புவிலங்கின் பிறப்பு. நெடுங்காலந் தவஞ்செய்து பெற்றமானுடப்பிறப்பை யொருவார்த்தையி னிழந்து இழிபிறப்புற்றார் என்க. உறையூர்நொச்சி ஒருபுடை ஒதுங்கி - உறையூர்மதிலின் ஒருபக்கமாகிய காவற்காட்டில்திரிந்து, பன்னிரு மதியம்படர்நோய் உழந்தபின் - பன்னிரண்டு மாதம் அடர்ந்ததுன்பத்தில் வருந்தியபின்பு, முன்னை உருவம் ஈங்குபெறுக எனசாபவிடைசெய்து - முன்னைப்பிறப்பை யிவ்விடத்துப் பெறுகக்கடவதென்று அனுக்கிரகஞ்செய்து, சாபவிடைசாபம்விடுதல், ஒருசொல்னீர்மைய முன்னையுருவம் வம்பம்பரத்தையும்வறு மொழியாளனுமாம். தவம்பெரும் சிறப்பின்காவுந்தி ஐயை உம்தேவி உம்கணவன் உம் - தவத்தால்மிக்கசிறப்பினையுடைய கவுந்தியடிகளும் கண்ணகியாரும்கோவலனும், முறம் செவி வாரணம் சமம்முன்முருக்கிய - முறம்போலுஞ் செவியையுடைய யானையைப்போரில்முன்புவென்ற, புறம்சிறைவாரணம் புரிந்துபுக்கனர் - புறத்தே சிறையையுடைய கோழியென்னு நகரின்கண்ணே விரும்பிப் புகுந்தனர். எ - று.

வாரணம்கோழியூர் அதாவது உறையூர். முற்காலத்து ஒருகோழியானையைப்போரிற்றொலைத்தலால் அந்நிலத்திற்செய்த நகர்க்குக்கோழி என்று பெயராயிற்று. புறஞ்சிறை புறத்தேசிறகையுடைய "புறஞ்சிறைப்பொழில்" எனமேலேகூறுதலான், புறத்தே சோலையையுடைய எனநிற்றலாற் செம்மொழிச்சிலேடை. ○

வினவ என்னும்வினையெச்சத்தின் முடிபாகிய எனநடுங்க என்னும் எச்சங்கள் தனித்தனியாய் எனவென்னும் எச்சத்தின் முதனிலையையும், கேட்டு

புதைத்து என்னும்வினையெச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு இட்ட என்னும்பெயரெச்சத்தையும், அவ்வெச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு என என்னும்வினையெச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சத்தின் முடிபாகிய செய்துபுரிந்து என்னும்வினையெச்சங்கள் ஒன்றனையொன்றுகொண்டு புக்கனர் என்னும்வினைமுற்றின் முதனிலையையுங் கொண்டன.

முற்றிற்று.

முடியுடைவேந்தர் மூவருள்ளும் - தொடிவிளங்கு தடக்கைச்சோழர் குலத்துதித்தோன் - அறனுமறனு மாற்றலுமூதூர்ப் - பண்பும்வானோர் விழவுமலிசிறப்பும் - பொய்யாவானம் புனல்சுரந்துதருதலும் - குடியின்மலிவுங் கூழின்பெருக்கமும் - தெய்வக்காவிரித்திதுதீர்சிறப்பும் - அரங்குமாடலுந் தலைவரியல்பும் - பரந்திசையேத்திய பாரதிவிருத்தியும் - திணைநிலவரியுமணைவுறக்கிடந்த - யாழின்றொகுதியுமீரேழ்கோட்டமும் - இடநிலைப்பாலையுமெழுப்பும்புணர்ப்பும் - தாரத்திறுக்கமுந்தான்றெரிபண்ணும் - ஊர்களின்வண்ணமுமொளியுடைப் பாணியும் - என்றிவையனைத்தும் பிறபொருள்வைப்போ - டொன்றித்தோன்றுந் தண்கோணிலையும்-ஒருபரிசிநொடிகிடந்த புகார்காண்டம் முற்றிற்று.

இ - ள். முடி உடைவேந்தர் மூவர் உள் உம்தொடிவிளங்கு தடம்கை சோழர்குலத்து உதித்தோன் - மகுடத்தையுடைய சேரசோழபாண்டியராகிய அரசர்மூவருள்ளும், தொடிவிளங்கு தடம் கைசோழர் குலத்து உதித்தோன் - கடகம்விளங்கிய நீண்டகைதலையுடைய சோழர்குலத்துதித்தகரிகாற்பெருவளவனது, அறன் உம் "அருள்சிறந்தொருபால்" என்றமையாலும், "அளிபோல்" என்றமையாலும், தருமமும், மறன் உம் ஆற்றல் உம்- "சிமையப்பிடர்த்தலைக் கொடுவரி" என்றதனால்வெற்றியும் வன்மையும், மூதூர்பண்பு உம் (பதி எழுவறி யாப்பழங்குடி தழீஇப் - பொதுவறுசிறப்பிற்புகாரேயாயினும்) என்றதனால்தொன்றுதொட்டுள்ள புகாரின்தன்மையும், வானோர்விழவுமலிசிறப்பு உம் (அந்தரத்துள்ளோ ரறியாமரபின்வந்துகாண்குறூஉம்வானவன்விழவும்) என்றதனானும் "உவாத்தலைவந்தெனப்- பெருநீர்போகு மிரியன்மாக்கள்" என்றதனானும் இந்திரனதுவிழவான்மிக்கசிறப்பும், பொய்யாவானம்புனல்சுரந்து தருதலும் "கதிரவன்புகையினும்புகைக்கொடிதோன்றினும் விரிகதிர்வெள்ளி தென்புலம்படரினும்-கால்போகுநிவப்பின்கடுங்குரலேற்றொடு- சூன்முதிர்கொண்மூப்பெயல்வளஞ்சுரப்ப" என்றதனால் இவற்றாற்பொய்க்காமல் மேகம்மழையைச் சுரத்தலும், தெய்வம்காவிரி தீதுதீர்சிறப்பு உம் "கடல்வளனெதிரக்கயவாய் நெரிக்கும்-காவிரிப்புதுநீர்க்கடுவரல் வாய்த்தலை - ஓவிறந்தொலிக்குமொலி", என்றதனான் தெய்வத்தன்மையையுடைய காவிரியினதகுற்றமற்ற சிறப்பும், குடியின் மலிவும் (இரப்போர்சுற்றமும் புரப்போர்கொற்றமும்-உழவிடைவிளைப்போர்) என்றதனான் குடிகளினதுமிகுதியும், கூழின்பெருக்கம் உம் (குமரிக்கூட்

டிற்கொழும்பல்லுணவு-கவரிச்செந்நெற் காய்த்தலைசொரியும்) என்றதனான் உணவினதுமிகுதியும், அரங்கு உம் -(மண்ணகம் ஒருவழி என்பதுமுதல் தோற்றிய அரங்கின்) என்றதனால்நடனசாலையும், ஆடல் உம் (இருவகைக் கூத்தினிலக்கணமறிந்து - பலவகைக்கூத்தும் விலக்கினிற்புணர்த்துப் - பதினோராடலும்) என்றமையால் ஆடலும், தலைவர் இயல்பும் - ஆடலாசிரியன் முதலியோரிலக்கணமும், பரந்தஇசைஎத்திய பாரதிவிருத்தியும் (ஒன்பான் விருத்தியுட்டலைக்கண்விருத்தி) என்றமையால் பரவியஇசையோடு (யாவரும்) துதிக்கும்நாமகள் விதித்த ஒன்பதுவிருத்தியும், திணைநிலவரிஉம் நன்னிலத்தின் பூண் என்பதுமுதல் (அன்னந்துணையோடு) என்னுஞ்செய்யுளீறாகியதிணைநிலவரியும், அணைவு உறகிடந்தயாழின் தொகுதி உம் (ஈரேழ் தொடுத்தசெம்முறைக்கேள்வியின்)என்றமையால் பட்டடைமுதலியனபொருந்தக்கிடந்த சகோடயாழ் முதலியயாழின் கூட்டமும், ஈரேழ்கோட்டம் உம் - அமரர்தருக்கோட்டமுதல் காமவேள்கோட்டம் ஈறாகியபதினான்கு வகைக்கோட்டமும், இடநிலைப்பாலை உம் (குரல்வாயிளிவாய்ச் சேட்டனள்) என்னும் இடநிலைப்பாலையும், எழுப்பு உம்-செம்பாலைமுதலியன எழுதலும், புணர்ப்பும்-சித்திரப்புணர்ப்பும் வஞ்சனைப்புணர்ப்பும், தாரத்தின் ஆக்கம் உம்-தாரங்குரலாகிய மேற்செம்பாலை பிறக்குமுக்கால்தாரம் ஆக்கம்பெறுதலும், தான்தெரிபண் உம் - தான்தெரிந்த அகநிலைபுறநிலை அருகியல் பெருகியல்என்னும்பண்கள்நான்கும், ஊர்களின்வண்ணம்உம் "மங்கலமறையோரிருக்கை, உழவிடைவிளைப்போர் பழவிறலூர்கள்" என்றதனான் ஊர்களின் பொலிவும, ஒளி உடைபாணி உம (சீரியல்பொலிய) என்றதனான் ஒளியையுடையபாடலும், பெருந்தேவபாணி, சிறுதேவபாணியெனினும அமையும். என்றுஇவைஅனைத்துஉம்-என்றுசொல்லப்பட்டஇவைகளனைத்தோடும், பிறபொருள்வைப்பு ஒடு - நிலைபடிகம் முதலியபிறபொருள்கள் வைத்தவைப்போடு-ஒன்றித்தோன்றும் தண்கோள்நிலை உம்-பொருந்தித்தோன்றுமுறை நிலைபெறுதலும், ஒருபரிசின் ஒடுகிடந்த - புகார்காண்டம் (ஆகிய) இவை ஒருதன்மையோடு கிடந்த புகார்காண்டம், தண் கோள் ஒருசொன்னீர்மைய-முறையேகூறி யிருத்தலான் ஒன்றித்தோன்றுந் தண்கோணிலையும் என உடன் எண்ணினார்.

முற்றிற்று.

# அரங்கேற்றுக்காதையுட் குறியிடப்பட்டவைகள்.

* விலக்குறுப்புள் பொருள் நான்குவகைப்படும் "அறம்பொருளின்பம் வீடென நான்கும் - திறம்படுபொருளெனச் செப்பினர்புலவர்" யோனிநான்குவகைப்படும் "உள்ளோர்க்குள்ளது மில்லோர்க்குள்ளதும் - உள்ளோர்க்குள்ளது மில்லோர்க்கில்லதும் - எள்ளாதுரைத்தல் யோனியாகும்" விருத்தி நான்குவகைப்படும் அவை சார்த்தபடி ஆர்த்தபடி, கைசிகி, பாரதி. சந்தி ஐந்துவகைப்படும் அவைமுகம் பிரதிகம் கருப்பம் விளைவு துய்த்தல். சுவை ஒன்பதுவகைப்படும் அவை வீரச்சுவை வினையம், பயச்சுவை வினையம், இழிப்புச்சுவை வினையம், அற்புதச்சுவை வினையம், இன்பச்சுவைவினையம், அவலச்சுவை வினையம், நகைச்சுவை வினையம், நடுவுநிலைச்சுவை வினையம், உருத்திரச்சுவை வினையம். இவற்றுள் வீரச்சுவை வினையம் ஆவது "வீரச்சுவை வினையம் விளம்புங்காலை - முரிந்தபுருவமுஞ் செவந்த கண்ணும் - பிடித்தவாளுங் கடித்தவெயிறும் - மடித்தவுதடுஞ் சுருட்டியநுதலும் - திண்ணெனவுற்ற சொல்லும்பகைவரை - எண்ணல்செல்லா விகழ்ச்சியும் பிறவும் - நண்ணுமென்ப நன்குணர்ந்தோரே" பயச்சுவை வினையம் "அச்சவினையமாயுங்காலை - ஒடுங்கியவுடம்பு நடுங்கியநிலையும் - மலங்கிய கண்ணுங் கலங்கியவுள்ளமுங் - கரந்துவரலுடைமையுங் கையெதிர்மறுத்தலும் - பரந்தநோக்கமுமிதன்பண்பினவே" இழிப்பின்வினையம் "இழிப்பின்வினையமியம்புங்காலை - இடுங்கியகண்ணு மெயிறுபுறம்போதலும்-ஒடுங்கியமுகமுமுளுற்றுக்காலும்-சோர்ந்தயாக்கையுஞ் சொன்னிரம்பாமையும்-நேர்ந்தனபிறவும் நெறியறிந்தோரே" அற்புதவினையம் "அற்புதவினைய மறிவரக்கிளப்பின் - சொற்சோர்வுடையது சோர்ந்தகையது - மெய்ம்மயிர்குளிர்ப்பது வியத்தகவுடைய - தெய்த்தியமைத்தலும் விழித்தலுமிரவாமையுமென் - றையமில்புலவரறைந்தனரொன்ப" இன்பச்சுவைவினையம் "காமவினையங்கருதுங்காலைத்-தூவுள்ளுறுத்த வடிவுந்தொழிலுங் - காரிகைகலந்த கடைக்கண்ணுங்கவின்பெறும் - மூரன்முறுவல் சிறுநிலாவரும்பலும் - மலர்ந்தமுகனு மிரந்தமன்கிளவியுங் - கலந்தனபிறவுங் கடைப்பிடித்தனரோ" அவலச்சுவைவினையம் "அவலச்சுவைவினைய மறிவரக்கிளப்பின் - கவலையொடுபுணர்ந்த கண்ணீர்மாரியும் - வாடியநீர்மையும் வருந்தியசெலவும் - பீடழியிடும்பையும் பிதற்றியசொல்லும்-நிறைமையழிதலும் நீர்மையில்கிளவியும்-பொறையின்றுகலும் புணர்த்தினர்புலவர்" நகைச்சுவை வினையம் "நகையின்வினையம் நாடுங்காலை - மிகைபடுநகையது பிறர்நகையுடையது - கோட்டியமுகத்ததுமுரிபுருவமுடையது-செய்வதுபிறிதாய் வேறுசேதிப்பதென்-றையமில்புலவராய்ந்தனரொன்ப" நடுவுநிலைச்சுவை வினையம் "நாட்டுங்காலைநடுவு நிலைவினையங் - கோட்பாடறியாக் கொள்கையுமாட்சியும்-அறந்தருநெஞ்சமு மாறியவிழியும் -பிறந்தகாட்சி நீங்கியநிலையும் - குறிப்பின்றுகலும் நகைமிகவுடைமையும் - அளத்தற்கருமையு மன்பொடுபுணர்த்தலும்-கலக்கமொடுபுணர்ந்த நோக்குங்கதிர்ப்பும் - விலக்காரொன்ப வேண்டுமொழிப்

புலவர்,, உருத்திரச்சுவை வினையம்விறல்என்பது. சத்துவம் என்பாரும் உ ளர். சாதி அறம்பொருள் இன்பம் அரசர்சாதியெனவும், அறம்பொருள் வ ணிகர் சாதியெனவும், அறம்மேற் சூத்திரர் அங்கம் எனவும் செயிற்றியனு ர் கூறினர். குறிப்பு குறிப்பினிசழ்ச்சி. சத்துவம் பத்துவகைப்படும் மெய்ம் மயிர் சிலிர்த்தல், கண்ணீர்வார்தல், நடுக்கமடுத்தல், வியர்த்தல், தேற்றம், களி த்தல், விளித்தல், வெம்பல், சாக்காடு, தூரற்சிதைவு, அவிநயம், பாவகம் அவை இருபத்துநான்கு வெகுண்டோனவிநயம், ஐயமுற்றோனவிநயம், சோம்பி னோனவிநயம், களித்தோனவிநயம், உலந்தோனவிநயம், அழுக்காறுவுடை யோனவிநயம், இன்பமுற்றோ னவிநயம், தெய்வமுற்றோனவிநயம், அஞ ஞையுற்றோனவிநயம், உடன்பட்டோனவிநயம், உறங்கினோனவிநயம், துப் பிலுணர்ந்தோனவிநயம், செத்தோனவிநயம், வருத்தமுற்றோனவிநயம், க ண்ணோவுற்றோனவிநயம், தலைநோயுற்றோனவிநயம், அழற்றிறம்பட்டோன் விநயம், சீதமுற்றோனவிநயம், மழைபெய்யப்பட்டோனவிநயம், பனித்தலை ப்பட்டோனவிநயம், வெயிற்றலைப்பட்டோ னவிநயம், நாணமுற் றோனவிந யம், நஞ்சுண்போனவிநயம், வெப்பினவினயம். சொல்மூன்று வகைப்படும் "நெஞ்சொடுகூறல் கேட்போர்க்குரைத்தல் - தஞ்சம்வரவறிவு தானேகூற லென்—றம்மூன்றென்பசெம்மைச்சொல்லே" சொல்வகைநான்கு "சுண்ண நான்கடிசுரிதகமெட்டடி—வண்ணம் நான்குவரிதக மெண்ணான்கென்—றெ ண்ணியவடித்தொகையெய்தவும்பெறுமே" வண்ணமும்வரியும் பின்னர்க்கா ண்க. சேதம் "ஆரியந்தமிழெனுஞ் சீர்நடமிரண்டினும்—ஆதிக்கதையைய வற்றிற்கொப்பச்—சேதித்திடுவது சேதமென்றாகும்.

+ தோங்கம் கீதத்துக்குவாசிப்பது, நிருத்தாங்கம் நிருத்தத்துக்குவாசி ப்பது, உபயாங்கம் இரண்டிற்கும்வாசிப்பது.

‡ ஒருசீர்செந்தூக்கிருசீர்மதலை—மூச்சீர் துணிபுநாற்சீர்கோயில்—ஐஞ் சீர்நிவப்பா மறுசீர்கழாலே—எழுசீர்நெடுந்தூக்கென் மனார்புலவர்"

¶ கொட்டு அரைமாத்திரை அதற்குவடிவுக. அசையொருமாத்திரை அதற்குவடிவு உ - தூக்கு உ மாத்திரை அதற்குவடிவு உ. அளவுமூன்றுமாத் திரை அதற்குவடிவுஃ

+ க - பதாகை "பதாகையென்பது பகருங்காலைப்—பெருவிரல் குஞ் சித்தல்லாநான்கும்-மருவிநிமிரு மரபினவென்ப"—திரிபதாகை "திரிபதா கையென்பது தெரியுங்காலை — நவைமிசைப்ப தாகையினணிவிரன் முடக் கினஃ — தாமெனமொழிப வறிந்திசினோரே" ந-கத்திரிகை "கத்திரிகை யென்பது காண்டக விரிப்பின் — அத்திரிபதாகை யினணிவிரற் புறத்தை ச்—சுட்டகமொட்டிவிட்டு நிற்பதுவே" தூபம் ச-"தூபமென்பது துணியுங் காலை—விளங்குகத்திரிகையகம்விரல்வளைந்து—துளங்குமென்பதுணி வறிந் தோரே" ரு-அராளம் "அராளமாவதறிவரக் கிளப்பின்—பெருவிரல் குஞ் சித்துச் சுட்டுவிரன் முடக்கி—விரல்கண்மூன்றும் நிமிர்த்தகம் வளைத்தற்—

குரியவென்பவுணர்ந்திசினோரே” ௬ - இளம்பிறை “சுட்டும்பேடுமெனுமிகை சிறுவிரல் - ஒட்டியசம்வளையவொசித்த பெருவிரல் - விட்டுநீங்கும் விதியிற் றென்ப” ௭ - சுகதுண்டம் “சுகதுண்டம்மே தொழில்பெறக்கிளப்பின் - சுட்டுவிரலும் பெருவிரனுனும் - ஒட்டியுகிர் நுனைகவ்விமுன்வளைந் - தநாமிகை முடங்கப்பேட்டொடுசிறுவிரல் - தான்மிகநிமிர்தல் தகுதித்தென்ப„ ௮. முஷ்டி “முட்டியென்பது மொழியுங்காலைச்-சுட்டுநடுவிரல நாமிகைசிறுவிரல் - இறுகவிவற்றின் மீமிசைப்பெருவிரல் - முறுகப்பிடித்தமுறைமைத்தென்ப„ ௯ - கடகம் “கடகமாவது கருதுங்காலைப்-பெருவிரனுனியுஞ் சுட்டுவிரனுனியும்-மருவவளைந்துகிர் நுனிகவ்வி-மொழிந்தமூன்றும் வழிவழிநிமிரல் மொழிந்தனரொன்ப முடிபறிந்தோரே„ ௧0 பத்மகோசம் “பத்மகோசம் பகருங்காலை - ஒப்பவகைவளைத்தைந்துவிரலும்-மெய்ப்படவகன்ற விதியினுற்ருகும்„ ௧௧-சூசி “சூசியென்பது துணியுங்காலை - நடுவிரல்பெருவிர லென்றிவைதந்நுனி - வடிவுடனொற்றிச் சுட்டுவிரனிமிர - வொழிந்தவழிவழி முடங்கிநிற்ப - மொழிந்தனரொன்ப முடிபறிந்தோரே„ ௧௨ - காங்கூலம் “காங்கூலம்மேகருதுங்காலைச் - சுட்டும்பேடும் பெருவிரல்மூன்றும் - ஒட்டிமுன்குவியவநாமிகைமுடங்கச்-சிறுவிரனிமிர்ந்த செய்கைத்தாகும்„ ௧௩ கபித்தம் “கபித்தமென்பது கருதுங்காலைச் - சுட்டுப்பெருவிர லொட்டிநுனிகவ்வி - அல்லமூன்றுமெல்லப்பிடிப்பதுவே„ -௧௪-விற்பிடி “விற்பிடியென்பது விளம்புங்காலைச் - சுட்டொடுபேடும நாமிகைசிறுவிரல் - ஒட்டியகம்பால் வளைப்பப்பெருவிரல் - விட்டுநிமிரா விதியிற்றாகும்„ ௧௫ - குடங்கை பின்னர்க் காண்க. ௧௬ - அலாபத்திரம் “அலாபத்திரமே யறையுங்காலைப்-புலமையின்மிகுத்த சிறுவிரன் முதலா - வருமுறையைந்தும் வளைந்து மறிந்தனவே„ ௧௭ - பிரமரம் “பிரமரமென்பது பேணுங்காலை - அநாமிகை நடுவிரலறிவுறப் பொருந்தித் - தாம் வலஞ்சாய்ந்த தகைசால் பெருவிரல் - ஒட்டிய நடுவுட்சேரச் சிறுவிரல் - சுட்டுவளைந்துபின் றோன்றிய நிலையே„ ௧௮ - “தாம்பிரசூடம் “தாம்பிரசூடஞ் சாற்றுங்காலைப் - பேடுசுட்டுப் பெருவிர னுனியொத்துக் - கூடிவளைந்து சிறு விரலோடணி-விரலுடன் முடங்கி நிமிர நிற்பனவே” ௧௯ - பசாசம் “பசாச மென்பது பாற்படக்கிளப்பின் - அகனிலைமுகனிலையுகிர்நிலையென்னத் - தொகைநிலைபெற்ற மூன்றெனமொழிப” அகனிலைப்பசாசம் சுட்டுவிரல்நுனியிற்பெருவிரல்கடப்பது. முகனிலைப்பசாசம் அவ்விரல் முகங்கூடி யுகிர்விட்டு நிற்பது. உகிர்நிலைப்பசாசம் சுட்டுவிரலும் பெருவிரலும் உகிர்கவ்விநிற்றல். ௨0 - முகுளம் “முகுளமென்பது மொழியுங்காலை - ஐந்துவிரலுந்தலைகுனிந்தேற - வந்து நிகழுமாட்சியவாகும்” ௨௧. பிண்டி “பிண்டியென்பது பேணுங்காலைச்-சுட்டுப்பேடேயநாமிகைசிறுவிரல் - ஒட்டிநிகழ்தலநாமிகை முடங்கன்மிசை - விலங்குறப்பெருவிரல் விட்டுங்கட்டியும் - இலங்குவிரல் வழிமுறை யேத்தலுமியல்பே” ௨௨. தெரிநிலை “தெரிநிலையென்பது செப்புங்காலை - ஐந்துவிரலுமலர்ந்து குஞ்சித்த - கைவகையென்

றறிந்தோரே" ௨௩ - மெய்ந்நிலை "மெய்ந்நிலையென்பது விளம்புங்காலைச் - சிறுவிரல நாமிகை பேட்டொடு சுட்டிவை - உறுத்தலின்றி நிசழ்சுட்டின் மிசைப் - பெருவிரல் சேரும்பெற்றித்தென்ப" முன்னதம் உன்னமெனத் திருத்துக "உன்னநிலையே யுணருங்காலைப் - பெருவிரல் சிறுவிரலென்றி வையணைய - வருமுறை மூன்றுமலர்ந்து நிமிர்ந்தனவே" ௨௫. மண்டிலம் "மண்டிலமென்பது மாசறக்கிளப்பிற் - பேட்டினுனியும் பெருவிரனுனியுங் கூட்டிவளைந்து தம்முகிர் நுனைகவ்வி - ஒழிந்தமூன்று மொக்கவளைவதென - மொழிந்தனரொன்ப முழுதுணர்ந்தோரே" ௨௬ - சதுரம் "சதுரமென்பது சாற்றுங்காலை - மருவியமூன்றும் நிமிர்ந்தசம்வளையப் - பெருவிரல்பற்றப் பொற்பச்சேர்த்திச் - சிறுவிரல் பின்னே நிமிர்ந்த செவ்வியின் - இறுமுறைத்தென்பவியல்புணர்ந்தோரே" ௨௭ - மான்றலை "மான்றலையென்பது வகுக்குங்காலை - மூன்றிடைவிரலு நிமிர்ந்தக மிறைஞ்சிப் - பெருவிரல் சிறுவிரலென்றிவைநிமிர்ந்து - வருவதென்பவழக்கறிந்தோரே" ௨௮ - சங்கு "சங்கெனப்படுவது சாற்றுங்காலைச் - சிறுவிரன்முதலா நான்குவிரலும் - பெருமுறைவளையப் பெருவிரனிமிர்ந்தாங் - கிறு முறைத்தென்ப வியல்புணர்ந்தோரே" ௨௯ - வண்டு "வண்டென்பது வகுக்குங்காலை-அநாமிகைபெருவிரனனிமிகவளைந்து - தானுனிகூடத்தகை நல்சிறுவிரல் - வாலிதினிமிரமற்றையவளைந்த-பாலினவென்பபயன்றெரிந்தோரே" ௩0 - கபோதம் "கானுங்காலைக்கபோதமென்பது - பேணிப்பதாகையிற் பெருவிரனிமிரும்" ௩௧ - இலத்தை "இலத்தையென்பதி யம்புங்காலைப-பேடுஞ் சுட்டும் பிணைந்துடனிமிர்த்துக் - கூடியபெருவிரல் கீழ்வளை குறுகக - கடையிருவிரலும்பின்னர் நிமிர்ந்த - நடையின வென்பநன்னெறிப்புலவர்" ௩௨ - மகரமுகம் "மகரமுகமென்பவகுக்குங்காலைச் - சுட்டொடுபெருவிரல் கூடவொழிந்தவை-ஒட்டிநிமிர்ந்தாங்கொன்றுவாகும்" ௩௩ - வலம்புரி "வலம்புரி யென்பதுமாசறக்கிளப்பிற் - சுட்டுவிரன் முடங்கச் சிறுவிரல் பெருவிரல் - விட்டுநிமிர்ந்திறைஞ்சும் விதியினவென்று - கூறுவர் தொன்னூற் குறிப்புணர்ந்தோரே"

* ௧ - அஞ்சலி "அஞ்சலியென்பதறி வுறக்கிளப்பின் - எஞ்சலின்றி யிருகையும் பதாகையாய் - வந்த கம்பொருந்து மாட்சித்தென்றனர் - அந்தமில் காட்சியறிந்திசினோரே" ௨ - புட்பாஞ்சலி "புட்பாஞ்சலியேபொருந்தவிருகுடங்கையும்-கட்டி நிற்குங் காட்சியதென்ப" ௩ - பரமாஞ்சலி "பரமாஞ்சலியே பரமகோசிகம்-என்னுமிருகையுமியைந்துநிற்பதாம்" ௪-கபோதம் "கருதுங்காலைக் கபோதவிணைக்கை - இருகையுங்கபோதம் வந்திசைந்துநிற்பதுவே" ௫ - கற்கடகம் "கருதுங்காலைக் கற்கடகம்மே - தெரிநிலையங்குலி யிருகை யும்பிணையும்" ௬ - சுவபத்திகம் "சுவபத்திகமென்பது சொல்லுங்காலை - மணிக்கட்டமைந்த பதாகையுமங்கையும் - மணிக்கட்டிலேற்றிவைப்பதாகும்" ௭ - கடகாவர்த்தம் "கருதியகடகாவர்த்தக்கையே-இருகையுங் கடகமணிக் கட்டியைவது" ௮ - நிடதம் "நிடதமென்பது நெ[illegible]க்கிளப்பின் - முட்டியிருகையுஞ் சமயமாகக் - கட்டிநிற்குங் காட்சித்

தென்ப” ௯ - தோரம் “தோரமென்பது துணியுங்காலை - இருகையும் பதாகையகம்புறமொன்ற - மருவிமூன்ருகும் வழக்கிற்றென்ப” ௧0 - உற்சங்கம் “உற்சங்கமென்ப துணருங்காலை - ஒருகைபிறைக்கை யொருகையராளம்-தெரியமணிக் கட்டிலேற்றி வைப்பதுவே” ௧௧ - பட்புடம் “புட்புடமென்பது புணருங்காலை - ஒத்தவிரண்டு குடங்கையுமியைந்து - பக்கங்காட்டும் பான்மைத்தென்ப” ௧௨ - மகரம் “மகரமென்பது வாய்மையினுரைப்பிற்-கபோதகமிரண்டுகையுமகப்புற - மொன்றவைப்பதென்றுரைத்தனரோ”௧௩-சயந்தம்வந்த விடத்திற்காண்க. ௧௪ - அபயாத்தம் “அபயாத்தம்மேயறிவுறக்கிளப்பின்-வஞ்சமில் சுகதுண்டமிருகையின்மாட்சியும்-நெஞ்சுறநோக்கி நெகிழ்ந்துநிற்பனவே” ௧௫ - வருத்தமானம் “வருத்தமானம் வகுக்குங்காலை - முகுளக்கையிற் கபோதக்கையை - நெகிழ்த்துச்சேர்க்கு நெறியிற்றென்ப,

* பெருவண்ணம் ஆருய்வரும், இடைவண்ணம் இருபத்தொன்ருய் வரும், வனப்பு வண்ணம் நாற்பத்தொன்ருய் வரும்.

* ஆங்கதன்றலையெதிர்ந்தரங்கியற்றுங்காலை - உரனழித்தியற்ருவழகுடைத்தாகி - நிறை குழிப்பூழிக்கு நின்றவாற்றினும் - நாற்றமுஞ் சுவையுமதரமுமாய்க்கனந் - தோற்றியவெண்மைச் சுவடதுடைத்தாய் - என்புழிக்கூறுகைப்புவர்துவர் - துன்பநீறுதுகளிவையின்றி - ஊரகத்தாகியுரமான்பூண்ட - தேரகத்தோடுந் தெருவுமுகநோக்கக் - கோடல்வேண்டு மாடலரங்கதுவே,

உவர்ப்பிற் கலக்கமாங்கைப்பின்வருங்கேடு
துவர்ப்ப் பயமாஞ்சுவைகள்-அவற்றின்
புளிபரிசுநீடுந் தித்திப்பொடுகோழ்ப்பே
ஒளிபெருகு மவ்வரங்கிற்காங்கு,

---